# 'Saranagathy' in Desika Prabhandam



By

**Dr. S.Chenpakalakshmi**

ஸ்ரீ:

# தேசிகப் பிரபந்தத்தில்

# சரணாகதி

முனைவர் எஸ். சம்பகலட்சுமி

Copyright page

ஸ்ரீ:

## அணிந்துரை

உலகில் பல மதங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சில வேதங்களையும், இதிஹாஸபுராணங்களையும் ஆதாரமாகக் கொண்டவைகள். அவை ஆஸ்திகமதங்கள். பல, வேதங்களை ப்ரமாணமாக ஏற்காமல் அந்தந்த மதத்தைத் தோற்றுவித்தவர்களுடைய உபதேசங்களை ப்ரமாணங்களாகக் கொண்டவை. அவை நாஸ்திக மதங்கள். ஆஸ்திகமதங்களிலும் உபநிடதங்களையும் வ்யாஸர் அருளிய ப்ரம்மஸூத்ரங்களையும் ப்ரமாணமாக கொண்ட மதங்கள் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்துவைதம் போன்ற மதங்கள். தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் இவைகளை விளக்குவதுடன் மோக்ஷத்திற்கு உபாயங்களையும் அறிவிக்கின்றன. அவற்றுள்ளும் ஸ்ரீ பகவத் ராமானுஜரால் ப்ரசாரத்துக்குக் கொண்டுவந்த விசிஷ்டாத்துவைதம் ஜாதி மத பேதமின்றி எல்லோரும் ஸம்ஸாரபந்தம் நீங்கி மோக்ஷத்தைப் பெறுவதற்கு வழிகாட்டியாக உள்ளது. இந்த மதத்தில் ஸ்ரீமந் நாராயணனே உயர்ந்த தத்துவம். அவனை அடைவதற்கு பக்தியும், சரணாகதியும் உபாயங்கள். அவற்றுள் இக்கலியுகத்தில் பக்தி யோகத்தை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய சக்தி யாருக்கும் இல்லை. பக்தி யோகமாவது ப்ரீதியுடன் இடைவிடாமல் ஸ்ரீமந் நாராயணனை கடைசி மூச்சு வரை த்யானம் பண்ணுதல். இது எல்லோருக்கும் ஸாத்தியமாகாது. எனவே பக்தியை அனுஷ்டிக்க சக்தியில்லாதவர்கள் சரணாகதியை அனுஷ்டித்து மோக்ஷத்தை பெறலாமென்று உபநிடதமும், பாஞ்சராத்ர ஆகமங்களும் கூறுகின்றன. அவற்றை கண்டுபிடித்து இவ்வுபயத்தை ராமானுஜர் உபதேசித்தார். இதில் வரும் ஐயங்களை போக்குவதற்காகவும் சரணாகதியின் அங்கங்கள், அங்கி இவைகளை ப்ரமானங்களுடன் விளக்குவதற்காகவும் திருவேங்கடமுடையான் வேதாந்த தேசிகனாக அவதரித்தான் என்றால் இது மிகையாகாது.

வேதாந்த தேசிகன் அருளிச் செய்த எல்லா க்ரந்தங்களிலும் இந்த விஷயத்தை நாம் காணலாம். முக்யமாக ஸ்தோத்ர க்ரந்தங்களிலும் தேசிகப்ரபந்தம் என்று வழங்கப்படும். தமிழ் ப்ரபந்தங்களிலும் அநேகமாகச் சரணாகதியை பற்றியே அவர் பரந்த நோக்குடன் அருளிச்செய்ததை நாம் காணலாம். அதிகாரஸங்க்ரகம் என்கிற ப்ரபந்தத்தில் அவர் அருளிச்செய்த

அந்தணரந்தியரெல்லையில் நின்ற அனைத்துலகும்
நொந்தவரேமுதலாக நுடங்கியனன்னியராய்
வந்தடையும்வகை வந்தகவேந்திவருந்திய, நம்
அந்தமிலாதியை அன்பரறிந்தறிவித்தனரே.

என்கிற பாசுரத்தில் அவருடைய பரந்த உள்ளத்தை அறியலாம். பெறுதற்கரிய மானிடஜன்மத்தைப் பெற்றவர் இனிப் பிறந்து வருந்தாமல் இப்பிறவியிலேயே சரணாகதியை அனுட்டித்து வீடு பெறவேண்டும் என்பதே ஆழ்வார்களுடையவும், பூர்வ ஆசாரியர்களுடையவும் அபிப்ராயம். அதை நிலைநாட்டுவதற்காகவே தேசிகனுடைய அவதாரம்.

மேலே கூறிய கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்து உலகுக்கு அளிப்பதற்கு ஸ்ரீமதி எஸ்.சம்பகலக்ஷ்மி அவர்கள் அருமையான "தேசிக பிரபந்தத்தில் சரணாகதி" என்கிற ஆய்வேடு ஒன்றைத் தயார் செய்து அதற்காக முனைவர்ப் பட்டத்தையும் பெற்று அந்த ஆய்வேடு நூலை ப்ரசுரம் செய்வதற்கு முன்வந்துள்ளது மிகவும் போற்றற்குரியது. இந்நூலைக் கடைசிவரை படித்தேன். எல்லோரையும் படிக்கத் தூண்டுகிறேன். தமிழிலுள்ள தேசிக ப்ரபந்தங்களில் இருந்து தொகுக்கப்பட்ட ஆய்வேடு இது.

**ஆய்வேட்டின் அமைப்பு.**

ஸ்ரீ தேசிகனின் சரணாகதி நெறிகளை மையப் பொருளாகக் கொண்டு அமையும் இந்த ஆய்வு, முன்னுரை முடிவுரை நீங்கலாக பின்வரும் ஐந்து இயல்களை உடையது.

1.) வைணவ நெறியில் சரணாகதி
2.) ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும்
3.) ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள்
4.) சரணாகதியில் இறைவன்
5.) தத்துவப் புலப்பாட்டு நெறிகள்

தேசிகப்ரபந்தங்கள் பூராவையும் நன்றாகக் கற்று நன்கு புரிந்து கொண்டு இயற்றப்பட்ட இந்நூல் அறிஞர்கள் முதல் சாதாரண மக்களும் புரிந்து கொண்டு பயனடையும் வண்ணம் அமைந்துள்ளது மிகவும் போற்றத்தக்கதாகும். ஆய்வாளர் மேன்மேல் இம்மாதிரியான சிறந்த ஆய்வு நூல்களை இயற்றி பெரும்புகழுடன் விளங்க வேண்டுகிறேன். இறைவனும் தேசிகனும் அவ்வாறே அருள் புரிவர் என்பதில் ஐயமில்லை.

**என்.எஸ். ராமானுஜதாதாசாரியார்**
**பெங்களூர்.**
5.04.2006

## Foreword

I deem it a proud privilege the writing of a foreword on the thesis captioned as ‘ Saranagathi in Sri Desika Prabhandas’ written by Dr. Srimathi Champakalakshmi for acquiring doctorate degree in Tamil.(Ph.D) I am glad she chose the topic Saranagathi because there is lot of resource material in Saranagathi in Sri Desika Prabhandhas. Shri Vedanta Desika is the greatest philosopher, poet and logician in the world and has authored more than 120 works in Sanakrit, Tamil and prakrith languages and each work has a connection with Saranagathi in one form or other. Saranagathi is a means for attaining moksha which is also called salvation and this means liberation from the bondage of samasara. Samsara is nothing but imprisonment in the world in which every jiva (soul) is subject to enjoyment on account of his doing virtuous deeds during his previous births and he (jiva) is subject to suffering on account of his committing sins during the previous births. This samsara is right from satyaloka (abode of the four headed Bramha) upto patalaloka.

If Saranagathi is done at the lotus feet of the Lord Sriman Narayana after doing purushakara prapatti at the feet of the Goddess Mahalakshmi, Lord Sriman Narayana will certainly grant moksha to the individual. The individual who does Saranagathi crosses this universe which is called prakrithi mandala and then comes to viraja river. This river demarcates Sri Vaikunta divyaloka from the universe. The person who reaches the viraja river sheds his miniature body (sookshma sarira) which he assumed after leaving the mortal body. Then he crosses the viraja river out of his own will and then reaches Sri Vaikunta Divyaloka. There he is received by 500 celestial damsels who garland him, give him garments to wear, who give him ornaments to decorate his body, who apply powder on his body and who also apply anjana (blakish paste) on his eyes. This is called Brahmalankara. From there he is

conducted to Adisesha paryanka (serpent throne) in which the divine couple are seated. He introduces himself as one who is having Bramha (Lord Sriman Narayana) as his atma (soul). Then the divine couple (Goddess Mahalakshmi and Lord Sriman Narayana is also called as Paravasudeva) greet him and take him to do eternal service to them. So without doing Saranagathi also called prapatti at the feet of Lord Sriman Narayana nobody will attain moksha as explained above.

Dr. Srimathi Champakalaksmi has explained this point remarkably well in her thesis. Sri Desika Prabandam, the beautiful tamil hymns composed by Sri Vedanta Desika is only an exhaustive elaboration of Saranagathi which is the topic of the thesis as mentioned above. For example there is one verse in Amrithasvadhini (31st verse) which gives a gist of Saranagathi. This verse is also in the 'Sarasangraha Rahasya' written by Sri Vedanta Desika. This verse commences with the words "ninnarulAl gathi yindRi mattRonRillEn". The author has extensively quorted certain passages from Sri Rahasyatrayasara one of the masterpieces of Sri Vedanta Desika to explain her points in Saranagathi as contained in Sri Desika Prabandas. "Adaikalapatthu" is one of the very important desika prabandas exclusively dealing with 'Saranagathi'.

Dr. Srimathi Champakalakshmi quotes a pasuram from Adaikalapatthu to explain the fact that in Saranagathi there are four nishtas (nishta means remaining steadfast or having deep deep faith in a particular procedure of doing Saranagathi ) Acharyanishta, Uktinishta, Svanishta and Bhagavathanishta. Among the four Acharyanishta apperars to be the best form of doing Saranagathi as the Acharya himself does the Saranagathi at the feet of Lord Sriman Narayana on behalf of the disciple and Sriman Narayana is bound to accept the same and commit himself to grant moksha to the disciple.

I am happy this thesis is getting printed in the form of a book and this book will certainly be useful for the lay people to know the significance of Saranagathi and resort to the same for getting once for all libearated from the bondage of Samsara.

I have immense pleasure in congratulating Dr. Srimathi Champakalakshmi for having made such a simple, beautiful and thought provoking thesis which contains the gist of Desika Prabandam and other works of Sri Vedanta Desika explaining the doctrine of Saranagathi. This book incidentally becomes an effective medium to proclaim to the people the super greatness of Sri Vedanta Desika and the most effective means of Saranagathi he has postulated to the people for their permanent emancipation.

I pray to the divine couple of Srirangam and to Sri Vedanta Desika to shower their choicest blessings on Dr. Srimathi Champakalakshmi, her beloved life partner Dr.Sri T.N.Aravamudhan and their children for their all round welfare and prosperity.

I wish the book is purchased by everyone, gone through and resort to Saranagathi through an Acharya and get permanently liberated. May everybody in this world live in peace and prosperity.

**Ananthanarasimhachar**
**Srirangam**
24.04.2006

Retired Principal and now joint editor of **Sri Kanchi Perarulalan** and also President of Sri Hayagriva Vidhya Peetam Trust.

.

## பதிப்புரை

அஸ்மத் குல மாணிக்கம், பேரருளாளன் அருள் நாடும் ஞானவாரிதி திருப்புட்குழி ஸ்ரீ கிருஷ்ண தாதார்ய மஹாதேசிகன் ஸ்வாமி மற்றும் ஸ்ரீ நரசிம்ம தாதார்ய மஹாதேசிகன் ஆகியோர்தம் ஆசியாலும் ஸ்ரீமதாண்டவன் பறவாக்கோட்டை ஸ்ரீகோபால தேசிக மஹாதேசிகன் அருளாணையினாலும் கருணைத் திருவுருவாகிய திருமகள் மார்பனாகிய ஸ்ரீ காஞ்சிப் பேரருளாளன் திருநோக்கத்தாலும் நம் ஸ்தாபனம் பல்வேறு சம்பிரதாயத் தொண்டாற்றி வருகிறது.

திராவிட வேதமாம் திவ்யபிரபந்த மேன்மை, ஸ்ரீபாஷ்யம் முதலான சாஸ்திர கிரந்தங்களின் நுட்பம் எனப் பல அரிய பொக்கிஷங்களை எல்லோர்க்கும் கொண்டு சேர்ப்பதன் மூலம் நம் ஹயக்ரீவ வித்யாபீடம் ஸ்ரீவைஷ்ணவத் தொண்டாற்றி வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே 'தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி' என்ற நூல் வெளிவருகிறது.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஸ்ரீவைஷ்ணவத்தின் கலங்கரை விளக்கம். திருமலை எம்பெருமாளின் கண்டாவதாரமாய்த் தோன்றியவர். இவர் அருளிய பல்வேறு கிரந்தங்களில் தமிழில் அமைந்தவற்றின் தொகுப்பு, தேசிகப் பிரபந்தம் எனப்படுகிறது. இத்தொகுப்பில் ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நாடியான சரணாகதி எவ்வாறு பரக்கப் பேசப்படுகிறது என்பது பற்றியே இந்நூல் எழுந்துள்ளது.

இது, இந்நூலின் ஆசிரியர் ஸ்ரீமதி சௌ. சம்பகலக்ஷ்மி, தம் முனைவர் பட்டத்திற்கு அளித்த ஆய்வேட்டின் நூல்வடிவம். சரணாகதி மேன்மை, ஸ்ரீ தேசிகன் செய்த தொண்டுகள், சரணாகதி பற்றிய பல்வேறு விவரணங்கள், சௌலப்ய நாதனாகிய ஸ்ரீமந் நாராயணனின் அருங்கருணை, ஸ்வாமி தேசிகனின் சாஸ்திரநுட்பம் ஆகியவற்றைத் தெள்ளிதின் உணர்த்தும் நூலாக இது விளங்குகிறது. சம்பிரதாயத்தை உணர்வதற்குரிய கருவி என்றும் கூறலாம். இத்தகைய ஆய்வு நூலைப் படைத்த சௌ. சம்பகலக்ஷ்மிக்கு அஸ்மத் ஸ்வாமி மற்றும் பூர்வாசார்யார்களின் ஆசிகளும், ச்ரியப்பதியான ஸ்ரீமந் நாராயணனின் அருள் கடாக்ஷமும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

இவண்,

**ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாபீடத்தினர் மற்றும்**
**ஸ்ரீ காஞ்சிப் பேரருளாளன் குழுவினர்**

# நன்றியுரை

பூர்வாசாரியார் கிருபையாலும் எம்பெருமான் அருளாலும் எனது முனைவர்பட்ட ஆய்வாகிய 'தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி' என்பது இத்தருணத்தில் நூல் வடிவம் பெறுகிறது. இவ்வேளையில், பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீகோபால தேசிக மஹாதேசிகன் ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கியுள்ளார். அவர் திருவடிகளில் என் நமஸ்காரங்களையும் நன்றியையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ காஞ்சிப் பேரருளாளன் ஆசிரியர் ஸ்ரீ உ.வே.Dr.N.S. ராமானுஜ தாதாசாரியார் அவர்களுக்கும், இணையாசிரியரும் ஹயக்ரீவ வித்யாபீடத்தின் தலைவருமான ஸ்ரீ உ.வே.அனந்தநரசிம்மாசாரியார் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். ஆய்வு செய்த காலத்தில் திருவையாற்றின் அரசர் கல்லூரி முதல்வராய் இருந்த பெருமக்களுக்கும் இந்நாளைய முதல்வர் முனைவர் சண்முக செல்வகணபதி அவர்களுக்கும் என் நன்றி உரியது. ஆய்வுக் காலத்தில் என் ஆய்வைச் செம்மைப்படுத்தி நெறிப்படுத்திய முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கும் என்றும் என் நன்றி உரியது.

ஆய்வுக்காலத்திலும், நூலாக்கம் பெறும் தருணத்திலும் அன்புடன் உதவி ஆதரவு காட்டும் ஆஸ்திக மஹாஜனங்களுக்கும் அன்பு நண்பர்கள் முனைவர் சொ.மணிவண்ணன், திரு.ப.ஸ்ரீநிவாசன், திருச்சி முனைவர் வெ.சத்ய நாராயணன் ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூலாக்கத்திற்கு உதவிய அலமு பிரிண்டர்ஸ்க்கும் என் நன்றி உரியது.

எல்லாவற்றினும் மேலாக என் ஆய்வை நூலாக்கம் செய்ய ஆதரவு நல்கிய ஸ்ரீ ஹயக்ரீவ வித்யாபீடத்தினர்க்கும் ஸ்ரீ காஞ்சிப் பேரருளாளன் குழுவினர்க்கும் என்றும் நன்றி தெரிவிக்கக் கடப்பாட்டுடையேன்.

எஸ். சம்பகலட்சுமி

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அரி.தீப. | - | அரிசமய தீபம் |
| அறுவகை. | - | அறுவகை இலக்கணம் |
| உரை.ஆ. | - | உரை ஆசிரியர் |
| க.ஆ. | - | கட்டுரை ஆசிரியர் |
| கம்ப.யுத்த. | - | கம்பராமாயணம்-யுத்தகாண்டம் |
| கலித். | - | கலித்தொகை |
| கழகம். | - | திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் |
| குரு.ப்ரபா. | - | குரு பரம்பரா ப்ரபாவம் |
| தண்டி. | - | தண்டியலங்காரம் |
| திருக். | - | திருக்குறள் |
| திருமகள். | - | திருமகள் அந்தாதி |
| திருமால். | - | திருமால் அந்தாதி |
| தேசி.நூற். | - | தேசிகர் நூற்றந்தாதி |
| தேசி.பிர. | - | தேசிகப் பிரபந்தம் |
| தொல்.பொருள். | - | தொல்காப்பியம் - பொருளதிகாரம் |
| நாலா. | - | நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பக.கீதை | - | பகவத் கீதை |
| பதி.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பதிற். | - | பதிற்றுப்பத்து |
| பரி. | - | பரிபாடல் |
| பிள்ளை. | - | பிள்ளையந்தாதி |
| பெரும். | - | பெரும்பாணாற்றுப்படை |
| முருகு. | - | திருமுருகாற்றுப்படை |
| மொ.பெ. | - | மொழிபெயர்ப்பு |
| வில்லி.சபா.சூது. | - | வில்லிபாரதம் - சபா பருவம் சூதுப்போர்ச் சருக்கம் |
| வேதா.சதகம். | - | வேதாந்த தேசிகர் சதகம் |
| ஸ்ரீவச.பூஷி. | - | ஸ்ரீவசனபூஷணம் |
| p. | - | Page |
| pp. | - | Pages |

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. முன்னுரை | - | 1 |
| 2. வைணவ நெறியில் சரணாகதி | - | 5 |
| 3. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும் | - | 44 |
| 4. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள் | - | 70 |
| 5. சரணாகதியில் இறைவன் | - | 111 |
| 6. தத்துவப் புலப்பாட்டு நெறிகள் | - | 142 |
| 7. முடிவுரை | - | 167 |

**பின்னிணைப்பு**

| | | |
|---|---|---|
| 1. துணைநூற் பட்டியல் | - | 171 |
| 2. ஆசாரியப் பரம்பரை | - | 175 |
| 3. ஸ்ரீ வேதாந்த தேசிகன் படைத்த நூல்கள் | - | 177 |
| 4. ஸ்ரீ வேதாந்த தேசிகன் கையாளும் வேதாந்தம் தொடர்பான கலைச் சொற்களும் அருஞ் சொற்களும் | - | 179 |

# முன்னுரை

## 0.1. ஆய்வுத்தலைப்பு

ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஆழ்வார் வழிக்குரவருள் (ஆசாரியப் பரம்பரை) ஒருவர். இவர் தமிழிலும் வடமொழியிலும் தமிழ், வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையிலும் பல பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவர்தம் தமிழ்ப் பிரபந்தங்கள் 'ஸ்ரீ தேசிக பிரபந்தம்' என்று அழைக்கப் பெறுகின்றன. இவற்றுள் காணப்பெறும் சரணாகதி நெறியின் முதன்மையைக் கருதித் 'தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பெற்றது. சாத்திர நூலாக அமைந்த ஸ்ரீ தேசிக பிரபந்தம் தத்துவப் பொருண்மையை, குறிப்பாகச் சரணாகதியை எங்ஙனம் வெளிப்படுத்துகிறது என்பதை இவ்வாய்வு பகுத்து ஆய்கின்றது.

## 0.2. ஆய்வு நோக்கம்

இலக்கியத்தின் பாடுபொருள் காதல், வீரம், கொடை, பக்தி, சமூகம் எனப் பல வகையாக அமைகிறது. தமிழிலக்கியங்களும் இவ்வகைப் பாடுபொருள்களை உடையன. எனினும் பக்தியின் மொழி தமிழே எனுமளவில் தனிப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல பக்திப் பனுவல்கள் பெருகின. இப்பனுவல்கள் சைவம், வைணவம் முதலான பன் சமயங்களைச் சார்ந்து அமைந்துள்ளன.

இவை இறைத்துதியாக மட்டுமின்றிச் சமயச் சாத்திரங்களின் பிழிவாகவும் அமைகின்றன. இவற்றுள் வைணவ மரபு 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்ற பெருந்தொகுப்பை உடையது. இதன்கண் அமைந்த பனுவல்கள் பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்றுள்ளன.

ஆழ்வார்கள் நெறியில் சமயக் கொள்கைகளையும் தத்துவத்தையும் விளக்க வந்தவர்கள் ஆசாரியர்கள் ஆவர் (ஆழ்வார் வழிக்குரவர்). ஆழ்வார் வழிக்குரவருள் ஸ்ரீ இராமானுஜர் முதன்மை பெற்றவர். இவர் வைணவக் கொள்கைகளைத் தொகைப்படுத்தி வேதாந்த முடிவாய், விசிஷ்டாத்துவைதம் என்று அருளி இருக்கிறார். இவர் வழி வந்த அருளாளரே ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஆவார். ஸ்ரீ தேசிகன் விஷிட்டாத்துவைதத்திற்கு அரிய நல் விளக்கம் தந்துள்ளார்.

ஆண்டவர் அன்பைப் பெறுவதே பிறவி நோக்கம் என்று வலியுறுத்தி உள்ளார். இந்நோக்கம் ஈடேறச் சரணாகதியே சிறந்த வழி என்று தெளிவுறுத்தி இருக்கிறார்.

ஆண்டவனிடம் பரிபூரணமாகச் சரணடைந்து தமக்கெனச் செயலில்லை என்ற பிரபத்தி நெறியை வலியுறுத்தும் வண்ணம் இவர்தம் பனுவல்கள் அமைந்துள்ளன. உபநிஷதங்களின் உபாசனை நெறியைக் கண்டு மக்கள் மயங்கிய நிலையில் ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் சரணாகதியின் எளிமையை உலகிற்கு உணர்த்திய பெருமையைப் பெற்றுள்ளது.

சரணாகதியே எல்லாவற்றிலும் சிறந்த வழி என்று வேதாந்த தேசிகன் பலபடக் கூறியிருக்கிறார். சரணாகதி நெறியே இறைவனை அடையும் வழி என்று வலியுறுத்துவதிலும் இந்நெறியின் முதன்மைத் தன்மையை விளக்குவதிலும் ஸ்ரீதேசிகப் பிரபந்தம் பெறுமிடம் குறித்தாராய்தல் ஆய்வின் நோக்கமாகும். வைணவ வேதாந்தத்தின் வெற்றிக்கு இவ்வெளிமையான நெறியே காரணம் என்பது குறித்தும் ஆராயப் பெற்றுள்ளது.

### 0.3. முன்னாய்வுகள்

ஸ்ரீ வேதாந்த தேசிகன் பற்றிய ஆய்வுகளாகப் பின்வருவன காணப்படுகின்றன.

1. A.Satyavrata Singh - Vedanta Desika - A Study, Ph.D. Thesis, Lucknow University, Lucknow, 1958.
2. T.N.Aravamudhan - Varadaraja Panchasat - A Study M.Phil. Dissertation, University of Madras, Chennai 1981
3. T.N.Aravamudhan - Dayasataka - A Study, M.A. Dissertation, University of Madras, Chennai 1980.

### 0.4. ஆய்வுக்களம் - ஆய்வு மூலங்கள்

ஸ்ரீ வேதாந்த தேசிகனின் தமிழ் நூல்களின் தொகுப்பாகிய ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்தில் மட்டுமே ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதனுள்ளும் சரணாகதியை வலியுறுத்தும் பகுதிகளே முதன்மையாக ஆராயப்படுகின்றன. இவ்வகையில் ஸ்ரீவேதாந்த தேசிகனின் பத்தொன்பது பிரபந்தங்கள் அடங்கிய ஸ்ரீதேசிகப் பிரபந்தம் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்பெற்றுள்ளது. வைஷ்ணவ மரபு, ஸ்ரீ வேதாந்த தேசிகன் பற்றிய

ஆய்வுகள், நூல்கள், கட்டுரைகள், இதழ்கள் போன்றவை துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

### 0.5. ஆய்வு அணுகுமுறை

சரணாகதி நெறியை அறிந்துணர்த்துங்கால் விளக்கமுறை ஆய்வாகவும் (Descriptive) பிற நூல்களுடன் ஒப்பிட்டு ஆராயுங்கால் ஒப்பாய்வாகவும் (Comparative) ஆய்வேடு திகழ்கிறது.

### 0.6. கருதுகோள்

“பக்தி இலக்கியத்தில் புலவனின் பக்தி மற்றும் சமயக்கொள்கைகள் இடம்பெறுதல் உறுதி. இவ்வழி ஸ்ரீவேதாந்த தேசிகனின் பிரபந்தங்களில் வைணவ மரபின் உயர்வு, சரணாகதி நெறியின் மேன்மை என்பவை முழுமையாக அமைவதோடு இவையே ஸ்ரீ தேசிகனின் சமயக் கொள்கைகளாக அமைகின்றன” என்ற கருத்து இவ்வாய்வுக்குரிய கருதுகோளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

### 0.7. ஆய்வேட்டின் அமைப்பு

ஸ்ரீ தேசிகனின் சரணாகதி நெறிகளை மையப் பொருளாகக் கொண்டு அமையும் இந்த ஆய்வு, முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் ஐந்து இயல்களை உடையது.

1. வைணவ நெறியில் சரணாகதி
2. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும்
3. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள்
4. சரணாகதியில் இறைவன்
5. தத்துவப் புலப்பாட்டு நெறிகள்

0.7.1. வைணவ நெறியில் சரணாகதி நெறி என்ற முதலியலில் தத்துவம், இறை நெறிகள், வைணவ நெறி, வைணவ வேதாந்தம், விசிஷ்டாத்துவைதம், தத்துவத்திரயம், இறைவனை அடையும் வழிகள், சரணாகதி மேன்மை, பயன் ஆகியன ஆராய்ந்து உரைக்கப் பெறுகின்றன.

0.7.2. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும் என்ற இரண்டாமியலில் ஸ்ரீதேசிகனின் காலம், இறையம்சம், நூற்பயிற்சி, இல்லறம், நூல்கள்

படைத்தல், அருஞ்செயல்கள், ஸ்ரீதேசிகப் பிரபந்தம் ஆகியன விளக்கப்பெறுகின்றன.

0.7.3. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள் என்ற மூன்றாம் இயலில் ஸ்ரீதேசிகன் பாடற் பொருண்மையில் சரணாகதி பெறும் இடம், சரணாகதியின் தன்மை, சரண்புகு நெறிகள், பிரபன்னர், பிரபன்னர் பண்புகள் ஆகியன விளக்கப்பெறுகின்றன.

0.7.4. சரணாகதியில் இறைவன் என்ற நான்காம் இயலில் கருணை வடிவான இறைவன் சரண் புகுவோர்க்கு அடைக்கலம் அளித்தல், பற்றறுத்தல், வீடு நல்குதல் ஆகியன விளக்கப்பெறுகின்றன.

0.7.5. தத்துவப் புலப்பாட்டு நெறிகள் என்ற ஐந்தாம் இயலில் புலப்பாட்டு நெறிகள், தத்துவப் புலப்பாட்டு முறைகள், உத்திகள், நாயக நாயகி பாவம், யாப்பியல் நெறிகள் ஆகியன விளக்கப்பெறுகின்றன.

ஒவ்வோர் இயலின் கண்ணும் பாடல் மேற்கோள் பற்றிய குறிப்புகள் அவ்வப்பகுதிகளில் மேற்கோளை அடுத்து இடம் பெறுகின்றன. உரைநடை மேற்கோள்கள் எண் முறையில் பட்டியலிடப்பெற்று இயலின் தொடர்ச்சியாக இணைக்கப்பெற்றுள்ளன. இப்பட்டியல் ஆசிரியர், நூல், பக்கம் என்ற முறையில் அமைந்துள்ளது. ஒவ்வோர் இயலின் இறுதியிலும் தொகுத்துக் கூறப்பெற்றுள்ள ஆய்வு முடிபுகள் ஆய்வேட்டின் இறுதியில் தொகுத்து முடிவுரையில் தரப்பெற்றுள்ளன.

## 0.8. பின்னிணைப்பு

ஆய்வேட்டின் பின்னிணைப்பாகத்

1. துணை நூற்பட்டியல்,
2. ஆசாரியப் பரம்பரை,
3. ஸ்ரீ வேதாந்த தேசிகன் படைத்த நூல்கள்,
4. ஸ்ரீ வேதாந்த தேசிகன் கையாளும் வேதாந்தம் தொடர்பான கலைச் சொற்களும் அருஞ் சொற்களும் அடங்கிய பட்டியல் ஆகியன இணைக்கப்பெற்றுள்ளன. துணை நூற்பட்டியல் ஆசிரியர் பெயர் அகர வரிசையில் அமைந்துள்ளது. ஆசிரியர் பெயருடன் நூற்பெயர், பதிப்பகம், ஊர், ஆண்டு ஆகியன நிரல்படக் கொடுக்கப்பெற்றுள்ளன.

# வைணவ நெறியில் சரணாகதி

1.0. ஒவ்வொரு சமயமும் தனக்கென ஒரு நெறியையும் அந்நெறியை விளக்கும் பிரமாணங்களையும் பெற்றுள்ளது. அப்பிரமாணங்களின் வழிப் புதிய தத்துவ விசாரணைகளை உண்டாக்கி இறைக் கொள்கைகளை அறுதியிடும். இங்ஙனம் நிறுவப்பெற்ற கொள்கையாகிய விசிஷ்டாத்துவைதம் பற்றியும் சரணாகதி பற்றியும் இவ்வியல் ஆராய்கிறது. மேலும் தத்துவம், இறைநெறிகளில் விசிஷ்ட்டாத்துவைதத்தின் பங்கையும் அதன் சரணாகதி கொள்கையின் மேன்மையையும் விளக்குகிறது.

## 1.1. தத்துவம்

தத்துவம் என்பது வடமொழிச் சொல். இது 'தத் + வம்' என அமையும். இதன் பொருள் அதன் தன்மை அல்லது அதனியல்பு என்பதாகும். கலைக்களஞ்சியம் தத்துவம் பற்றி கூறுகையில்,

> *'தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மைப்பொருள் என்பது கருத்து. உண்மைப் பொருளிலிருந்து உண்டாகும் காரியங்களிலும் உண்மைப் பொருள் வியாபித்து நிற்பதால் அக்காரியங்களையும் தத்துவம் என்று அழைக்கிறார்கள்.'* [1]

என்று குறிப்பிடுகிறது. எனவே தத்துவத்தை, உண்மையின் தொன்மையை அறிய விரும்பும் ஆய்வு எனலாம். தத்துவம் என்பது மெய்ம்மைகளின் அடிப்படையில் இப்பிரபஞ்சத்தின் உண்மை நிலை என்ன என்று கண்டறிதலேயாகும். எல்லாப்பொருட்களுக்கும் மூலமாய் உள்ளது எதுவோ அதுவே உண்மைப் பொருளாகும். க.சு.உத்தமராயன் தத்துவ ஞானம் என்பது பிரபஞ்ச ஆராய்ச்சி என்று வலியுறுத்திக் கூறுகிறார். இதனை,

> *"தத்துவம் என்னும் சொல்லுக்கு உண்மை என்பது பொருளாகும். எனவே தத்துவ ஞானம் என்பது உண்மையை அறிவதெனப் பொருள்படும். உண்மை என்பதற்கு 'உள்ளது' அதாவது என்றும் உள்ளது என்பதே கருத்து. நம் உடல் உட்பட நாம் காணும் பொருட்கள் யாவும் என்றும் உள்ளவை அல்ல. என்றுமே உள்ள நிலையான பொருள் எதாவது உண்டா? உண்டாயின் அது எது? அதன் இயல்புகள் யாவை? என்பன போன்றவற்றை ஆராய்வதே*

> *தத்துவ ஞானம் எனப்படும். தத்துவ ஞானம் என்பது பிரபஞ்ச ஆராய்ச்சி.”* [2]

என்னும் கூற்றால் உணரலாம்.

இவ்வகையில் உலகத் தோற்றம், உயிர்த்தோற்றம் இவற்றின் காரணம், சக்தி எது? என்று தேடிக்கண்டறியும் முயற்சியில் விளைந்த கருத்துக்களே, தொடக்கக்காலத் தத்துவவியலின் கூறுகளாக அமைந்தன. இதன் வளர் முகமாகச் சமயக் கோட்பாடுகள் எழுந்தன.

### 1.2. இறை நெறிகள்.

இயற்கைத் தோற்றம், அதன் படைப்பின் மூலகாரணம், அதன் முழுப்பரிமாணம் முதலியவற்றின் நிலையில் தனக்கு மேல் ஒரு கடவுள் இருப்பதாக மனிதன் உணர்ந்தான். அக்கடவுளுடன் ஏற்பட்ட அச்சம் முதலான இயற்கை உணர்ச்சிகளும் மெய்யுணர்வு சார்ந்த நம்பிக்கைகளும் இறை நெறிகளுக்கு மூலகாரணமாயின. இந்திரா பார்த்தசாரதி, தத்துவவியலின் வளர் நிலையை,

> *"வரையறைகளுக்கு உட்பட்ட பல்வேறு வகைகளில் தத்துவ சிந்தனை மெய்யுணர்வு சார்ந்த உள்முகப் பார்வையால் முழுமைபெறுகிறது. மனித அறிவு இறை தரிசனத்தால் ஒளி பெறுகிறது. இந்த இரண்டும் இணைந்து களிபேருவகையாகிறது.”* [3]

என்பது நோக்கதக்கது.

இதன் அடிப்படையில் தத்துவ ஞானம் என்பது பிரபஞ்சம் என்பதனையும் கடந்த மூலப்பொருள் பற்றிய சிந்தனைத் தொகுதியாக அமைகின்றது. மெய்யுணர்வாளன் பிரபஞ்சத்தில் முழுமையை உணர்கிறான். வேறுபாடற்ற ஒருமையைக் கண்டுணரும் நிலையில் அனைத்துப் பொருட்களிலும் ஈசனைக் காண்கிறான். தான் பெற்ற இறை அனுபவத்தின் அடிப்படையில் இறைச்சிந்தனைகளை உருவாக்குகிறான். இச்சிந்தனைகளில் ஏற்பட்ட பல்வேறு பார்வைகள் இறைநெறி பலவாகத் துணைநின்றன.

இவ்விறைநெறி மற்றும் தத்துவ அறிவினில் மேலை நாடுகளை விஞ்சிய நிலையில் கீழை நாடுகள் திகழ்வன. குறிப்பாகப் பல சமயங்கள் கீழை நாடுகளில் தோன்றி மேலை நாடெங்கும் பரவலாயின.

### 1.2.1. இந்திய துணைக் கண்டத்து இறைநெறிகள்


கீழை நாட்டுத் தத்துவ ஞானத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் தத்துவச் செழுமையும் ஆளுமையும் குறிப்பிடத்தக்கன. இந்தியத் தத்துவங்கள் வாழ்வின் தேடலைப் பிரதிபலிப்பதாய் அமைகின்றன. இவை தத்துவ விசாரணைகளோடு நிறுத்திவிடாமல் வாழ்வியலின் ஒழுக்க விதிகளையும் உருவாக்குகின்றன. இவ்விதிகட்கு உட்பட்ட ஒருவன் பெறும் நன்மைகளையும் இயலாதவன் பெறும் தீமைகளையும் விரிவாய்ப் பேசுகின்றன. இத்தகைய வாழ்வியல் போக்குடன் அமைந்த தத்துவ மரபு வேதகாலத்திலிருந்து தொடர்கிறது.

இந்தியத் தத்துவவியலின் பிரமாணங்கள் என்று கருதப்படும் வேதங்களைப் பற்றி கி.லக்ஷ்மணன்,

> *"இந்திய தத்துவஞான முடிவுகள் வெளியிடப்பட்டிருப்பது பெரும்பாலும் வேதம், உபநிடதம், ஆகமம் எனப்படும் மிகப் பழைய வடமொழி நூல்களிலேயாகும். இவைகளே இந்தியத் தத்துவஞானத்துக்கு ஆதார இலக்கியங்கள். இவையாரால் எக்காலத்தில் ஆக்கப்பட்டவை என்று கூற முடியாத அளவு பழையது. வேதங்கள் மனிதனால் ஆக்கப்பட்டவை அல்ல என்ற கருத்தில் அவற்றை அபௌர்ஷேயம் என்ற சொல்லால் குறிப்பிடுவதுண்டு."* [4]

என்பார். இப்பிரமாணங்களின் அடிப்படையில் வேதக் கொள்கை ஏற்பு அல்லது மறுப்பு என்ற கோட்பாடுகள் எழுந்தன. ஏற்பு, மறுப்பு நிலைகளிலும் பல்வேறு வகைக் கருத்தியல் மரபுகளாய் (school of thoughts) உட்பிரிவுகள் எழுந்தன. இவற்றைத் தரிசனங்கள் என்பர். ஞானிகள் காட்சிக்குப் புலப்பட்ட பேருண்மைகளே தரிசனங்களில் அடங்கியுள்ளன. இத்தரிசனங்கள் வேதமறுப்பு, வேத ஏற்பு என்று பாகுபாடு செய்யப் பெறுகின்றன.

உலகாய்தம், சமணம், பௌத்தம் ஆகியன வேத மறுப்புக் கொள்கையை உடையன. சாங்கியம், யோகம், நியாயம், மீமாம்சை, வைசேஷிகம், வேதாந்தம் ஆகிய ஆறும் வேதக் கொள்கைகளுடன் தொடர்புடையன. சைவசித்தாந்தம் வேதாகமங்களின் வழித் தன் கொள்கையை நிறுவும். தத்துவச்சார்பில் வேதஏற்பு, மறுப்பு நிலைகளையும், பரவலாக்கத்தையும் வரைபடமாகக் காணலாம்




வேதச் சார்புடைய தரிசனங்கள், வேதம், உபநிடதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றில் கூறப்பட்ட இறைத்தன்மைகளின்படி இறைவனைக் குறிப்பிட்டுரைக்கின்றன. பரப்பிரம்மம், திருமால், சிவன், சக்தி, சூரியன், இந்திரன், பஞ்ச பூதங்கள் முதலானவர் பற்றிப் பிரமாணங்களில் சுட்டியுரைக்கப்பட்டுள்ளன. அவ்வக் கடவுளுக்கு முதன்மை தரும் நிலையில் வைதீகச் சமயங்கள் எழுகின்றன.

வைதீகச் சமயத்துக்கடவுள் நிலையைக் கண்ட ஆதிசங்கரர் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சௌரம் என்ற அறுவகைச் சமயங்களை முதன்மையுடையதென நிறுவினார். இவை முறையே சிவன், திருமால், சக்தி, குமரன் சூரியன் ஆகிய கடவுளரை முதன்மையுடையனவாய்க் கொண்டு அமைவன. இவற்றுள் வைணவ நெறி கீழ்க்கண்ட தத்துவ, இறைக்கோட்பாட்டின்படி விளங்குகின்றது.

### 1.3. வைஷ்ணவ நெறி

திருவாழ் மார்பனாகிய திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டது வைணவ நெறி. 'விஷ்ணு' என்ற சொல்லடியாய் 'வைஷ்ணவம்' என்ற சொல் எழுந்தது. விஷ்ணுவைத் தலைமையாய் உடைய நெறி என்பது இதன் பொருள். பழமையானதும் பரந்துபட்டதுமான இந்நெறி உயரிய கொள்கைகளை உடையது. இவ்வைணவத்தின் சிறப்பைச் சத்யவ்ரதசிங்,

> *'வைணவம் என்பது இன்றைய தேவை. காலங்கடந்தும் அது தன் தேவையை உணர்த்தி வருகின்றது. தேவையின் வரையறை சமூகம், அரசியல் எனப் பலவற்றைக் கடந்து நிற்கின்றது'* [5]

என்று குறிப்பிடுகின்றார்.

வேத காலப் பிரமாணங்களில் காணப்படுவது போலத் தமிழ் மொழி இலக்கியங்களிலும் ஆங்காங்குத் திருமாலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் முல்லைநிலத் தெய்வத்தைக் குறிக்கையில், *'மாயோன் மேய காடுறை உலகமும்' (தொல். பொருள்.5) என்று கூறுகின்றது. 'மாயோன் மேய மன்பெருஞ்சிறப்பிற் தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை'* என்ற அடிகள் தொல்காப்பியம் (தொல். பொருள்.60) மன்னன் சிறப்பைத் திருமாலுடன் ஒப்பக் கூறும் பூவை நிலை என்று குறிக்கின்றது.

திருமுருகாற்றுப்படை,

> *பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறை*
> *புள்ளணி நீள்கொடிச் செல்வன்* (முருகு.150-151)

என்றும் பெரும்பாணாற்றுப்படை,

> *காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்கும்*
> *பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்* (பெரும். 372-373)

என்றும் திருமால் பற்றிப் பேசுகின்றன. கலித்தொகை திருமால் திருவை நெஞ்சில் கொண்டமையை,

> *பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்*
> *திருமறு மார்பன்போற் றிறல் சான்ற* (கலித். 104.9-10)

என்ற அடிகளிலும் உலகம் மூன்றும் அளந்ததை, *'ஞாலமூன்றடித்தாய முதல்வன்'* என்றும் (கலித் 124-1) குறிப்பிடுகிறது. மேலும் திருமால் வழிபாட்டைத் தலைவியும் தோழியும் செய்தனர் என்பதை,

*பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய*
*வாடுகொ ணேமியாற் பரவுதும்* *(கலித் 105.71-72)*

என்ற அடிகள் விளக்குகின்றன.

திருமால் வழிபாட்டைப் பதிற்றுப்பத்தில்,

*குன்றுதலை மணந்து குழூஉக்கடல் உடுத்த*
*மண்கெழு ஞாலத்து மாந்தர் ஓராங்குக்*
*கைசுமந்து அலறும் பூசன்மா திரத்து*
*நால்வேறு நனந்தலை யொருங்கெழுந்து ஒலிப்பத்*
*தெள்ளுயர் வடிமணி எறியுநர் கல்லென*
*உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி*
*வண்டூது பொலிதார் திருஞெமர் அகலத்து*
*கண்பொரு திகிரிக் கமழ்குரல் துழாய்*
*அலங்கற் செல்வன் சேவடிப் பரவி* (பதிற். 4.1-9)

என்று குறிப்பிடக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் திருமாலின் பெயர்கள், அவதாரச் சிறப்பு ஆகியன ஆங்காங்குச் சுட்டப்பெற்றுள்ளன. சங்க காலத்துக்குப் பிறகு அவைதீக மதங்கள் எனப்படும் சமணம், பௌத்தம் ஆகியன செல்வாக்குப் பெற்றன. இத் தடைகளை மீறி வைணவ நெறி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றது.

முதலாழ்வார் மூவர் தொடங்கிப் பன்னிரு ஆழ்வார்கள் திருமாலின் பல்வேறு குணானுபவங்களைப் பாடல்களில் அமைத்துப் பாடிப் பராவினர். இப்பாடல்களின் தொகுப்பே 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' ஆகும். ஆழ்வார் பாடல்களைத் தொகுத்த பெருமை நாதமுனியையே சாரும். இவர் நியாயத் தத்துவம் முதலான நூல்களையும் எழுதினார்.

நாதமுனியைத் தொடர்ந்து இராமானுஜர், கூரத்தாழ்வார், நம்பிள்ளை, அழகிய மணவாளசீயர், வேதாந்த தேசிகன், வடக்கு திருவீதிப்பிள்ளை, பிள்ளை உலகாசிரியர், அழகிய பெருமாள் நயினார், மணவாள மாமுனிகள் ஆகிய பல இறையடியார்கள் தோன்றி வைணவ நெறியை நூல்களாலும் பிரபந்த உரைகளாலும் செழிக்கச் செய்தனர். தொடர்ந்து வந்த ஆசாரிய பரம்பரையினரும் வைணவ நெறியின் இடையறாத வளர்ச்சிக்கும் பரவலுக்கும் காரணமாய் அமைகின்றனர்.

## 1.4. வைணவ வேதாந்தம்

பிற வைதீகச் சமயங்களைப் போன்றே வைணவமும் வேதம், உபநிடதங்கள், ஆகமங்களின் வழியில் தன் கொள்கைகளை நிறுவுகிறது. இக்கொள்கை புதியதாயினும் மூலம் மிகப் பழமை வாய்ந்தது. இந்நெறி தருக்கவியல், உளவியல் அணுகுமுறைகளின் மூலம் அமைந்த வைதீகச் சமயத்தின் புத்துரு எனலாம். மனிதனின் ஆன்மீக தேடலை ஈடு செய்ய வல்லது. மேலும் உலகப் பொதுமையான சித்தாந்தங்களையும் உடையது. [6]

வைணவ வேதாந்தம் உபநிடதங்களுக்கும் வேதாந்த சூத்திரங்களுக்கும் செய்த உரைகளேயாகும். இவற்றிற்குப் பிறர் கொண்டிருந்த கருத்துக்களில் இருந்து வேறுபட்ட இராமானுஜர் விசிஷ்ட்டாத்துவைதத்தை வைணவ நெறியின் கோட்பாடாக நிறுவினார்.

இராமானுஜருக்கு முன் இவ்வேதாந்தத்தின் முன்னோடிகளாக டங்கர், திரமிடாச்சாரியார், நாதமுனி, யாமுனர் ஆகியோர் திகழ்ந்தனர். இவர்களின் வேதாந்த சூத்திர உரைகள், திவ்வியபிரபந்த உரைகள், வைணவ வேதாந்தத்தை வகை செய்து வெளியிட்ட நூல்கள் ஆகியன இராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்திற்கு மூலங்களாக அமைகின்றன.

### 1.4.1. இராமானுஜர்

வைணவ ஆசாரியப் பரம்பரையில் முனித்திரயம் என்ற வழக்காறு ஒன்று உண்டு. வைணவத்திற்கு அருந்தொண்டாற்றிய நிலையில் நாதமுனி, ஆளவந்தார், இராமானுஜர் என்னும் மூவர் பற்றிய சொல் வழக்காக இது அமைகிறது. இவர்களுள் இராமானுஜர் சமயத்திற்கும் வேதாந்தத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. திருப்பெரும்புதூரில் கி.பி.1017இல் அவதரித்த இவர் ஆதிசேடன் அவதாரமாய்க் கருதப்பெறுகிறார். யாதவப்

பிரகாசரிடத்துப் பாடங்கேட்கையில் வேத, உபநிடத வாக்கியங்கள் பலவற்றிற்கு ஆசிரியர் பொருந்தா உரை கூறுதலறிந்து திருத்தினார். பின் பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமலை நம்பி ஆகியோரிடம் வைணவ மந்திரபொருள் நுட்பம், தத்துவத் திட்பம் ஆகியவற்றைத் தெள்ளிதின் உணர்ந்தார்.

தமக்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஆளவந்தாரின் சாத்திரப் படைப்புகளைத் தம் படைப்புகளுக்குரிய முதன்மை நூல்களாக கொண்டார். கிருஷ்ணசுவாமி அய்யங்கார், ஆளவந்தார் அருளிய ஆத்மசித்தி, சம்வித்சித்தி, ஈசுவரசித்தி ஆகியன ஸ்ரீபாஷ்யம் வரைகையிலும் கீதாருத்த சங்கிரகம் பகவத்கீதைக்கு உரை எழுதுகையிலும் ஆகமப் பிரமாணியம் பாஞ்சராத்திராதிகரணத்தினை விளக்குகையிலும் உடையவராகிய இராமானுஜர்க்குப் பயன் தந்தன என்று குறிப்பிடுகின்றார். [7] இவ்வகையில் முன்னூல்களின் அருங்கருத்துக்களையும் ஆழ்ந்த நுட்பத்தையும் நுண்ணிதின் உணர்ந்து விசிஷ்ட்டாத்துவைதத்தை இராமானுஜர் உலகிற்குப் பயன்தரும் வகையில் வெளியிட்டருளினார். இவர்தம் அருந்தொண்டால் வைணவம் செழித்தது. பல அருட்செயல்களைப் புரிந்த இராமானுஜர்க்கு யதிராசர், உடையவர், எம்பெருமானார், ஸ்ரீபாஷ்யகாரர் முதலான சிறப்புப் பெயர்களும் காணப்பெறுகின்றன.

பிறரெழுதிய பிரம்மசூத்திர உரைகளினின்று வேறுபட்டுப் '*பரம்பொருள் நாராயணன் ஒருவனே*' என்று அறுதியிட்டு உரைக்கின்றார். முற்கூறிய நூல்களேயன்றிக் கத்தியதிரயம், நித்தியகிரந்தம் ஆகிய நூல்களையும் இராமானுஜர் அருளினார். இவையேயன்றி எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளைப் பாரத நாடெங்கும் நியமித்தார். இவ்வருஞ் செயல்களால் வைணவ வேதாந்தம் விசிஷ்ட்டாத்துவைதமாய் இராமானுஜ தரிசனம் என்ற பெயரில் பரவலாக்கம் பெற்றது.

### 1.4.2. விசிஷ்டாத்துவைதம்

அத்துவைதம் என்பது 'இரண்டல்லாதது' என்ற பொருளுடையது, அதாவது மூலப்பொருள் இரண்டன்று; ஒன்றே என்பதாகும். அத்துவைதக் கோட்பாட்டை அருளிய ஆதிசங்கரரும் விசிஷ்ட்டாத்துவைதத்தை அருளிய இராமானுஜரும் இப்பொருளை கொள்கின்றனர். எனினும் இதனை விளக்கும் நிலையில் அத்துவைத கொள்கை இருகூறுகளாய் அமைகின்றது.

ஆதிசங்கரர் கி.பி. எட்டாம் நூற்றாண்டினர். பிரம்மசூத்திரம், உபநிடதம், பகவத் கீதை முதலியவற்றிற்கு உரையெழுதியவர். இவர் தம் கொள்கைப்படி பிரபஞ்சம் கடந்த மூலப்பொருள் ஒன்றுள்ளது. பரபிரம்மம்; அதுவே பரமான்மா, அது உண்மையானது. மற்ற உலகம், உயிர்கள் யாவும் உண்மையானவை ஆகா. மாயையால் உண்மைப் போல் தோற்றமளிப்பன. பரமாத்மாவே மனித உயிர்களுக்குள்ளும் அமைந்திருக்கும். அண்டம் நிறைந்து காணப்படும் வெளி சிறுசிறு தடுப்புகளின் இடையிலும் அமைவது போல் பரமாத்மாவே சீவாத்மாக்களின் உள்ளும் இலங்குகிறது. உயிர்கள் யாவும் ஒரே பிரமத்தின் தோற்றம், உலகம், உயிர்கள் வேறு; இறைவன் வேறு என்பது கூடாது.

இராமானுஜர் ஆதிசங்கரர்க்குப் பிற்காலத்தவர். இவர் ஆதிசங்கரர் போன்றே பிரபஞ்சம் கடந்த மூலப்பொருளை ஏற்கின்றார். ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே உண்மையானவன், என்றும் உள்ளவன் என்கிறார். ஆனால் ஆதிசங்கரர் கூறுவதுபோல் உலகம், உயிர்கள் பொய் என்பதை இராமானுஜர் ஏற்கவில்லை.

இறைவனைப் போலவே உயிர்களும் உண்மை, உலகும் உண்மை, இறைவன் எல்லாவற்றிற்கும் அடிப்படையானவன் அவன் உயிர் போன்றவன், உலகு முதலான யாவும் பரம்பொருளின் உடல் போன்றன.

> *"உயிரை இறைவனது உடலாக்கி இறைவனை அவ்வுடலுக்குரிய உயிராக்குகின்றார். இராமானுஜர் இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள இந்த சரீர சரீரி சம்பந்தம் இராமானுஜரது கொள்கைகளிலே குறிப்பிடத்தக்க மிக முக்கியமானதோர் அம்சமாகும். அதே சமயம் இச்சட உலகையும் இறைவனது திருமேனியாக அவர் கொள்கிறார். ..... இராமானுஜர் கொள்கைப்படி இயற்கை இறைவனுள் அடங்கும். ஆனால் இறைவன் இயற்கையுள் அடங்கான்."*[8]

என்று இராமானுஜரின் சித்தாந்தத்தை, கி.லக்ஷ்மணன் உணர்த்துகின்றார்.

சாந்தோக்கிய உபநிஷத்தில் *'தத்வமசி'* என்ற பரதத்துவத்தை விளக்கும் ஒரு மகாவாக்கியம் காணப்படுகிறது. ஒன்றான பரம்பொருளே பலவற்றின் அடிப்படையாகவும் மூலமாகவும் உள்ளது என்ற கருத்தில் முன்னிலையாக *'நீ அதுவாக இருக்கிறாய்'* என்ற பொருள்பட இம் மகாவாக்கியம் அமைகிறது.

இராமானுஜரின் விசிஷ்டாத்துவைதத்தில் *' தத் '* என்பது கடவுளைக் குறிக்கும். *' த்வம் '* என்பது சத்து, உயிர்கள், சடம் (பிரகிருதி) ஆகியவற்றை உடலாகக் கொண்ட உயிரான கடவுள் எனப் பொருள்படும். கடவுள் ஒன்றே; அவர் அந்தர்யாமியாக உள்ளேயுமிருக்கிறார்; வெளியிலுமிருக்கிறார் என்பது இராமானுச சித்தாந்தத்தின்படி இம்மகா வாக்கியத்தின் பொருளாகும். [9]

இவ்வகையில் இராமானுசர் கூறும் அத்துவைதத்தில் உலகுண்டு, உயிர்களுண்டு, இவற்றின் மூல காரணம் இறையன்றி இன்னொன்று ஏதுமில்லை. இதுவே அத்துவைதம் என்ற சொல்லுக்கு இராமானுஜர் கொண்ட விளக்கமாகும். உலகும் உயிர்களும் பிரம்மமாய் திகழும் இறைவனுக்குரிய விசேஷ குணங்கள். பிரம்மம் அவற்றைக் கொண்ட விசேஷ்யம். இவையிரண்டும் கலந்த விசிஷ்டமே இராமானுஜர் காட்டும் பரம்பொருள். விசிஷ்டமாய் திகழும் பரம்பொருளன்றி வேறு ஒன்று இரண்டாவதாய் அமையவில்லை என்ற கருத்தின் அடிப்படையில் விசிஷ்டாத்துவைதம் எழுந்தது.

அத்துவைதத்திலிருந்து விசிஷ்டாத்துவைதம் இவ்வாறு வேறுபடக்காரணம் அதன் பன்மைக் கோட்பாடேயாகும். அதாவது இறைவன் ஒன்று மட்டுமே உண்மை என்ற ஒருமை நிலையைக் கடந்து இறைவன், உலகு, உயிர்கள் என்பன யாவும் உண்மை என்ற பன்மை நிலையாகும். இச்சிந்தனை இராமானுஜர்க்கு ஏற்பட்டது மரபு வழியாய் வந்த பல்வகைக் கோட்பாட்டின் ஒருங்கிணைப்பாகும். இதனை இந்திரா பார்த்தசாரதி,

> *“இராமானுஜரால் தோற்றுவிக்கப்பட்ட விசிஷ்டாத்துவைதம் என்னும் வைணவ சமய தத்துவக் கோட்பாடு உபநிடதமல்லாத பல்வேறு சிந்தனைகளின் ஒன்றிணைந்த கோட்பாடாகும். உபநிடதங்கள் கூறும் ஒருமைக் கோட்பாட்டிற்கும், வேத மறுப்புக் கொள்கையினர் கூறும் கோட்பாட்டிற்கும் இடையிலான முரண், விஷ்ணு, நாராயணன் பகவான் கிருஷ்ணன் என்று தொடர்ந்துவரும் சிந்தனைகளால்*

> *உபநிடதங்களில் கூறப்பட்ட இறைவனுடன் இணைவு காட்டப்பட்டு விளக்கப்பட்டது. 'வேதாந்திகளின் இருமையற்ற கோட்பாடு, பாஞ்சராத்திர நெறியில் கூறிய ஒரு கடவுள் கோட்பாடு, பகவத்கீதை கூறும் கடவுள் கோட்பாடு, ஆழ்வார்கள் கூறும் திராவிட மரபுக் கோட்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி விசிஷ்டாத்துவைதம் உருவானது."* [10]

என்று விளக்குகிறார். இதனால் வைஷ்ணவ வேதாந்தம், தொன்மரபுகளின் அடிப்படையில் முறையான கருத்துக்களைத் தன்வயமாக்கிக் கொண்டமை புலனாகும்.


### 1.4.2.1. விசிஷ்டாத்துவைதத்தின் சிறப்பியல்புகள்

தத்துவஞானம் சமய அறிவு இரண்டிற்கும் உள்ள இடைவெளியை விசிஷ்டாத்துவைதம் மிகச் சிறப்புடன் நிரப்புகிறது. பிரபஞ்சம் என்பதனை ஆய்கையில் பரப்பிரம்மமே சிருஷ்டிகர்த்தா; அப்பிரமம், நாராயணன் ஒருவனேயன்றி வேறொருவர் ஆகார், என்று தெளிவுறுத்தும் கலைக்களஞ்சியம்

> “விசிட்டாத்துவைதம் உண்மையின் பண்பை அறிவதற்கான முயற்சியாகும். வேதாந்த சூத்திரத்தில் பேதம் அபேதம் பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றைக் கடக முறையைக் கையாண்டு முரண்பாட்டை நீக்கும் சமன்வயமுறை வேறெங்கும் காணப்படாத சிறப்புடையதாகும். அதன் பிரதான பிரதிதந்திரம் என்னும் கொள்கை சரீர, சரீரி பாவமாகும். விசிட்டாத்துவைதம் சரீரம் என்பதற்குச் சிறந்த பொருள் கூறுகிறது. மற்ற தத்துவ சாத்திரிகள் சரீரம் சடமானது என்றும் அதனால் அழியும் தன்மையுடையது என்றும் கூறுவர். ஆனால் இராமானுஜர் சரீரம் என்பது சேஷத்துவமுடையது அதாவது தனிச் சுயேச்சையுடையது என்று கூறுகிறார்." [11]

என விசிஷ்டாத்துவைத நுட்பத்தைப் பட்டியலிட்டுரைக்கின்றது. விசிஷ்டாத்துவைதத்தின் நோக்கம் இறைத் தொண்டு ஒன்றே. மேலும் இறைவன் அளித்த சிந்தனை, உடல் ஆகியன இறைவன் தொண்டிற்கு என ஒப்படைத்துக் கொள்ளப்பட வேண்டியன. இத்தகைய இறைச் சிந்தனை சீவனின் குறையுள்ள ஞானத்தைப் போக்கி இறைவனை முழுதும் உணர வைக்கும்.

இறைவனிடம் இடையறாது பற்று வைத்து அவன் திருத்தாளே கதியென்று சரணடைதல் ஆன்மிகத் தேட்டத்திற்குரிய விடையாகும் என்று வலியுறுத்துகிறது. ஆன்மிகத் தேடலுக்கு ஆட்படும் அடியவர்கள் சமூகத் தர நிலைகள் முதன்மை உடையன ஆகா. உண்மையான பக்தி ஒன்றே முதன்மையுடையது. இத்தகைய உயரிய நோக்குகளால் விசிஷ்டாத்துவைதம் பலரால் விரும்பி ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றது. பாரத நாடெங்கும் செழித்துப் பரந்து விளங்குகின்றது. இதன் சித்தாந்த நிலைகள் மூன்றாகும். அவை வருமாறு.




மேற்கூறியவற்றுள் தத்துவம் என்பது இறைத்தன்மை, சேதன அசேதனங்களின் நிலை, மூலப்பொருள் பற்றிக் குறிப்பிடுவது. இதம் என்பது இறைவனை அணுகும் நெறிகளைச் சுட்டுவது. புருஷார்த்தம் என்பது ஆன்ம ஈடேற்றம்; அதாவது இறை நாட்டத்தால் உண்டான பயனாகிய வீடுப் பேற்றைக் குறிப்பிடுவதாகும். இவற்றின் விளக்கத்தை இனிக் காணலாம்.

## 1.5. தத்துவத் திரயம்

அத்துவைதத்துடன் விசிஷ்டாத்துவைதம் வேறுபடும் நிலையில் உலகு உண்மை; உயிர்கள் உண்மை என்று இராமானுஜர் வலியுறுத்தும் கொள்கை முன்னுரைக்கப்பட்டது. அவ்வழி இறைவன் அவ் இரண்டனுள்ளும் அந்தர்யாமியாய், ஆன்மாவுக்குள் ஆன்மாவாய்த் திகழ்கிறான். இம்மூன்று பொருட்களின் தொடர்பையும் உண்மை நிலையையும் கூறும் அறிவாதலால் அது தத்துவம் எனப்படும். தத்துவத் திரயம் என்ற நிலையில் சுட்டப்படும்

1. சித்து
2. அசித்து
3. ஈசுவரன்

ஆகிய மூன்று பொருட்களின் இயல்புகள் உரைக்கப்படுகின்றன.

சித்து என்பது அறிவுள்ளது என்றும் அசித்து அறிவற்றது என்றும் பொருள் உடையன. ஈசுவரன் ஆதிமூலமாகிய பரம்பொருள். சீவான்மாவின் நிலை, உலகப் பொருட்களின் குணங்கள், இறையியல்பு ஆகியன முறையே ஈண்டுக் குறிப்பிடப்பெறுகின்றன.

### 1.5.1. சித்து

ஞானத்திற்கு இடமான ஆன்மா சித்து என்றும் சேதனன் என்றும் குறிக்கப்படுகிறது. இது உண்மைப்பொருளாகும். நம்மாழ்வார் இதனை *'ஊனில் உயிரில் உணர்வில் நின்ற ஒன்று'* (நாலா. 375) என்பார். அறிவுமயமாக நிற்கும் ஆன்மா, தருமபூதஞானம் எனப்படும் அறிவுக்கும் இருப்பிடமானது. இவ்வான்மா, இறைவன் தங்கியிருக்கும் உடலாகும். உயிர் இறைவனாகும். இவ்வுடல்-உயிர் இயைபு, சரீர-சரீரி பாவம் ஆகும். பெரியாழ்வார் தம் உயிர் இறைவனுக்கு இருப்பிடமாயிற்று என்பதை,

அற்றம் உரைக்கின்றேன் இன்னம்
ஆழ்வினைகாள் உமக்கு இங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின்
பண்டு அன்று பட்டினம் காப்பே (நாலா. 449)

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார். அவர் இறைவனுக்குத் தம் உயிர் இருப்பிடமானதால் ஆழ்வினைகள் தம்மைப் பற்றா என்று வெளிப்படுத்துகின்றார். சித்து எனப்படும் ஆன்மாவின் கூட்டத்தில் விளங்கும் சீவான்மாக்கள் பத்தர், முத்தர், நித்தியர் எனப்படுபவர். பத்தர் என்பார் உலகியலில் இடர்ப்பட்டு உழல்பவர். முத்தர் பூவுலகில் குருவின் துணைக் கோடலால் பக்தி அல்லது பிரபத்தியால் வீடு பேறு அடைவர். நித்தியர் என்பவர் இறைவனைப் போன்றே வினைத் தொகுதியால் சாரப்படாது இறைவற்கே தொண்டு செய்யும் அனந்தன், கருடன், சேனைத்தலைவன் முதலிய நித்திய சூரிகள் ஆவர்.

### 1.5.2. அசித்து

அசித்து என்பது அறிவற்றது; அசேதனம் என்றும் வழங்கப்பெறும். இதன் பலனைப் பெறுபவன் சேதனன் ஆவான். அசித்து ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலையாக மாறும் தன்மையுடையது. சேதனன் போல அசேதனத்திற்கு ஞானநிலை ஏதுமில்லை. இது,

1. சுத்தச் சத்துவம்
2. மிச்சிரத் தத்துவம்
3. சத்துவச் சூனியம்

என்னும் மூன்று பிரிவுகளில் அடங்கும்.

#### 1.5.2.1. சுத்தச் சத்துவம்

சத்துவம், இராஜசம், தாமசம் என்பனவற்றில் பிறவற்றின் குணம் கலவாது சத்துவம் மட்டுமே நிறைதல் சுத்த சத்துவமாகும். ஆகுதல் அழிதல் இல்லாதது; நிலையானது; நித்தியர் முத்தர் ஈசுவரன் ஆகியோர் ஞானத்தால் உணரவேண்டாது தாமே ஒளிவிட்டுத் திகழும். [12]

#### 1.5.2.2. மிச்சிரத் தத்துவம்

மிச்சிரத் தத்துவம் என்பது முற்கூறிய சத்துவம் முதலான மூன்று குணங்களை உடைய மூலப்பிரகிருதி ஆகும். ஞானத்துக்கு எதிரிடையானதால் அவித்தை என்றும் மாயை என்றும் குறிக்கப்பெறும். மூன்று குணங்கள் உடையதால் திரிகுணம் என்றும் குறிப்பிடப்பெறும். இக்குணங்கள் ஐம்பூத நிலைகட்கு ஆதாரமாய் அமைதலைக் கலைக்களஞ்சியம்,

> *பிரகிருதியிடம் சத்துவம், இராஜசம், தாமசம் என மூன்று பொருட்கள் உள. அது எப்பொழுதும் மாறும் தன்மையது. மாறிக்கொண்டே இருப்பது. அது ஒரு பக்கம் இராஜசம், தாமசம் ஆகியவற்றிற்கும் சத்துவம் அதிகரித்த தன்மையுடன் கூடிப் புத்தி அகங்காரம் மனம் பொறிகள் ஆகியவற்றிற்கும் மற்றொரு பக்கம் சத்துவம் இராஜசம் ஆகியவற்றிற்கும் தாமசம் அதிகரித்த தன்மையுடன் கூடி ஆகாசம் வாயு, தேஜஸ், அப்பு பிருதிவி என்னும் சூக்கும பூதங்களுக்கும் அவற்றின் தூல வடிவங்கட்கும் மூலகாரணமாகும்.* [13]

என்று விளக்கும்.

மிச்சிரத் தத்துவத்தின் மாறுபடும் தன்மை பிரகிருதியில் அடங்கும். மாறுபட்டு நிற்பது விகிருதியாகும். சீவர் தம் உடல் பிரகிருதி, அகங்காரம், ஐம்பூதங்கள் இவற்றால் ஆனது. கர்மேந்திரியங்கட்கும் ஞானேந்திரியங்கட்கும் இருப்பிடமானது.

### 1.5.2.3. சத்துவச் சூனியம்

சத்துவம் முதலான குணங்கள் ஏதும் பற்றுதல் இல்லா நிலை சத்துவச் சூனியம் ஆகும். இங்ஙனம் திகழும் காலம் என்ற பகுதி, வேறுபாடற்ற பரந்து நிற்கும் தத்துவமாகும். இதன் நியமத்திற்குக் கட்டுப்பட்டு இறைவன் ஆணைப்படி, உலகியல் இயலுகின்றது. இறப்பு, நிகழ்வு, எதிர்வு முதலிய முக்காலத் தன்மைகள் இதன் கண் அடங்கும்.

பரமபதத்தில் காலத்திற்கு இறப்பு முதலான தன்மைகள் இல்லை. அங்கு நித்தியமான தன்மை ஒன்றே உண்டு. இக்காலம் இறைவனுடைய படைத்தல் முதலான தொழில்கட்கு ஓர் அங்கமாய் விளங்கும்.

அசித்தினுள் முற்கூறிய மூன்றேயன்றித் தருமபூத ஞானமும் அடங்கும். அது சேதனர்க்கும் அங்கமாய் திகழ்வதால் சித்தில் அடக்கியுரைக்கத் தக்கது. சேதனரின் தருமபூத ஞானத்தின் பல கூறுகளாக இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு ஆகியன கொள்ளப்படுகின்றன. சேதனனின் இஞ்ஞானம் அந்தக்கரணங்களால் இயலும்.

### 1.5.3. ஈசுவரன்

ஈசுவரன் முற்கூறிய சித்து அசித்துகட்கு உயிராய் இருப்பவன். வாத்சல்யம், சௌசீல்யம், சுவாமித்துவம், சௌலப்பியம் முதலான கல்யாண குணங்கட்கு இருப்பிடமானவன்; அகண்ட குணங்கள் என்ப்படும் ஐசுவரியம், பலம், வீரியம், ஞானம் தேயு, சக்தி முதலானவை உரியவன்; சொரூப விசேடணங்கள் எனப்படும் சத்தியத்துவம், ஞானத்துவம், அனந்தத்துவம், ஆனந்தத்துவம், அமலத்துவம் ஆகியனவும் கொண்டவன். உலகின் சிருஷ்டி நாயகன், எஞ்ஞான்றும் நிலைத்திருப்பவன்.

இதனை திருமங்கையாழ்வார்,

*தீதறு நிலத்தொடு எரிகாலினோடு நீர்கெழு*
*விசும்பு அவைஆய்*
*மாசறு மனத்தினொடு உறக்கமொடு இறக்கை*
*அவை ஆய பெருமான்.* (நாலா. 1438)

என்று இறைவனின் பரத்துவத்தை விளக்குகின்றார்.

இறைவனைக் காலம், இடம், கொண்டு வரையறைப்படுத்த இயலாது. அசித்தின் உயிராய் இருப்பினும் அதன் விகார தோஷங்கள் பற்றாதவன். எல்லாவற்றிலும் மேம்பாடுடைய தத்துவப் பதவியினை உடையவன். இறைவனின் திவ்ய மங்கள உரு, பேரொளியை உடையது; அழகு என்பதன் தத்துவமாய் மிளிர்வது; சுத்த சத்துவமாய்த் திகழ்வது; அண்டினவர்க்கு அருள் வழங்கும் தன்மையது; அனைவர்க்கும் காப்பாய் விளங்குவது. திவ்ய ஆபரணங்களாலும், ஆயுதங்களாலும் அலங்கரிக்கப்பெற்றதும் ஆம்.

இறைவன் திருமேனியின் நிலைகள் ஐந்தாகும். அவை பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அருச்சை என்பனவாம். அவற்றுள் பரத்துவம் என்பது பரமபதத்தில் சகல திருக்கூட்டத்தாருடன் அனந்த வடிவமாய்க் கொண்டமையும் கோலமாகும்.

வியூகம் என்பது உலகியல் நிகழ்வுகட்குரிய படைப்பு, காப்பு, அழிப்பு, அருள் முதலியவற்றைச் செய்யும்படி கொண்ட வடிவங்களாகும். இவ்வடிவம் நான்காகவும் அதிலிருந்து கிளைத்த வியூகம் இரண்டிரண்டாகவும் அமைந்து மொத்தம் பன்னிரு வியூக வடிவங்கள் சுட்டப்பெறுகின்றன. இவ்வியூக வடிவம் சீவர்களின் அங்கங்களில் நிலைபேறுடையது. எனவே வைஷ்ணவ மரபினர் தம் உடலின்கண் பன்னிரு இடங்களில் திருநாமங்கள் இடுவர்.

விபவம் என்பது அவதார நிலையாகும். ஆவேச, முக்கிய அவதாரம் என்றிரண்டாய் இது குறிக்கப்பெறும். தத்தாத்திரேயர், பரசுராமன் போன்றனவும் இராமன், கண்ணன் போன்றனவும் முறையே இவ்வடிவில் அடங்கும்.

அந்தர்யாமி என்பது எல்லோருக்குள்ளும் உயிராய் ஆன்மாவின் விளக்காய் அங்கேயே குடிகொள்ளும் நிலையாகும். அருச்சை என்பது அடியவர் எவ்வடிவில் வழிபடுகின்றனரோ அவ்வடிவையே தம் உருவாய்க் கொள்ளல்; திருக்கோயில்களில் நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சி தரும் கோலங்கள் இவ்வகையில் அடங்குவன.

பொய்கையாழ்வார் அருச்சாவதாரத்தில் இறைவன் நிலையை,

*தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே*
*தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் - தமருகந்து*
*எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே*
*அவ்வண்ணம் ஆழியான் ஆம்* (நாலா. 2125)

என்று குறிப்பிட்டு வணங்குகின்றார்.

பெரிய பிராட்டியார் திருமகள் ஈசுவரத் தத்துவத்தின் ஓர் அங்கமாகும். திருமால் போன்றே திருமகள் எங்கும் கலந்து நிற்பவள். இவ்விருவரும் உலகின் தாய் தந்தையராய்த் திகழ்கின்றனர். இறைவனை அடையத் திருமகள் வழியாகவும், அருள் தருவதில் இணையாகவும் கருதப்படுகின்றாள். பிரபத்தியைக் கைக்கொள்ளும் காலத்துத் திருமகளின் வழியாகவே சரணடைதல் வேண்டும். இது குறித்து இராமதேசிகாசாரியார் குறிக்கையில்,

*“பிரபத்தியை அனுஷ்டிக்கும்போது முதலில் பிராட்டியைப் புருஷாகாரமாகக் கொண்டு பிரபத்தியைச் செய்தே அவ்விருவரையும் சரணமடைய வேண்டும். புருஷாகாரமாவது பலன் தரவல்ல சேதனனை நெருங்குவதற்குப் பலனை விரும்புமவனால் உபாயமாக வரிக்கப்பட்ட மற்றொரு சேதனன்”.* [14]

என்கிறார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருமகளின் கருணையுள்ளத்தை,

*பதங்கள்எல் லாமும் பிறப்பொ டிறப்பில் பரத்துவமும்*
*இதங்கள்மற் றியாவும்நன்கு ஆராயில் வேறில்லை எட்டெழுத்தால்*
*நிதங்களிகூர் பெருமான் நெஞ்சின் மேவிநிருதர் தம்மேல்*
*கதங்களும் செய்யும் பெருந்தேவி யார்திருக் கண்ணருளே.*
(திருமகள். 31)

என்று வியக்கின்றார்.

இவ்விதம் திருமாலுக்கு அடுத்து வைத்து வணங்கப்பெறுபவர் திருமகள். மத்துவசித்தாந்தம் திருமாலையடுத்து வாயு பகவானை வழியாகக் கொள்ளும். இவ்வேறுபாடு கொண்டே விசிஷ்டாத்துவைதம் ஸ்ரீவைஷ்ணவம் என்றும் துவைதம் சத்வைஷ்ணவம் என்றும் போற்றப்படுகின்றன. [15]

## 1.6. இதம்

இதம் என்பது இறைவனை அடையும் வழியாகும். தத்துவம் எனத் திகழும் திருமாலின் அருள்பெறுதல் யாங்ஙனம் என்பது இப்பகுதியுள் விளக்கப்பெறும். பிறந்திறந்து துன்புறுதற்குரிய வாழ்வினின்று விடுதலை பெற உதவும் திருமால் அருள் பெறும் வழிகளை இருநிலைகளில் விளக்கலாம்.

1. பக்தி நெறி
2. பிரபத்தி நெறி அல்லது சரணாகதி நெறி

தனித்தனியே இவை சுட்டப்பெறினும் ஒன்றையொன்று சார்ந்தே நிற்பவை. பக்தி உடையவனுக்கு அது நிறைவேறப் பிரபத்தி தேவை. பிரபத்தி சார்ந்தவனுக்கு ஒரு நிலையில் பக்தி இன்றியமையாதது ஆகின்றது.

### 1.6.1. பக்தி நெறி

பக்தி எனுபது அன்பின் செழுமை; இறைவன்பால் கொண்ட பேரன்பு; இறைவனைத் திண்ணமாக நம்புதல். பக்தியே இறைவன்பால் ஒருவனை உய்த்திட வல்லது.

ந.சுப்புரெட்டியார்,

> *பக்தியினை மேற்கொண்டார் பக்தர் - பத்தர் எனப்படுபவர். பத்தர் எனினும் பித்தர் எனினும் ஒன்றேயாகும். உலகில் நோயால் கொள்ளும் பித்தும் மருளால் கொள்ளும் பித்தும் துன்பம் தருவன. அருளால் கொள்ளும் பித்து அளவிலா இன்பம் தருவது . . . . . . . அடியவர்கள் தம்மைப் பித்தன் என்றும் பேயன் என்றும் கூறிக்கொள்வதால் இதனை மேலும் தெளியலாம்.* [16]

என்று பக்தியின் ஆழமான நிலையை உணர்த்துகின்றார்.

இப்பத்திநெறி எட்டு அங்கங்களையும் மூன்று நிலைகளையும் உடையது. இந்நெறி எல்லாவற்றிலும் இறைவனின் அன்புக்குரிய பொருள் என்று தன்னைக்கருதி இறைவனை இடையறாது சிந்திக்கும் உயர் நெறியாகும்.

### 1.6.1.1. எட்டு அங்கங்கள்

வளர்ச்சி படிகளைக் குறிக்கும் பக்தியின் எட்டு அங்கங்கள் பற்றி வேதாந்த தேசிகன்

*எமநியம வாசனங்க ளியலாவி புலனடக்கந்*
*தமதறியுந் தாரணைக டாரையறா நினைவொழுக்கஞ்*
*சமமுடைய சமாதிநலந் சாதிப்பார்க் கிலக்காகும்*
*அமரர்தொழு அத்திகிரி யம்புயத்தா ளாரமுதே* (தேசி.பி. 254)

என்று கூறுவார்.

இவ்வங்கங்கள்

1. இயமம் (எமம்) - தீயன கைக்கொள்ளாமை
2. நியமம் - ஒழுக்கமாயும் இறை நம்பிக்கையுடனும் நடத்தல்
3. ஆசனம் - ஆசனப் பயிற்சி
4. பிராணாயாமம் - புலன்களை ஒருமுகப்படுத்தல்
5. பிரத்தியாகாரம் - புலனடக்கம்
6. தாரணை - இறை வடிவத்தை மனதில் பதித்தல்
7. தியானம் - இடைவிடாது இறைவனைச் சிந்தித்தல்
8. சமாதி - இறையனுபவத்தில் திளைத்தல்

எனப் பாகுபாடு செய்யப்படுகின்றன. இவ்வங்கங்கள் புலன்களைத் தூய்மை செய்து இறைவன்பால் சார்த்தத் துணை செய்கின்றன. இத்தூய்மைநிலை மனத்திலும் உடலிலும் ஏற்படும்போது இறைவனை உணர்தல் எளிதாகின்றது.

இவற்றை வேதச்சார்பு தரிசனங்களில் ஒன்றான யோகம் விரிவாகப் பேசுகின்றது. யோகம் கூறும் இவ்வங்கங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் கி.லக்ஷ்மணன்,

> *இன்று சாதாரணமாக நாம் செய்யமுடியாத சில செயல்களைச் சிலர் மந்திரங்களாலும் தந்திரங்களாலும் செய்து காட்டுகின்றனர். அவையல்ல யோகம். மூச்சை அடக்குவது, மூக்கு நுனியை நோக்கிக்கொண்டு மௌனியாய் உட்கார்ந்திருப்பது ஆகியவையும் யோகமல்ல. சித்த சுத்தி ஏற்பட்டு நான், எனது என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும். இச்சித்த சுத்தியின் பொருட்டுப் படிப்படியாக அனுட்டிக்கவேண்டிய எட்டு விதிகளையே யோக மதத்தினர் வகுத்தனர். உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டின் முதலில் உடலைக் கட்டுப்படுத்த வேண்டும். இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்திய தத்துவ ஞானிகள் கண்ட பேருண்மை.* [17]

என்கிறார்.

இவ்வங்கங்களை வைஷ்ணவமும் சைவமும் கைக்கொண்டுள்ளன. எனினும் தத்தமக்குரிய நெறிகளில் விளக்கங்களுடன் இறையியல் நோக்கில் விளக்கி அமைகின்றன.

இவற்றின் அடிப்படையில் பக்திநெறி, கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற நிலைகளைக் கொள்கிறது. இம்மூன்றும் படிப்படியான வளர்நிலைகள். இவற்றின் இறுதியில் பரபக்தி, பரஞானம், பரமபக்தி ஆகியன அமைகின்றன. இம்மூன்றையும் பக்தியோகத்தின் கூறுகளாகவும் சுட்டலாம்.

### 1.6.1.2. பக்தி நெறியின் மூன்று நிலைகள்

பக்தி நெறி யோகம் எனப்பெறும். யோகமாவது இறையன்றி வேறு விஷயங்களில் மனம் பழகாதிருக்க அமையும் வழியாகும் (பக.கீதை 8.8). பக்தி நெறி,

1. கர்மயோகம்
2. ஞானயோகம்
3. பக்தியோகம்

என அமையும். இம்மூன்று நிலைகளும் ஒன்றின் வளர்முகமாய் மற்றொன்று திகழ்வன.

### 1.6.1.2.1. கர்மயோகம்

சிறந்தோர் நோக்கம் கருதிப் புரியும் செயல்பாடு கருமயோகம் எனப்படுகிறது. எல்லாவற்றிலும் உயரியநோக்கம் இறைவனை அடைதலேயாகும். எனவே இறைநாட்டத்துடன் புரியும் செயல்கள் இறைவனை அடைவதற்குரிய வழியாகக் கொள்ளப் பெறுகின்றன. ஆனால் இறை நாட்டமொன்றே நோக்காக அமைதல் வேண்டும். இங்ஙனம் துதித்து இப்பெருமை கொள்ளலாம் என்ற வேண்டும் நிலைகள் யோகம் எனப்படா. கரும யோகத்துடன் ஈடுபட்டவன் அதன் பயன்பற்றிச் சிறிதும் பற்றுக்கொண்டிரான்.

இத்தகைய யோகம் நிஷ்காமிய யோகமேயாகும். சீவனாகிய கருமயோகி தனக்கு உரிமையென்று கருதிச் செய்யும் காரியத்தை மட்டுமே கருதுவான். அதனால் வரும் வெற்றி தோல்விகளைப் பொருட்படுத்தாமல் சமமாய்ச் செயலாற்றுவான். இந்தச் சமத்துவக் குணமே யோகம் என்ற தகுதிக்குரியது. மேலும் தான் செய்யும் செயல் என்ற எண்ணம் விட்டு அவனருளாலேயே இக்கருமங்கள் செய்யப்படுகின்றன என்ற சிந்தையும் தோன்ற வேண்டும். விவேகானந்தர் கருமயோகச் சிறப்பைக் கூறுகையில்,

> "*எந்தக் காரியங்கள் நம்மை கடவுளை நோக்கிச் செலுத்துகின்றனவோ அவைகளெல்லாம் கடமைகள். எந்தக் காரியங்கள் நம்மை மிகக் கீழானநிலைக்கு இழுத்துச் செல்கின்றனவோ அவைகளெல்லாம் கடமைகள் அல்ல*". [18]

என்கிறார்.

பொய்கையாழ்வார் இறைச் செயல்களில் ஈடுபடும் நிலையினைக் கீழ்க்காணும் நிலையில் விளக்குகிறார்.

*தொழுது மலர்கொண்டு தூபம்கை ஏந்தி*
*எழுதும், எழுவாழி நெஞ்சே - பழுதின்றி*
*மந்திரங்கள் கற்பனவும், மாலடியே கைதொழுவான்*
*அந்தரம் ஒன்றில்லை அடை* (நாலா. 2139)

*எழுவார் விடைகொள்வார் ஈந்துழா யானை*
*வழுவா வகைநினைந்து வைகல் தொழுவார்* (நாலா. 2107)

*நாடிலும் நின்னடியே நாடுவன் நாள்தொறும்*
*பாடிலும் நின்புகழே பாடுவன், சூழலும்*
*பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவேற்கு*
*என்னாகில் என்னே எனக்கு* (நாலா. 2169)

பலவகை இறைப் பணிபுரிந்த நிலையில் '*என்னாகில் என்னே எனக்கு*' என்று இருத்தல் நிஷ்காமிய யோகத்தின் பாற்படும்.

### 1.6.1.2.2. ஞானயோகம்

கர்மயோகம் இறைவன் மேல் பற்று வைக்கத் தூண்டும் முதற்படியாகும். ஞானயோகம், பற்றாய்ப் பற்றிய இறைவனைச் சிந்தித்தலேயாகும். முதல் நிலையிலேயே ஞானயோகத்தை கைக்கொண்டுவிடமுடியாது. கருமயோகத்தில் நிஷ்காமிய நிலையடைந்த பின்னரே கடவுளின் பரிபூர்ணத்துவத்தை உணரமுடியும்; அவ்வுணர்வு ஒன்றிய நிலையில் இறைவன் பற்றிய சிந்தனையைக் கொண்டு தியானித்தல் ஞானயோகமாகும். இராமானுஜர் கீதா பாஷ்யத்தில் (2.53) சாத்திரங்களால் உண்டாகும் ஆன்ம ஞானத்துடன் கூடிய கர்மயோகம் '*ஸ்திதபிரஜ்ஞதை*' எனப்படும் ஞானநிஷ்டையை உண்டாக்குகிறது. அந்த ஞானநிஷ்டை, யோகம் என்ற நிலையைத் தோற்றுவிக்கும் என்கிறார். ஞானயோகத்தின் விளைவாக ஆத்மானுபவம் எளிதாகிறது. தன்னைப் போன்ற பிற ஆத்மாக்களையும் சமமாகக் கண்டதால் பரமாத்மாவுடன் நெருங்கிய நிலையை எய்துகின்றான். இந்த ஆத்மஞானி இறைவன் தொண்டே பெரிது எனக் கருதி நிற்பான். தன் உயிர் ஆண்டவனின் உடல் என்ற கொள்கையுடன் சேஷத்துவம் உடனுறைந்து பணிபுரியக் கருதுவான்.

பகவத்கீதை (பக.கீதை 6.29) ஞானயோகம் கைவரப்பெற்ற நிலையில் யோக முறையால் பண்பட்டவன் அனைத்தையும் சமமாகக் காண்பான், தன் உயிர் எல்லா உயிர்களிலும் இருப்பதாகவும் எல்லா உயிர்களும் தன் உயிரில் இருப்பதாகவும் காண்பான் என்று சுட்டுகிறது.

நம்மாழ்வார் தம் திருவாய் மொழியில் இறைவன் எங்கும் நிறைந்து உயிர்களுக்குள் கலந்து நிற்கும் தன்மையை,

*பரந்ததன் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்*
*பரந்தஅண்டம் இதுவென நிலம்விசும் பொழிவறக்*
*கரந்தகில் இடந்தொறும் இடம்திகழ் பொருள்தொறும்*
*கரந்துஎங்கும் பரந்துளன் இவைஉண்ட கரனே* (நாலா. 2908)

*இவையும் அவையும் உவையும் இவரும், அவரும், உவரும்*
*எவையும் எவரும் தன்னுள்ளே ஆகியும், ஆக்கியும், காக்கும்*
*அவையுள் தனிமுதல் எம்மான். . . . . . . . . . . . . . . .*
*என்னுடை சூழல் உள்ளானே* (நாலா. 2987)

என்ற பாடல்களில் குறிப்பிடுகிறார். பூதத்தாழ்வார்,

*ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன் தன் நாமங்கள்*
*தானத்தால் மற்றுஅவன்பேர் சாற்றினால்*
*வானத்து அணிஅமரர் ஆக்குவிக்கும்* (நாலா. 2184)

என்று குறிப்பிடுகின்றார். இராமானுச நூற்றந்தாதியும்,

*ஞானம் கனிந்த நலம்கொண்டு*
*நாள்தொறும் நைபவர்க்கு*
*வானம் கொடுப்பது மாதவன்* (நாலா. 2856)

என்று குறிப்பிடக் காணலாம்.

### 1.6.1.2.3. பக்தி யோகம்

கர்ம யோகத்தானும் ஞானயோகத்தானும் விளையும் ஆத்ம தரிசனம் பக்தி யோகத்திற்கு முதற்படி ஆகும். பக்தி யோகம் என்பது இறைவனிடம் கொள்ளும் ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடே. பிற நிலைகள் ஆத்ம அனுபவம் பெறத் தூண்டுவன. அவ்வனுபவம் இறைக் காட்சிக்குத் தன்னை ஈடுபடுத்தும். ஞானயோகத்தில் குறிப்பிடப் பெறும் தியானம் பக்தி யோகத்திலும் உண்டு. தன்னுள் கலந்திருக்கும் - அந்தராத்மாவான - மெய்ப்பொருளை நன்குணர்ந்து தியானிக்கவேண்டும். அதன் முதன்மைக்குப்

பிரபத்தியே துணை நிற்கவல்லது. இது பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்று மூன்றாய்ச் சுட்டப்பெறுவன. பகவத்கீதை, வேறு எண்ணமின்றி இடையறாமல் எப்போதும் யார் இறைவனைத் தியானிக்கிறார்களோ அந்த நிரந்தரயோகிக்கு இறைவனை எளிதில் அடைய முடியும் என்று பக்தி கொள்ள வேண்டிய முறையையும் பயனையும் குறிப்பிடுகிறது. (பக.கீதை 8.14). இடையறாத பக்தியின் தன்மையைச் சித்பவானந்தர்,

> *"யாரொருவர் தான் வணங்கும் தெய்வத்திடத்துப் பேரன்பு கொண்டிருக்கின்றானோ அவனுக்கே இடையறாத மனனம் பண்ணுவது சாத்தியமாகிறது. பரமாத்மனை அவன் ஆழ்ந்து நேசிப்பதாலும் எண்ணுவதாலும், பரமாத்மனுடைய அன்பு ததும்பிய அருளுக்கு அவன் பாத்திரமாகிறான். பின்பு பரமாத்மனை அடைவதும் அவனுக்கு எளிதாகிறது. இப்படி இறைவனை இடையறாது மனனம் செய்கின்ற செயலுக்கு பக்தி என்று பெயர். இவ்விதத்தில் உடையவர் ஸ்ரீ இராமானுஜாச்சாரியார்...............* ***அதாதோ ஜிஞ்ஞாஸா*** *என்றும் பிரம்ம சூத்திரத்திற்கு வியாக்யானம் செய்திருக்கிறார்கள்".* [19]

என்று குறிப்பிட்டுரைக்கிறார்.

ஆழ்வார்களின் பக்தியில் இந்த இடையறாத மனனம் காணப்படுகின்றது. ஆண்டாள் எல்லாப் பிறவிகளிலும் இறைவனுக்கே ஆட்பட விரும்பி,

*பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ*
*குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது*
*.........................................................................*
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு*
*உற்றாமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்*
*மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்* (நாலா. 502)

என்கிறார்.

இடையறாத பக்தி செலுத்தவேண்டும் என்ற அவர் தம் வேட்கை புலனாகும். இப்பக்தியோகத்தின் உட்கூறுகளாகப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி ஆகியன அமைகின்றன. எம்பெருமானோடு கலந்தபோது மகிழ்வும் பிரிந்தபோது துயரும் கொள்ளும் நிலை பரபக்தி. எம்பெருமானுடைய

தரிசனம் பரஞானம். அவ்வனுபவம் அகலுகையில் வருந்தியிருத்தல் பரமபக்தி என்று அறிஞர் விளக்குவர். இம்மூன்றும் பக்தி யோகத்தினால் நேரும் இறையனுபவத்தினைக் கொண்டு அமைகின்றன.

இம்மூன்று யோகங்களும் படிப்படியான வளர்நிலைகள். இவற்றில் ஈடுபட்டு இறைவனை உபாசித்து வருதல் என்பது மிகுந்த இடர்ப்பாடானதாய் அமைகின்றது. அரியவர்க்கே கைகூட வல்லது. ஆதலால் இவ்விடர் நேராது புருஷார்த்தத்தைக் கைக்கொளப் பிரபத்தி அருளப் பெறுகின்றது.

### 1.6.2. சரணாகதி நெறி

இறைவனையன்றி வேறு வழியில் வாழ்வின் ஈடேற்றம் இல்லை எனத் திண்ணமாக நம்பி இறைவனின் திருவடிகளில் அடைக்கலம் புகுதலே சரணாகதி நெறி ஆகும். இது பரசமர்ப்பணம், பரநியாசம், உபயானுஷ்டானம், பிரபத்தி என்று பலவாறு குறிப்பிடப் பெறுகின்றது.

சரணம் (caran) என்பது திருவடிகளைக் குறிக்கும். திருவடிகள் அன்றி வேறு கதி இல்லை என்ற பொருளில் சரண் (saran) அடைதல் சரணாகதி என்ற பெயர் பெற்று அமைகிறது. எனவேதான் குலசேகராழ்வார் '*தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரணில்லை* (நாலா. 688) என்கின்றார்.

பரசமர்ப்பணம் என்பது இறைவனுக்குகந்த நற்காரியங்களில் ஈடுபட்டு உலகியல் இன்பத்திற்கு அஞ்சி இறைவனிடமே எல்லாப் பொறுப்பையும் ஒப்படைத்து - சமர்ப்பித்து வாழ்தல் என்ற காரணம் பற்றிக் குறிப்பிடப் பெறுகிறது. இறைவன் திருவடிகளில் தம்மையும் தம் பொறுப்புகளையும் ஒப்படைக்கும் தன்மையில் தன் கடன் என்று கருதாதிருத்தலை, பரநியாசம் என்பது குறிக்கிறது.

உபயானுஷ்டானம் இரண்டாம் வழி என்ற பொருள் தரும். முற்கூறிய பக்தி யோகங்களே அன்றித் துணையாய் அமைந்த வழி, கடைப்பிடிக்கவேண்டிய வழி என்ற குறிப்பில் உபயானுஷ்டானம் எனப்படுகின்றது.

பிரபத்தி நெறி என்பது சிறப்பு வழி என்ற பொருள் தரும். பிர- சிறப்பு, பது-அடைதல். முற்கூறிய உபாயங்களை அடையவும் கடைப்பிடிக்கவும் முடியாத எளியவர்கட்கு இறைவனாலேயே அருளப்பட்ட நெறியாகப் பிரபத்தி விளங்குகிறது. 'சிறப்பு வழி என்பது பிற உபாயங்கள் கூறும் உபாசனைகளில் வழி ஒழுக இயலாதவர் பலரும் தம் மனத்தை ஆண்டவனிடம் ஒப்படைத்து அவனன்றி வேறு கதியில்லை என அவன் திருத்தாளை அடைதலே பிரபத்தி நெறி எனப்படுகிறது'.

எனவேதான் கண்ணபெருமான் பகவத்கீதையில், ' *யார் என்னை எப்படி வழிபடுகின்றாரோ அவர்க்கு நான் அப்படியே அருள் புரிகின்றேன். பார்த்த! மக்கள் யாண்டும் என் வழியையே பின்பற்றுகின்றனர்*' (பக.கீதை 4.11) என்றுரைத்தான். இந்நெறி பற்றிக் குறிப்பிடுகையில்,

> '*பக்தி என்பது அன்பிலான ஒரு ஏணி போன்றது. அது பூமிக்கும், கடவுளின் இருப்பிடத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது. அது மிகவும் கடினமான பாதை. நெருப்பினாலான ஓராற்றின் மேலமைந்த மயிரினால் கட்டிய பாலம் போன்றது பக்தி மார்க்கம். ஆகையினால் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மாவானது முக்தியடைய பக்தி மார்க்கம் மிகவும் எளிதானதன்று. சாத்திரங்கள் சரணாகதி என்ற எளிய மார்க்கத்தை எல்லா ஆன்மாக்களும் கடைப்பிடித்து எளிதில் முக்தியடையக் கூறுகின்றன.*' [20]

என வாழ்வியற் களஞ்சியம் விளக்கும்.

பக்தி செய்ய முடியாதவர் பக்திக்கு பதிலான உபாயமாகப் பிரபத்தியைக் கொள்வர். பக்தி மூன்று நிலைகளில் சுட்டப்படும் தன்மை போல பிரபத்தியும் பல வகைகளை உடையது. ஆன்ம தரிசனத்திற்குப் பத்தியை மிகக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும். கர்மயோகம் முதலானவை கொண்டு சுத்த தரிசனம் ஈடேறவேண்டும். இறைவனை தொழுதல் ஒன்றே அறிந்த சாமானிய பத்தர்கட்கு இவ்வுபாசனை நெறிகள் துயர் தருவன. சாத்திர வழிகளோ, சடங்கியன் முறைகளோ அறியாத ஏழை இறைநெறியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டால் அவனைக் கடைத்தேற்றுவது இறைவனின் பொறுப்பாகிவிடுகின்றது. எனவேதான் கண்ணன் பகவத்கீதையில், ' *எல்லாவித உலகியல் தருமங்களையும் துறந்து என்னைச் சரணடைதல் ஒன்றையே கொண்டால் அவன் பாவங்களைப் போக்கி மோட்சம் நல்குவேன்*' என்கின்றான். (பக.கீதை 18.66) .

இறைவனை அடையவிரும்பும் சேதனன் முமுட்சு எனப்படுவான். முமுட்சு என்பது மோட்சத்தில் ஈடுபாடு காட்டுபவன் என்ற பொருள் தரும். பிரபத்தியைக் கைக்கொண்டானாகில் பிரபன்னன் எனப்படுவான்.

### 1.6.2.1. சரணாகதியை நாடுவார் தன்மை

பிற நெறிகளில் செல்லாமல் பிரபத்தியை நாடிவரும் பிரபன்னன் நிலை என்பது பற்றி இனிக் காணலாம்.

பக்தி நெறியில் கூறப்பட்ட கர்மயோகம் முதலானவற்றைச் செய்யத் திறனற்றிருக்க வேண்டும். சாத்திரங்களின் உட்பொருள் உணராத நிலை கொண்டிருத்தல், பக்தி நெறிகட்குத் தகாத தன் நிலையினை எண்ணி வருந்துதல், முக்தியைப் பெறுவதில் ஏற்படும் தாமதத்தை பொறுத்துக் கொள்ளாத இறைப்பற்று ஆகிய காரணங்களில் ஒன்றேனும் அல்லது பலவேனும் கொண்ட ஒருவன் பிரபன்னன் என்ற நிலைக்குத் தகுதியாகின்றான். இவையேயன்றி எந்தத் தகுதியுமில்லாமல் இறைவனைச் சரணடைய வேண்டும் என்ற ஆவல் கொண்டோர்க்கும் பிரபத்தி நெறி துணையாகிறது.

### 1.6.2.2. சரணாகதியின் பெருமை

சரணாகதியின் உயர்வைப் பக்திநெறியுடன் ஒப்பிடல் மூலம் தெற்றென உணரலாம்.

கர்மயோகம் முதலான நெறிகட்கு வேத, சாத்திர அறிவு தேவைப்படும். மேலும் அச்சாத்திரங்களில் விதித்துள்ள அனைத்துக் கடமைகளையும் செய்திடல் வேண்டும். சரணாகதி அடையும் பிரபன்னனுக்கு இறைவனுக்கும் சீவர்களுக்கும் உள்ள தொடர்பை அறிதலே போதும். பிற கடமைகள் முதன்மையுடையனவாகா.

பக்தி நெறி பரவுவார்க்கு அமைந்த பிறவித்தடைகள் சரணாகதியில் இல்லை. மேலும் பக்திநெறியின் கர்மயோகம், ஞானயோகம் ஆகியன கைவரப் பெற்ற பின்னரே ஆன்ம தரிசனம் கிடைக்கும். அதுவே பக்தி நெறியில் உயர்வைச் சேர்க்கும். ஆனால் சரணாகதி அவ்வாறன்று. சாதி சமய வேறுபாடின்றி அனைத்து மக்களும் பிரபத்தியைக் கொண்டாடலாம். அது வேறொன்றையும் மூலமாக வேண்டுவதில்லை. பரபக்தியின் தன்மையில் பரஞானமும் பரமபக்தியும் தரவல்லது.

பக்தி நெறி சாதாரணர்களால் துய்க்க அரிதானது. பிரபத்தியோ முழுநம்பிக்கை உடைய அனைவர்க்கும் எளிமையானது. பக்தி நெறி சார்ந்தவன் தன் முன்வினைப்பயன் கெடும்வரைக் காத்திருக்க வேண்டும். அனைத்து வினைப் பயன்களும் அனுபவிக்க வேண்டியும் நேரும். பிரபத்தி இறைவனைச் சரணடைந்த நிலையிலேயே தாமதமின்றிப் பலன் தரவல்லது. உடலைவிட்டு ஆவி பிரிந்த நிலையிலேயே மோட்சம் காத்துக் கொண்டிருக்கும். ஶ்ரீவசன பூஷணம்,

*பிரபத்திக்குத் தேச நியமமும் கால நியமமும்*
*பிரகார நியமமும் அதிகாரி நியமமும்*
*பல நியமமும் இல்லை* (ஶ்ரீவச.பூஷ. 24)

என்று குறிப்பிடுவது இக்கருத்திற்கு அரண் செய்யும்.

பக்தி நெறியில் இறையடியவன் தன்னைத் தொடர்ந்து ஈடுபடுத்தி அதற்குரிய கடமைகளைச் சரிவரச் செய்தல் வேண்டும். எட்டு உறுப்பமைந்த அட்டாங்கயோகம் இன்றியமையாதது. சரணாகதியில் ஒருவன் ஒருமுறை முழுமையுடன் தன்னை இறைவனிடம் ஒப்படைத்துக் கொண்டால், போதும். பிற சடங்குகள் தேவையில்லை.

பக்தி நெறியில் மீண்டும் மீண்டும் பிறக்கும்படி முன் வினைப்பயன் தூண்டும். சரணடைந்தவன், பக்தியோகி போன்று முன் வினைப்பயனை அனுபவிக்க வேறொரு பிறவி எடுக்கத் தேவையில்லை. மீண்டும் மீண்டும் பிறவாது பரமானுபவத்திலேயே திளைப்பான்.

### 1.6.2.3. சரணாகதி நிலைகள்

சரணாகதி ஆறு நிலைகள் கொண்டது. இந்நிலைகள் சரணாகதி அடைவோனின் உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்துவன. அவை

1. இறைவனுக்கு என்றும் அனுகூலமாய் இருக்கும் உறுதி
2. இறைவனுக்கு உகவாத செயல்களில் ஈடுபடாதிருத்தல்
3. ஓர் உபாயம் அல்லது சக்தி இல்லாத தன் எளிமையைப் பிரபன்னன் உணர்தல்
4. பெருமானிடம் முழுமையான நம்பிக்கை
5. இறைவனிடம் காத்திடும்படி கோரும் நிலை
6. தன்னை இறைவன் திருவடிகளில் ஒப்படைத்துக் கொள்ளல்

என்பனவாம். இறுதிநிலையில் சரணாகதி அடைந்தாலும் முன்னைந்து நிலைகள் சரணாகதிக்குரிய படிகள் என்ற நிலையில் அவற்றையும் சரணாகதி என்றே கொள்ளலாம்.

### 1.6.2.4. சரணாகதி வகைகள்

சரணாகதியைக் கைக்கொள்ளும் முறையின் அடிப்படையில் சரணாகதி நான்கு வகைப்படும்.

1. சுவநிஷ்டை
2. உத்திநிஷ்டை
3. ஆசாரியநிஷ்டை
4. பாகவதநிஷ்டை

சுவநிஷ்டை என்பது சரணாகதிக்குரிய நெறிகள் முதலியவற்றை நன்குணர்ந்து தன் முயற்சியுடன் இறைவனைச் சரணடைதலாகும்.

வேத சாத்திர பிராமணங்கள் அறியாமலும் சரணடைதல் பற்றி முறையாய் உணராமலும் இருக்கும் ஒருவன் தன் வாழ்வின் கடைத்தேற்றத்திற்கு யார் துணை என்று அல்லலுற்று வருந்துவான். அங்ஙனம் வருந்தி இறைவனை வேண்டினால் அல்லல் தீரும் என்ற நம்பிக்கையொன்றே வழியாகக் கொண்டு அவனைச் சரணடைதல் உத்திநிஷ்டையாகும்.

தம் ஆசாரியன் இறைவனிடம் கொண்ட சரணாகதி நிஷ்டையில் தானும் ஈடுபட்டு முத்தி பெறல் ஆசாரியநிஷ்டையாகும்.

பாகவதநிஷ்டை என்பது இறையடியாரான பாகவதர் இறைவனிடத்தில் கொண்ட சரணாகதி நிஷ்டையில் அடங்கியிருத்தலாகும்.

நிஷ்டை எனப்படும் இந்நான்கு வகைகளும் எளிமையானவையே. எனினும் இடையறாத இறைச் சிந்தனையும் ஈசனிடம் தன்னை முழுமையாகத் தந்து வேறொன்று கருதாத மனத் திட்பமும் வேண்டும்.

இந்நான்கு வகைகளில் இறைவனைச் சரணடைதல் மூலம் வீடுபேறு பெறலாம். வினைப்பயன் கெடும். மீண்டும் பிறவா நிலை பெறலாம்.

இத்தகைய பயன் தரும் உயர்ச்சி கருதியே வைணவ மரபில் சரணாகதி பரக்க வலியுறுத்தப்படுகின்றது. மேலும் ஒரு முறை தன்னை அடைக்கலப்படுத்திக் கொண்டால் போதுமானது. அவ்வடைக்கலமே அவனை உலகியல் துன்பிலிருந்து விடுவிக்கும் புருஷார்த்தத்தை நல்கவல்லது.

### 1.6.2.5. அடைக்கலம் நல்கும் அருள்

இறைவன் தன்னை அடைந்தார்க்குத் தானே அருள் நல்காது, அடைக்கலம் வேண்டும் என்ற விண்ணப்பம் செய்த நிலையிலேயே தாய் போல் தழுவிக் கொள்கிறான். ஆன்ம ஈடேற்றம் குறித்துச் சிந்தனை செய்யாது இறைநெறியில் உள்ளம் பதிக்காத ஒருவன் இருப்பானாகில் அவனுக்கு ஈசனருள் கிட்டுவதில்லை. தன்னிலை கூறி இறைவன் அடிகளில் சரண் புகும் நிலையில் அவனுடைய உறுதிப்பாட்டை இறைவன் உவக்கிறான்.

இராமாயணத்தில் குறிப்பிடப் பெறும் '*வீடணன் சரணாகதி*' சரணாகதித் தத்துவத்திற்கு முழுமையும் பொருந்தும் ஒன்றாகும். தமையன் இராவணனுக்கு நல்லுரை கூறியும் உணரவில்லை. இறைவன் அவதாரமான இராமன் திருவடிகளே தனக்கு அபயம் நல்கும் என்ற திண்ணமான நம்பிக்கை கொண்டு அங்ஙனமே சரண் புகுந்தான். அனன்ய கதித்துவம் எனப்படும் '*வேறு வழியின்றி நாடுதல்*' வீடணன் சரணாகதியில் புலப்படுகிறது.

வீடணனுக்குத் துன்பம் நேர்கையில் அடைக்கலம் ஈந்தபிரான் அதனைத் தனதாக கொண்டு ஏற்கின்றான். அடைக்கலம் தந்து அரசுரிமையும் நல்கி வீடணனைச் சிறப்புச் செய்யும் இறையருள் பெரிதாகும். இத்தகைய அருள்பெற்றுய்ந்த காரணம் பற்றியே வைஷ்ணவ மரபினர் அவனை ஆழ்வார் என்ற நிலையில் வைத்து, '*விபீஷணாழ்வார்*' என்று குறிக்கின்றனர்.

இங்ஙனம் இராமபிரான் கருணையுடன் அடைக்கலம் நல்கியதைக் கம்பர்,

*காரிய மாக அன்றே யாகுக கருணை யோர்க்குச்*
*சீரிய தன்மை நோக்கி நிதனின்மேற் சிறந்த துண்டோ;*
*பூரிய ரேயுந் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்றா*
*ஆருயிர் கொடுத்துக் காத்தார் எண்ணிலா அரசர் அம்மா*

(கம்ப. யுத்த. 426)

*ஆதலான் அபய மென்ற பொழுதத்தே யபய தானம்*
*ஈதலே கடப்பா டென்ப தியம்பினீர்; என்பால் வைத்த*
*காதலான் இனிவேறு எண்ணக் கடவதென்? கதிரோன் மைந்த!*
*கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி*

(கம்ப. யுத்த. 425)

என்று இராமபிரான் கூற்றினால் உரைக்கின்றார். இதனால் ஈசுவரன் சரணடைந்தார்க்கு அருள் நல்கும் வள்ளல் தன்மை புலனாகும்.

பரதன், குகன், சபரி, சுக்கிரீவன், சயந்தன், காகம் என மாந்தர் பலருக்கு இறைவன் அடைக்கலம் நல்கியதை இராமாயணம் சுட்டும்.

மகாபாரதத்தில் பாஞ்சாலி, கௌரவர் துகிலுரியும் நிலையில் தன்னைக் காத்துக் கொள்ளும் முயற்சியுடன் போராடினாள். '*இறைவா அபயம்! கண்ணா! அபயம்!*' என்று அலறிச் சரணடைய, அவள் துயர் தீர்க்க இறைவன் விரைந்தான். அவன் துகில் நீண்டு பெருகிற்று. தஞ்சம் அடைந்தார்க்கு உடனே துணை நிற்கும் இறைவனின் அருங்குணம் நினைக்கற்பாலது.

இங்ஙனம் பாஞ்சாலி புகழ் பெருகிட அவளுக்கு அருள் சுரந்த அருள் நிகழ்வை வில்லிபுத்தூரார்,

'. . . . . . . . . . . . . . . . . . . . . .

*அருகணுகி மடவரலை அஞ்சாமல்*
*துகிலுரிவான் அடர்ந்த ஓதில்*
*இருகைநறு மலர்குவிய வெம் பெருமான்*
*இணையடிக்கே இதயம் வைத்தாள்*

*ஆறாகியிரு தடங்கண் அஞ்சன*
*வெம்புனல் சோரவளகஞ் சோர*
*வேறான துகிறகைந்த கைசோர*
*மெய்சோர சோரவேறோர் சொல்லும்*
*கூறாமல் கோவிந்தா கோவிந்தா*
*என்றரற்றி குளிர்ந்து நாவில்*
*ஊறாத அமிழ்தூற உடல்புளகித்து*
*உள்ள மெலாமுரு கினாளே*

*அருமறை சொல்லியநா மமாயிரமும்*
*உரைத்தழைக்க வமரர் போற்றும்*
*திருமலர்ச்செஞ் சீறடியோன் திருச்செவியில்*
*வண்மொழி சென்றிசைத்த காலை*
*மருமலர்மென் குழன்மானின் மனநடுங்கா*
*வகைமனத்தே வந்து தோன்றிக்*
*கரியமுகி லனையானும் பிறரெவர்க்கும்*
*தெரியாமற் கருணை செய்தான்*
(வில்லி. சபா. சூது. 246-248)

என்று கண்ணனின் அருள்ளுள்ளம் புலப்பட வருணிக்கின்றார். மேலும் மகாபாரதத்தில் விதுரன் முதலியோருக்கும் திருவருள் புரிந்தான். பகவத்கீதையில் கண்ணபெருமான்,

*என்பால் மனம் வைத்து என்னிடம் பக்தி பூண்டு என்னை*
*ஆராதித்திடுவாய். என்னை வணங்கு, என்னையே அடைவாய்*
*உனக்கு உறுதி கூறுகிறேன். எனக்கினியான் நீ* (பக.கீதை 18.65)

என்றுரைத்த அருள்மொழி நினைக்கற்பாலது.

இவ்வருள் பெற இன்னார் மட்டும் தகுதியுடையவர், இவர் தகுதியிலர் என்ற பேதம் கடவுளிடத்து இல்லை. இறைவனை நாடும் எண்ணங்கொண்ட யாவரையும் பிரபத்திக்கு அதிகாரிகளாக இறைவன் கொண்டருளுகின்றான். இது குறித்து ந.சுப்பு ரெட்டியார் குறிப்பிடுகையில்,

*“தருமன் முதலான குந்தியின் மக்கள் மூவரும் நகுல சகாதேவர்களும் திரௌபதியோடு சேர்ந்து கண்ணனைச் சரண்புக்கனர். இவர்கள் க்ஷத்திரியர். காகம் ஒரு பறவை, அதுவும் இராமபிரானைச் சரணடைந்தது. காளியன் ஒரு கொடிய நாகம், அதுவும் கண்ணனிடம் அடைக்கலம் புக்கது. கஜேந்திரன், நாரயணனைச் சரணடைந்தான். விபீஷணாழ்வார் அரக்கர் குலத்தவன், அவனும் காகுத்தனைச் சரண்புக்கான்.”* [21]

எனப் பல்வேறு தரத்தில் உள்ள யாவரும் இறைவனைச் சரணடைய உரிமையராதலைத் தெரிவிக்கின்றார்.

பிரபத்திக்கு குண பூரணத்துவமே களமாகின்றது. உரிய நெறிப்படி இறைவனை அணுகுதல் வேண்டும். இறைவனே குண பூரணத்துவம் உடையவன், இறைவனுடைய முற்கூறிய ஐந்து நிலைகளில் அருச்சாவதாரமே சிறப்புடையது. அடியவர் எவ்வுருவில் இறைவனைத் தியானிக்கின்றார்களோ அவ்வுருவில் வந்தருளும் நிலை அருச்சாவதாரம் ஆகும். ஆழ்வார் பலரும் அருச்சாவதாரத்தில் ஈடுபட்டுப் பிரபத்தி செய்தனர். ஶ்ரீவசன பூஷணம் '*ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண்ணிற்று அர்ச்சாவதாரத்திலே*' என்று குறிப்பிடுகின்றது. (ஶ்ரீவச.பூஷி. 38).

சீவனின் பிரபத்தி மட்டும் முதன்மையுடையதன்று, சீவனும் முயலவேண்டும். சீவ முயற்சியின் முதிர்வில் இறைவனருள் கிட்டும். ஏனெனில் கன்றினிடத்துப் பசு கொள்ளும் அன்பு போன்ற வாத்சல்யமும் உரிமை ஆளத்தக்கவனாயிருக்கும் சுவாமித்துவமும் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமில்லாத சௌசீலியமும் எளியவனாயிருக்கும் சௌலப்பியமும் அருச்சாவதாரத்திலே நிறைந்து காணப்படுகின்றன. இவ்வருச்சாவதாரத்தில் ஈடுபட்டுத் தனக்கு அடைக்கலம் வேண்டும் அடியவர்க்கு இறைவன் வேண்டிய அருளை எல்லாம் பொழிபவன். இவ்வருங்கருணையே சரணாகதி நிலைக்குரிய புகழுக்கும் மேன்மைக்கும் அடிப்படையாகும். இதனால் விசிஷ்டாத்துவைதம் என்னும் ஶ்ரீவைஷ்ணவத்தின் எளிமை உணரப் பெறுகின்றது. வைஷ்ணவத்தின் உயரிய நிலைக்கும் வெற்றிக்கும் இச்சரணாகதியின் இயல்புகள் பெருந்துணையாய் நிற்கின்றன.

### 1.7. பயன்

பிரபத்தி முதலான நெறிகளைக் கைக்கொள்வதால் ஏற்படும் பயன் புருஷார்த்தம் ஆகும். இறைவனை அடைவதற்குரிய உபாயங்களை முழுமையாகச் செய்த நிலையில் கிடைக்கும் வீடுபேறு புருஷார்த்தம் எனப்படுகிறது. புருஷன் என்பது ஆன்மா. அர்த்தம் என்பது பொருள். ஆன்மாவின் பொருள் என்றமையும் இச்சொல் ஆன்மாவின் உயர்வுக்கு வீடுபேறு ஒன்றே உயரிய பொருள். பிற உலக பொருட்கள் உயர்வுடையனவாக என்ற கருத்தில் அமைவது. எனவே சீவர்கள் தேடவேண்டிய பொருளான புருஷார்த்தத்திற்குப் பிரபத்தி நெறி முதலான உபாயங்கள் துணையாகின்றன. புருஷார்த்தம் பற்றி ந.சுப்பு ரெட்டியார் கூறுகையில்

*'புருஷார்த்தம் என்பது. புருஷன், அதாவது ஆன்மா அடையவேண்டிய பொருள்.... ஆன்மா அடையவேண்டிய பொருள் பரமபதம் சேர்தலும் பரிபூரண பகவதனுபவம் பெறுதலும் ஆகும்'* [22]

என்று குறிக்கின்றார்.

விடுதலை பெறும் நிலை வீடாகும். மனிதன் வீடு பெறுவதற்காகவே படைக்கப்பட்டவன். சித்து, அசித்து, ஈசுவரத் தன்மைகளை அறிவது, மனிதக் கட்டுக்களினின்று விடுபடச்செய்யும். அவித்தை முதலான நிலைகளில் இருந்து விடுதலை பெறுவதே புருஷார்த்தத்தின் முதல்படி. ஆனால் பரம புருஷார்த்தம் அறிவினால் மட்டுமன்று; இறைத்தொண்டினாலே நிறைவு பெறுகின்றது. கலைக்களஞ்சியம் இதைக் குறிக்கையில்,

*ஆன்மா கடவுளுக்காகச் சகலமும் செய்கின்றது. அதிலேயே பரிபூரணமாக ஆனந்தத்தைக் காண்கிறது. பகவத் கைங்கரியத்தின் வாயிலாகப் பரிபூரணப் பிரம்மானுபவத்தைப் பெறுகின்றது. இவ்வாறு பகவானுடன் ஐக்கியமாவதே சாயுச்சியம். ஆன்மா சாரூப்பியம் சாலோக்கியம் இரண்டும் பெறுகிறது. இந்த அனுபவம் ஈசுவரனுடைய அருளால் வைகுண்டத்தில் கிட்டுவது போலவே பூலோகத்திலும் கிட்டுவதாகும்.* [23]

என்று குறிப்பிடுகின்றது. இப்புவியிலேயே பேரின்பம் பெற்றதாக நம்மாழ்வார்

*மாறி மாறிப்பல பிறப்பும் பிறந்து*
*அடியை அடைந்து உள்ளம் தேறி*
*ஈறில் இன்பத்து இருவெள்ளம் யான்மூழ்கினேன்* (நாலா. 3071)

என்ற அடியில் குறிப்பிடுகிறார்.

தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்துச் சரணடைந்தவன் பூவுலகிலும் இன்பம் பெறுகின்றான். மரணமடைந்தவன் வைகுந்தப் பதவியும் பெறுகின்றான். பொதுவான பக்தி செலுத்துபவர்கள், குறிப்பிட்ட நாளில் இறந்தால் நற்கதி கிட்டும் என்ற வரையறைகள் உள்ளன. ஆனால் பிரபத்தியின்படி நடப்பவனுக்கு இக்கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. எந்நாளில் உயிர் பிரிந்தாலும் வைகுந்தம் உண்டு. இதனை நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில்,

*சரணம் ஆகும்தந்தாள் அடைந்தார்க்கு எல்லாம்*
*மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்* (நாலா. 3884)

என்று குறிப்பதால் உணரலாம். மேலும் அவர்,

*இளைப்பாய் இளைப்பாய் நெஞ்சமே சொன்னேன்*
*இளைக்க நமன்தமர்கள் பற்றி - இளைப்பெய்த*
*நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்*
*தாய்தந்தை எவ்வுயிர்க்கும் தான்* (நாலா. 2607)

என்று மரணமாகும் காலத்தும் இறைவன் துணை அமைவதை எண்ணி வியக்கிறார். வைகுந்தம் நாடும் ஒருவன், இவ்வுலகில் பெறும் பயன்களைத் தண்டபாணி சுவாமிகள்,

*வைகுந்த மேஉண்மை வீடெனத் தேறிட வல்லவர்க்குப்*
*பொய்குன்றும் மெய்வலி வாம்தனி வீரம் பொருந்தும்அப்பால்*
*செய்குன்றம் அன்ன களிற்றாளர் அஞ்சும் திறமையுண்டாம்*
*பெய்குங்கு மக்கொங்கை மானார் விளைக்கும் பிணக்கறுமே*
(திருமால். 46)

என்கின்றார்.

இது வைகுந்தனைச் சரணடைந்தவர்க்குப் பிற உலகத் துன்பங்கள் பொருளாகா என்ற கருத்தில் எழுந்தது. இவ்வுலகில் பகவதனுபவம் பெறினும் நூற்றெட்டு திவ்ய தேசங்களில் தலையாயதாய்க் கொள்ளப்படும் பரமபதம் நாடும் எண்ணம் வீடுபேறு வேண்டலாய் ஆழ்வார் பலரின் பாடல்களில் பொதியக் காணலாம்.

பரமபதம் பற்றி ஆழ்வார்கள் பலவாறு தம் பாடல்களில் குறித்துள்ளனர். நம்மாழ்வார் "*விண்டலையில் வீற்றிருந்து ஆள்வாரம் மாவீடே*" (நாலா. 3098) என்ற அடியில் பரமபதத்தைக் குறிக்கின்றார்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில்,

"*மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்நடுவுள்*
*அன்னதோர் இல்லியின் ஊடுபோய் - வீடென்றும்*
*தொன்னெறிக்கண் சென்றாரைச் ......................* ." (நாலா. 2719-20)

என்று குறிப்பிடுகிறார். திருமங்கையாழ்வார் சிறிய திருமடலிலும் சீவன் வீடுபேறு பெறுதலைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்.

*காரார் புரவியேழ் பூண்ட தனியாழி*
*தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு*
*ஆரா வமுதம் அங்கெய்தி யதில்நின்றும்*
*வாராது ஒழிவது ஒன்றுண்டே................* (நாலா. 2675-75)

வானவெளிக்கு அப்பால் பொன்னுலகில் திவ்விய மண்டபத்தில் தேவியர் உடனுறைய வானவரும் நித்தியர், முத்தர் என்று பல்லோரும் ஏத்த இறைவன் கொலு வீற்றிருக்கிறான் என்று வைணவச் சமயத்தினர் திடமாய் நம்புகின்றனர்.

தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்துச் சரணடைந்த ஒருவனுக்கு வீடுபேறு அளித்தல் என்பது இறைவன் பணியாகிறது. வினைப் பயன்களினால் அவன் துன்புறா வண்ணம் மீண்டும் பிறவாமலேயே அவற்றைக் கெடச் செய்கிறான். சீவனைத் தன்னோடு பரம பதத்தில் ஐக்கியப்படுத்திக் கொள்ளுவதால் மகிழ்ச்சியுறுதல் பரமாத்மாவிற்கேயன்றிச் சீவனுக்கில்லை. சீவர்களின் உண்மையான பிரபத்திக்கு இறைவன் கட்டுப்பட்டு நிற்கிறான். சீவனுக்குக் கடைத்தேற்றம் நல்கும் பணியை வீடு பேற்றால் நிறைவேற்றுகின்றான். இவ்வாறு வீடு நல்கும் நிலை உயிர் உடலத்திலிருந்து விடுபடுவதிலிருந்து துவங்குகிறது.

### 1.7.1 அர்ச்சிராதி மார்க்கம் வழி வைகுந்தம் சேர்தல்

தத்துவங்களை நன்குணர்ந்த பின் சீவன் வாழ்நாள் வீணே கழிந்தமைக்கு வருந்தியும், தீவினைகட்கு அஞ்சியும் இருக்கும் வாழ்வின் உய்வுக்கு உரிய உபாயத்தைக் கைக்கொள்ளவேண்டும் சீவன் உடலைவிட்டு வெளியேறுங்காலத்து கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் மனதுடன் இணைக்கப்படும். பின் திரித்தூணத்தைக் கடைந்து சீவன் பிரிக்கப்படும்.

பிரம்மநாடி வழியாய் வெளியேறும் சீவனை அக்னி முதலான வானவர்கள் வரவேற்று வழிநடத்துவர். பின் நுண்ணுடம்பைப் போகச் செய்து, விரஜை என்னும் நதியைத் தாண்டி எல்லாவித அழுக்குகளும் களையப் பெற்ற சீவன் சுத்தசத்துவம் என்ற சரீரத்தை இறைவனால் அருளப் பெறும். பல்வகை உபசாரங்கள் திகழத் திவ்ய மண்டபத்தில் நுழையும்.

அங்கு இப்பிரபத்தி அருளிய ஆசாரியரைக் கண்டு தொழும். பின் திவ்ய சொரூபமாய்த் திகழும் இறைவனைக் கண்டு பரமானுபவம் எய்தும். [24]

வைகுந்தத்தில் எம்பெருமானைக் கண்ணாரக் கண்ட சீவன், களித்தும் அனுபவித்தும் அந்த ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருக்கும். பரமபதத்திலே நாராயணன் அனந்தாழ்வார் மீது தேவியருடன் எழுந்தருள, முற்கூறிய நித்தியர், முத்தர்களுடன் இறைவனுக்குரிய சாமகானம் பாடி, ஆழ்வார் பாசுரங்கள் பாடி அவனை எந்நாளும் அனுபவிப்பார். இதனை வைஷ்ணவ வேதாந்தம் பரிபூரண பிரம்மானுபவம் என்னும். இதுவே பரம புருஷார்த்தம் ஆகும்.

இராமதேசிகாசார்யார் பிரபன்னன் முக்தியடைந்தபின் அடையும் பெரும் அருஞ்சிறப்புகளை,

> *அவனைக் (இறைவன்) கண்டு அவனைப் போன்ற குணங்களைப் பெற்று அவன் திருவடிகளின் கீழே அநந்த, கருட, விஷ்வக்சேனர் முதலிய நித்யசூரி கோஷ்டியுடன் புகுந்து, கலந்து எல்லாவிடத்திலும் எல்லா நிலைமைகளிலும் எல்லாவித கைங்கர்ய ஸித்தியையும் பெற்று ஆனந்தக் கடலில் மூழ்கிநிற்பான். இவனுக்கு அங்கிருந்து ஒருபோதும் திரும்புதல் இல்லை. இவன் தன் இஷ்டப்படி நடப்பதும் பகவத் கைங்கர்யத்தில் அடங்கியதே........ ப்ரக்ருதி மண்டலத்திற்கு வந்து சென்றாலும் இவனுக்குச் சிறிதும் பகவதனுபவ ரஸத்திற்கு இடையூறென்பதேயில்லை. இம் முறையைக் கொண்டதே இவனுக்குத் திரும்புதல் இல்லையென்பது. இத்தகைய பகவதனுபவமே பரிபூரண பிரம்மானுபவம் என்பது.* [25]

என்கிறார்.

புருஷார்த்தத்தின் முழுப்பயன் பிரபத்தி செய்தவனுக்குக் கிடைக்கிறது. பூவுலகில் வாழும்போது பற்றறுத்தும் வினைப்பயன் கெடுத்தும் இறைவன் துணை நிற்கிறான். அவனை முழுமையாகச் சரணடைந்தவர்குச் சூழும் வினைகள் ஏதுமில்லை. பிற உபாயங்களின் வழி இறைவனை அடைகையில் முழுமையான பயன் கிட்டுவதில்லை. பிரபத்தி நெறியே இறைவனை அடைவதற்குரிய சிறந்த வழி. அதுவே முழுமையாய்ப் பயன்தரவல்லது என்ற நோக்கில் விசிஷ்டாத்துவைதம் பிரபத்தியின் பயனைச் சுட்டும்.

பயன் எனப்படும் புருஷார்த்தம் யாவர்க்கும் உரித்து எனினும் சரணடைந்தார்க்கு நியதிகள் ஏதுமற்று அருள் வழங்குதல் எண்ணத்தக்கது. சீவன் இப்பிரபத்தியினால் இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்துப் பரம புருஷார்த்தத்தை அடைகிறது.

**1.8 இயல் முடிபுரை**

1.8.1 வைணவ நெறியில் சரணாகதி என்ற தலைப்பில் அமைந்த இவ்வியல், தத்துவ மரபில் வைணவத்தின் நிலையை எடுத்துக்காட்டுகின்றது. அதன் கோட்பாடுகள் உலகு, இறைவன், ஆன்மா குறித்த சிந்தனைகள், அத்துவைதத்திலிருந்து வேறுபடும் நிலை ஆகியன சுட்டப்பட்டுள்ளன.

1.8.2 விசிஷ்டாத்துவைதம் இறைவனை அணுகிடச் சுட்டிய பக்தி, சரணாகதி நெறிகளின் வன்மை, மென்மைகள் ஆயப்பட்டுள்ளன. சரணாகதியின் தன்மைகள் பொதுப்பட விளக்கவும் பட்டுள்ளன. சரணாகதி நெறி வைணவ தத்துவத்தின் ஊடிழையாக அமைகின்றமை நோக்கத்தக்கது. இங்ஙனம் இறையருள் பெற்றவர் பெறும் பயன்கள் புருஷார்த்தம் என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

1.8.3 இத்தகைய செழுமைமிகு வைணவ வேதாந்தத்தின் பரவலாக்கத்தில் வேதாந்த தேசிகனுக்குப் பெறும் பங்கு உண்டு. அவர்தம் வைணவப்பற்று, தத்துவப்பார்வை, படைப்புகள் ஆகியன குறித்து வருமியலில் காணலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. கலைக்களஞ்சியம் - தொகுதி 5, பக். 454
2. க.சு.உத்தமராயன் தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்தமருத்துவ வரலாறும், பக். 50-60
3. இந்திரா பார்த்தசாரதி, தமிழ் இலக்கியத்தில் வைணவம், பக். 169-170
4. கி.லக்ஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், பக். 3-4
5. Satyavrata Singh.A, Vedanta Desika - A Study, ப. 417
6. கலைக்களஞ்சியம் - தொகுதி 9, ப. 303
7. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ப.ஆ. & க.ஆ.) பொன்விழா மலர், ப. 123
8. கி.லக்ஷ்மணன், முற்கூறிய நூல், பக். 336-337
9. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 9, பக். 800-801
10. இந்திரா பார்த்தசாரதி, முற்கூறிய நூல், ப. 169
11. கலைக்களஞ்சியம் - தொகுதி 9, ப. 304
12. ந.சுப்பு ரெட்டியார், முக்திநெறி ப. 37
13. கலைக்களஞ்சியம் - தொகுதி 9, ப. 305
14. இராமதேசிகாசாரியார், முன்னுரை - ஸ்ரீ தேசிகப் பிரபந்தம்
15. நஜன், த்வைத ஆசாரியர் வைபவம், ப. 2
16. ந.சுப்பு ரெட்டியார், அருத்த பஞ்சகம், பக். 89-90
17. கி.லக்ஷ்மணன், முற்கூறிய நூல், பக். 223-224
18. சுவாமி விவேகானந்தர், கருமயோகம், ப. 69
19. சித்பவானந்தர், பக்தியோக விளக்கம், ப. 19
20. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8, ப. 670
21. ந.சுப்பு ரெட்டியார், முக்திநெறி, ப. 118-119
22. மேலது, ப. 5
23. கலைக்களஞ்சியம், தொகுதி 9, ப. 306
24. ந.சுப்பு ரெட்டியார், முக்திநெறி, பக். 137-140
25. இராமதேசிகாசாரியார், முன்னுரை - ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், ப. 65.

## ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும்

2.0 வைஷ்ணவத்தின் திட்பத்தையும் தத்துவங்களையும் உள்ளடக்கி விசிஷ்ட்டாத்துவைதக் கோட்பாடு எழுந்தது. வேதாந்தத்தின் அடிப்படையில் எழுந்த இக்கோட்பாட்டை இராமானுஜர் அருளினார். அவர் பெயரில் இது இராமானுஜ சித்தாந்தம் என்று அழைக்கப்படுகின்றது. இக்கோட்பாட்டைப் பரப்பும் முயற்சியிலும் இதன் உயரிய போக்குகளை உலகறியச் செய்வதிலும் இராமானுஜரின் சீடர்கள் பெரும் தொண்டாற்றினர். சீடர் பரம்பரையில் வந்த பலரும் இராமானுஜரின் கோட்பாட்டையும் நெறியையும் பரப்புகின்ற பணியையே தம் வாழ்வின் பெரும் பேறாகக் கொண்டிருந்தனர்.

இச்சீடர் பரம்பரையில் குறிப்பிடத் தக்கவராய் மிளிர்ந்தவரே ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஆவார். இந்தியத் தத்துவ மரபில் பன்னூற்றாண்டுகளாகத் தனி இடம் பெற்றுத் திகழ்பவர் என்று வேதாந்த தேசிகனைப் பற்றிச் சத்தியவிரதசிங் குறிப்பது இவண் நோக்கத்தக்கதாகும்.[1] வேதாந்த தேசிகனின் கொள்கைகள் அவர் காலத்திலேயே கருத்தியல் மரபாக (School of Thoughts) உருக்கொண்டன. இவை தேசிக தரிசனம் என்றும் தேசிக சம்பிரதாயங்கள் என்றும் கொண்டாடப்படுகின்றன. இவரை அடியொற்றிப் பலர் விசிஷ்ட்டாத்துவைதத்தைப் பரப்பினர். இவரைப் போற்றியெழுந்த பிள்ளையந்தாதி, தேசிக தரிசனத்தைப் பின்பற்றுதலே மிகச் சிறப்புடையது என்று வலியுறுத்துகிறது. இந்நூலின் அடிப்படைக் கருத்தாக இராமதேசிகாசாரியார்,

> "*தேசிகன் புகழைப் பாடினாலன்றி உஜ்ஜீவிக்க முடியாது. அவர் ஆராய்ந்து கண்ட ஸித்தாந்தம் உஜ்ஜீவிக்கச் சாதனமாகும். தேசிகன் குணங்களைப் பாடி அவரை மனத்து இருத்தினால் பாபங்கள் பறந்துபோம். அவரது அருளன்றி உபாயமில்லை*".[2]

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய பெருமைக்கும் புகழுக்கும் உரிய வகையில் வேதாந்த தேசிகன் வாழ்க்கை அமையுமாற்றை விளக்குதலே இவ்வியலின் பொருண்மை என அமைகிறது.

வேதாந்த தேசிகன் வாழ்வோடு பிணைந்த வைஷ்ணவத்தையும் விசிஷ்ட்டாத்துவைதத்தையும் இவர்தம் படைப்புகள் வழி உணரலாம். இவர்தம் படைப்புகள் பற்றிய அறிமுகத்தையும் இவ்வியல் கொண்டிலங்குகிறது.

### 2.1. வாழ்வியல் செய்திகள்

வேதாந்த தேசிகன் வாழ்வியல் செய்திகளை விளக்கும் இப்பகுதியில் அவர் பிறந்த தலம், பெற்றோர், அவதாரச்சிறப்பு, காலம், கல்வி, தெய்வீக அருள்பெறல், வாதப் போர் புரிதல், அருள் நிகழ்வுகள், சமயங்காத்தல், சீடர்கள், பெற்ற விருதுகள் ஆகியன விளக்கப்படுகின்றன.

### 2.1.1. பிறந்த தலம்

தமிழ் கூர் நல்லுலகில் 'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்ற புகழ் விளக்கும் சீரிய பகுதியாகும். இம்மண்டலத்தில் கல்வி, கேள்வி வல்ல பல பெரியோரும் மகான்களும் அவதரித்துள்ளனர். இந்நாட்டின் கண்ணெனத் திகழ்வது காஞ்சி நகரமாகும். புராணங்கள் ‘*நகர்களில் காஞ்சி*’ என்று போற்றுகின்றன.

சமயக்கல்வி தத்துவ விளக்கங்கள், அறிவார்ந்த வாதங்கள் செழுமித் திகழ்ந்த கல்விக் களமாகக் காஞ்சி திகழ்ந்தது. இக்காஞ்சிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் வேதாந்த தேசிகன் இத்தலத்தில் தோன்றினார்.

இச்செய்தியைப் பிள்ளையந்தாதி,

> *உய்யும் வகையில் உத்தர வேதியுள் வந்துதித்த*
> *ஐயன் இலங்கு தூப்புற்பிள்ளை....* (பிள்ளை. 4)

என்று குறிப்பிடுகிறது. உத்தரவேதி என்பது காஞ்சியைக் குறிக்கும். இக்காஞ்சியில் 'தூப்புல்' என்ற தலத்தில் இவர் பிறந்தமையால் 'தூப்புல் பிள்ளை' எனக் குறிக்கப்படுகின்றார்.

### 2.1.2. பெற்றோர்

கிடாம்பி அப்புள்ளார் என்கின்ற ஆத்திரேய இராமானுஜர் காஞ்சி மாநகரில் விசிஷ்ட்டாத்துவைத விற்பன்னராய்த் திகழ்ந்தார். இவர் தம் தமக்கையார் தோதாரம்மை. இம்மங்கையைப் புண்டரிகாட்ச சோமயாசி என்பார்தம் மகன் அநந்தசூரி மணம் புரிந்து கொண்டார். இத்தம்பதிகட்கு வெகுநாளாக மகப்பேறு வாய்க்கவில்லை. திருவேங்கடவனைத் துதித்து அவர் அருளிய வரமாக வேதாந்த தேசிகன் அவதரிக்கப் பெற்றனர். இதனால் குழந்தைக்குப் பெற்றோர் 'வேங்கடநாதன்' என்று பெயரிட்டனர். தேசிகர் நூற்றந்தாதி, *'தூப்புல் அநந்தாரியனார் தொல்புகழ்சேர் மைந்தன்'* என்றும், *'சோர்வில் தோதாரம்மை மைந்தன்'* என்றும் வேதாந்த தேசிகனின் பெற்றோரைக் குறிப்பிட்டுரைக்கும். (தேசிக. நூற். 28 & 75).

### 2.1.3. அவதாரச் சிறப்பு

மகப்பேறு வேண்டி அநந்தசூரியும் தோதாரம்மையும் வழிப்பட்டமையால் தன் கோயில் திருமணியின் அவதாரமாய் வேங்கடவன் அவர்கட்குக் குழந்தைப் பேறு அருளினான். மணி கோயிலகத்து நிகழும் புனித நிகழ்வைப் புறத்தே உள்ளோர்க்கு உணர வைக்கிறது. ஒலியை இனிமையாகச் செவியில் சேர்க்கிறது. இங்ஙனம் மணியை ஒத்து, விசிஷ்ட்டாத்துவைதப் பிரசாரகராய் அதன் பெருமையைப் பல்லோர்க்கும் உரைப்பது என்னும் நெறியில் வேதாந்த தேசிகன் அவதாரம் அமைந்துள்ளது.

திருமலைக் கோயில் திருமணியின் அவதாரமாய் வேதாந்த தேசிகன் வந்துதித்ததை வேதாந்த தேசிகர் சதகம்,

*..... வேங்கட மலையில்*
*மன்னிய மணியின் கூறென வந்து* (வேதா. சதகம். 99)

என்று குறிப்பிடுகிறது. தேசிகர் நூற்றந்தாதி, திருமலை இறைவனே வேதாந்த தேசிகனாய்ப் பிறந்ததாகக் குறிப்பிடுகிறது.

இவரது செயற்கரிய செய்கைகளைக் கணிசித்தே இவரை வேங்கடேசனின் அவதாரம் என்றும் இராமானுஜரின் அவதாரம் என்றும் பின்னோர் போற்றி வருகின்றனர். நாராயணனே வேத சாத்திரங்களைத் துணையாகக் கொண்டு அறிவிலிகளான மாந்தர்களைக் கரையேற்ற மனித உருவில் ஆசார்யனாகத் தோன்றுகின்றான் எனப் பிரமாணங்கள் பேசுகின்றபடியால் உண்மையில் இவர் பரமனின் அவதாரமே.[4] என்று வைணவப் பெரியோர்கள் குறிக்கின்றனர்.

இங்ஙனம் திருமலைத் திருக்கோயில் மணியாயும் திருமலை நாதனாயும் வேதாந்த தேசிகன் போற்றப்படுவதற்கு அடிப்படையாக அவர்தம் சமயத்தொண்டே அமைகிறது.

### 2.1.4. காலம்

வேதாந்த தேசிகன் காலத்தைக் குரு பரம்பரை நூல்கள் தெளிவாக அறுதியிட்டுள்ளன. மத்துவாச்சாரியாரும் தம் நூலில் இவர் காலத்தைக் குறிப்பிடுகின்றார்.[5] கலியுகம் 4371இல் இவர் பிறந்தார் என்ற கருத்துப்படி கி.பி. 1268 இல் புரட்டாசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார். இவர் ஒரு நூற்றாண்டு வாழ்ந்திருந்து சமயப் பணியாற்றினார். கி.பி. 1368 இல் திருநாடு சேர்ந்தார்.[6] இவர்தம் நூற்றாண்டுகால வாழ்க்கையையும், தொண்டையும் கீழ்க்காணும் சாற்றுமுறைத் தனியன் உணர்த்தும்.

*நானிலமும் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ*
*மாநகரின் மாறன் மறைவாழ - ஞானியர்கள்*
*சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே*
*இன்னுமொரு நூற்றாண்டு இரும்.*

(ஆழ்வார்வழிக்குரவர் வரலாறு. ப. 202)

### 2.1.5. கல்வி

வேதாந்த தேசிகன் தம் சிறு வயதில் எழுத்துக்கல்வி கற்று வந்த காலத்தில் நடாதூர் அம்மாள் ஆணையின்படி தம் மாமா கிடாம்பி அப்புள்ளாரிடமிருந்து, மந்திர, பிரபந்த, தத்துவ மரபுகளைக் கற்றுத் தேர்ந்தார். இதனை அம்மாள் கூற்றாகக் குரு பரம்பரா பிரபாவம்,

*உடையவர் நியமனப் படிக்கு ஶ்ரீ பாஷ்யாதிகளைச் ஸத்பாத்திரத்தில் விநியோகிக்கும்படி பிள்ளான் நியமனம் என்றும்... அந்த ஸத்பாத்திரம் ஸ்வப்ன கண்டா வ்ருத்தாந்தங்களாலே இந்தத் தூப்புற்பிள்ளையே என்று உடையவர் திருவுள்ளக் கருத்தாயிருக்கும்...... நீரே இவருக்கு ஆசான் வழியாய் வந்த திருமந்த்ரார்த்தங்களையும் பிள்ளான் வழியாய் வந்த ஶ்ரீ பாஷ்ய, பகவத் விஷயங்களையும் உடையவர் திருவுள்ளமுகக்கும் ஸாமான்ய சாஸ்திரங்களுடன் ப்ரசாதியும்.*[7]

என்று குறிப்பிட்டுரைக்கிறது.

அப்புள்ளாரிடம் வேதம், திவ்வியப் பிரபந்தம், தருக்கம், வியாகரணம் முதலிய மரபுகளை ஓதியுணர்ந்தார். இவர் அப்புள்ளாரிடம் சகல கல்வியும் உணர்ந்து குருபக்தியுடன் திகழ்ந்த செய்தியை

*காவல ரெங்கள் கிடாம்பிக் குலபதி யப்புள்ளார்தந்*
*தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால்*
*நாவல ருந்தென் வடமொழி நற்பொருள் பெற்றநம்பி*
*காவல தூப்புற் குலத்தரசே யெம்மைக் காத்தருளே* (பிள்ளை. 17)

என்று பிள்ளையந்தாதி விளக்குகின்றது.

### 2.1.6. இல்லறம்

பல்வகை சாத்திரங்களில் தேர்ந்து அவற்றைப் பிறர்க்கு அறிவுறுத்தும் நிலைப்பாடெய்திய வேதாந்த தேசிகனுக்கு அவர்தம் பெற்றோர் மணம் புரிவிக்கக் கருதினர். இறைப் பக்தி, பண்புநலன் ஆகியன நிறைந்த 'திருமங்கை' என்ற குணவதியைப் பெற்றோர் ஆணையின்படி மணந்தார். எனினும் இல்வாழ்வில் அமிழ்ந்துவிடாமல் சாத்திரப் பொழிவுகளில் தம் சிந்தையைச் செலுத்தி வந்தார்.

இறைப்பணியிலேயே சிந்தை செலுத்திய வேதாந்த தேசிகன் கனவில் காஞ்சிப் பேரருளாளன் தோன்றித் தம் அருள் நிறைந்த ஆண்மகவு பிறக்கும் என்றருளினான். தேசிகனின் நாற்பத்தெட்டாவது வயதில் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பேரருளாளன் திருநாமமாகிய 'வரதன்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். வரதாசாரியாரும் தம் தந்தையை ஒத்த ஞானமும் திண்மையும் பெற்று விளங்கினார்.[8]

### 2.1.7. தெய்வீக அருள் பெறல்

அப்புள்ளார் தம் மரபு வழியில் பெற்ற கருட மந்திரத்தை வேதாந்த தேசிகற்கு உபதேசித்தார். இருவரும் அம்மந்திரத்தைத் திருவயிந்திரபுரம் சென்ற நாளில் அரசமரத்தடியில் அமர்ந்து தியானித்தார். அவருக்குப் பெரிய திருவடி என்று போற்றப்படும் கருடாழ்வார் தோன்றி ஹயக்கிரீவர் மந்திரத்தையும், ஹயக்கிரீவர் படிமத்தையும் அருளினார். திருமங்கையாழ்வார் அயக்கிரீவக் கடவுளை,

*முன்னிவ்வுல கேழுமிருள் மண்டி யுண்ண*
*முனிவரொடு தானவர்கள் திகைப்ப வந்த*
*பன்னுகலை நால்வேதப் பொருளை எல்லாம்*
*பரிமுகமாய் அருளிய வெம்பரமன் காண்மின்* (நாலா. 1619)

என்று துதிக்கிறார். கலைகட்கும் அறிவுக்கும் ஈசன் எனக் குறிக்கப்பெறும் ஹயக்கிரீவரைப் பெரிய திருவடி அருளிய மந்திரத்தால் தியானித்து வணங்கினார். அவ்வேளையில் ஹயக்கிரீவர் தோன்றி அருளை அமுதமென ஈந்தார். அவ்வமுதம் பருகிய நிலையில் எல்லா ஞானங்களும் கைவரப் பெற்றார். இவ்விதம் பெற்றதே தம் ஞானம் எனுங் கருத்தில் வேதாந்த தேசிகன் தம் அதிகாரச் சங்கிரகத்தில்

*வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர காலடியோம்*
*உள்ளத்தெழுதியது ஓலையில் இட்டனம்..........* (தேசி.பிர. 95)

என்று உரைக்கின்றமை கருதத்தக்கது.

வேதாந்த தேசிகன் பல தலத்து இறைவனை வணங்கும் விருப்பில் தல யாத்திரை மேற்கொண்டார். முப்பத்தைந்தாம் வயதில் வட இந்திய, தென்னிந்தியப் பகுதிகளில் திருத்தல யாத்திரை மேற்கொண்டார். சோளசிம்மபுரம், பதரிகாச்ரமம், வடமதுரை, அயோத்தி, பிருந்தாவனம், காசி முதலிய வட இந்திய தலங்கட்கு எழுந்தருளினார். திருவேங்கடம், திருப்பெரும்புதூர், திருவரங்கம், திருக்குடந்தை, திருவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, திருக்கோவிலூர், திருநாராயணபுரம், தில்லை முதலிய தென்னாட்டுத் திருத்தலங்கட்கும் சென்று வழிபடும் நாளில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் கனவிலும் அருச்கர் மீதும் வந்து வாழ்த்தினர்.

உடையவர் அருளைத் திருப்பெரும்புதூரிலும், திருநாராயணபுரத்திலும், திருவரங்கத்திலும் பெற்றார். ஆண்டாள் அருளைத் திருவில்லிபுத்தூரிலும் பெரியாழ்வார் அருளை ஆழ்வார் திருநகரியிலும் பெற்றார்.

### 2.1.8.1 வாதப் போர் புரிதல்

இராமானுஜரின் விசிஷ்ட்டாத்துவைதத்தில் வேதாந்த தேசிகன் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். உடையவர் எழுதிய ஸ்ரீ பாஷ்யத்தைப் பெரு வியப்புடன் பயின்றவர். அதனைக் கருத்துறக் காண்டலே தம் பிறவி நோக்கம் எனக்கருதினார். இதனை அமிருதாசுவாதினியில்,

*மூலங்கிளை யெனஒன் றிரண்டான மொழியிரண்டும்*
*மேலொன் றிலையென நின்ற அவ்வித்தகன் தன்னுரையும்*
*காலங் கழிவதன் முன்னம் கருத்துறக் கண்டிடவே*
*ஞாலம் புகழு நந்தேசிகர் தாநமை வைத்தனரே* (தேசி.பிர. 96)

எனக் குறிப்பதன் மூலம் உணரலாம்.

இத்தகைய ஈடுபாட்டால் தாமுணர்ந்த சித்தாந்தமே மேலாந்தன்மையது என்ற உறுதியுடன் வேதாந்த தேசிகன் விளக்குகின்றார். இவ்வுறுதி வலுப்பெற்றுப் பிற சமயக் கோட்பாடுகளில் அமைந்த வன்மை மென்மைகளை ஆராய்ந்துரைக்க வழி செய்தது. இவ்வாராய்ச்சியே பிற சமயத்தினருடன் வாதங்களில் ஈடுபடத் துணை நின்றது எனலாம். அரிசமய தீபம், உடையவர்தம் அவதாரப் பயனை,

*அயலாஞ் சமயக் களை களையா*
*அருண்மால் சமயப் பயிர் வளர்க்க* (அரி. தீப. 6&7)

என்று கூறும். அஃது ஈண்டு வேதாந்த தேசிகனுக்கும் பொருந்தும் கூற்றுக்களாம். இவர்தம் வாதப்போர்த் திறமையைத் தேசிக நூற்றந்தாதி,

*வைகல் கவிவாதி சிங்க மறையவரை*
*கைகலந்து நாமம் கருதினால் - செய்கருமம்*
*ஈதொப்ப(து) இல்லையிங்(கு) இப்படியே அங்கமென*
*சாதுசனம் காட்டும் சதிர்* (தேசி.நூற். 14)

என்று குறிப்பிடுகிறது. இவர் செய்த வாதப் போர்களைக் குருபரம்பராப்ரபாவம் விளங்கப் பேசுகிறது.[9]

2.1.8.1 காஞ்சியில் விசிஷ்ட்டாத்துவைதத்தை வளர்த்து வரும்போது மாயத்துறவி ஒருவன் வந்து வாதிட்டனன். அவனை வென்று வைஷ்ணவ சித்தாந்தத்தை நிலை நாட்டினார். அது கண்டு பொறாத உள்ளத்தனாய் மாயத்துறவி அருகிருந்த குளத்தில் மூழ்கி நீரைக் குடித்து, தீய மந்திரம் செபித்தான். இதனால் வேதாந்த தேசிகனின் வயிறு வலி கண்டது. உடனே தேசிகன் அருகிருந்த ஒரு தூணைக் கீறத் துறவி குடித்த நீர் எல்லாம் தூண் வழியே வெளியேறியது. துறவி பணிந்து மன்னிப்பு வேண்டினான்.

2.1.8.2 திருவரங்கத்தில் வடநாட்டிலிருந்து வந்த மாயவாதி ஒருவன் தன்மதமே மேலானது என்று கூறி வாதப்போருக்குப் பலரை அழைத்து வென்றான். சுதரிசனப்பட்டர் வேதாந்த தேசிகனுக்கு ஓலை விடுத்தார். வேதாந்த தேசிகன் திருவரங்கத்திற்கு எழுந்தருளி அரங்கனையும் நாச்சியாரையும் வணங்கினார். பின் பெரிய மண்டபத்தில் எழுந்தருளி விசிஷ்ட்டாத்துவைதத்தை நிலை நாட்டி மாயவாதியைத் தோற்கச் செய்தார். அரங்கனும் நாச்சியாரும் மனம் உகந்திட விருதுகள் அளித்தனர். இவ்வாதப் போர்க் கருத்துக்கள் சததூஷணியாய் உருப்பெற்றன.

2.1.8.3 கிருஷ்ண மிச்சிரன் என்ற அறிஞனையும் திண்டிமகவி என்ற புலவனையும் வேதாந்த தேசிகன் வாதிலும் புலமையிலும் வென்றார். அவர்கள் இவரின் அடி தொழுது வணங்கினர்.

2.1.8.4 வித்தியாரணியர் என்ற விஜய நகர சமத்தான ஆசாரியர் தேசிகனின் தோழரும் ஆவார். அவர் தேசிகனுக்குச் '*சமத்தானப் புலவராய் வர வேண்டும்*' என்று அழைப்பு விடுத்தார். அதனை மறுத்து '*இறைப்பணியே தம் பணி*' என்று அறிவுறுத்தி '*வைராக்கிய பஞ்சகம்*' என்ற செய்யுட்களை எழுதி அனுப்பிவிட்டார். வித்தியாரணியரும் அது கண்டு உவந்தார்.

பின்னொருகாலத்து வித்தியாரணியருக்கும் பிறிதொரு சமயவாதிக்கும் நிகழ்ந்த வாது முடிவெய்தாமல் இருந்தது. வாத பிரதிவாதங்களை வேதாந்த தேசிகனுக்கு எழுதித் திருமுகம் அனுப்பினார். அவ்வாதத்திற்கு நடுவுநிலைமை காக்கத் திருவுளங்கொண்டு வேதாந்த தேசிகன் திருமுகத்துச் செய்திகளின் மறுப்புரைகளை எழுதி விசிஷ்ட்டாத்துவைதமே மெய் என்று அருளிச் செய்தார்.

2.1.8.5 இத்தகைய வாதுகளேயன்றி வைணவ மரபின் ஒரு பிரிவினர் இவரை வாதத்திற்கு அழைத்தனர். இவர் வைணவ பக்தரை எதிர்த்து வாதிட மறுத்தார்.

### 2.1.9.0. அருட் செய்கைகள்

வேதாந்த தேசிகன் திருவரங்கத்தில் அரங்க நாச்சியார் அருளால் *'சர்வ தந்திர ஸ்வதந்திரர்'* என்று விருதுபெற்றார். இதன் பொருள் *'கலைகள் யாவிலும் வல்லவர்'* என்பதாம். இது கண்டுபொறாத சிலர் இவரைப் போட்டிக்கு அழைத்தனர். இப்போட்டிகள் வேதாந்த தேசிகற்கு புகழ்சேர்ப்பனவாய் அமைந்தன. [10]

2.1.9.1 ஒரு பாம்பாட்டி, *'தன்னை வென்றிடுக'* என வன்மை புரிய, வேதாந்த தேசிகன் தரையில் ஏழு கோடுகளைக் கீறினார். அக்கோடுகளைத் தாண்ட முடியாது பாம்புகள் மயங்கின. முடிவில் பாம்பாட்டி மந்திரப்பாம்பு ஒன்றை ஏவ அது கோடுகளை மீறி தேசிகனைத் தீண்ட வந்தது. அவ்வேளையில் தேசிகன் கருட மந்திரம் ஜபித்தார். அப்போது கருடன் தோன்றிப் பாம்பினைக் கொத்திச் சென்றது. பாம்பாட்டி தெண்டனிட்டு வணங்கி மன்னிக்க வேண்டினான். அவன்பால் இரங்கிய அண்ணல் மன்னித்துப் பாம்பை மீண்டும் அவன் பெறச் செய்தார்.

2.1.9.2 ஒரு கொத்தன், தன் கலை வல்லவர் தாமோ? என வினவினான். அவனை விடச் சிறப்பாக ஒரு கிணறு கட்டி அவன் செருக்கை அடக்கினார். அவர் கட்டிய கிணறு இன்றும் திருவயீந்திரபுரத்தில் காணப்படுகிறது.

2.1.9.3 வேதாந்த தேசிகனிடத்துப் பொறாமை கொண்ட சிலர் பிரம்மச்சாரி ஒருவனைத் தூண்டித் தேசிகனிடம் பொருள் வேண்டச் செய்தனர். இவர் திருமகளைத் துதித்து அவனுக்குப் பொன்னைப் பொருளாகப் பெற்றிடச் செய்தார். இத்துதி ஆதிசங்கரர் பாடிய *'கனகதார'* துதிக்கு ஒப்பான சிறப்புடையது. பிறர்க்கென வேண்டிப் பொருளீந்த வேதாந்த தேசிகன் தமக்கென யாதொன்றும் யாசிக்கவில்லை. உஞ்சவிருத்திக்குச் சென்ற போதும் இவரிடம் பரிதாபம் கொண்ட சிலர் இட்ட பொற்காசுகளைக் கையாலும் தொடாமல் கோலால் தள்ளி விலக்கினார்.

2.1.9.4 ஒரு சிற்பி வேதாந்த தேசிகனிடம் அவரது உருவை அவரே சிலை வடித்திட வேண்டும் என்று கூறினான். இருவரும் உடன்பட்டார். அன்றைய இரவில் இறைவன் தோன்றிச் சிலை அமைய வேண்டிய வடிவத்தைக் கூறி அருளினான். அங்ஙனமே விடிவோரையில் தம் வடிவத்தைத் தாமே மெழுகில் செய்து சிற்பியை வென்றார். மெழுகில் செய்த வடிவத்தின்படியே சிற்பியும் வேதாந்த தேசிகனின் சிலையைச் செய்து வைத்து வணங்கினான்.

இறைவன் அருள் கூட, வேதாந்த தேசிகன் செய்த அருட்செயல்கள் பல. இவை தேசிகனின் தெய்வத் திறத்தை வெளிப்படுத்துவனவாய் அமைகின்றன.

**2.1.10. சமயங்காத்தலில் தேசிகனின் பங்கு**

பல்வகைச் சமயங்களின் சித்தாந்தங்களையும் கண்டுணர்ந்து விசிஷ்ட்டாத்துவைதத்தை நிலை நாட்டிய பெருமை வேதாந்த தேசிகனுக்கு உண்டு. அது மட்டுமன்றித் தம் சமயத்திற்கு நேர்ந்த இடையூறுகளையும் பல்நிலைகளில் போக்கி அருளினார்.[11]

2.1.10.1 திருவரங்கத்தில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ஓதும் முயற்சியினைச் சிலர் ஏற்காது மறுத்தனர். அச்சூழலில் தமிழ் வேதமே நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்று நிறுவினார். கோயிலில் தெய்வத் தமிழை அரங்கேறச் செய்தார்.

2.1.10.2 திருவரங்கத்தில் வேதாந்த தேசிகன் வசித்த காலத்தில் திருச்சிராப்பள்ளியைத் துருக்கியர்கள் தாக்கினர். அவர்கள் கோயிலில் புகக்கூடும் என்றஞ்சிய கோயில் பணியாளர்கள், மூலவர் சிலையினைக் கற்சுவரால் மறைத்தனர். அழகிய மணவாளன் படிமம் உட்படப் பல ஐம்பொன் சிலைகளைப் பெட்டியில் இட்டுக் காட்டு வழியாய்க் கொண்டு சென்றனர். பல தலங்கட்குச் சென்றபின் இறுதியில் திருப்பதியில் இறைப் படிமங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டன.

இந்நிகழ்வை அறிந்த வேதாந்த தேசிகன் தாமும் பெருமாளுடன் செல்லக் கருதினார். அப்போது சுதரிசனப் பட்டர் தாம் எழுதிய *'சுருத பிரகாசிகை'* என்ற நூலையும் தம் இளஞ்சிறார் இருவரையும் அயலாரிடமிருந்து காக்க வேண்டினார். இங்ஙனம் உதவுதல் பெருமாளைத் தொடர்ந்து செல்வதை விடச் சால்புடையது; அதுவே பெருமாளுக்கும்

உகந்தது என்ற சிந்தனையில் வேதாந்த தேசிகன் அந்த பொறுப்பை ஏற்றார். திருவரங்கத்திலிருந்து *'சுருதப் பிரகாசிகை'*யை எடுத்துக்கொண்டு, சுதரிசனப் பட்டரின் குழந்தைகளுடன் சத்தியமங்கலம் சென்றார். அங்கு சுதரிசனப் பட்டரின் நூலை ஆராய்ந்து அதன் பெருமையைக் கண்டுணர்ந்தார். அந்நூலைப் பலருக்கும் அறிவுறுத்தி அதனை இவர் நிலைபெறச் செய்தார்.

2.1.10.3 துருக்கர் படையெடுப்பால் திருமலையில் எழுந்தருளியிருந்த அழகிய மணவாளன் படிமத்தை மீண்டும் திருவரங்கக் கோயிலில் வைத்து வழிபடவேண்டும் என்ற விருப்பு, வேதாந்த தேசிகனுக்கு எழுந்தது. அது சமயம் கோபநாராயணன் என்ற மன்னன் அன்னியரைப் புறங்கொள்ளச்செய்து செஞ்சியில் சில நாள் வைத்து வழிபட்டுப் பின் மீண்டும் திருவரங்கத்தில் வழிபாட்டிற்கு ஏற்பாடுச் செய்தான். அதனை இறைவன் கனவில் உணர்த்தியருள மிக மகிழ்வெய்தினார். திருவரங்கம் வந்து இறைவனை முன்போல் வழிபட்டு மகிழ்ந்தார்.

கோபநாராயணன் துணைக் கொண்டே தில்லைச் சித்திரக் கூடத்திலிருந்து அகற்றப்பட்டு இருந்த 'கோவிந்தராசப் பெருமாளை' மீண்டும் பிரதிஷ்டை செய்து வழிபாட்டிற்கு வழி கோலினார்.

தம் சமய வழிபாட்டைப் பேணுதல் மூலம் வேதாந்த தேசிகன் வைணவ மரபைப் பாதுகாத்து வந்தார். எனவேதான், தேசிகர் நூற்றந்தாதி,

*பரன்நா ரணன்அவன்பா தத்திற்(கு)ஆட் செய்கை*
*உரம்இவ் உயிர்கட்குஎன்(று) ஓரார் - சிரமத்தை*
*தீர்க்கவே வேதாந்த தேசிகனாய் வந்(து)உதித்து*
*மார்க்கம் என்றுரைத்தான் மால்* (தேசி.நூற். 11)

என வேதாந்த தேசிகனைப் போற்றுகிறது.

### 2.1.11. சீடர்கள்

வேதாந்த தேசிகனின் சித்தாந்தத்தின் உண்மையை உணர்ந்து அதன்பால் ஈர்ப்புற்றுப் பலர் தம் சிந்தையைச் செலுத்தினர். அவர்தம்முள் குறிப்பிடத் தக்கவர் பன்னிருவர் ஆவர்.[12]

1. வரதாசாரியார் (வேதாந்த தேசிகனின் குமாரர்)
2. பிரமதந்திர ஸ்வதந்திர சீயர்
3. வெண்ணெய்க் கூத்தசீயர்
4. குஞ்சம்பூர் சீனிவாசாச்சாரியார்
5. தீர்த்தப் பிள்ளை
6. திருமலை சீனிவாசாச்சாரியார்
7. பிரபாகர சீயர்
8. கந்தாடை எம்பார்
9. திருமலை நல்லான்
10. கிடாம்பிப் பிள்ளை
11. குமாண்டூர் பிள்ளை
12. தூப்புல் அப்பை

மேற்குறிப்பிடப்பெறும் சீடர் பன்னிருவரும் தேசிக தரிசனத்தைக் கருத்தில் கொண்டு அதனை வளர்க்கும் பணியிலும் வேதாந்த தேசிகனுக்கு உடனிருந்து உற்றுழி செய்யும் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

வேதாந்த தேசிகனைப் புகழ்ந்து வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பல தனியன்களையும் வாழித் திருநாமங்களையும் படைத்துத் தம் ஆசானைப் போற்றினர். இவர்கள் 'தேசிகர் முதலிகள்' என்றும் போற்றப்படுகின்றனர். இவர்களேயன்றி இவரிடம் வாதிலும் போட்டியிலும் தோற்றவர்களும் சீடர்களாக மாறினர். அவர்களுள் கிருஷ்ணமிச்சிரன், திண்டிமன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

வேதாந்த தேசிகனின் திருக்குமாரரும் நயினாசாரியார் என்று போற்றப்படுபவருமான குமார வரதாசாரியார்,

*ஸ்ரீமான் வேங்கட நாதார்ய*
*கவிதார்கிக கேசரி*
*வேதாந்தா சார்ய வர்யோமே*
*சந்நிதத்தாம் சதா உற்ருதி* (குரு.ப்ரபா. ப. 151)

என்ற வடமொழித் தனியனை இயற்றினார். இத்தனியன் தம் வடமொழி நூல்களுக்கு முன் ஓதிட வேதாந்த தேசிகன் அருள்புரிந்தார். பிரம்ம ஸ்வதந்திர சீயர் இயற்றிய

*இராமானுஜ தயா பாத்ரம் ஞான வைராக்ய பூஷணம்*
*ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்*
(தேசிக.பிர.தனியன், ப. 1)

என்ற வடமொழித் தனியனை திவ்வியபிரபந்தம் முதலான துதிகளுக்கு முன் ஓதிட இவர் அருளாணை வழங்கினார். இவையேயன்றிப் பிள்ளை உலகாசாரியர் இயற்றிய,

*சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்*
*பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று*
*தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
*வானேறப் போமளவும் வாழ்வு* (தேசிக.பிர.தனியன், ப. 1)

என்ற தனியனைத் தம் மணிப்பிரவாளத் தமிழ்ப் பிரபந்தங்கட்கு முன் ஓதிட திருவுள்ளம் புரிந்தார்.

### 2.1.12. விருதுகள்

திருவரங்கத்தில் வாதப்போர் புரிந்து அத்துவைதிகளை வென்ற காலத்தில் அரங்கநாதனும் அரங்க நாச்சியாரும் முறையே 'வேதாந்தசாரியார்' என்றும் *'சர்வ தந்திர ஸ்வதந்திரர்'* என்றும் விருதுகள் வழங்கித் திருவருள் புரிந்தனர். வேதாந்தசாரியார் என்பதே 'வேதாந்த தேசிகன்' என்று குறிப்பிடபெறுகிறது. தேசு என்பது ஒளி, அழகு என்னும் பொருள் கொண்டது. இவ்வடிப்படையிலேயே ஆசிரியப் பொருளை ஒட்டி வழங்கப்பட்டது. வேதாந்தத்தை விரித்துரைக்கும் ஆசிரியன் என்ற பொருள்பட, வேதாந்த தேசிகன் என்ற பெயர் அமைந்தது. கலைக்களஞ்சியம்,

> *தமிழுக்கு உயர்ந்த பெருமை அளித்து வடமொழிக்கு எவ்வகையிலும் தாழ்ந்ததில்லை என்றும் ஆழ்வார்களுடைய தமிழ்ப் பிரபந்தங்களை வடமொழி வேதத்தைப் போன்று ஒரு வேதமே என்றும் பல நூல்களால் நிலைநாட்டிய பெருமை இவ்வாசிரியருக்கு உரியது. அது கண்டு உகந்த ஸ்ரீரங்கநாதன் இவருக்கு உபய வேதாந்தசாரியார் என்ற விருதை அளித்தருளினான்.... பொதுவாக, தேசிகன் என்ற சொல் ஆசாரியன் என்ற பொருள்படுமாயினும் இவர் தோன்றிய பிறகு இவருக்கே உரிய சொல்லாக அமைந்துவிட்டது.*[13]

என்று வேதாந்த தேசிகன் பெற்ற விருது பற்றி உரைக்கின்றது. வேதாந்த தேசிகனுக்கு இறைவனால் விருது வழங்கப்பட்டதின் உண்மையை அவரே தம் பாடல் ஒன்றில் *'வேதாந்த ஆசிரியன் என்று இயம்ப நின்றோம்'* (தேசி.பிர.132) என்று குறிப்பதால் தெளியலாம்.

வேதாந்த தேசிகன் பல நூல்களைச் சாத்திரம், துதி முதலான பொருண்மைகள் அமையத் தமிழிலும் வடமொழியிலும் பல்வகை யாப்பமைதியில் படைத்தருளினார். சுதரிசனப் பட்டர் போன்றோர் இவ்வருஞ் செய்கையை ஓர்ந்து *'கவிதார்கிக சிங்கம்'* என்ற விருது தந்து வணங்கினர்.

இவர் வடமொழி, தமிழ் யாப்பில் கைதேர்ந்தவர். செய்யுள் வன்மையுடன் திகழ்ந்தமையால், *'ஸமஸ்யா ஸகஸ்ரீ'* என்றும் இவர் பாராட்டப்பட்டார். இதனை

> *'ஸமஸ்யா ஸகஸ்ரீ' என்கிற பிருது மற்ற பிருதுகளைப் போல் ஸுப்ரஸித்தமாக ஸ்வாமிக்கு வழங்குவதில்லையாயினும் அக்காலத்தில் ஸதஸ்ஸுகளில் வித்வான்களால் வழங்கிவரப்பட்டதென்று விளங்குகின்றது. ஒரு ச்லோகத்தின் ஏகதேசத்திற்கு 'ஸமஸ்யா' என்று பெயர்....*
> *தேசிகன் ஸமஸ்யைகள் கொடுப்பதிலும் பிறர் கொடுக்கும் ஸமஸ்யைகளைப் பூரணம் செய்வதிலும் நிகரற்ற வல்லவர் என்பது விளங்க இவருக்கு 'ஸமஸ்யா ஸகஸ்ரீ' என்ற பிருது தோன்றியதென்பர்.'* [14]

என்று அண்ணங்கராசார்ய ஸ்வாமி குறிப்பிடுவார்.

இவ்விருதுகளின் உண்மையை இவர் திருக்குமாரர் இயற்றிய பிள்ளையந்தாதியிலும் காண முடிகிறது. அந்நூலில் வேதாந்த தேசிகனின் விருதுகளின் குறிப்பும் இயற்பெயரும் அமைய,

> *வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்*
> *மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கடைக்கண்*
> *மெய்திடு நாளின் முழக்கொடு வாதியர் மூலமறக்*
> *கைத்தவன். . . . . . . . . . . . . . . . . . . . . . . . .* (பிள்ளை. 6)

என்றும்

*அருள்தரும் ஆரண தேசிக னேயெங்கள் தூப்புற்றேவே*
*வருகவிதார்கிக சிங்கமே . . . . .* (பிள்ளை. 18)

என்றும் சுட்டப்பட்டுள்ளன.

## 2.2. நூல்கள்

வைஷ்ணவத்தில் துறைபோகிய ஞானம் கைவரப் பெற்றபின் வேதாந்த தேசிகன் அக்கோட்பாட்டைப் பலர்க்கும் அறிவுறுத்தும் பணியில் ஈடுபட்டார். அருட்செய்கைகளாலும் வாதப் பிரதிவாதங்களாலும் எவ்வாறு விசிஷ்ட்டாத்துவைதத்தை நிறுவி வெற்றி பெற்றாரோ அதே நிலையில் தம் சொற்பொழிவுகளாலும் அக்கோட்பாட்டைப் பரப்பித் தொண்டு புரிந்தார். அவை நிலைபேறுடையனவாகத் திகழ வேண்டும் என்ற கருத்தில் பல நூல்களை எழுதினார். இவர் தமிழிலும் வடமொழியிலும் இரண்டும் பிணைந்த மணிப் பிரவாளத்திலும் தம் நூல்களைப் படைத்தருளினார். இவை வைணவ சாத்திரம் கூறுவனவாக மட்டுமேயன்றி வைணவர்க்குரிய விதிகளைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. மேலும் துதிப்பாக்களையும் இயற்றியுள்ளார்.

இவர் தம் தொடக்கக் கால நூல்களாய் விளங்குவன ஹயக்ரீவ தோத்திரம், கருடபஞ்சாசத் ஆகியன. திருவயீந்திரபுரத்தில் வேதாந்த தேசிகன் ஹயக்ரீவர் அருள்பெற்றார். இறைவனின் திருக்கருணையையும் அவற்றிற்கு உபாயமாய் அமைந்த கருடதேவர் கருணையையும் நினைந்து முறையே இந்நூல்கள் எழுந்தன. அத்தலத்து இறைவன் ஆணையின்படி பல பாடல்கள் பாடியுள்ளார்.

பிற சமயத்தாரின் புறக்கொள்கைகளைப் புறந்தள்ளப் *'பரமதபங்கம்'*, *'ஸததூஷணி'* ஆகியன எழுந்தன. காஞ்சித் தலத்தில் வணங்குகையில் இறைவன் ஆணைப்படி நியாசதசகம், வரதராஜபஞ்சாஸத் ஆகியனவற்றையும் அடைக்கலப்பத்து, வைணவ தினசரி, திருச்சின்னமாலை ஆகியனவற்றையும் அருளினார்.

திருவரங்கத்தில் உடையவர் அருளை நினைந்து *'எதிராச சப்ததி'* என்ற நூலை இயற்றினார். உடையவரின் விசிஷ்ட்டாத்துவைதத்தை விளக்கும் வகையில், தத்துவ முக்தாகலாபம், நியாய சித்தாஞ்சனம்,

சர்வார்த்தசித்தி, அதிகருண தர்ப்பணம், ஸ்ரீபாஷ்யவிளக்கம், கீதை உரை விளக்கம் ஆகிய பல நூல்களை இயற்றினார்.

இராமானுஜ சித்தாந்தத்தை எல்லோரும் உணரும் வகையில் அருள வேண்டும் எனத் திருவரங்கத்து அடியவர் பலர் வினவ, அவர்களுக்காக இரங்கி, சம்பிரதாய பரிசுத்தி, தத்துவப்பதவி, இரகசிய பதவி, அபயபிரதானசாரம், உபகாரசங்கிரகம், பரமபதசோபானம் முதலான பல நூல்களை இயற்றினார். ஒரே நாளிரவில் *'பாதுகாசகஸ்ரம்'* என்ற நூலை எழுதித் திருவரங்கனுக்குச் சமர்ப்பித்தார். ஸ்ரீ வேதாந்த தேசிகர் சதகம், இந்நிகழ்ச்சியை,

*. . . . . . . . . . . . . . . . . . ஓர் இரவில்*
*ஆயிரங்கவிகள் அருளினோய்! யாவும்*
*ஆய்ந்தவே தாந்த தேசிகனே* (வேதா. சதகம். 59)

என்று குறிப்பிடுகிறது. *'பாதுகாசகஸ்ரம்'* இறைவன் திருவடிகளைச் சிறப்பிப்பதாகும். இத்திருவடிகளே நம்மாழ்வாராய் அவதரித்தன என்ற கருத்தில் இந்நூல் அமைந்துள்ளது. இவ்வாறு வேதாந்த தேசிகன் இயற்றிய நூல்கள் பலவாம்.

| | | |
|---|---|---|
| 1. தோத்திர நூல்கள் | -- | 28 |
| 2. பெருநூல்கள் | -- | 4 |
| 3. நாடகம் | -- | 1 |
| 4. வேதாந்த நூல்கள் | -- | 14 |
| 5. உரை நூல்கள் | -- | 8 |
| 6. அனுஷ்டான நூல்கள் | -- | 2 |
| 7. இரகசிய நூல்கள் | -- | 32 |
| 8. தமிழ்ப் பிரபந்தங்கள் | -- | 24 |

மேற்குறிப்பிட்டவற்றுள் உரை நூல்களுள் அதிகரண தர்ப்பணம் என்ற நூலும் ரகசிய நூல்களில் மதுர கவி இருதயம், நிகமபரிமளம், திருமுடியடைவு ஆகிய நூல்களும் தமிழ்ப் பிரபந்தங்களில் பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் ஆகிய நூல்களும் மறைந்துவிட்டன. எஞ்சிய நூல்கள் இன்றும் வைணவ மரபினரால் பயின்று வரப்படுகின்றன. இனி ஆய்வுப் பொருளாகிய தமிழ்ப் பிரபந்தங்கள் பற்றிக் காணலாம்.

### 2.2.1. தமிழ்ப் பிரபந்தங்கள்

வேதாந்த தேசிகன் இயற்றிய துதியாகவும் சாத்திரமாகவும் அமைந்த தமிழ்ப் பிரபந்தங்கள் இருபத்து நான்காகும். அவற்றுள் ஐந்து மறைந்திட எஞ்சியன பத்தொன்பது பிரபந்தங்கள். அவற்றின் முறைவைப்பு வருமாறு:

1. அமிருத ரஞ்சனி
2. அதிகார சங்கிரகம்
3. அமிருதாசுவாதினி
4. பரமபதசோபானம்
5. பரமதபங்கம்
6. மெய்விரதமான்மியம்
7. அடைக்கலப்பத்து
8. அருத்தபஞ்சகம்
9. வைணவ தினசரி
10. திருச்சின்னமாலை
11. பன்னிரு நாமம்
12. திருமந்திரச் சுருக்கு
13. துவயச் சுருக்கு
14. சரமசுலோகச் சுருக்கு
15. கீதார்த்த சங்கிரகம்
16. மும்மணிக்கோவை
17. நவமணி மாலை
18. பிரபந்த சாரம்
19. ஆகார நியமம்

ஆகியனவாம். இப்பத்தொன்பது பிரபந்தங்களுடன் வேதாந்த தேசிகன் திருமகன் வரதாசாரியார் இயற்றிய பிள்ளையந்தாதி பின்னிணைப்பாக அமைந்துள்ளது.

இந்நூல்களில் சில, மணிப்பிரவாள நடையில் அமைந்த இரகசிய நூல்களின் இடையே அமைந்த தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பாக அமைந்துள்ளன. தேசிக பிரபந்தம் பற்றிப் பொதுப்படக் கூறின் வேதாந்த இரகசியங்கள் பற்றி அமைந்த நூல்களின் சுருக்கமாகவோ, வேதாந்த இரகசியங்கள் பற்றிய செய்திகளின் சுருக்கமாகவோ, மொழிப்

பெயர்ப்பாகவோ அமைந்திலங்குகின்றன. இவை மொத்தம் நானூற்று ஐந்து பாடல்களை உடையன. ஒரே பாடல் இரு பிரபந்தங்களில் இடம் பெறவும் காணலாம். இங்ஙனம் ஆறு பாடல்கள் இருவேறு பிரபந்தங்களில் அமைந்துள்ளன.

இந்நூல்களில் மெய்விரதமான்மியம், அருத்தபஞ்சகம், அடைக்கலப்பத்து, ஶ்ரீவைணவ தினசரி, திருச்சின்னமாலை, பன்னிரு நாமம் ஆகியன காஞ்சிப் பேரருளாளனைத் துதித்து அமைவன. திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகியவற்றின் கருத்துக்கள் '*சுருக்கு*' என்ற நிலையில் தனியாகவும் பிற பிரபந்தத்தின்கண் இடைமிடைந்தும் விளக்கப்பட்டுள்ளன. திருவயீந்திரபுரம் தேவநாதன் பேரில் பாடப்பெற்ற மும்மணிக்கோவை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல், நவமணி மாலை ஆகியவற்றுள் மும்மணிக்கோவையின் இருபது பாடல்களும் நவமணி மாலை நீங்கலான எஞ்சிய சிற்றிலக்கியங்களும் மறைந்தொழிந்தன.

### 2.2.1.1. அமிருதரஞ்சனி

சம்பிரதாய பரிசுத்தி முதலான இரகசிய நூல்கள் முப்பத்து இரண்டு ஆகும். அவற்றுள் சம்பிரதாய பரிசுத்தி முதல் பதினொரு இரகசிய நூல்களின் தொடக்கத்திலும் முடிவிலும் அவ்வந்நூல்களின் பொருளமைதியைச் செறிவாய் அமைத்துச் சில பாசுரங்களைப் படைத்துள்ளார். இவ்வாறமைந்த முப்பத்து ஒன்பது பாக்களின் தொகுப்பே அமிருதரஞ்சனி ஆகும். இந்நூல் அமிருதம் போன்ற பயன்தர வல்லது என்ற கருத்தில் இங்ஙனம் பெயரிடப்பட்டிருக்கக்கூடும். இந்நூலில் ஆசாரிய மகிமை, சேதன, அசேதனம், ஈசுவரன் என்பனவற்றின் உண்மைத் தன்மை விளக்கப்பட்டுள்ளன.

### 2.2.1.2. அதிகார சங்கிரகம்

இரகசிய நூல்களில் பெரும்பான்மையாய்ப் பயிலப் பெறுவதும், முதன்மையுடையதுமான நூல் ஶ்ரீமத் ரகஸ்யத்ரய சாரம். இந்நூலின்கண் முப்பத்திரண்டு அதிகாரங்கள் உள. அவ்வதிகாரங்களின் பொருண்மையைச் சுருக்கிக் கூறுவதால் இப் பெயர் பெற்றது. ஆசாரிய மகிமை, அதிகார பொருண்மை, கோயில். திருமலை, காஞ்சி ஆகியவற்றின் சிறப்புகள் ஆகியவற்றை இந்நூல் விளக்கும். அதிகாரப்பொருண்மை அந்தாதித்

தொடையில் அமைந்துள்ளது. மொத்தப் பாக்கள் ஐம்பத்தாறு ஆகும். இப்பாடல்கள் ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்துள் அமைந்துள்ளவற்றின் தொகுப்பாகும்.

### 2.2.1.3. அமிருதாசுவாதினி

அமிருத ரஞ்சனி போன்று அமிருதா சுவாதினியும் இரகசிய பொருண்மையை விளக்கும் சிறு நூல்களில் அமைந்த தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. அமிருத ரஞ்சனியில் இடம்பெறா இரகசிய நூல்களில் முதலிலும் முடிவிலும் அமைந்த பாசுரத் தொகுப்பாக முப்பத்தேழு பாடல்களை உடையது. திருமந்திரம் முதலான இரகசியங்களின் செய்தி, காகாசுரன், விபீஷ்ணன் சரணாகதி, வராகசரமசுலோகம் ஆகியன இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் உடையவர் பெருமையும், அமலனாதிபிரான் என்ற பாசுரத்தின் பொருளும் விளக்கப்பட்டுள்ளன.

### 2.2.1.4. பரமபதசோபானம்

சோபானம் என்பது படியைக் குறிக்கும். பரமன் திருவடிகளை அடையும் படிக்கட்டு என்ற முறையில் பரமபதசோபானம் என்று அழைக்கப்படுகிறது. பரமபதத்தை அடைவதற்குரிய ஒன்பது செய்திகளைப் படிக்கட்டுகளாய்க் கொண்டு இந்நூல் விளக்கப் பெறுகிறது.

இது மணிப்பிரவாள நடையிலமைந்த பரமபதசோபானம் என்ற நூலின்கண் அமைந்த பாசுரங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. இந்நூலின் மொத்த பாக்கள் இருபத்து ஒன்று ஆகும். இந்நூல் வடமொழித் தனியன் இரண்டையும் தமிழ்த் தனியன் ஒன்றையும் பெற்றுள்ளது.

### 2.2.1.5. பரமதபங்கம்

பரமதபங்கம் என்பதன் பொருள் அயல்மதக் கண்டனம் என்பதாம். வேதாந்த தேசிகன் திருவயீந்திரபுரத்தில் வசித்தபோது அயல்மதக் கொள்கைகள், விசிஷ்ட்டாத்துவைதத்துடன் ஒப்பிட உயர்வுடையனவாகா என்ற கருத்தில் மணிப்பிரவாள நடையில் பரமதபங்கம் என்ற விரிவான நூலை எழுதினார். அதன் சாரமாய் அந்நூற்கண் அமைந்த தமிழ்ப் பாக்களின் தொகுப்பு அதே பெயரில் (பரமதபங்கம்) அமைகிறது. இதன்கண் அமைந்த பாடல்களின் எண்ணிக்கை ஐம்பத்துநான்கு ஆகும்.

இது தத்துவத் திரயம், பிற மதங்களின் குறைகள், பாஞ்சராத்திரப் பெருமை, சரணாகதியின் பெருமை, முன்னாசிரியர் செய்த சம்பிரதாய மேன்மை ஆகியவற்றை விளக்குகிறது.

### 2.2.1.6. மெய்விரத மான்மியம்

அத்திகிரி என்பது காஞ்சிநகரம்; காஞ்சியின் பெருமையை விளக்கும் நூல் அத்திகிரி மகான்மியம். இது பிரம்மதேவன் யாகசாலையாகக் கொண்டு செய்த யாகச் சிறப்பு. பேரருளாளனாகிய வரதராச பெருமாள் அவதாரம், அருட்பாங்கு முதலியவற்றை விளக்குகிறது. அத்திகிரி மகான்மியத்தில் அடங்கிய தமிழ்ப் பாக்களின் தொகுப்பாக மெய்விரத மான்மியம் அமைகிறது. இதன்கண் இருபத்தொன்பது பாடல்கள் அடங்கியுள்ளன.

### 2.2.1.7. அடைக்கலப்பத்து

காஞ்சிப் பேரருளாளனின், திருவடிகளைச் சரண்புக வேண்டிப் பாடிய பத்து பாடல்களின் தொகுப்பு '*அடைக்கலப்பத்து*' என்று அழைக்கப்பெறுகின்றது. அடைக்கலம் வேண்டும் பொருண்மையில் அமைவதோடு அடைக்கலம் அடைதலின் சிறப்பு, பிரபத்தியின் ஐந்து பகுதிகள், அடைக்கலம் அடைந்தோர், பெற்றபேறு ஆகியன இப்பத்தில் விளக்கப்பட்டுள்ளன. இதை ஒத்த '*நியாசதசகம்*' என்ற வடமொழி நூலும் அடைக்கலப் பெருமையை விளக்கும். இதுவும் பத்து பாடல்களைக் கொண்டது.

### 2.2.1.8. அருத்தபஞ்சகம்

முக்தியைப் பெற விரும்பினால் ஐந்து பொருட்களைப் பற்றிய அறிவு வேண்டும். அப்பொருட்கள் பற்றி அறிமுகம் செய்யும் நூலாக அமைகின்றது. இறை இயல்பு, உயிர் இயல்பு, இடையில் அமையும் இன்னல்கள், வீடுபேற்றிற்கான வழிகள், இறையனுபவம் ஆகிய ஐந்து பொருண்மையில் இந்நூல் அமைந்துள்ளது. ஒரு பொருண்மைக்கு இரு பாடல் என்ற அளவில் பத்துப் பாடல்களும் நூற்பெருமை கூறும் பாடல் ஒன்றும் எனப் பதினொரு பாடல்கள் அமைந்துள்ளன.

### 2.2.1.9. ஶ்ரீவைணவ தினசரி

வைஷ்ணவருக்குரிய அன்றாடக் கடமைகளை விளக்குவதாகப் பத்துப் பாடல்களை உடையதாக ஶ்ரீவைணவ தினசரி எனும் நூல் அமைகிறது. ஒரு நாளை ஐந்து கூறுகளாக்கி ஒவ்வொரு பொழுதிற்கும் உரிய கடமை இதுவென வரையறுத்துக் கூறுகின்றது. அபிகமநம், உபாதானம், இச்யை, சுவாத்யாயம், யோகம் முதலான ஐந்து செயல்கள் இப்பாசுரங்களில் விளக்கப் பெற்றுள்ளன.

### 2.2.1.10. திருச்சின்னமாலை

இறைவன் சந்நிதிகளில் '*திருச்சின்னம்* என்றதோர் கருவி ஒலித்தல் மரபு. இதன் கம்பீரமான ஓசையினிமை இறைவன் எழுந்தருளும் குறிப்பைத் தருவது. அங்ஙனம் இறைவன் எழுந்தருளும் காட்சியை வருணிக்கும் நிலையில் இப்பிரபந்தம் அமைவதால் இது திருச்சின்னமாலை எனப்பெறுகின்றது. இப்பிரபந்தத்தில் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்னும் இரகசியங்களில் கூறப்பட்டுள்ள குணங்களைத் தன்னகத்தே கொண்ட பேரருளாளன் எழுந்தருளும் காட்சி விளக்கப்பெற்றுள்ளது. இப்பிரபந்தம் பதினொரு பாடல்களை உடையது. இப்பிரபந்தம் தமிழ்மொழியில் அமைந்துள்ள மூன்று தனியன்களை உடையது.

### 2.2.1.11. பன்னிரு நாமம்

வைஷ்ணவர்களுக்குரிய அடையாளங்களில் ஒன்று திருமண் காப்பு. தம் உடலில் இக்காப்பினைப் பன்னிரு இடங்களில் தரிப்பர். அங்ஙனம் தரிக்கையில் கேசவன் முதலாகத் தாமோதரன் ஈறாகப் பன்னிரு திருநாமங்களைச் சொல்லவேண்டும். இத்திருநாமங்களுக்குரிய இறைவன் வடிவம், நிறம், திசை, ஆயுதங்கள் ஆகியனவற்றை விளக்குவதால், இப்பிரபந்தம் பன்னிருநாமம் எனப்பெற்றது. இப்பிரபந்தம் பதிமூன்று பாடல்களை உடையது. இப்பிரபந்தத்திற்கு முன்னோடியாக நம்மாழ்வாரின் பன்னிரு நாமப் பாட்டு அமைகின்றது.

### 2.2.1.12. திருமந்திரச் சுருக்கு

வைஷ்ணவ மரபில் திருமந்திரம் என்று மதிக்கப்படுவது '*ஓம் நமோ நாராயணாய*' என்பதாகும். இதன் பெருமையைத் திருமங்கையாழ்வார்,

*குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்*
*படுதுயர் ஆயின எல்லாம்*
*நிலம்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்*
*அருளொடு பெருநிலை அளிக்கும்*
*வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற*
*தாயினும் ஆயின செய்யும்*
*நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்*
*நாராயணா எனும் நாமம்* (நாலா. 956)

என்று கூறுவதன் மூலம் உணரலாம். இத்திருமந்திரம் பற்றி, மு.இராமசாமி குறிப்பிடுகையில்,

*ஆசாரியனாகிய நாராயணன் சீடனாகிய நரனுக்கு உபதேசித்தது தான் இத்திருமந்திரம். இதன் உட்பொருளை, ஆசாரியார் சீடனுக்கு எடுத்துச்சொல்லி அவனை வைணவ வழிபாட்டுக்கு உரியவனாக்க வேண்டும் என்ற முறை இங்கிருந்து தொடங்குகிறது.*[15]

என்கிறார். இத்திருமந்திரமே சகலரையும் உய்விக்கவல்லது. இம்மந்திரத்தை எட்டு நிலைகளாய் பகுத்து அவற்றிக்கு விளக்கம் தரும் தன்மையில் அமைவதால் திருமந்திரச் சுருக்கு எனப்படுகிறது. இதன்கண் அமைந்த பாசுரங்களின் எண்ணிக்கை பத்து ஆகும்.

### 2.2.1.13. துவயச் சுருக்கு

சீவான்மாக்கள் ஈடேறத் திருமகள் வேண்டியபடி இறைவன் இரு தொடர்களை ஒன்றாக்கி மந்திரம் உரைத்தான். இம்மந்திரத்தின் முதற்பாகம் வழியையும், பிற்பகுதி பலனையும் கூறும். இங்ஙனம் இரண்டாய் அமைந்த காரணத்தால் துவயம் எனப்படுகிறது.

*'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே'*
*'ஸ்ரீமதே நாராயணாய நம: '*

என்பவை துவயமாகும். இவற்றில் முதல் தொடரால் '*பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈசுவரனுடைய இரண்டு திருவடிகளையும் உபாயமாகப் பற்றுகின்றேன்*' என்ற பொருளும் இரண்டாவது தொடரால் '*பெரிய பிராட்டியாரும் ஈசுவரருமான சேர்த்தியில் என்றும் கைங்கர்யத்தைப் புரிவேனாக*' என்ற பொருளும் கிடைக்கின்றன.[16] துவயம் பற்றிய கருத்துக்களைச் சுருக்கி வெளியிடுவதால் துவயச் சுருக்கு எனப்படுகிறது. இது துவயத்தின் பத்து அங்கங்களை விளக்கும் பன்னிரு பாடல்களை உடையது.

### 2.2.1.14. சரமசுலோகச் சுருக்கு

மகாபாரத போர்க்களமாகிய குருஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குக் கண்ணன் கீதையை அருளினான். அந்நூலின் கண் சரமசுலோகமாக,

*சர்வ தர்மாந் பரித்யஜ்ய*
*மாம்ஏகம் சரணம் வ்ரஜ*
*அஹம் த்வா சர்வாபாபேப்ய:*
*மோக்ஷயிஷ் யாமி மாசுச:* (பக.கீதை. 18.66)

என்ற சுலோகத்தை அருளினான். இதன் பொருள் மிக விரிவுடையது. இதனைப் பத்துப் பாசுரங்களில் சுருக்கிக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இதன் முதற்பாசுரம் சுலோகத்தின் திரண்ட பொருளைக் கூறும். ஆகப் பதினொரு பாசுரங்களை உடையது.

### 2.2.1.15. கீதார்த்த சங்கிரகம்

ஸ்ரீமத் பகவத் கீதை இறைவனால் மனிதருக்கு அருளப்பட்ட புனிதநூல் ஆகும். இந்நூலின் திரண்ட கருத்தையெல்லாம் சுருக்கி எல்லோரும் பயன்கொள்ளும்படி ஆளவந்தார் '*கீதார்த்த சங்கிரகம்*' என்ற நூலை அருளினார். இதன் மொழி பெயர்ப்பு எனும்படி ஆளவந்தாரின் நூலைத் தழுவியே இது இயற்றப்பெற்றதால் கீதார்த்த சங்கிரகம் என்பதே இதற்கும் பெயராயிற்று. ( ஆளவந்தாரின் நூலுக்குக் '*கீதார்த்த சங்கிரக ரட்சை*' என்ற உரை ஒன்றையும் வேதாந்த தேசிகன் அருளியுள்ளார். ) இந்நூல் இருபத்தொரு பாடல்களை உடையது. இந்நூலுக்கு இரு தனியன்கள் தமிழில் அமைந்துள்ளன.

### 2.2.1.16. மும்மணிக்கோவை

மூவகையாப்பில் அமைந்து ஒரு வகைக்குப் பத்துச் செய்யுள் என முப்பது பாடல்களைக் கொண்டிலங்கும் இலக்கிய வகை மும்மணிக்கோவை ஆகும். வேதாந்த தேசிகன் திருவயீந்திரபுரத்திற்கு வந்தபோது அத்தலத்து இறைவன் பேரில் மும்மணிக்கோவையைப் பாடினார். முப்பது பாடல்களுள் இருபது பாடல்கள் போக எஞ்சிய பத்துப் பாடல்களே வழக்கிலுள்ளன. இவை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை எனும் மூவகை யாப்புடன் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இப்பிரபந்தத்துள் தமிழின் அகமரபுப்படி தோழி, செவிலி கூற்றுக்கள் காணப்படுகின்றன.

### 2.2.1.17. நவமணி மாலை

பல்வகை நிறமுடைய ஒன்பது மணிகளை இணைத்த மாலை போன்று ஒன்பது வகையான யாப்பில் அமையப் பாடுவதும் நவமணி மாலை ஆகும். இதுவும் திருவயீந்திரபுரத்து இறைவனைத் துதித்துப் பாடப்பெற்ற நவமணி மாலையாகும். இதில் ஆறு, ஏழு, எட்டு, பதினான்கு, இருபத்தெட்டு சீர்களில் அமைந்த ஆசிரிய விருத்தங்களும் கலி விருத்தங்களும் அமைந்துள்ளன.

### 2.2.1.18. பிரபந்த சாரம்

தமிழ் வேதம் என்று வைஷ்ணவர்களால் போற்றப்படும் பெருமையுடையது நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆகும். இப்பிரபந்தத்தின் மீது தமக்குள்ள ஈடுபாட்டால்,

*பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்த்தண்*
*பொருநல்வருங் குருகேசன் விட்டு சித்தன்*
*றுய்யகுல சேகரணம் பாண நாதன்*
*றொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி*
*வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து*
*மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்து பாடுஞ்*
*செய்யதமிழ் மாலைகணாந் தெளிய வோதித்*
*தெளியாத மறைநிலங்க டெளிகின் றோமே*

(தேசி.பிர. 40)

என்று அதிகார சங்கிரகத்தில் குறிப்பிடுகிறார். இந்த ஈடுபாட்டினாலேயே திவ்யப் பிரபந்தப் பெருமைகளை பிரபந்த சாரமாக, தேசிகன் இயற்றியுள்ளார். இந்நூலில் தம்மைத் தமிழ் மறையோன் என்று ஆசிரியர் குறிப்பிட்டுக் கொள்கிறார். இந்நூல் பன்னிரு ஆழ்வார் அவர்தம் பெருமைகளை, அவதரித்த தலம், நாள், பாசுர எண்ணிக்கை, பிரபந்தத்தின் பொருள் ஆகியவற்றைச் சுருக்கமாக எடுத்தியம்புகிறது. இரு தனியன்கள் அமைந்துள்ள இந்நூல் பதினெட்டுப் பாசுரங்களை உடையது.

### 2.2.1.19. ஆகார நியமம்

உண்ணும் உணவு கூட ஒருவனைக் கேடனாக்கிவிடும். சத்துவ, இராஜச, தாமச குணங்கள் அவரவர் உண்ணும் உணவினாலேயே நேர்கின்றன என்பது முன்னோர் கொள்கை. இதனை ச.கந்தசாமி முதலியார்,

> *உயர்ந்த நூல்களில் கூறப்பட்டுள்ள உணவு நியமத்தைப் படித்துத் தெரிந்து கொண்டு கடைப்பிடிப்பதுதான் முதல்வேலை. தமோ குணமும் இரசோ குணமும் தருகிற உணவுகளை உண்பவர்க்கு உடல் தமோ குணமும் இரசோ குணமும் உடையதாக இருக்கும். மனமும் அப்படித்தான் இருக்கும்.* [17]

என்ற செய்தியால் உணரலாம். உண்ணும் உணவுக்கும் மனித மனத்துக்கும் தொடர்புண்டு. மனமே இறைவனை அடையத் துணை நிற்கும் சாதனமாகும். என்வே உண்ணும் முறைகளில் ஓர் ஒழுங்கு தேவை. இவ்வொழுங்கை ஏற்படுத்தி உணவு முறைபற்றி விளங்கக் கூறும் நூலாக ஆகார நியமம் விளங்குகிறது. பகவத் கீதையில் நல்லுணவு, தீய உணவு என்ற பகுப்பு காணப்படுகிறது.[18] அதன் அடிப்படையிலேயே ஆகார நியமம் எழுந்ததாகத் தேசிகன் குறிப்பிடுகின்றார். இந்நூல் விலக்க வேண்டியன, உண்ணத் தகுவன என்று வகைப்படுத்தி இருபத்தொரு பாசுரங்களில் அமையும். இதற்குத் தமிழில் தனியன் ஒன்றும் அமைந்துள்ளது.

### 2.3. இயல் முடிபுரை

2.3.1 ஸ்ரீ வேதாந்த தேசிகனின் வாழ்வும் வாக்கும் என்னும் இவ்வியல் தேசிகனின் வாழ்க்கையில் நிகழ்ந்த அருஞ்செயல்களையும் அவர்தம் படைப்புகளையும் விளக்குகின்றது.

2.3.2 குலச்சிறப்பு, தலச்சிறப்பு, அவதாரச் சிறப்பு என்று தேசிகனின் பிறப்பு கொண்டாடப்படுகிறது. அவருடைய அருஞ்செயல்களும் வாதுப் போர்களும் வைஷ்ணவக் கொள்கையில் அவர் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துவன. சமயங்காத்தலில் முழுமையான ஈடுபாட்டுடன் நின்று, வைஷ்ணவ நெறி தழைக்கவும் திவ்யப்பிரபந்தம் சிறந்தோங்கவும் வழி செய்தார்.

2.3.3 தேசிகனின் தமிழ்ப் பிரபந்தங்களில் வேதாந்தம், அனுஷ்டானம், துதி, பிரபந்தச் சிறப்பு ஆகியன காணப்படுகின்றன. இவை வைஷ்ணவ வேதாந்தத்தின் அரும் பொருளையெல்லாம் திரட்டித் தெற்றென உணர்த்துவன. எனவே தாம் இவற்றுட் சில, தனியன் பலவற்றால் போற்றப்பட்டுள்ளன. இப்பிரபந்தங்கள் தேசிகனின் யாப்புப்புலமை அணியியல் நுட்பம், அகப்பொருள் ஆளுமை, தத்துவ, சாத்திரச் செழுமை ஆகியவற்றை உணர்த்துவன.

**சான்றெண் விளக்கம்**

1. A. Satya Vrata Singh, Vedanta Desika - A Study, p.1
2. இராம தேசிகாசார்யார், (பிள்ளையந்தாதி - உரை), ஸ்ரீதேசிகப்பிரபந்தம். ப. 455
3. குருபரம்பராப்ரபாவம், ப. 104
4. ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன், 'ஆசியுரை' தேசிகர் நூற்றந்தாதி
5. மேற்கோள், A.Satya Vrata Singh, Vedanta Desika - A Study, p.3
6. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினான்காம் நூற்றாண்டு - பக். 266 & 276
7. குருபரம்பரா ப்ரபாவம், ப. 108
8. மேலது, ப. 143
9. மேலது, பக். 121, 125, 129, 130, 137
10. மேலது, பக். 131, 132, 123, 163
11. மேலது, பக். 148 - 155
12. மேலது, ப. 162
13. கலைக்களஞ்சியம் 9.521
14. அண்ணங்கராசார்யஸ்வாமி, பூர்வாசார்ய வைபவம் ப. 75
15. மு. இராமசாமி, ஆர்விளக்கு அம்மணியம்மாள் (இரண்டாம் பாகம்) ப. 32
16. மேலது, ப. 44
17. ச. கந்தசாமி முதலியார், உணவு மருத்துவம் ப. 113
18. பகவத் கீதை, 17. 8 - 10

## ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள்

3.0 சரணாகதி நெறியின் சிறப்பும் இக்கொள்கை வைஷ்ணவத் தத்துவமரபில் பயில்கின்ற இடமும் இம்மரபில் வேதாந்த தேசிகனின் பங்கும் முன்னுரைக்கப்பெற்றுள்ளன. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள் என்னும் இவ்வியல் சீவான்மாவிற்குச் சரணாகதி பெறுதலில் உள்ள நெறிமுறைகள் பற்றி ஆசிரியர் கூறுவன ஆய்வுப் பொருண்மையவாய் அமைகின்றன.

சரணாகதி என்பது ஆழ்வார்களாலும் ஆழ்வார் வழிக்குரவர் பலராலும் வலியுறுத்திப் பேசப்பட்டு வந்துள்ளது. சாத்திரஞானத் தேர்ச்சி மிகுந்தவர்க்கே கைகூடவல்ல கர்மம் முதலான யோகங்கள், சாதாரண பாமர மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்குத் துணையாகா. அவர்களின் உய்வைக் கருதியே சரணாகதி இறைவனால் அருளப்பெற்றது. மூலமந்திரமும், துவயமும், சரமசுலோகமும் இக்கருத்தை விதந்து பேசுகின்றன. எல்லோரும் வீட்டின்பமாகிய பரமபதம் அடைய வேண்டும் என்ற நோக்கில் தன் அருள்மொழியாலும் திருக்கரத்தாலும் இறைவன் தன் திருவடிகளை உபாயமாகக் காட்டி நிற்கிறான்.

இறைவனின் அருளுள்ளத்தை ஓர்ந்துணர்ந்த தேசிகன், அது குறித்துத் தம் நூல் பலவற்றுள்ளும் வியந்து பேசுகிறார். அவர் ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்தில் பலப்பட இறைவன் திருவருள் புரிந்தருளிய செய்தியை உலகோர்க்கு அறிவுறுத்திச் 'சேரவாரும் செகத்தீரே' என்பது போல் அழைப்பு விடுகிறார். ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி தத்துவம் பொதுள அமைந்துள்ளது. இவ்வகையில், ஸ்ரீ தேசிகப் பிரபந்த பாடற் பொருண்மையில் சரணாகதி பெறும் இடம், சரணாகதியின் தன்மை, அங்கங்கள், பிரபன்னர், சரண்புகு நிலைகள், வகைகள் ஆகியன விளக்கப்படுகின்றன.

### 3.1. ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி பெறுமிடம்

வேதாந்த தேசிகன் தமிழில் படைத்தனவாகச் சுட்டப்படுவன இருபத்து நான்கு பிரபந்தங்கள் ஆகும். இவற்றுள் பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் என்னும் ஐந்து பிரபந்தங்கள் கிடைக்கப் பெறவில்லை. எஞ்சிய பத்தொன்பதும் ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் என்று சிறப்புடன் சுட்டப்படுகின்றன. இவை நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்பதோடு ஒத்துப் *'பிரபந்தம்'* என்று

சுட்டப் பெறுகின்ற தன்மையைக் கேசவய்யங்கார் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

> *திருமாலடியார்களால் திரட்டித் தொகுக்கப் பெற்றுத் திருமுறையாய்த் திகழும் வேதாந்த தேசிகர் அருளிச் செய்த தமிழ்ப்பாடற் பிரபந்தங்களும் மணிப்பவளப் பிரபந்தப் பாடல்களும் தேசிகப் பிரபந்தம் எனப்பெறும். இப்பிரபந்தம் ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்பிரபந்தத்தோடு சேர்த்து ஓதப்பெறும் சீர்மை உடையதால் தேசிகப்பிரபந்தம் என்னும் திருநாமம் பெற்றுள்ளது. திருமால் தானே அருள்மிகுந்த தனது சிறந்த வடிவமாகிய தேசிக வடிவத்தில் இவரது மனத்திலும் வாக்கிலும் கோயில்கொண்டு இவர் வாயிலாகப் பாடியருளியதால் இது தேசிகப் பிரபந்தம் என்று நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தோடொத்த சிறப்பு மறையாய்த் திகழா நின்றது.* [1]

தேசிகப் பிரபந்தத்தில் அமைந்த பாடல் தொகையினைக் கீழ்காணும் வரிசையில் காணலாம்.

| | |
|---|---|
| 1. அமிருத ரஞ்சனி | 39 |
| 2. அதிகார சங்கிரகம் | 56 |
| 3. அமிருதாசுவாதினி | 37 |
| 4. பரமபதசோபானம் | 21 |
| 5. பரமதபங்கம் | 54 |
| 6. மெய்விரதமான்மியம் | 29 |
| 7. அடைக்கலப்பத்து | 11 |
| 8. அருத்தபஞ்சகம் | 11 |
| 9. வைணவ தினசரி | 10 |
| 10. திருச்சின்னமாலை | 11 |
| 11. பன்னிரு நாமம் | 13 |
| 12. திருமந்திரச் சுருக்கு | 10 |
| 13. துவயச் சுருக்கு | 12 |
| 14. சரமசுலோகச் சுருக்கு | 11 |
| 15. கீதார்த்த சங்கிரகம் | 21 |
| 16. மும்மணிக்கோவை | 10* |
| 17. நவமணி மாலை | 10 |
| 18. பிரபந்த சாரம் | 18 |
| 19. ஆகார நியமம் | 21 |

* முப்பது பாடல்களில் இருபது கிடைக்கப் பெறவில்லை.

மேற்கூறிய 405 பாடல்களுள் ஆறு பாடல்கள் இருமுறை பயின்று வருகின்றன. அமிருதரஞ்சனியின் 18-ஆம் பாடலான 'ஒன்றேபுகல்' என்ற பாடல் மெய்விரத மான்மியத்தின் 4-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அமிருதரஞ்சனியின் 30-ஆம் பாடலான 'வினைத்திரள் மாற்றிய' என்ற பாடல் சிற்சில மாற்றங்களுடன், அதே அமிருதரஞ்சனியின் 38-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அமிருதரஞ்சனியின் 34-ஆம் பாடலான *'சேர்க்கும் திருமகள்'* என்ற பாடல், துவயச் சுருக்கின் 12-ஆம் பாடலாக அமைகின்றது.

அதிகார சங்கிரகத்தின் 44-ஆம் பாடலான *'உத்தமவமர்த்தலம்'* என்ற பாடல் மெய்விரத மான்மியத்தின் 9-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அதிகார சங்கிரகத்தின் *'ஒண்டொடியாள் திருமகளும்'* என்ற 46-ஆம் பாடல் அமிருதாசுவாதினியின் 10-ஆம் பாடலாக விளங்குகின்றது.

மெய்விரத மான்மியத்தின் 17-ஆம் பாடலான *'அத்திகிரி யருளாளப் பெருமாள்'* என்ற பாடல் திருச்சின்னமாலையின் 10-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இந்த ஆறு பாடல்கள் போகத் தேசிகப் பிரபந்தத்தின்கண் ஆய்வுப் பொருண்மையவாய் அமைந்த பாடல்களின் எண்ணிக்கை 399 ஆகும்.

இவற்றுள் அடைக்கலப்பத்து, திருமந்திரச்சுருக்கு, துவயச் சுருக்கு, சரமசுலோகச் சுருக்கு ஆகிய நான்கின் பாடல்கள் சரணாகதியின் பெருமையையும் சரணடைவோர்க்கு இறைவன் அருள்புரியும் தன்மையையும் ஒருசேர விளக்குவன. பரமபதசோபானம், சரணடைந்தவனுக்கு இறைவன் பரமபதப்பேறு நல்குதலைச் சுட்டுகின்றது.

பரமத பங்கத்தில் வைணவத்தின் சிறப்பைச் சுட்டும் நிலையில், சரணாகதியின் சிறப்பும் அதற்கு உபாயமாயும் பலனாயும் நிற்கும் இறைவன் அருளும் பிற மதத்தினர்பால் உள்ள குறைகளும் சுட்டப்பெறுகின்றன.

இவை தவிரப் பிற நூல்களுள் மூலமந்திரம், துவயம், சரமசுலோகம் பற்றிய விளக்கங்களில் சரணாகதி நிஷ்டையின் பெருமை சுட்டியுரைக்கப் பெறுகிறது. இறைவனுடைய கருணையைச் சுட்டும் பல பாடல்களும் அவன் உபாயமும் பலனுமாய் நிற்றலையே வியந்து பேசும். மேலும் திருமகள் புருஷகாரப் பிரபத்தியாய் நிற்பதும் சுட்டப்படும். அதிகாரச் சங்கிரகம், அமிருதாசுவாதினி ஆகியவற்றின் பல பாடல்கள் சரணாகதியின் கூறுகள் பலவற்றை உட்கொண்டுள்ளன.

ஆழ்வார்கள், ஆசாரியர்களின் கருணையை எண்ணித் துதிக்கும் நிலையிலும் சீவர்க்கு அவர்கள் சரணாகதியைத் தெளிவித்த தன்மையையே வேதாந்த தேசிகன் சுட்டுகின்றார். முன்னாசிரியர் அருளிய வழியினையே தாமும் உரைப்பதாயும் சுட்டுகின்றார். எஞ்சிய பாடல்களில் சரணடைவோன் பின்பற்றவேண்டிய வைணவஞ்சார் ஒழுகலாறுகள் உரைக்கப்பெறுகின்றன.

பொதுபடச் சுட்டின், தேசிகப் பிரபந்தப் பாடல்களுள் சரணாகதியின் எளிமை, ஆசாரியன் உதவி, ஒரு முறையே செய்தல், சரணாகதி அங்கங்கள், வகைகள், சரணடைந்தபின் சரண் புகுந்தவர் நிலை, சரணடைவோர் பண்புகள், பெருமை, இறைவனுடைய கருணை, இறைவன் உபாயமும் பலனுமாயிருத்தல், புருஷகாரப் பிரபத்தி, அடைக்கலம் நல்குதல், அவம் அறுத்தல், பற்றறுத்தல், வீடுநல்குதல் ஆகிய பல கூறுகளை உள்ளடக்கியே 'சரணாகதி' எனும் பொருண்மை அமைந்துள்ளது. வீடு நல்குதல் பக்தி நெறிக்கும் உரியது எனினும் மோட்சோபாயமாகச் சரணாகதிநெறி பற்றுவாரையே வேதாந்த தேசிகன் விதந்து கூறும் தன்மையால், இங்கு சரணாகதியுடன் இணைத்துக் காணப்படுகிறது.

*'நம்மிராமாநுசனைப் போலே தர்சந ப்ரவர்த்தகராகக் கடவீர்'* [2] என்று வேதாந்த தேசிகன், காஞ்சிநகரப் பேரருளாளனின் அருளுரையால் சுட்டப் பெற்றார் என்பது நினைக்கத்தக்கது. இவ்வகையில் எம்பெருமானார் இராமானுஜரின் விசிஷ்ட்டாத்துவைதத்தை வெளிப்படுத்தியதோடு பக்தி முதலான யோகங்களேயன்றிச், *'சரணாகதியெனும் யோகமும் முதன்மையுடையது'* என்று பல பாடல்களில் வெளிப்படுத்தினார். எனவேதான் கலைக்களஞ்சியமும் இவரைச் சுட்டிக் கூறுகையில்,

> *'இவர்தாம் சரணாகதியென்பதைத் தனிப்பட்ட நேரான மோட்சோபாயமாக நிர்த்தாரணம் செய்தவர்'* [3]

என்று குறிப்பிட்டுரைக்கிறது.

வேதாந்த தேசிகனுக்கு முன்னோடியாகச் சரணாகதித் தத்துவத்தை விளங்க உரைத்தவர் எவருமிலர். இவர் முன்னாசாரியர்களும் ஆழ்வார்களும் குறிப்பில் சுட்டிய தத்துவத்தை விளங்கவுரைத்துள்ளார். இறைவனைச் சரணடைந்தவன் பிரம்மசமஸ்தன் எனப்படுவான்; அவனே அமிருதத்துவ நிலையை அடைவான்; எல்லாவிதத்தாலும் சீவன் தன்னை எம்பெருமானிடம் சரண்புகுவிக்க வேண்டும். துவயமும் பகவத் கீதையின்

சரமசுலோகமும் இச்சரணாகதியையே வற்புறுத்திக் கூறுகின்றன. ஆழ்வார்கள் பலரும் சரண்புகுதலைத் தம் பாடலூடே புலப்படுத்தி உரைக்கின்றனர். ஸ்ரீ இராமானுசர் விசிஷ்ட்டாத்துவைதத்தை நெறிப்பட விளக்கி அந்நெறியிலேயே சரணாகதியையும் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ மத் அழகிய சிங்கர் சுவாமிகள் (44ஆவது பட்டம்),

> *'கீதையில் சரமசுலோகமானது பக்தியோகத்திற்கு அங்கமான சரணாகதியை விதிக்கிறது' என்று எம்பெருமானார் கீதாபாஷ்யத்தில் அருளிச் செய்துள்ளார். மற்ற சாஸ்திரங்களையும் சரணாகதி கத்யத்தையும் கொண்டு 'மோக்ஷ சாதகமான ஸ்வதந்த்ர ப்ரபத்தியையும் இந்த சரமசுலோகம் விதிக்கிறது' என்பது எம்பெருமானார் திருவுள்ளம்; என்று ஸ்ரீமத்ரகஸ்யத்ரயசாரத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் தெளிவாகக் கூறியுள்ளதை யாவரும் அறியலாம்.*[4]

என்று கூறுவதன்மூலம் முன்னாசிரியர் விதித்த வழிகளைத் தெளிந்து உரைத்தவர் வேதாந்த தேசிகனே என்பதைத் தெளிவுற உணரலாம். இத்தகைய பெருமையை உணர்ந்தே தேசிகர் நூற்றந்தாதியும்

*உற்றுநின் சேவடியை உய்வதுஓர் காரணத்தால்*
*பற்றொன்றும் இன்றிப் பவக்கடலின் - தொத்தறுப்பார்*
*வேதமுடித் தேசிகனே வேத விழுப்பொருளாம்*
*மாதவனை நண்ணுவரே மன்* (தேசி. நூற். 40)

என்ற பாடலில் திருமால் அடியிணை புகுதலில் வேதாந்த தேசிகன் காட்டிய ஈடுபாட்டைக் குறிக்கின்றது.

இவற்றையெல்லாம் நோக்குகையில் வழிவழியாகச் சுட்டப்பெற்ற சரணாகதி பற்றிய கருத்துக்களை முறைப்படுத்தியும் வகைப்படுத்தியும் தந்தவர் வேதாந்த தேசிகன் என்பதும், அக்கருத்துக்களை வடமொழி, மணிப்பிரவாள நூல்களில் சுட்டியுரைக்கும் தன்மையிலேயே தம் தமிழ்ப் பிரபந்தங்களிலும் வெளிப்படுத்தி உள்ளார் என்பது புலனாகும்.

வைஷ்ணவ சமயத்திற்கு ஏற்றம் தந்த வேதாந்த தேசிகன் இறைவனின் அன்பைப் பெறுவதையே பிறவிப்பயன் என்றும் அவ்வன்பிற்கு இறைவனைச் சரணடைதலே வழி என்றும் பலப்படத் தம் பிரபந்தங்களில் கூறியுள்ளார். அவர் சரணாகதியினை வலியுறுத்தியதோடு தாமும்

அத்தத்துவத்திற்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஆவார். சரணாகதித் தத்துவம் இவர்தம் பிரபந்தங்களாலேயே நிலைபெற்றுள்ளது. இத்தத்துவத்தை வேதாந்த தேசிகன் புலப்படுத்துமாற்றை அவர்தம் பிரபந்தங்களின் வழிக் காணலாம்.

### 3.2. சரணாகதியின் தன்மை

முக்திப் பேற்றினுக்குரிய வழிகளாகப் பக்தியோகமும் பிரபத்தி நெறியும் சுட்டப்பெறுகின்றன. இவ்விரண்டனுள் பக்தியோகத்திற்குக் கர்மம், ஞானம் முதலான படிநிலைகள் காணப் பெறுகின்றன. சாஸ்திர ஞானத் தேர்ச்சி, கர்மங்களில் வழுவாமை, சநாதன தர்மங்களில் வழுவாமை, வினைப் பயன்களைத் துய்த்தல் முதலியனவும் பக்தியோகவழியில் இறைவனை அடைபவனுக்கு உரிய தன்மைகளாக அமைகின்றன. இப்பக்தியோகத்திற்கு மறுதலையாகவே சரணாகதி சுட்டப்பெறுகிறது. கேசவய்யங்கார்,

> *'நியாசமே பிரபத்தி, சரணாகதி, அடைக்கலம், பரம்துடைத்தல், பரநியாஸம், மறைபுகல், கையடை, இல்லடை, தஞ்சம், அஞ்சலி என்று கூறப்படும்'* [5] என்று குறிக்கிறார்.

இவ்வாறு பலபெயர்களில் சுட்டப்படும் சரணாகதிக்கு அடிப்படை இறைவன்பால் கொள்ளும் அன்பாகும். இத்தகைய அன்பின் செழுமை சரணாகதியெனும் பிரபத்தியாமாற்றைப் பி.ஆர். நரசிம்மன் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

> *இறைவன் மீது கொள்ளும் அன்பு பரபத்தி எனில் இவ்வன்பு படிப்படியாக வளர்ந்து இறைவனிடமே தன் இருதயத்தை வைத்து வேறெதனையும் பொருட்படுத்தாத நிலையான பரமபத்தியில் கொண்டு செலுத்தும். இது இறுதியில் கிருஷ்ணனான இறைவன் அனைத்துக் கடமைகளையும் விட்டுவிட்டு என்னையே புகலிடமாக கொள். நான் அனைத்துத் தளைகளினின்றும் உன்னை விடுவிப்பேன் என்ற கீதையின் இறுதிப் பகுதியில் கூறும் பிரபத்தி நெறியில் சேர்க்கும். பிரபத்தி நெறியே அனைத்திலும் உயர்ந்தநெறி என்பதே வைணவத்தின் கருத்து.* [6]

பக்தி நெறியிலும் இறைவன்பால் அன்பு ஏற்படும் எனினும் பக்தியில் சுட்டப்படும் எம, நியம முதலான அட்டாங்கங்களைக் கருதி இயற்றிய பின்னரே சீவருய்தல் நிகழும். எனவே, சரணாகதியைப் பின்பற்றி நிற்றல் சால உகந்தது என வேதாந்த தேசிகன் தம் பிரபந்தங்களில் குறிப்பிட்டுரைக்கிறார்.

### 3.2.1. சரணாகதி - விளக்கம்

சரணாகதி என்பது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தின் மையக் கருத்தாகும். துக்கமயமான இவ்வுலக வாழ்வில் ஈடேற்றம் அடைதலைக் கருதியே சாஸ்திரங்கள் எழுந்தன. சீவர் தமக்கு இறைவன் அளித்த ஸ்வதந்திரத் தன்மையைத் தவறாக கைக்கொண்டமையே இத்துன்பியலுக்குக் காரணம். இதனால் இருவினையும் தொலையாவாயின. இவற்றினின்று விடுபட இறைவனை வேண்டியடைதலே வழி. பக்தி, பிரபத்தி என்ற இரண்டும் இவ்வழியின் வகைகளாகும். பக்திநெறி மக்கள் பலரால் கைக்கொள்ள இயலாது. அப்படிப்பட்டவர்கள் இறைவனையே தம்மைக் கடைத்தேற்றுவிக்கும் உபாயமாகக் கொள்கின்றனர். இறைவனை அடைந்து உலக வாழ்வின் இடர்களைந்து அவன் திருவடிக் கீழ் இருத்தலாகிய பரிபூரண பிரம்மானுபவத்தை எளிதில் பெறுதலே இவ்வுபாயமாகும். இதுவே சரணாகதி எனப்படும். இச்சரணாகதியை இராகவன்,

> *ஆத்மாத்மீய ஸ்வரூபத்தையும் அவற்றைக் காப்பாற்றும் பொறுப்பையும் காப்பாற்றுவதால் வரும் பயனையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பணம் செய்வது, இதுவே நிக்ஷேபம், நியாசம், தியாகம், சரணாகதி, பிரபத்தி என்று பல சொற்கள் மூலம் சொல்லப்படுகிறது.* [7]

என்று விளக்குகிறார். கேசவய்யங்காரும்,

> *இம்மாதவ வேள்விக்கு இறைப்பொருளே உத்தேச்யம் ஆகும். அதாவது இறைப்பொருளின் பொருட்டே ஆகும் என்றபடி இறைப்பொருளுக்கு உயிர்ப்பொருளை ஆவியாக இடும் ஞானப்பெரு வேள்வியே உபாயம் என்னும் மாதவமாகும். அம்மாதவமே சரணாகதி எனப்படும்.* [8]

என்று குறிப்பதன் மூலம் சீவனுக்கும் இறைவனுக்கும் நேர்கின்ற இடைவெளியைச் சரணாகதியே எளிதில் நிரப்புகிறது என்பது புலனாகும். எனவேதான் வேதாந்த தேசிகனும்,

*ஓதும் இரண்டை யிசைத்தரு ளாலுத வும்திருமால்*
*பாதம் இரண்டும் சரணெனப் பற்றிநம் பங்கயத்தாள்*
*நாதனை நண்ணி நலந்திகழ் நாட்டில் அடிமையெல்லாம்*
*கோதில் உணர்த்தி உடன்கொள்ளு மாறு குறித்தனமே*

(தேசி. பிர. 74)

என்ற பாடலில் சரணாகதியின் தன்மையையும் இறைக்கருணையையும் காட்டுகிறார்.

இச்சரணாகதியை முக்திக்குரிய வழியாகக் கொள்ள வேண்டும். இழிவான பலன்களுக்குக் கைக்கொள்ளக் கூடாது. இதனைக் கீழ்க்காணும் பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

*பொன்னை இகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தால்*
*மன்ன ரெடுப்பதப் பொன்னல தேமன் னுலகனைத்தும்*
*தன்னை யடைந்திடத் தானருள் செய்யும் தனிச்சிலையோன்*
*பொன்னடி நாமடைந் தோம்புறம் ஆர்என்கொல் செய்திடினே*

(தேசி. பிர. 112)

### 3.2.2. ஆசாரியர் வழியில் சரணடைதல்

இறையனுபவத்தைப் பெறச் சரணாகதி போதுமானது. சீவர்கள் பக்திநெறியைச் செய்யத் தகுதியற்றவராய் இருக்கையில் சரணாகதியைப் பின்பற்றுகின்றனர். பக்தி செய்வார்க்கும் சரணாகதி இறைவனின் திருவுள்ளத்தால் நேரடியாகப் பலன் தருவதாலும் இறைவனே உபாயமாயும் பலனாயும் நிற்றலாலும் இந்நெறியே ஆசாரியர் பலருக்கும் உகப்பாயிற்று. சரணாகதித் தத்துவத்தின் திட்பம் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்றனுள்ளும் சுட்டப்படும். இக்கருத்தைப் பூர்வாச்சாரியார் பலரும் வழிவழியாக உரைத்துச் சீவருய்யச் செய்கின்றனர். இங்ஙனம் ஆசாரியர் உபதேசித்த செழுமையான தத்துவத்தை வேதாந்த தேசிகன்,

*உத்தி திகழும் உரைமூன்றின் மும்மூன்றும்*
*சித்த முணரத் தெளிவித்தார் - முத்திதரு*
*மூல மறையின் முடிசேர் முகில்வண்ணன்*
*சீல மறிவார் சிலர்* (தேசி. பிர. 7)

என்று குறிப்பிடுகிறார். இப்பாடலில் *'உத்தி திகழும் உரைமூன்றின் மும்மூன்று'* என்னுமடியின் பொருள், *'மூன்று ரகசியத்தின்கண் அடங்கிய ஒன்பது பொருளும்'* என்பது ஆகும். தேசிகப் பிரபந்தவுரை இப்பொருட்களை,

திருமந்திரத்தில் மூன்று அர்த்தங்கள்:

1. எம்பெருமானிடம் நம் ஸ்வரூபத்தை ஸமர்ப்பித்தல்,
2. நம்மை ரக்ஷிக்க வேண்டிய கடமையை ஸமர்ப்பித்தல்,
3. ரக்ஷித்தலின் பலனை ஸமர்ப்பித்தல் என்பன.

த்வயத்தில் மூன்று அர்த்தங்கள்:

1. உபாயம்,
2. பலன்,
3. (அவித்யையாகிய) விரோதியொழிகை என்பவை.

சரமசுலோகத்தில் மூன்று அர்த்தங்கள்:

1. சரணடைபவன் செய்யும் காரியம்,
2. சரணடைந்தவனுக்கு எம்பெருமான் செய்யும் காரியம்,
3. சரணடைந்தபின் சேதனன் இருக்கவேண்டிய முறை என்பவை. [9]

என்று குறிப்பிடுகிறது. இத்தத்துவங்களை ஆசாரியர் நன்குணர்ந்து தெளிந்து சீடனுக்குத் தெரிவிக்கின்றார். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி யாவரும் உய்தல் வேண்டும். வேதாந்த தேசிகன் இக்கருத்தைக் கீழ்க்காணும் பாடலில் வலியுறுத்துகின்றார்.

*தன்னடிக் கீழுல கேழையும் வைத்த தனித்திருமால்*
*பொன்னடிக் கேற்கின்ற புண்ணியர் கேண்மின் புலனறிவார்*
*முன்னடிப் பார்த்து முயலுத லால்அவர் சாயையெனப்*
*பின்னடி பார்த்து நடந்து பெரும்பதம் ஏறுவமே* (தேசி. பிர. 204)

### 3.2.3. சரணாகதியின் எளிமை

பக்தியோகத்திற்குக் குலப்பிரிவுகள் முதன்மையானவை. கருமம், ஞானம் முதிர்ந்து பக்தியோகத்தில் செலுத்தும். பக்தியில் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்ற மூன்றையும் கடந்த பின்னரே ஆன்ம ஈடேற்றம் இயலும். இவற்றில் ஈடுபட்டபின் வினைத்தொகுதிகள் ஒழியக் காத்திருக்கவேண்டும். உலகினை விட்டு நீங்கும் வரை மீண்டும் மீண்டும் செய்தல் வேண்டும். இத்தகைய இடர்கள் சரணாகதியில் இல்லை. எனவேதான் வேதாந்த தேசிகன்,

*கருமமென ஞானமென அதனால் கண்ட*
*உயிர்கவரும் காதலெனக் கானில் ஓங்கும்*
*அருமறையால் தருநிலையில் இந்நாள் எல்லாம்*
*அடியேனை அலையாத வண்ணம் எண்ணித்*
*தருமமுடை யார்உரைக்க யான றிந்து*
*தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித்*
*திருமகளோ டொருகாலும் பிரியா நாதன்*
*திண்கழலே சேதுவெனச் சேர்கின் றேனே*

(தேசி. பிர. 102)

என்ற பாடலில் கருமம், ஞானம், பக்தி யோகம் தவிர்ந்த சரணாகதியில் ஈடுபடுதலை வற்புறுத்துகிறார். இந்நெறி பற்றி அறிஞர்தம் கருத்துக்கள் நிரலாய்ச் சுட்டியுரைக்கப்படுகின்றன. கி. லக்ஷ்மணன்,

*பக்திமார்க்கத்தைப் படிப்படியாகத்தான் கையாளலாம். ஆனால் பிரபத்தியை எவருமே உடனடியாகவே மேற்கொள்ளலாம். இறைவனின் வல்லமையிலும் அருளிலும் பூரண நம்பிக்கை வைத்துத் தன்னை முற்றாக அவனிடம் ஒப்படைத்தலே பிரபத்தியாகும்.* [10]

என்று குறிப்பிடுகிறார். ந. சுப்புரெட்டியார்,

*பக்தி நெறியை எல்லோராலும் அனுஷ்டிக்கமுடியாது. ஆகவே உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி எல்லோராலும் மேற்கொள்ளக்கூடிய நெறியொன்றினைக் கண்டனர் மெய்விளக்கம் பெற்ற மேலோர். அதுவே பிரபத்தி நெறியாகும்.* [11] என்கிறார். வே.இரா. மாதவன்,

*எல்லோரும் எளிதாக மேற்கொள்ளத்தக்க வகையில் அமைந்திருப்பது சரணாகதி நெறியாகும். பாகவத மரபுப்படி இந்நெறியே ஆன்மா, உலக வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்குரிய செந்நெறியாகும். ஆழ்வார்கள் ஆங்காங்கே பக்தி நெறியை வலியுறுத்தினாலும் அவர்கள் மிகுதியாக வலியுறுத்துவது சரணாகதி நெறியையே.* [12]

என்று கருத்துரைக்கிறார். மு. இராமசாமியும்,

*இறைவனை அடையும் மார்க்கங்களின் வகைகளுள் பக்தி நெறியையும் பிரபத்தி நெறியையும் சிறப்பாகப் பேசும் வைணவ சமயம். இவ்விரண்டனுள்ளும் பிரபத்தி நெறியின் எளிமையையும் அனைவரும் பின்பற்றுதற்குரிய அதன் இயல்பையும் எடுத்துச்சொல்லி அதன் மேன்மையைப் புலப்படுத்துவார்கள் வைணவ ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும்.* [13]

என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்துரைகள் யாவும் சரணாகதியின் மேன்மை மற்றும் எளிமையையும் பக்தி நெறியின் அருமை மற்றும் இடர்களையும் விதந்து குறிப்பிடுகின்றன.

சரணாகதி அடைகையில் ஒருமுறை செய்தாலே போதுமானது. பக்தி நெறியில் அவ்வாறன்று. உயிர் உடலினின்று நீங்கும் வரை பக்தியோகத்தில் இடையறாது நின்றொழுக வேண்டும். ஐந்தங்கங்களுடன் கூடிய சரணாகதியை வேறொன்றும் கருதாது இறைவன் திருவடியையே கருதி மேற்கொள்ள வேண்டும். இறைவனுக்கு உவப்பான கைங்கரியங்களைச் செய்தாலே போதுமானது. சரணாகதியை ஒருமுறை செய்தலே போதுமானது என்பதை வேதாந்த தேசிகன்,

*உமதடிகள் அடைகின்றேன் என்றொருகால் உரைத்தவரை*
*அமையும்இனி என்பவர்போல் அஞ்சலெனக் கரம்வைத்தும்*
*தமதனைத்தும் அவர்தமக்கு வழங்கியும்தாம் மிகவிளங்கும்*
*அமைவுடைய அருளாளர் அடியிணையே யடைந்தேனே*

(தேசி. பிர. 243)

என்று குறிக்கிறார். மேலும் ஒருமுறைச் சரண்புகுந்த சீவரின் வருங்கால வாழ்வு பழுதற்றது என்பதை வேதாந்த தேசிகன் தற்கூற்றாகக் கூறுகின்றார்.

*திருமால் அடியிணை சேர்ந்து திகழ்ந்த வடிமைபெறத்*
*திருநா ரணன்சரண் திண்சரண் ஆகத் துணிந்தடைவோம்*
*ஒருநாள் உரைக்க உயிர்தரு மந்திரம் ஓதியநாம்*
*வருநாள் பழுதற்று வாழும் வையகத்தின் மன்னுவமே* (தேசி. பிர. 35)

தன்னுடைய பாபங்களுக்கு அஞ்சிச் சீவர் சரணாகதியை மேற்கொண்டபின் பாபங்கள் இறைவனுடைய கருணையால் அகன்று விடுகின்றன.

சீவர் தம் அறியாமையால் *'பாபம் செய்திடுவர்'* என்றஞ்சினால் அப்போது மட்டுமே மறுமுறை சரணாகதி செய்யலாம். இது சரணடைந்த பிறகு அறிந்தோ அறியாமலோ பாபம் செய்வதைப் போக்கவல்லது. இது பிராயச்சித்தச் சரணாகதி எனப்படுகிறது. [14] ஆக எவ்வகையிலும் சீவருக்கு பாபம் சேர்வதில்லை. இந்த ஒரு நிலையில் மட்டுமே மறுமுறை சரணாகதி அனுமதிக்கப்படுகிறது. இதனால் ஒரு நோக்கத்திற்காக ஒரு முறை சரணடைதலே போதும் என்பதும் அந்நோக்கமும் முக்திக்குரிய நாட்டமாய் இருப்பின் மிகச் சிறப்பு என்பதும் உணரலாம்.

எளிய முறையில் ஆசாரியன் அருளுரை கேட்டு அதன் வழியில் உபாயமும் பலனுமாய் நிற்கும் இறைவனை எண்ணிச் சரண்புகல் வேண்டும். இரகசியங்கள் மூன்றனுள்ளும் சுட்டப்பெறும் இந்நெறியே மிகவும் எளிமையானது என்பதனாலும் யாவரும் இந்நெறியை மேற்கொள்ளலாம் என்பதனாலும் வேதாந்த தேசிகன் பரமதபங்கத்தில் இதன் சிறப்பைச் சுட்டிக் கூறுகிறார். அப்பாடல் வருமாறு,

*எல்லார்க்கும் எளிதான ஏற்றத் தாலும்*
*இனியுரைக்கை மிகையான இரக்கத் தாலும்*
*சொல்லார்க்கும் அளவாலும் அமைத லாலும்*
*துணிவரிதாய்த் துணைதுறக்கும் சுகரத் தாலும்*
*கல்லார்க்கும் கற்றார்சொல் கவர்த லாலும்*
*கண்ணனுரை முடிசூடி முடித்த லாலும்*
*நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம்*
*நாரணற்கே அடைக்கலமாய் நணுகு வீரே*
(தேசி. பிர. 200)

மேற்காணும் பாடல் பிறநெறிகளில் உழன்று ஆன்ம ஈடேற்றம் அடைய முடியாதவர்களும் சரணாகதியில் ஈடுபட்டு உய்திடலாம் எனும் கருத்தில் இங்ஙனம் பரமத பங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் கருமம் முதலானவை அடங்கிய பக்தி நெறியில் ஆன்ம சாக்ஷாத்காரம் பெறவும் ஒரு வழியில் சரணாகதி இன்றியமையாதது. இச்சரணாகதி பக்தி நெறியின் எல்லையில் தன்னை ஒப்படைப்பதாய் அமையும். சரணாகதியின் இத்தகு சிறப்பை வேதாந்த தேசிகன்,

*வேதத் திரளின் விதியுணர்ந் தோர்கள் விரித்துரைத்த*
*காதற் கதியையும் ஞானத்தை யுங்கரு மங்களையும்*
*சாதிக்க வல்ல சரணா கதிதனி நின்றநிலை.....* (தேசி. பிர. 113)

என்று குறிப்பிடுகிறார். அரிதினும் அரிதான பக்திநெறிக்கும் சரணாகதி தேவை எனும்போது எளிய சரணாகதியைப் பின்பற்றி யாவரும் உய்யலாம் என்பது இதன் உட்பொருளாக அமைகிறது. செ.வைத்தியலிங்கன் கீழ்க்கண்டவாறு கூறுவதும் உளங்கொளத் தக்கது.

*கடவுளையே தம் வாழ் முதலாகக் கொண்டு கடவுளை அடைதற்குரிய நெறிகளாக ஒவ்வொரு சமயத்திற்கேற்பச் சிலவற்றை அமைத்துக் கொண்டனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவர்கள் கூறினரெனின் பக்திநெறி, கர்மநெறி, ஞானநெறி, பிரபத்தி நெறி என வைணவர்கள் வகுத்துக்கொண்டுள்ளனர். எல்லாவற்றையுமே பக்திநெறி ஞானநெறி என இரண்டில் அடக்கிக் கூறுவாறும் உண்டு. அனைத்து நெறிகளிலும் அடைக்கலநெறி அல்லது சரணாகதி நெறி (பிரபத்தி நெறி) என்பது ஊடுருவி நிற்றலையுணரலாம்.* [15]

மனிதர்களால் செய்யப்படும் சரணாகதி என்பது பகவானின் கருணையை ஆதாரமாகக் கொண்டது. அக்கருணை இன்றேல் சரணாகதி என்பது பயனில்லாமல் போகும். ஆதாரமான கருணையைப் பெறுதலே சரணாகதியின் வெற்றியாகும். பக்திநெறியில், இறைவனுடைய கருணையைப் பெறுதல் எளிதன்று. எளிதான இக்கருணைப் பேற்றினுக்குச் சரணாகதியே நற்கதி என்பது வேதாந்த தேசிகனின் திடமான சித்தாந்தமாகும்.

### 3.3. சரணாகதி அங்கங்கள்

சரணாகதியைச் செய்யும் நிலையில் கைக்கொள்ளும் முறையின் படிநிலைகள் *'சரணாகதிக்குரிய அங்கங்கள்'* எனப்படுகின்றன. உலகியலில் இடருற்று வருந்தும் சேதனன் பரமபதம் அடைவதையே தன் ஆன்ம ஈடேற்றமாகக் கொள்கிறான். எம்பெருமானின் திவ்ய குணங்களை உணர்ந்து, அவனடி பணியாது வீணே காலம் கழித்தமைக்கும் உலகியலின் சிறுமைக்கும் மனம்வருந்தி நிற்கிறான். இவ்வுலகியல் இன்னல் தீரவும் பரமபதம் சேரவும் சரணாகதியை உபாயமாகப் பற்றுகிறான். சரணாகதியைப் பற்றும் நிலையில் சில வழிமுறைகளைத் தாண்டிய பிறகே சேதனரது சரணாகதி முழுமை பெறுகிறது. அவ்வழிமுறைகள் வருமாறு;

1. அனுகூலிய சங்கல்பம்
2. பிராதிகூலிய வர்சனம்
3. கார்ப்பண்யம்
4. மகா விசுவாசம்
5. கோப்த்ருத்வ வரணம்
6. ஆன்ம நிக்ஷேபம்

சரணாகதியின் அங்கங்கள் பற்றி வாழ்வியற்களஞ்சியம்,

> *சரணாகதி ஆறு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அனுகூலிய சங்கல்பம் (Anukulya Sankalpa) பிராதிகூலிய வர்சனம் (Prati kulia varjana) மகா விசுவாசம் (Maha Visvasa) கார்ப்பண்யம் (Karpanya) கோப்த்ருத்வ வரணம் (Gopdrutva Varana) ஆன்ம நிக்ஷேபம் (Anma nikshepa). முதற்கூறியது இறைவன் ஆணைப்படி நடக்கச் சத்துவ குணமுடைய மனம் தேவை. அதனால் அகங்காரம் அழிந்துவிடுகிறது. இரண்டாம் அங்கம் இறைவனுக்குப் பிடிக்காதவற்றை ஒதுக்கிவிடுதல். மூன்றாம் மகாவிசுவாசம் இறைவன் அருளில் முழு நம்பிக்கை வைத்தலாகும். நான்காம் அங்கம் கார்ப்பண்ணியம் என்பது கர்ம மார்க்கத்தையோ, ஞான மார்க்கத்தையோ, பக்தி மார்க்கத்தையோ பின்பற்றாமலிருப்பது. இது பணிவு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. ஐந்தாவது கோப்த்ருத்வ வரணம் என்பது இறைவனின் தயையை எதிர் பார்த்திருத்தல். கடைசியாக ஆத்ம நிட்சேபம் என்பது தன்னை ஒப்படைத்தல்.*[16]

என்று குறிப்பது எண்ணத்தக்கது. இனி, இவ்வங்கங்களின் முறைவைப்பை, வேதாந்த தேசிகன்,

> *இவ்வித்யைக்குப் பரிகரமாவது - அனுகூலிய சங்கற்பமும், பிராதி கூலியவர்சனமும் கார்ப்பண்யமும் மகாவிசுவாசமும் கோப்த்ருத்வ வரணமும்* [17]

என்று ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில் சுட்டியுரைக்கிறார்.

தேசிகப் பிரபந்தத்தில் அமிருதாசுவாதினியிலும் அடைக்கலப்பத்திலும் சரணாகதிக்குரிய அங்கங்களைக் குறிக்கும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

*நின்னருளாங் கதியன்றி மற்றொன்று இல்லேன்*
*நெடுங்காலம் பிழைசெய்த நிலைக ழிந்தேன்*
*உன்னருளுக்கு இனிதான நிலையு கந்தேன்*
*உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்*
*மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து*
*வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை*
*இன்னருளால் இனியெனக்கோர் பரமேற் றாமல்*
*எந்திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே*
(தேசி. பிர. 126)

என்னும் பாடலில் சரணாகதி அங்கங்கள் சுட்டப்பெற்றுள்ளன.

அனுகூலிய சங்கல்பமாவது இறைவனுக்கு எப்போதும் அனுகூலனாய் இருக்கும் நிலையாகும். அனுகூலனாய் இருக்கக் கருதுதலாவது, சமய நெறிதனில் பிறழாது இறைவன் உவப்பிற்கு மாறாது நிற்றலாகும். ஆண்டாள் தம் பாடலில்,

*" தூயோமாய் வந்துநாம் தூமலர்த் தூவித் தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போயபிழையும் புகுதருவான். . . . . . . "* (நாலா. 478)

என்று குறிப்பது அனுகூலிய சங்கல்பத்திற்குரியதாய் அமைகிறது. இவ்வகையில் *'உன்னருளுக்கு இனிதான நிலையு கந்தேன்'* (தேசி. பிர. 126) என்னும் அடியில் அனுகூலிய சங்கல்பம் சுட்டப்படுகிறது.

பிராதிகூலிய வர்சனமாவது இறைவனுக்கு எதிர்ப்பான செயல்களை விட்டுவிடும் நிலையாகும். எதிர்ப்பான செயல்கள் என்பன, இறைத்தன்மைகளுக்குப் பொருந்தாதும் முத்தி உபாயத்திற்கு எதிரிடையானவையுமான செயல்கள். அனுகூலமாய் இருப்பதற்கு மாறாக இருக்கும் செயல்களைச் செய்யாமல் இருப்பதே இதன் தன்மையாகும்.

*பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில் பொருள் இன்பம்என இரண்டும்*
*இறுத்தேன் ஐம்புலன் கள்கடன் ஆயின வாயில் ஒட்டி*
*அறுத்தேன் ஆர்வச் செற்றம் அவைதம்மை மனத்து அகற்றி*
*வெறுத்தேன் நின்னடைந் தேன்திரு விண்ண கர்மே யவனே*
(நாலா. 1458)

என்ற பாடலில் திருமங்கையாழ்வார் தம் சிறுமைகளை ஒழித்துச் சரணடைதல் இவ்வங்கத்தின் பாற்பட்டது. தீச் செயல்கள் செய்வதினின்று நீங்கி நிற்கும் பிராதிகூலியவர்சனத்தை, *'நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்'* (தேசி. பிர. 126) என்னும் தொடர் உணர்த்துகிறது.

கார்ப்பண்யமாவது, இறைவனைத் தவிரப் பிறிதோர் உபாயமோ, வழியோ இல்லாத தம் எளிமை நிலையை உணர்த்துதலாகும். இது இறைவனே தனக்குக் கதி; இறைவனன்றி வேற்றுப்புலங்களில் தனக்குக் கதிவிசேஷம் இல்லை என்றுணர்த்தி நிற்கும். இத்தன்மையை நம்மாழ்வாரின்,

*அன்றியாம் ஒரு புகலிடம் இலம் என்றுஎன்று அலற்றி . . . . .*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
*நன்று நாமினி நணுகுதும் நமதிடர் கெடவே* (நாலா. 3983)

என்ற பாடல்வழி உணரலாம். இவ்வங்கத்தை *'நின்னருளாங் கதியன்றி மற்றொன்றில்லேன்'* (தேசி. பிர. 126) என்னுமடி உணர்த்துகின்றது.

மகா விசுவாசம் என்பது இறைவனுக்கு எப்போதும் தொண்டுகருதி, இறைவன் எப்போதும் கைவிடாமல் காத்திடுவான் என்று வைத்திடும் பூரண நம்பிக்கையாகும். இந்திரா பார்த்தசாரதியின்,

> *ஏனைய மூன்று யோகங்களைப் போல் பிரபத்தி சிக்கலானதன்று; இறைவனிடத்தில் காதல் கொள்ளுமாறு தன்வசத்திலுள்ள தன் மனத்தை மாற்றி அவனிடம் திருப்புவதும், கடவுளின் கருணை நம்மைக் காக்கும் என்னும் உறுதியான நம்பிக்கையுமே பிரபத்திக்கு வேண்டியவை.* [18]

என்னும் கூற்று மகாவிசுவாசம் எனுமிவ்வங்கத்தின் தேவையை எடுத்துரைப்பதாய் அமைகின்றது. இறைவன் மீது நம்பிக்கை கொண்டால் காப்பதே அவன் கடமை. இதனைச் சரம சுலோகத்திலும் இறைவன் சுட்டியுள்ளான். இந்நம்பிக்கையை நம்மாழ்வாரின்,

> *சரணம் ஆகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம்*
> *மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்* (நாலா. 3884)

என்ற பாடலில் புலப்படக் காணலாம். இவ்வங்கத்தை *'உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்'* என்னுமடி உணர்த்தும். (தேசி. பிர. 126).

*'கோப்த்ருத்வ வரணம்'* என்பது இறைவனைக் காக்குமாறு வேண்டுதல் ஆகும். குரக்குப்பிடி போல் இறைவனிடம் சரண்புக்கவழித் தன்னைக் காக்குமாறு வேண்டுதல் அமைகின்றது. சீவர் வேண்டாதபோது தானே இறைவன் முத்திவழியைக் காட்டுவதில்லை. தன்னை அடையார்க்கு அவன் உலகப்பற்றுகளை அகற்றுவதில்லை. எனவே, முறைப்படி நம்பிக்கையுடன் இறைவனை வேண்டிக் கொள்வதையே இவ்வங்கம் சுட்டுகிறது. இத்தகைய வேண்டுதலைத் திருமழிசையாழ்வார் பாடலில்,

> *பிறந்து இறந்து பேரிடர்ச் சுழிக்கணின்று நீங்குமா*
> *மறந்திடாது மற்றெனக்கு மாய நல்கவேண்டும்* (நாலா. 809)

என்னுமடிகளால் உணரலாம். இவ்வங்கத்தை *'மன்னிருளாய் நின்றநிலையை எனக்குத் தீர்த்து வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை'* (தேசி. பிர. 126) என்னுமடிகளால் உணரலாம்.

ஆன்ம நிக்ஷேபமாவது தனக்கென்று கொண்ட பொறுப்புகளைக் களைந்து, தன்னைக் காப்பதும் இறைவன் பொறுப்பே எனத் தேர்ந்து, தன்னை இறைவனிடம் அடைக்கலமாய் ஒப்படைத்தலாகும். இறைவனுக்கு அனுகூலமாயிருப்பது முதல் அவனிடம் வேண்டிக் கொள்ளுதல் வரையிலான நிலைகளைக் கடந்த பின்னரே ஆன்ம நிக்ஷேபம் கொள்ளப்பெறும். இந்நிலையில் இறைவனின் கருணையுடன் பரமபதம் பெறுதற்குத் திருப்த பிரபத்தியாகவோ, ஆர்த்த பிரபத்தியாகவோ சீவர் சரணடைவர். இத்தன்மையைத் திருமங்கையாழ்வாரின்,

*தானுடைக் குரம்பை பிரியும்போ துந்தன்*
*சரணமே சரணம் என்று இருந்தேன்*
*தேனுடைக் கமலத் திருவினுக் கரசே*
*திரைகொள் மாநெடும் கடல்கி டந்தாய்* (நாலா. 1006)

என்ற பாடலின் வழி உணரலாம். இத்தகைய கூறு *'இன்னருளால் இனி எனக்கோர் பரமேற்றாமல் என் திருமால்! அடைக்கலம் கொள் என்னை நீயே'* (தேசி. பிர. 126) என்ற அடிகளில் சுட்டப்படுகின்றன.

*உகக்குமவை யுகந்துகவா வனைத்துமொழிந் துறவுகுணம்*
*மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன்காவல் எனவரித்துச்*
*சகத்திலொரு புகலில்லாத் தவமறியேன் மதிள்கச்சி*
*நகர்க்கருணை நாதனைநல் அடைக்கலமாய் அடைந்தேனே*
(தேசி. பிர. 241)

என்ற பாடலும் சரணாகதிக்குரிய அங்கங்களைச் சுட்டுவதே. இப்பாடலில் *'உகக்கும் அவை உகந்து'* என்பது இறைவனுக்கு அனுகூலமாய் இருக்கத்தகும் குணங்களைக் கைக்கொண்டமையைச் சுட்டுகிறது. *'உகவா அனைத்தும் ஒழிந்து'* என்பது, இறைவன் திருவுள்ளத்திற்கு மாறான அகங்கார மமகாரங்கள், செயல்கள் யாவும் ஒழிந்து நிற்கும் பிராதி கூலியவர்சனத்தைச் சுட்டும்.

*'புகலில்லாத் தவமறியேன்'* என்ற அடி வேறோரு பற்றில்லாது கார்ப்பண்யமாய்த் தம் எளிமையைச் சுட்டிநிற்கும். *'மிகத் துணிவு பெறவுணர்ந்து'* என்ற அடி இறைவன் திண்ணமாய்க் காப்பாற்றுவான் என்று நிற்கும் மகா விசுவாசத்தைச் சுட்டுகிறது. *'காவலென வரித்து'*

என்பதன்மூலம் இறைவன் காவலாய் நின்று காக்கவேண்டும் கோப்த்ருத்வ வரணம் சுட்டப்பெறும். இவ்வைந்து அங்கங்களையும் கடந்து ஆன்ம நிக்ஷேபமாகிய சரணாகதி இயலும். இச்சரணாகதி, *'கருணை நாதனை நல் அடைக்கலமாய் அடைந்தேனே'* என்பதால் உணர்த்தப்படுகிறது. ஆன்ம நிக்ஷேபத்தை அடைக்கலப்பத்திலும்,

*திருமகளும் திருவடிவும் திருவருளும் தெள்ளறிவும்*
*அருமையிலா மையுமுறவும் அளப்பரிய அடியரசும்*
*கருமமழிப் பளிப்பமைப்பும் கலக்கமிலா வகைநின்ற*
*அருள்வரதர் நிலையிலக்கில் அம்பெனநான் அமிழ்ந்தேனே*
(தேசி. பிர. 246)

என்று வேதாந்த தேசிகன் குறிப்பிடுகின்றார். இப்பாடல் ஆன்ம நிக்ஷேபத்திற்கு விளக்கமாய் அமைவதுடன் அவர்தம் பக்திச் சிறப்பைப் புலப்படுத்துவதாகவும் அமைகிறது. சரணாகதியாகிய ஆன்ம நிக்ஷேபமும் மூன்று கூறுகளாய்ப் பகுக்கப்படுகிறது. அவையாவன,

1. ஆன்ம சமர்ப்பணம்
2. பர சமர்ப்பணம்
3. பல சமர்ப்பணம்

தேசிகப் பிரபந்தத்தில் வேதாந்த தேசிகன் *'முக்கிய மந்திரம் காட்டிய மூன்றில் நிலையுடையார்'* (தேசி.பிர.60) என்று குறிப்பிடுகிறார். *'மூன்று'* என்பது, ஆன்மாவாகிய சுவரூபத்தையுணர்ந்து ஒப்படைத்தல்; தனக்கு வேறுகதியில்லை என்றுணர்ந்து தன்னைத்தான் காக்கும் செயலை ஒப்படைத்தல், புருஷார்த்தத்தில் கவலையற்றிருத்தல் ஆகியவையாம். இம்மூன்றுமே முறையே ஆன்ம, பர, பல சமர்ப்பணங்களாய்ச் சுட்டப்படுகின்றன.

*எனதென் பதுமியான் என்பதும் இன்றித்*
*தனதென்று தன்னையும் காணாது - உனதென்று*
*மாதவத்தான் மாதவற்கே வன்பரமாய் மாய்ப்பதனில்*
*வைதவத்தான் கைவளரான் சரண்* (தேசி. பிர. 25)

என்ற பாடலில் மூவகையாகச் சுட்டப்படும் ஆன்ம நிக்ஷேபம் குறிக்கப்படுகின்றது. இவ்வான்மாவைப் பற்றிய உண்மையினை உணர்ந்து அது இறைவனுக்கே உரியது; இறைவனுக்கு உடலாம் தன்மையினது

முதலான சிந்தனைகளால் தெளிவு கொண்டு தன்னைச் சரண்புக வேண்டிய பொருளாகக் கொண்டு புகுதலாகிய ஆன்ம சமர்ப்பணம் முதலிரு அடிகளில் சுட்டப்படுகின்றது.

தனக்கு வேண்டிய ஆன்ம ஈடேற்றத்திற்குச் சரண்புகுதலே எளியவழி; தன்னைத்தானே காத்துக்கொள்ளும் பொறுப்பு, சீவர்க்கு இல்லை. அப்பொறுப்பையும் இறைவனிடம் ஒப்படைத்தலாகிய பரசமர்ப்பணம் *'உனதென்று மாதவத்தான் மாதவற்கே வன்பரமாய்'* என்ற அடியில் சுட்டப்பெறும். தேசிகன் பரசமர்ப்பணத்தை *'நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரம் ஒன்றிலதே'* (தேசி. பிர. 18) என்னுமடியிலும் சுட்டக் காணலாம். இவ்விதம் ஒப்படைத்துச் சரண்புகாதவனுக்கு வீடுபேறில்லை என்பதைச் செய்யுளின் ஈற்றடி குறிப்பிடுகிறது. (தேசி. பிர. 25)

வீடுபேற்றினை வேண்டிச் சரண் புகும் நிலையில் அத்தகைய பலனை வழங்குதலும் இறைவனுடைய பொறுப்பேயாகும். சீவர்க்கு அத்தன்மையில் கவலையோ, ஐயமோ நேருதல் தேவையில்லை. பலனாய் வேண்டியதை நல்கும் பொறுப்புத் திருமாலுடையது என்பதையும் சீவர்க்குரிய நிலைகளையும் தேசிகப் பிரபந்தத்துள் வேதாந்த தேசிகன் விளக்குகின்றார்.

*மன்னவர் விண்ணவர் வானோர் இறையொன்றும் வான்கருத்தோர்*
*அன்னவர் வேள்வி அனைத்தும் முடித்தனர் அன்புடையார்க்கு*
*என்ன வரந்தர என்றநம் மத்தி கிரித்திருமால்*
*முன்னம் வருந்தி அடைக்கலம் கொண்டநம் முக்கியரே*

(தேசி. பிர. 59)

என்ற பாடலில் வரமாய்த் தரவேண்டியதைக் கருதிடவேண்டியது திருமாலினுடைய பொறுப்பு என்பதை வெளிப்படுத்துகிறார். மேலும் இறைவனின் திருக்கருணையில் ஐயம் கொள்ளவேண்டியதில்லை என்பதை,

*துய்ய மனத்தர் துறையணு காத துணையிலியேன்*
*ஐயம் அறுத்துன தாணை கடத்தல் அகற்றினை நீ* (தேசி. பிர. 106)

என்று இறைவனைப் பராவும் முன்னிலைக் கூற்றாய்ப் புலப்படுத்துகிறார். ஆசிரியர் திருமந்திரத்தின் சாரார்த்தமாய் அமைந்த பொருள்திட்பத்தைக் குறிப்பிடும் இடங்கள் பலவற்றிலும் இம்மூன்றினைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இச்சரணாகதியை ஐந்தங்கமுடையது என்றும் ஆறங்கமுடையது என்றும் சுட்டுவர். அனுகூலிய சங்கல்பம், பிராதிகூலிய வர்சனம், கார்ப்பண்யம், மகா விசுவாசம், கோப்த்ருத்வ வரணம் ஆகிய ஐந்து அங்கங்களும் ஆன்ம நிக்ஷேபமாகிய சரணாகதிக்கு அங்கங்களாய் அமைந்து, அவற்றை உடைய ஆன்ம நிக்ஷேபம் அங்கியாய் அமைகிறது என்ற கருத்தை உடையவர்கள் சரணாகதிக்கு ஐந்து அங்கங்கள் என்று சுட்டுவர். [19]

அஷ்டாங்க யோகத்தில் சமாதி என்பதையும் ஓரங்கமாய்க் கருதுவது போல் ஆன்ம நிக்ஷேபம் என்ற சரணாகதி புகும் நிலையையும் ஓரங்கமாய்க் கொண்டு ஆறங்கம் உடையது சரணாகதி என்பாரும் உளர். [20] இவ்வங்கங்கள் மூலம் சேதனன் செய்யவேண்டியன, விலக்கத்தக்கன, நம்பிக்கை கொள்ளத்தக்கன ஆகியன சுட்டபபெறும். வேதாந்த தேசிகனின் ஸ்ரீவைணவ தினசரி, நாள்தொறும் சேதனன் கைக்கொள்ளவேண்டிய நெறிகளைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளது. அனுகூலிய சங்கற்பமாய் இவற்றைப் பின்பற்றுகையில் தீய ஒழுகலாறுகள் இறைக்கருணையால் நீங்கும். திடமான நம்பிக்கை தோன்றித் தன்னிலையை வெளிப்படுத்திக் காக்கும்படி சரண்புக உந்தும்.

மேலும் சீவர் தானே இறைவனிடத்துச் சரண்புக வேண்டும் என்பதையே இவ்வங்கங்கள் உண்ர்த்துகின்றன. புகலுலகில்லாது இறைவனைச் சரணாகதி அடையுமுன் இறைவன் காப்பான் என்ற திடநம்பிக்கை வேண்டும். இந்நம்பிக்கையுடன் இறைவனிடத்துத் தன் வேட்கையைப் புலப்படுத்திச் சரண் புகவேண்டும். இது குரங்குக் குட்டி தன் தாயைத் தானே பற்றிக் கொண்ட நிலையில் அச்சமின்றி இருக்கும் நிலையொத்தது. தென்னாசாரிய மரபில் பூனை, தன் குட்டியைத் தானே கவ்வுமாறு போல இறைவனருள் சீவரிடத்துத் தானே விளையும் என்பர். தேசிகமரபு பிரபத்தியை மேற்கொள்ள சிறுமுயற்சியாவது தேவை என்கிறது.[21] கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

> *ஆத்ம நிக்ஷேபமாகிய ப்ரபத்திக்கு இவை அங்கங்கள் என்பது தேசிக சம்பிரதாயம் . . . . . கோப்த்ருத்வ வரணமாகிற ப்ரபத்திக்கு மற்ற ஐந்தும் ஸம்பாவித ஸ்வபாவங்கள் என்பது தென்னாசாரிய சம்பிரதாயம்.* [22]

என்று குறிப்பிடுவது இணைத்து எண்ணத்தக்கது.

### 3.4. பிரபன்னர்

முத்திப்பேறு அடைவதற்குரிய வழிகளை மேற்கொள்வோர் அதிகாரி எனப்படுகின்றனர். அவர்கள் பக்திநெறி, சரணாகதியாகிய பிரபத்திநெறி எனுமிரண்டனுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி இறைவனை நாடுவர். மோட்சத்தில் ஈடுபாடு காட்டும் இவர்களை, *'முமுட்சு'* என்பது மரபு. இம்மைப் பயன்களுக்குரிய வழிபாடுகளைக் கைவிட்டு, மோட்சத்தைப் பெற வழியாயுள்ள செயல்களைச் செய்ய முற்படுவதன் பொருட்டு இங்ஙனம் குறிக்கப்படுகின்றது. பக்தியோகத்தைப் பின்பற்றுபவர் பக்தர் என்றும் சரணாகதியைப் பின்பற்றுபவர் பிரபன்னர் என்றும் குறிக்கப்படுவர்.

பேரன்பின் முதிர்ச்சியுடன் எம, நியமம் முதலான அங்கங்களுடன் கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலானவற்றின் வழிமுறைகள் உணர்ந்து அவற்றில் ஈடுபடும் பத்தர் பக்திநெறிக்குரிய அதிகாரியாவர். எல்லோரும் பக்திநெறிக்குரியவர் ஆவர். குலத்தகுதியும் கருதப்படும் ஒன்றாகும்.

வேறு தெய்வத்தையோ, வேறு வழியையோ நாட அறியாது ஸ்ரீமந் நாராயணனே பரம் என்றுணர்ந்து தன்னை அடைக்கலமாய்த் தரும் யாவரும் பிரபத்திக்குரிய அதிகாரிகளாவர். எனினும் அத்தகைய சீவர்கள் எக்காலத்திலும் தன்னைத் தனியான பொருள் என்று கருதுதலோ ஆழ்ந்த அன்பின்மையுடன் இருத்தலோ இறைவனே பரம் என்று உணராதிருத்தலோ கூடாது. இத்தகைய தன்மையுடையார் பிரபத்தி நெறியில் சரண்புகுந்து முத்திப்பேறு அடைய இயலாது. பக்திநெறிக்குரிய அதிகாரிகளாய் அமையாதவர் யாவரும் பிரபத்திக்குரிய அதிகாரிகளாகலாம். பிரபத்தி நெறியில் அதிகாரிகளாக இருக்க முடியாதவர் பக்தி நெறியிலும் நடக்க இயலாது. இதன்படி எவ்வளவு தாழ்ந்தவராயினும் உண்மையான ஈடுபாட்டினால் சரணாகதி நெறியில் வீடுபேறடையலாம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பிரபன்னர் என்ற சொல் பிரபத்தி என்ற சொல்லடியாய்ப் பிறந்தது. பி.ஆர். நரசிம்மன் பிரபத்தி பற்றி,

> *அடைக்கலம் புக (to take refuge with) அல்லது திருவுளக் குறிப்பிற்கிணங்க (to piously resign) என்னும் பொருளுடைய 'பிர - பாத்' என்னும் சொல்லே பிரபத்தி நெறியாக உள்ளது . . . பிரபத்தி*

*என்ற சொல் இத்துன்பியல் உலகிலிருந்து மீட்கக் கூடியவர் இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்து அவனிடம் பாதுகாத்தலைக் கோருவதாகும்.* [23]

என்று குறிப்பிடுகிறார். இப்பிரபத்தியாகிய சரணாகதியில் *'அடைக்கலம் புகுபவர்'* என்ற பொருளில் பிரபன்னர் என்ற சொல் ஆளப்படுகிறது.

### 3.4.1. சரணடையும்முன் சீவர்

வேதாந்த தேசிகன் பிரபன்னராய்ச் சரணடையக் கருதுமுன் இருக்கும் சீவர்தம் நிலையைப் பரமபத சோபானத்தின் முதல் ஐந்து நிலைகளில் சுட்டுகின்றார். அவை வருமாறு,

1. விவேகம் கொள்ளுதல்
2. வீண்காலத்திற்கு வருந்துதல்
3. ஆசையறுத்தல்
4. வினைகட்கு அஞ்சுதல்
5. முத்திக்குரிய வழிகளில் ஈடுபடுதல்

மேற்கண்டவற்றுள் விவேகம் கொள்ளுதலாவது உலகியல் இன்பங்கள் பெரிதாகா எனத் தேறுதலும் திருமாலின் அருங்குணங்களை உணர்தலே வாழ்வின் பயன் என்று கொள்ளுதலும் ஆகும் (தேசி. பிர. 134). இத்தனைக் காலம் ஆன்ம ஈடேற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபடாத நிலையை எண்ணி மனம் தளர்தல் இரண்டாம் நிலையாகும். இதனை வேதாந்த தேசிகன்,

*நிறுத்தார் பவத்தில் நெடுநாள் உழன்றமை கண்டதனால்*
*வெறுத்துஆ ரணநெறி யேவெள்கி ஓட விரைவார்களே*
(தேசி. பிர. 136)

என்கிறார். உலகியல் வாழ்க்கையில் ஆசையறுதல் மூன்றாம் நிலையாகும். இதில் உலகியலின் சிறுமை வற்புறுத்திக் கூறப்படுகிறது. இதனைத் தேசிகன், *'தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற சிறுபயன்'* (தேசி. பிர. 137) என்று வருணிக்கின்றார்.

உலகியல் சிறுமை உணர்ந்தது போலக் கர்மவினைகள் மீண்டும் பிறவித்துன்பத்தை ஏற்படுத்திவிடும் என்றஞ்சுதல் நான்காம் நிலையாகும்.

(தேசி. பிர. 140) இந்நான்கு நிலையும் கடந்தபின், முத்திக்குரிய வழிநாடி நிற்றலே ஆன்மாவை உய்விக்கும் எனத்தேறிச் சரணாகதியில் ஈடுபடுதல் ஐந்தாம் நிலையாகும். இதனை,

*கருமா லையில்வரும் கட்டம் கழிக்கும் கருத்துடையார்*
*ஒருமால் பெருகும் உயோகின் முயன்றும் அதன்றியும் நம்*
*திருமால் அடியிணை திண்சர ணாக எமன வரித்தும்*
*தருமால் இனியவை தானே எனத்தருவி எண்ணுவரே* (தேசி. பிர. 142)

என்ற பாடல் விளக்குகிறது. இவ்வைந்தாம் நிலையில் மோக்ஷோபாயமாகப் பக்திநெறி அல்லது சரணாகதி நெறியில் சீவர் ஈடுபடுவர் என்று குறிக்கப்படுகிறது. எனினும் சரணாகதி நெறிக்கும் இப்படிநிலைகள் பொருந்துமாதலின் ஈண்டு விளக்கப்பட்டன. சரணாகதியினைக் குறிப்பிடுகையில் *'நம் திருமால் அடியிணை திண் சரணாகும் என'* (தேசி. பிர. 142) என்று கூறுவது சரணாகதியில் அவர் கொண்ட பெருமித உணர்வைக் காட்டுகிறது.

### 3.4.2. சரணடைவோர்க்கு உரிய பண்புகள்

சரணடைவோர் (பிரபன்னர்) சரணடைவதற்குரிய சில தகுதிப்பாடுகளை உறுதியாகப் பெறவேண்டும். அவை சரணாகதிக்குச் சீவனை ஈடுபடுத்துவதுடன் முத்தி பேறடையவும் துணைநிற்கும். இவை முறையே,

1. ஆகிஞ்சன்யம்
2. அனன்ய கதித்துவம் எனப்படும்.

ஆகிஞ்சன்யமாவது வேறு உபாயங்களில் ஈடுபட இயலாது சித்தோபாயமாகிய இறைவனைச் சரண்புகுதலாகிய சாத்யோபாயம் செய்ய விரும்புகின்ற நிலையாகும். இந்நிலை சாஸ்திரஞானத் தேர்ச்சி இல்லாமையாலோ குலவரையறைகளாலோ பக்தி முதலான நெறிகளில் ஈடுபட இயலாது நிற்கும் நிலையாகும். இத்தன்மையை நம்மாழ்வார்,

*அருகும் சுவடும் தெரிவுணரோம் அன்பே*
*பெருகும் மிகவிது வென். . . . . . . .* (நாலா. 2591)

என்று குறிக்கிறார். இதே தன்மையில் வேதாந்த தேசிகனும்

*பத்திமுத லாமவற்றில் பதியெனக்குக் கூடாமல்*
*எத்திசையும் உழன்றோடி இளைத்துவிழும் காகம்போல்*

(தேசி. பிர. 237)

என்ற அடிகளில் ஆகிஞ்சன்ய நிலையை எடுத்துரைக்கிறார். நல்ல சாத்திரத் திட்பம் உடைய குரு முதல்வரான நம்மாழ்வார் *'தாம் ஏதும் அறியோம்'* என்று தன்னைக் காட்டிக்கொள்ளும் தன்மையிலேயே *'வேதாந்த ஆசாரியன்'* எனப் பெயர் பெற்ற தேசிகனும் கருதிக்கொள்கிறார். இது அவர்தம் அன்பின் எளிமையைப் புலப்படுத்துகிறது.

அனன்ய கதித்துவமாவது முத்தியைத் தவிரப் பிற கதிவிசேடங்களில் ஈடுபாடு இல்லாது திருமாலைத் தவிரப் பிற தெய்வங்களை நாடாமை ஆகும். இறைவனே தனக்கு ஆன்ம ஈடேற்றத்தைத் தரவல்லவன். அவனன்றி வேறு எவராலும் தனக்கு முத்திப்பேறு அளிக்க இயலாது. பிற தெய்வங்கள் அளிக்கும் அருள் தன்மை யாவும் அற்பப் பலன்களையே தந்து நிற்கும் என்று சீவர் கருதுவர். இங்ஙனம் திண்ணமாகக் கருதி இறைவனே கதியென வரித்துத் தன்னை அடைக்கலமாகத் தருதல் அனன்ய கதித்துவம் ஆகும். இத்தன்மை திருமங்கையாழ்வார் பாடலில்,

*மற்றும்ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு*
*உற்றிலேன் உற்றதுமுன் அடியார்க்கு அடிமை*
*மற்றெல்லாம் பேசினும் நின்திருஎட் டெழுத்தும்*
*கற்றுநான். . . . . . . . . . . . . . . . . . . . .* (நாலா. 1740)

என வெளிப்படுகிறது. வேதாந்த தேசிகன் இத்தகைய அனன்யகதித்துவத்தை,

*சடைமுடியன் சதுமுகனென்று இவர்முதலாம் தரமெல்லாம்*
*அடையவினைப் பயனாகி அழிந்துவிடும் படிகண்டு*
*கடிமலராள் பிரியாத கச்சிநகர் அத்திகிரி*
*இடமுடைய அருளாளர் இணையடிகள் அடைந்தேனே*

(தேசி. பிர. 238)

*சீர்க்கடலின் திரையென்னத் தகவான் மிக்க*
*தேசிகராய்த் திண்ணிருளாம் கடலை நீக்கிப்*
*பார்க்கடலோன் திருவணையாய் நின்று பாரம்*
*காணாத பவக்கடலைக் கடத்து கின்றான்*
*ஈர்க்குமரக் கலமென்ன இறைவர் இன்பம்*
*எழுந்தழியும் குமிழியென இகந்து ஒழிந்தோம்*
(தேசி. பிர. 121)

என்று விளக்குகின்றார்.

ஆகிஞ்சன்யமாகவும் அனன்யகதித்துவமாகவும் தத்தம் சீவத் தன்மையை உணர்ந்து முத்திப்பேற்றில் ஈடுபாடு காட்டும் தன்மை உடைய யாவர்க்கும் இறைவன் அருள்புரிவான். தன் நிலையைக் கூறி இறைவன் திருவடிகளில் ஒப்புக்கொடுக்கின்ற சரணாகதியை வேதங்களும் அவற்றை விளக்குகிற ஆசாரியார்களின் உரைகளும் தெளிவிக்கின்றன. மேற்சுட்டிய நிலையில் இருக்கும் யாவரும் பிரபத்திக்கு உரிய அதிகாரிகளாய்ப் பிரபன்னர் எனத்தக்கவரே. இத்தன்மையை வேதாந்த தேசிகன்,

*தந்திரங்கள் வேறின்றித் தமதுவழி அழியாது*
*மந்திரங்கள் தம்மாலும் மற்றுமுள உரையாலும்*
*மந்தரங்கண்டு அடிபணிவார் அனைவர்க்கும் அருள்புரியும்*
*சிந்துரவெற்பு இறையவனார் . . . . . . . . . . . . . . .* .(தேசி. பிர. 239)

என்று குறிப்பிடுகிறார்.

*அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும்*
*நொந்தவ ரேமுத லாக நுடங்கி அனன்னியராய்*
*வந்தடையும் வகை . . . . . . . . . . . . . . . . . . . .* (தேசி. பிர. 56)

என்ற பாடலில் குல ஒழுக்கத்தாலும் பிற உபாயக்கடுமையாலும் ஆகிஞ்சன்யத் தன்மையுடன் இருத்தலை முதலிரு அடிகளிலும் அனன்யகதித்துவத்தை இரண்டாமடியின் ஈற்றுச்சீரிலும் வேதாந்த தேசிகன் புலப்படுத்துகிறார். மேலும் பலனில் ஈடுபாடு இருந்தால்தான் முத்திப்பேறு வேண்டி இறைவனை வேண்டுதல் இயலும். எனவேதான் *'வேண்டும் பெறும்பயன் வீடென்றறிந்து . . . . முகுந்தனடி பூண்டன்றி மற்றோர் புகலொன்று இலையென நின்றனர்'* (தேசி. பிர. 54) எனக் குறிக்கின்றார்.

இத்தகைய அடிப்படைத் தகுதிகளோடு நற்குணங்கள் சிலவும் பிரபன்னரிடத்து அமைய வேண்டும். இக்குணங்களை வாழ்வியற்களஞ்சியம்,

*சரணாகதி மார்க்கத்தில் பக்தன் முழுநம்பிக்கையுடன் இறைவனிடம் தன்னை ஒப்படைத்தல் வேண்டும். சாதி வேறுபாடில்லாமல் எல்லா ஆன்மாக்களுக்கும் முத்தியளிக்கக் கூடிய மார்க்கம் சரணாகதி. பிறருக்குத் தீமை செய்யாமை, புலனடக்கம், தயை, மன்னித்தல், அறிவு, தவம், தியானம், உண்மை முதலிய எட்டு குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.* [24]

என்று விளக்குகிறது. ஸ்ரீ ஜயதயால்ஜி கோயந்தகா,

*எவனிடம் உயர்ந்த எண்ணங்கள் உள்ளனவோ அவன் கடவுளை அடையத் தகுதியுள்ளவனாகச் சொல்லப்படுகிறான் . . . . . . . . .*
*[இக்] குணங்கள் நிறைந்த ஸகுணமான கடவுளிடம் இயற்கையாக உள்ளன. அவ்வாறே கடவுளைச் சரணடைந்து அவனைப் பூஜிக்கும் பக்தர்களிடமும் அந்த நல்ல குணங்கள் கடவுளருளால் ஏற்படுகின்றன. இவ்வித நல்ல எண்ணம் படைத்த பக்தர்களே கடவுளை அடைய, பார்க்கத் தகுதியுள்ளவர்கள்.* [25]

என்று நற்குணங்களுக்கும் சரணாகதிக்கும் உள்ள இயைபைத் தெளிவுபடுத்துகிறார். வீட்டின்பத்தை நாடுகையில் நற்குணங்கள் இருத்தலே சிறந்தது என்பதை வேதாந்த தேசிகன்,

*நன்றிது தீயதி தென்று நவின்றவர் நல்லருளால்*
*வென்று புலன்களை வீடினை வேண்டும் பெரும்பயனே* (தேசி. பிர. 53)

என்று குறிப்பிடுகின்றார். சாஸ்திர ஞானங்களில் தேர்ச்சி பெற்றவராயிருந்தும் பக்திநெறி சாதிக்க வல்லவராயிருந்தும் வேதாந்த தேசிகன் எளிமையும் நற்குணமும் நிரம்பிய சரணாகதியையே விரும்புகிறார். சரணடைந்தாரைச் சிறப்பித்தும் கூறுகிறார்.

*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . வாழி*
*சரணா கதியெனும் சார்புடன்மற் றொன்றை*
*அரணாகக் கொள்ளாதார் அன்பு* (தேசி. பிர. 208)

என்ற மெய்விரத மான்மியத்தின் வாழ்த்துக்கவி வேதாந்த தேசிகன் சரணாகதி அடைந்தாரைப் போற்றும் பண்பை உணர்த்துகிறது.

### 3.4.3. பிரபன்னர் வகை

இறைவனைச் சரணடைபவர், எவ்வகை நோக்கங்களில் சரணடைகின்றாரோ அவற்றினடிப்படையில் கீழ்க்கண்டவாறு சுட்டப்படுகின்றனர்.

1. திருப்த பிரபன்னர்
2. ஆர்த்த பிரபன்னர்

திருப்த பிரபன்னர் தமக்கு வினைமுடியும் காலம்வரைக் காத்திருந்து, பின் பரிபூரண பிரம்மானுபவமாகிய முத்திப்பேறு அடைவர். மேலும் இவ்வுலகியலில் துன்பங்களிலிருந்து மீட்சியினையும் கருதி நிற்பர். *'களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன்'* (நாலா 3425) என்று நம்மாழ்வார் குறிப்பது அனைத்துப் பொறுப்புகளையும் இறைவனிடம் ஒப்படைத்து அவனருள் வீடுபேறு தரும் காலத்தை நோக்கி காத்திருப்பதாகும்.

ஆர்த்தபிரபன்னர் உலகியல் இன்பங்களில் பற்றுக்கொள்ளாது உடனடியாகப் பிரம்மானுபவத்தை அனுபவிக்க எண்ணுவர். பகவத் கீதை சுட்டும் 'ஆர்த்தன்' என்ற நிலையுடையவனும் உலகியல் தளைகளைக் கட்டறுத்து இறைவனை நாடி நிற்கும் தன்மையினனே. குலசேகராழ்வார் *'நின்னையே தான்வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்'* (நாலா. 696) என்பதும் இத்தன்மையினதே ஆகும்.

கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

> *இந்த ப்ரபன்னனைத் த்ருப்தன் என்றும் ஆர்த்தன் என்றும் இருவகையாகவும் பிரிப்பதுண்டு. அநாதி கர்ம வாசனையாலோ அர்ச்சாவதாரத்திலீடுபாடு முதலானவற்றாலோ சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் கிடைத்தால் போதுமானது என்று இருப்பவன் த்ருப்தன் எனப்படுகிறான். ஸம்ஸாரத்தில் இருப்பதைக் கொழுந்து விட்டெரியும் நெருப்பிலிருப்புப் போலே நினைத்துப் பகவானை அடைவதில் த்வரையாலே சரணடைந்த மறுகணமே மோக்ஷத்தை விரும்புபவன் ஆர்த்தன் எனப்படுகிறான். இவ்வளவு வைராக்கியம் நிறைந்த இவன் உலகில் மிகவும் கிடைத்தற்கரியன். த்ருப்தனுக்கு வர்த்தமான (நடக்கும்) சரீரத்தில் அவசியம் அனுபவிக்க வேண்டிய*

*ப்ராரப்தத்தையொழிந்த ப்ராரப்த கர்மத்தையும் ஸஞ்சித கர்மத்தையும் போக்குகின்றான் ஸர்வேச்வரன். ஆர்த்தனுக்கு ஆர்த்தியின் கனத்துக்குத் தக்கவாறு இந்தச் சரீரத்தில் அனுபவிக்க வேண்டிய கர்மத்திலும் ஒரு பகுதியைப் போக்கிவிடுகிறான்.*[26]

என்று பிரபன்னர் வகையையும் பிரபன்னர்க்கு இறைவனின் கருணையையும் சுட்டுகின்றார். இவ்விருவகைப் பிரபன்னர் பற்றியும் வேதாந்த தேசிகன் தம் பிரபந்தங்களில் சுட்டியுரைக்கிறார்.

*புகலுலகில் இல்லாது பொன்னருள்கண் டுற்றவர்க்கும்*
*அகலகிலா அன்பர்க்கும் அன்றேதன் னருள்கொடுத்துப்*
*பகலதனால் பழங்கங்குல் விடிவிக்கும் பங்கயத்தாள்*
*அகலகிலேன் என்றுறையும் அத்திகிரி அருண்முகிலே*(தேசி. பிர. 255)

என்ற பாடலில் புகலுலகில் இல்லாது பொன்னருள் கண்டுற்றவர் என்பது திருப்த பிரபன்னரையும் *'அகலகிலா அன்பர்'* என்பது ஆர்த்த பிரபன்னரையும் சுட்டும்.

*சீலம் கவர்ந்திடு தேசிகர் தேசிகன் பெருமையினால்*
*தூலங் கள்அன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல்தரும்*
*கோலம் கழிந்திடக் கூறிய காலம் குறித்துநின்றோம்*
*மேலிங்கு நாம்பிற வோம்வேலை வண்ணனைப் பரவுதும் யாமே*
(தேசி. பிர. 15)

என்ற பாடலில் *'கூறிய காலம் குறித்து நின்றோம்'* என்பது திருப்தப் பிரபன்னரின் தன்மையினை ஒத்தமைகின்றது.

*வெஞ்சொ லாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென்மேல்*
*விழுந்த முந்தி யான யர்ந்து வீழ்வ தற்கு முன்னம்*
*அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்ற ளிக்க வேண்டும் அச்சுதா*
*அடிய வர்க்கும் அருளி யக்கும் அடியவர்க்கும் மெய்யனே*
(தேசி. பிர. 364)

என்ற பாடலில் மரணவாதனை பற்றும் முன்னரே அடைக்கலம் கொண்டருள வேண்டும் என்பது ஆர்த்த பிரபன்னரின் தன்மையை ஒத்தமைகின்றது.

*வெறியாரும் மலர்மகளும் நீயும் விண்ணில்*
*விண்ணவர்கள் அடிசூட இருக்கும் மேன்மை*
*குறையாத வினையகற்றி அடிமை கொள்ளல்*
*குறுகவொரு நன்னாள்நீ குறித்தி டாயே* (தேசி. பிர. 107)

என்ற பாடலிலும் *'குறுகவொரு'* எனும் தொடர் ஆர்த்த பிரபன்னர் திண்மையுடன் விரைந்து முத்திப்பேறு வேண்டுமாற்றையே குறிக்கிறது.

### 3.4.5. சரணடைந்தவரைப் புகழ்தல்

அரிதினும் அரிதான பக்திநெறியைப் பின்பற்றுவாரைவிட எளிதான சரணாகதியைப் பின்பற்றுவாரையே வேதாந்த தேசிகன் தம் பிரபந்தங்களில் புகழ்கின்றார். இது சரணாகதியை வலியுறுத்தும் அவர்தம் எண்ணப் போக்கினைத் தெளிவுறுத்துகிறது.

வேதாந்தம் திருமாலின் பெருமைகளை அளவிடமுடியாதென்று குறிப்பிடும். திருமாலின் திருவடியைத் தனக்கு அடைக்கலமாய்க் கொண்ட பிரபன்னரின் பெருமையும் அத்தன்மையதாகும். தன்னை அடைந்தவர் எப்படிப்பட்டவராயினும் நித்ய சூரிகளை ஒத்த வாழ்வினை அவர்க்கு நல்குகின்ற இறைவனின் கருணையே இதற்குக் காரணமாகிறது. எளியவழியால் உயர்ந்த பலனைப் பெறும் பிரபன்னரை வேதாந்த தேசிகன்,

*உண்மை யுரைக்கும் மறைகளில் ஓங்கிய உத்தமனார்*
*வண்மை யளப்பரி தாதலின் வந்துகழல் பணிவார்*
*தண்மை கிடக்கத் தரமளவு என்ற வியப்பிலதாம்*
*உண்மை உரைத்தனர் ஓரந் தவிர உயர்ந்தனரே* (தேசி. பிர. 72)

என்று பூர்வாசாரியார் கூற்றாகக் குறிப்பிடுகிறார். மேலும் சரணடைந்தார் தம் உயர்பண்புகளை,

*மறையுரைக்கும் பொருளெல்லாம் மெய்யென்று ஓர்வார்*
*மன்னியகூர் மதியுடையார் வண்கு ணத்திற்*
*குறையுரைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால்*
*கோதற்ற மனம்பெற்றார் கொள்வார் நன்மை*
*சிறைவளர்க்கும் சிலமாந்தர் சங்கே தத்தால்*
*சிதையாத திண்மதியேன் தெரிந்தது ஓரார்*
*பொறைநிலத்தில் மிகும்புனிதர் காட்டும் எங்கள்*
*பொன்றாத நன்னெறியில் புகுது வாரே* (தேசி. பிர. 91)

என்று போற்றுகின்றார். சரணாகதியில் ஈடுபட்டுச் சீவர்க்கு மனம் தெளிந்ததால், வைஷ்ணவ நெறியே, *'பொன்றாத நன்நெறி'* என்று குறிப்பிடுகிறார். மேலும் சரணாகதியின் சிறப்பை உணர்ந்த திண்மதியோரை வைஷ்ணவ நெறியினராய்ச் சுட்டுகின்றார். இவையாவும் வைஷ்ணவத்தின்பாலும் சரணாகதியின்பாலும் வேதாந்த தேசிகன் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டையே சுட்டுகின்றன.

### 3.4.6. சரணடைந்தபின் செய்யவேண்டியவை

பிரபன்னர் சரணடைந்தபின் செய்யவேண்டியது இறைவனுக்கு உவப்பான தொண்டு ஒன்றேயாகும். இது உத்தர கிருத்யம் எனப்படும். சரணடைந்த பின்னும் அவர்கள் இப்பூமியில் இருப்பதற்குக் காரணம் இத்தகைய தொண்டு செய்யக் கருதியே என்று வேதாந்த தேசிகன் குறிப்பிடுகிறார். அர்ச்சாவதாரமாய்த் திகழும் இறைவனை வணங்குதலும் திருப்பணிகள் செய்தலும் திவ்யப் பிரபந்தம் கேட்டும் ஓதியும் இன்புறுதலுமாகிய நற்பணிகளைச் செய்யவே சீவர் சரணடைந்த பின்னும் இருப்பதாக கருதுகிறார். இதனை,

*மாளாத வினையனைத்தும் மாள நாம்போய்*
*வானேறி மலர்மகளார் அன்பு பூணும்*
*தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு*
*தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி யாடிக்*
*கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்*
*கிடையாத பேரின்பம் பெறுக நாளும்*
*மீளாத பேரடிமைக்கு அன்பு பெற்றோம்*
*மேதினியில் இருக்கின்றோம் விதியி னாலே*

(தேசி. பிர. 153)

என்ற பாடலால் உணரலாம். இப்பாடலில் *'விதியினால்'* என்பது இத்தகைய தொண்டுகளே சரணடைந்த பின் சீவர்க்குரியவாய் விதிக்கப்பட்டுள்ளன எனும் கருத்தில் ஆளப்பட்டுள்ளது. வேதம், வேதாந்தம், திவ்யப்பிரபந்தம், ஆசாரியர் அருள்மொழி இவற்றை ஓதி இறைவன் பெருமைகளை உணர வேண்டும். அதனால் சீவருக்கும் எஞ்ஞான்றும் மனக்கலக்கம் நேராது என்று தேசிகன் அடைக்கலப்பத்தில் குறிப்பிடுகின்றார் (தேசி. பிர. 245). இத்தகைய கடமைகளைச் செய்வதற்கு வாய்ப்பாக இறையடியார்கள் இருக்குமிடத்தையே தமதிடமாய்க் கொள்ள வேண்டும். இதுவே பிரபன்னனுக்கு உவந்த இடம் ஆகும். இதனை,

*தேனார் கமலத் திருமகள் நாதன் திகழ்ந்துறையும்*
*வானா டுகந்தவர் வையத் திருப்பிடம் வன்றருமக்*
*கானார் இமயமும் கங்கையும் காவிரி யும்கடலும்*
*நானா நகரமும் நாகமும் கூடிய நன்னிலமே* (தேசி. பிர. 65)

என்ற பாடலால் உணரலாம். இப்பாடலில் தேசிகன், அடியார் இருக்குமிடத்தைப் பல திருநகரங்களின் சிறப்புடன் ஒப்பிட்டுரைத்துப் பெருமைப்படுத்துகிறார். மேலும் சீவர் சரணடைந்தபின் பிழைஏதும் செய்யாது தத்துவ ஞானத்தையே கருதி இருக்கவேண்டுமே அன்றி இச்சரணாகதியின் பயன் என்ன என்று ஆராய்தல் கூடாது. வேதாந்த தேசிகன், நெஞ்சொடுகிளத்தலாக இக்கருத்தை,

*உறுவதுனக்கு உரைக்கே னிங்கு இருக்கும் காலம்*
*ஒருபிழையும் புகுதாத உணர்த்தி வேண்டிப்*
*பெறுவதெலாம் இங்கே நாம் பெற்று வாழப்*
*பேரடிமை யால்ஏதுஎன் றிகழேல் நீயே* (தேசி. பிர. 19)

என்று குறிப்பிடுகின்றார். மேலும் சாத்திரஞானத்திட்பம் அறியாராயினும் பொதுப்பட விதிக்கப்படும் நித்ய கர்மங்களை மீறுதல் கூடாது. அச்சாஸ்திரமுறைகளை ஆசாரியன் அருளுரையால் தெளிந்து இறைத்தொண்டினைக் கருதுதலே நலம். மாறாகச் சாஸ்திரங்களை மீறிச் செயல்படுதல் கூடாது என்றும் வேதாந்த தேசிகன் வலியுறுத்துகின்றார் (தேசி. பிர. 63).

சரணடைந்தபின் பிரபன்னரது மனநிலை, உறுதியுடன் பயன்பெறுவதில் இருக்கவேண்டும். ஞானமும் அன்பும் வேண்டும். இறைவற்கு அடிமையாம் தன்மையை, சேதனர் இயல்பைக் கருமவினைப் பயனால் மறக்கலாகாது. நல்லறிவால் திண்மை பெறவேண்டும். இத்தகைய தன்மைகளைக் கடந்தபின் அகங்கார மமகாரங்கள் தோன்றித் தாழ்வுணர்ச்சியைக் கைவிடுதல் கூடாது. உயிர் நீங்காமல் இருப்பதனை ஆற்றி இருக்கவேண்டும். இவையாவற்றுக்கும் இறைவனுடைய உபதேசங்களே துணை நிற்கவல்லன. இதனை,

*திண்மைகுறை யாமைக்கும் நிறைகைக்கும் தீவினையால்*
*உண்மைமற வாமைக்கும் உளமதியில் உகக்கைக்கும்*
*தண்மைகழி யாமைக்கும் தரிக்கைக்கும் தணிகைக்கும்*
*வண்மையுடை அருளாளர் வாசகங்கள் மறவேனே* (தேசி. பிர. 244)

என்ற பாடலில் வேதாந்த தேசிகன் தெளிவுபடுத்துகிறார்.

ஸ்ரீவைணவ தினசரியில், தேசிகனால் குறிப்பிடப்பெறும் அபிகமனம், உபதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் ஆகிய ஐந்தும் பகவத் கைங்கரியம் எனப் பெறும் பாகவத கைங்கரியங்களைப் பிரபன்னர் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்திலேயே அமைகின்றது. ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில் வேதாந்த தேசிகன்,

*இவ்வுத்திர க்ருத்யத்தில் மனோ வாக் காயங்களென்று*
*சொல்லுகிற கரணங்கள் மூன்றாலும் பரிஹரணீயங்களிலும்*
*பரிக்ராஹ்யங்களிலும் ஸாரமிருக்கும்படி* [27]

என்று கூறுவதால் மனம், சொல், செயல் எனும் மூன்று பொறிகளும் இறைத்தொண்டில் வசப்பட்டு நிற்கவேண்டும் என்பது புலனாகும்.

இவ்வகையில் சரணடைந்தவர் தமக்கு இருக்கவேண்டிய மனநிலையும் அவர் செய்யவேண்டிய பணிகளும் செய்யத் தகாதனவும் பற்றி வேதாந்த தேசிகன் குறிப்பிடுகின்றார். இவை யாவும் வைஷ்ணவ மரபில் பிரபன்னனை ஆழங்காற்படச் செய்வனவாய் அமைகின்றன. சரணடைந்தபோது இருக்கும் ஆர்வமும் அன்பும் முத்திபேறு அடையும் வரை குறையாது இருத்தலே இறைவனை உவப்பாக்கும் என்ற கருத்திலேயே இவை வற்புறுத்தப்படுகின்றன.

### 3.5. சரணாகதியின் வகைகள்

சீவர்கள் தம் ஆன்ம ஈடேற்றத்திற்குச் சரணாகதியை முற்சுட்டிய தன்மைகளின்படி மேற்கொள்கின்றனர். சரணாகதியை வழியாய்க் கொண்ட நிலையின் அடிப்படையில் அது வகைப்படுத்தப்படும். ஸந்மதகாரிகாவளி

1. சுவநிஷ்டை
2. உத்திநிஷ்டை
3. ஆசாரிய நிஷ்டை

என்று மூவகையாய்ச் சுட்டும். இதனை *'ஸ்வநிஷ்டச்ச உத்திநிஷ்டச்ச ஆசாரியநிஷ்ட இதி திரிவிதா'* [28] என்னுமடியில் உணரலாம். ஸ்ரீதேசிகப் பிரபந்தம் பாகவத நிஷ்டையையும் இணைத்து,

1. சுவநிஷ்டை
2. உத்திநிஷ்டை
3. ஆசாரிய நிஷ்டை
4. பாகவத நிஷ்டை

என்று நான்கு வகைகளாகச் சுட்டும். இவை

*அளவுடையார் அடைந்தார்க்கும் அதனுரையே கொண்டவர்க்கும்*
*வளவுரைத்தந் தவனருளே மன்னியமா தவத்தோர்க்கும்*
*களவொழிவார் எமரென்ன இசைந்தவர்க்கும் காவலராம்*
*துவளமுடி யருள்வரதர் துவக்கிலெனை வைத்தேனே* (தேசி. பிர. 242)

என்ற பாடலில் உணர்த்தப்படுகின்றன. இப்பாடலில் *'அளவுடையார் அடைந்தார்க்கும்'* (தேசி. பிர. 242) என்பது சுவநிஷ்டையினால் சரணடைந்தாரைக் குறிக்கின்றது. சுவநிஷ்டை என்பது எம்பெருமானின் திவ்யப் பெருமைகளை உணர்ந்து புருஷகாரமாய்த் திருமகளால் பெறப்பட்ட துவயத்தின் நுண்மைப் பொருளுணர்ந்து, இறைவனைச் சரணடைதலே ஆன்ம ஈடேற்றம் தரும் என்று சீவன் தானே செய்யும் சரணாகதியாகும். இறைவனே கதியென்று திடச்சித்தத்தால் தெளிந்து சீவன் இறைவனிடம் தன்னை அளிக்கும் நிலையாகும். அளவுடையார் என்ற தொடர் தெளிந்த ஞானமுடையார் என்னும் கருத்தில் ஆளப்பட்டுச் சுவநிஷ்டை அடைபவரைக் குறிக்கின்றது. பிரகலாதன், வீடணன் முதலானோரை இவ்வகையில் சரணடைந்தாராய்க் கொள்ளலாம். சுவநிஷ்டையாய் சரணடைபவர்தம் ஞானத் தெளிவை வேதாந்த தேசிகன்,

*தூமறையின் உள்ளம் துளங்காத் துணிவுதரும்*
*ஆமறிவால் ஆர்த்தடிமை ஆகின்றோம் . . . . . . . .*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
*நாரா யணனார்க்கே நாம்* (தேசி. பிர. 351)

என்ற பாடலிலும் குறிப்பிடக்காணலாம்.

*'அதனுரையே கொண்டவர்க்கும்'* (தேசி. பிர. 242) என்பது உத்தி நிஷ்டையினால் சரணடைந்தாரைக் குறித்தது. உத்தி நிஷ்டை என்பது அனுகூலிய சங்கல்பம் முதலிய சரணாகதியின் அங்கங்களில் தெளிந்த அறிவு பெறாது *'வேண்டுவோர்க்கு வரம் நல்கும்'* என்ற நம்பிக்கையுடன் இருத்தலாகும். இதனை வேதாந்த தேசிகன் ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்திலும்,

> *அனுகூல்ய ஸங்கல்பாத்யங்கங்களில் வைசத்ய மில்லாதார் அன்னை ஒழியப் போக்கற்று நிற்கிற அதிகாரமும் அபேக்ஷித்தால் ரக்ஷிக்கும் என்கிற விசுவாசமும் உடையராய்க் கொண்டு சரண்யன் அறியப் பூரண ப்ரபத்தி கர்பமான ஆசாரியோபதிட்ட வாக்கியத்தாலே தாதிமார் சொன்ன பாசுரத்தைச் சொல்லி சாருவ பௌமனைச் சரணம் புகும் முக்தரான சாமந்த குமாரர்களைப் போலே 'என்னுடைய ரக்ஷை' எனக்கே பரமாக ஏறியிட்டுக் கொள்ளவேண்டும் என்கை*

என்று விளக்கக் காணலாம். மேலும் தன்னாசிரியர் சுட்டிய துவயத்தின் தன்மையை ஆழ்ந்துணராமல் துவயத்தைப் பிரபத்திக்குரிய காரண வாக்கியமாகக் கொண்டு இறைச் சிந்தனையில் உந்தப்பட்டுச் சீவன் செய்யும் சரணாகதியாகும். *'கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்'* எனும் நம்பிக்கையுடன் இவ்வுத்தி நிஷ்டையில் சீவன் இருப்பான் *'அதனுரையே கொண்டவர்க்கும்'* (தேசி. பிர. 242) என்னும் தொடர் துவயத்தின் தத்துவத்திட்பம் உணராமல் அவ்வாக்கியத்தையே சரணாகதிக்குரிய காரண வாக்கியமாகக் கொண்டாரைக் குறிக்கின்றது. தனக்கு ஆபத்து நேர்ந்த காலத்து விரைந்து *'ஆதிமூலமே'* என்றலறிய கசேந்திரனை இவ்வுத்தி நிஷ்டையினால் சரணடைந்தமைக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

*'வளவுரைத் தந்து அவனருளே மன்னிய மாதவத்தோர்'* (தேசி. பிர. 242) என்ற தொடர் ஆசாரிய நிஷ்டையினால் சரண்புகுந்தவரைக் குறிக்கின்றது. ஆசாரிய நிஷ்டை, தன் ஆசாரியர் இறைவன் பால் வைத்த அன்பினைக் கருதி, சுவநிஷ்டையாய் அவ்வாசாரியர் செய்த சரணாகதியில் தானும் அடங்கியிருத்தல் ஆகும். அதாவது தனக்கெனச் சரண்புகாததும் ஆசிரியத் தொண்டொன்றே தேறி, அவரடிக்கீழ் இருந்தும் இறைவன்பால் உய்க்கும் ஆசிரியரின் அருள் நினைந்து உவந்தும், அவர் சுட்டிய நெறிப்படியே இருத்தலாகும். *'வளவுரை தந்தவன்'* என்பது ஆசாரியரையும் *'தந்தவனருளே மன்னிய மாதவத்தோர்'* என்பது அவ்வுரைகளைத் தந்த ஆசிரியரின் அருளே கருதி நிற்றலாகிய மாதவம் புரிகின்ற சீடர்தம்மையும் குறிக்கின்றன.

வேதாந்த தேசிகன் நியாச திலகம் எனும் நூலுள் பாடிய பாடலொன்றில், *'ரங்கநாதனே! குருடன் கண் உள்ளவனைப் பிடித்துக் கொண்டு அவன் உதவியால் நடந்து செல்லுகிறான். நொண்டி ஓடத்துக்குள் வைக்கப்பட்டு ஓடக்காரனால் கொண்டு போகப்படுகிறான். சேவகனின் சுற்றத்தார் அரசனை அறியாத போதும் எல்லாப் போகங்களையும் அனுபவிக்கின்றனர். அப்படியே கருணையுள்ள ஆசாரியன் உன்னையடைய வழி செய்கிறான்'*[30] என்று குறிப்பதும் ஈண்டு எண்ணத்தக்கது. ஸந்மதகாரிகாவளி தான் சுட்டிய மூன்று நிஷ்டைகளில் ஆசாரிய நிஷ்டையே சிறந்தது என்று குறிப்பிடுகின்றது.

ஸ்ரீ தேசிகப் பிரபந்தமும் ஆசாரியனுடைய அருளைப் பல பாடல்களில் வியந்து போற்றும்.

*தம்பரம் என்றிரங் கித்தள ராமனம் தந்தருளால்*
*உம்பர் தொழும்திரு மால்உகந்து ஏற்கும் உபாயமொன்றால்*
*நம்பிற வித்துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்* (தேசி. பிர. 1)

*ஆளும் அடைக்கலம் என்றெமை அம்புயத் தாள் கணவன்*
*தாளிணை சேர்ந்தொக் கும்அவை தந்த தகவுடையார்* (தேசி. பிர. 46)

*திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மால்இதய*
*மருவிட மென்ன மலரடி சூடும் வகைபெறும்நாம்*
*கருவுடன் வந்த கடுவினை யாற்றில் விழுந்தொழுகாது*
*அருவுடன் ஐந்தறி வார்அருள் செய்ய அமைந்தனரே* (தேசி. பிர. 47)

என்ற பாடல்களில் ஆசாரியன் கருணையுடன் உய்வழி சுட்டிய பான்மையைப் போற்றுகின்றார். இங்ஙனம் உய்வழி சுட்டிய ஆசாரியரையே தொழுது அவனையே வணங்கிப் பெரும்பேறு கைக்கொண்டவர் மதுரகவியாழ்வார் ஆவார். இவர்தம் *'கண்ணி நுண்சிறுத்தாம்பு'* எனும் பாசுரத்தின்

*மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்*
*நிற்கப் பாடிஎன் நெஞ்சுள் நிறுத்தினான்*
*தக்க சீர்ச்சட கோபன்என் நம்பிக்குஆட்*
*புக்க காதல்அடி மைப்பயன் அன்றே* (நாலா. 745)

என்ற பாடல் *'ஆசாரியனுக்குச் செய்த அடிமைத் தொண்டு பயனானது'* என்று குறிப்பிடுகிறது. இங்ஙனம் ஆசாரிய நிஷ்டையில் ஈடுபட்டு மதுரகவியாழ்வார் உய்ந்ததை வேதாந்த தேசிகன்,

*அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க*
*வருமறைகள் தமிழ்செய்தான் தானே கொண்டு*
*துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்*
*தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே*
(தேசி. பிர. 41)

என்று பாடியருளினார்.

*'களவு ஒழிவார் எமர்என்ன இசைந்தவர்க்கும்'* (தேசி. பிர. 242) என்னும் தொடர் பாகவதநிஷ்டையில் ஈடுபட்டாரைக் குறிக்கின்றது. பாகவதநிஷ்டையாவது, இறைவன் வேறு, அடியார் வேறு என்று கருதாது தூய மனமுடன் அடியார்க்குத் தொண்டு புரியும் தன்மையில் இறைவனை வழிபட்டுச் சரணடைதல் ஆகும். அதாவது பூரண அதிகாரியாய்ச் சரணாகதி செய்யத்தக்க அடியார் சுவநிஷ்டையாய்ச் செய்யும் சரணாகதியில், அவ்வடியார்க்குத் தொண்டொன்றே கருதிய மனத்தால் அடங்கியிருத்தலாகும். ஸ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில் வேதாந்த தேசிகன்,

*'நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்கு உய்த்தனன்' என்றும் 'வன்மையாவது நின் கோயிலில் வாழும் வைட்டணவன் என்றும் வன்மை' என்றும் சொல்லுகிற பாகவதபிமான - பகவத் விஷய வாசாதிகளுக்கும் தன் பக்கலிலேயாதல் - பிறர் பக்கலிலேயாதல், முன்பேயாதல் - பின்பேயாதல் ஓர் உபாயத்துக்குண்டு.எங்ஙனேயென்னில், இவை உபாஸநத்திலேயாதல் - பிரபத்தியிலேயாதல் மூட்டியும்...*[32]

என்று குறிப்பிடுதல் ஈண்டு எண்ணத்தக்கது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலும் ஆழ்வார் பலர் அடியார்க்கு அடியாராய்த் தம்மைக் கருதி நின்றனர். இத்தன்மையைத் தொண்டரடிப்பொடியாழ்வார்,

*வானுளார் அறியலாகா வானவர் என்பராகில்*
*தேனுலாம் துளபமாலைச் சென்னியாய் என்பராகில்*
*ஊமை யினகள்செய்யும் ஊனகார கர்களேனும்*
*போனகம் செய்தசேடம் தருவரேல் புனிதமன்றே* (நாலா. 912)

என்று சுட்டுவார். நம்மாழ்வாரும்,

*வியன்மூ வுலகு பெறினும் போய்தானே தானே யானாலும்*
*புயல்மே கம்போல் திருமேனி அம்மான் புனைபூக் கழலடிக்கீழ்ச்*
*சயமே அடிமை தலைநின்றார் திருத்தாள் வணங்கி இம்மையே*
*பயனே இன்பம் யான்பெற் றதுஉறுமோ பாவி யேனுக்கே*

(நாலா. 3771)

எனத் திருமாலின் அடியினைச் சரணடைந்த இறையடியார்களுக்குத் தம் தொண்டைப் புலப்படுத்துகிறார். இவ்வகையில் அடியார்க்குத் தொண்டு புரியக் கருதி நிற்றலின்மூலம் சரணாகதியைக் கருதுதல் பாகவத நிஷ்டை என்றுரைக்கப்படும்.

*'களவு ஒழிவார்'* என்ற தொடர் இவ்வான்மா தனது என்று எண்ணும் குற்றம் கழிந்த பாகவதரைக் குறித்தது. *'எமரென்ன இசைந்தவர்க்கும்'* என்பது அப்பாகவதர்களைத் தம் சுற்றத்தாரைக் கொண்டு தொண்டுபுரியக் கருதும் பாகவத நிஷ்டையினரைக் குறிக்கின்றது. தேசிகப் பிரபந்தம்,

*அலையற்ற ஆரமு தக்கடல் அக்கடல் உண்டமுகில்*
*விலையற்ற நன்மணி வெற்பு வெயில்நில வூங்கு பகல்*
*துலையுற் றனவென்பர் தாமரை சூடும் துழாய்முடியாற்கு*
*இலைஒத் தனவவன் பாதம் பணிந்தவர்க்கு எண்ணுதற்கே*

(தேசி. பிர. 6)

என்ற பாடலில் அடியார் சிறப்பை இறைவனின் மேலாகக் கருதிச் சுட்டும். அத்தகைய பாகவதர் செய்த சரணாகதி நிஷ்டையில் அடங்கியிருக்கும் தன்மையை,

*வேதம் அறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர்*
*நாதன் வகுத்த வகைபெறு நாமவன் நல்லடியார்க்கு*
*ஆதர மிக்க அடிமை இசைந்து அழியா மறைநூல்*
*நீதி நிறுத்த நிலைகுலை யாவகை நின்றனமே* (தேசி. பிர. 62)

என்ற பாடலிலும் சுட்டக் காணலாம். சுவநிஷ்டையாய் ஆசாரியரோ அடியாரோ செய்யும் சரணாகதி, அவருக்குக் கீழிருந்து தொண்டொன்றே

கருதும் சீவர்க்கு உறுதியாகப் பரமபதகதியைத் தந்திடும் என்று வேதாந்த தேசிகன் சுட்டுகிறார். இத் தன்மையை அவர் ஸ்ரீமத்ரகஸ்யத்ரய சாரத்தில்,

> *ஆசாரிய நிஷ்டனுக்கு கைமுதிக நியாயத்தாலே பல சித்தியிலே சந்தேஹமில்லை. ஒருமலையில் நின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹ சரீரத்தில் ஜந்துக்களைப்போலே பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கனம் பண்ண அவரோடு உண்டான குடல்துவக்காலே நாம் உத்தீரணராவோம்.*[33]

என்று விளக்குவது ஈண்டு இணைத்தெண்ணத்தக்கது.

மேற்சுட்டியவகையில் நால்வகையில் ஒன்றைக் கைக்கொண்டாகிலும் பரமபதம் பெறலாம் என்பது வேதாந்த தேசிகன் அருள்மொழியாம். இங்கு சுட்டிய நால்வழியுள் தேசிகப் பிரபந்தத்துள் பலப்படக் குறிப்பிட்டவற்றை நோக்கினால், ஆசிரியர் உரைத்த ஞானத் தெளிவினால் தேறி அவன் உய்த்தபடி செய்கின்ற சுவ நிஷ்டையே பெரும்பாலும் அமையக் காணலாம்.

> *காலம் கழிவதன் முன்னம் கருத்துறக் கண்டிடவே*
> *ஞாலம் புகழுநந் தேசிகர் தாநமை வைத்தனரே*
>
> (தேசி. பிர. 96)

> *கரக்கும் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மையெண்ணிச்*
> *சுரக்கும் சுரவிகள் போற்சொரி கின்றனர் சொல்லமுதே*
>
> (தேசி. பிர. 109)

என்னும் பாடலடிகளில் ஆசாரியரால் கைவரப்பெற்ற ஞானத்தினை நன்றியுடன் வேதாந்த தேசிகன் சுட்டுகிறார். ஆசாரியர் காட்டிய வழியில் தாம் சரண்புகுதலை,

> *சீலம் கவர்ந்திடும் தேசிகர் தேசிக பெருமையினால்*
> *தூலங் களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சறரும்*
> *கோலம் கழிந்திடக் கூறிய காலம் குறித்து நின்றோம்*
> *மேலிங்கு நாம்பிற வோம்வேலை வண்ணனை மேவுதுமே*
>
> (தேசி. பிர. 15)
>
> *வினைத்திரள் மாற்றிய வேதியர் தந்தருள் வாசகத்தால்*
> *அனைத்தும் அறிந்தபின் ஆறும் பயனும் எனவடைந்தோம்*
>
> (தேசி. பிர. 38)

*அறவே பரமென்று அடைக்கலம் வைத்தனர் அன்று நம்மைப்*
*பெறவே கருதிப் பெருந்தக வுற்ற பிரானடிக்கீழ்*
*உறவே இவன்உயிர் காக்கின்ற ஓர்உயிர் உண்மையைநீ*
*மறவேல் எனநம் மறைமுடி சூடிய மன்னவரே*

(தேசி. பிர. 58)

என்ற பாடல்களில் புலப்படுத்துகிறார்.

### 3.6. இயல் முடிபுரை

3.6.1 ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சரணாகதி நெறிகள் என்னும் இவ்வியல் வேதாந்த தேசிகன் பாடற்பொருண்மையில் சரணாகதி பெறுமிடம், சரணாகதியின் தன்மை, சரண்புகு நெறிகள், பிரபன்னர், பிரபன்னர் பண்புகள் ஆகிய கூறுகளைத் தேசிக பிரபந்தத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கியுள்ளது.

3.6.2 சரணாகதி என்னும் பொருண்மை திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகியவற்றை விளக்குமிடங்களில் சுட்டப்பெறுகிறது. மேலும் அடைக்கலப்பத்து முழுமையும் சரணாகதியின் இயல்பை உணர்த்துவதாகும். வைஷ்ணவ தத்துவ மரபைப் பொதுப்பட விளக்கும் அதிகாரசங்கிரகம் முதலான நூல்களில் ஒரு கூறாகச் சரணாகதி விளக்கப்பெற்றுள்ளது.

3.6.3 சரணாகதியின் எளிமை, ஒரு முறையே சரணடைதல், ஆசாரியர் வழியில் சரணடைதல், பக்திநெறியின் இடர் தீர்ப்பது என்ற நிலைகளில் சரணாகதி தேசிகப் பிரபந்தத்தில் விளக்கப் பெறுகிறது. சரணாகதி அங்கங்கள் எனப்படும் சரணாகதி நிலைகளையும் தேசிகப் பிரபந்தம் விளக்குகிறது. இவ்வங்கங்கள் ஐந்தாகவும் ஆறாகவும் சுட்டப்பெறும். அங்கியாகிய ஆன்ம நிக்ஷேபம் மூன்று நிலையாகப் பகுக்கப்படுகிறது.

3.6.4 வேதாந்த தேசிகன், பிரபன்னராகிய சரண்புகுவோர், சரண்புகுதலில் கொண்டிருக்கவேண்டிய ஆன்ம ஈடேற்றத்திற்கான உறுதியுடன் ஆகிஞ்சன்யம், அனன்ய கதித்துவம் என்னும் பண்புகளும் தேவை என்கிறார். இத்தகைய பிரபன்னர் திருப்தர், ஆர்த்தர் என்று வகைப்படுத்தப்படுமாறு அவர்தம் பாடற்குறிப்புகள் காணப்படுகின்றன. சரணாகதியின் வகைகள் நான்காகும். இதிற் சிறந்தது எனப்பெறுவது ஆசாரிய நிஷ்டையாகும். எனினும் நன்குணர்ந்த யோகி தானே செய்யும் சுவநிஷ்டையாக வேதாந்த தேசிகன் சரண்புகுதலை அவர்தம் பிரபந்தங்கள் உணர்த்துகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. ஆர். கேசவய்யங்கார், (முன்னுரை) - தேசிகப் ப்ரபந்தம், ப. 4
2. குருபரம்பரா ப்ரபாவம், ப. 107
3. கலைக்களஞ்சியம், 9.521
4. ஸ்ரீ மத் அழகிய சிங்கர் சுவாமிகள் (44ஆவது பட்டம்), அறிவுள்ளவன் அறிய வேண்டிய முப்பத்திரண்டு, சரணாகதிசாரம், ப. 15
5. ஆர். கேசவய்யங்கார், (முன்னுரை) - முற்கூறிய நூல், ப. 47
6. பி.ஆர்.நரசிம்மன், வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், ப. 12
7. டி.என்.எஸ். ராகவன், சரணாகதித் தத்துவம் ஓராய்வு, பக். 19,20
8. ஆர். கேசவய்யங்கார், (முன்னுரை) - முற்கூறிய நூல், ப. 47
9. இராமதேசிகாசாரியார், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், பா. 7 உரை
10. கி.லக்ஷ்மணன், இந்திய தத்துவஞானம், ப. 353
11. ந. சுப்புரெட்டியார், வைணவச்செல்வம், ப. 138
12. வே.இரா. மாதவன் 'பதிப்புரை' திவ்விய தம்பதியர் புகழ்மாலை, பக். 8,9
13. மு.இராமசாமி, ஆர்வவிளக்கு அம்மணியம்மாள், பாகம் 2, ப.1
14. இராமதேசிகாசாரியார், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், பா. 64 உரை
15. செ.வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, இரண்டாம் பாகம் ப.211
16. வாழ்வியற்களஞ்சியம், 8. 671
17. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 122
18. இந்திரா பார்த்தசாரதி, தமிழ் இலக்கியத்தில் வைணவம், ப. 189
19. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி, சரணாகதி, ப. 11
20. பி.ஆர்.நரசிம்மன், முற்கூறிய நூல் ப.121
21. Raghavadasan, Visishtadvaitam and Vedanta Desika's SriNyasaDasakam P. 40
22. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், யதீந்திரமததீபிகை - ஸந்மதகாரிகாவளி உரை, ப. 196
23. பி.ஆர்.நரசிம்மன், முற்கூறிய நூல் ப. 121
24. வாழ்வியற்களஞ்சியம் 8. 671
25. ஸ்ரீ ஜயதயால்ஜீ கோயந்தகா, கீதை கற்பதன் பயன்கள்; ஸத்யத்தைச் சரணடைவதால் முக்தி, பக். 45, 46
26. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், முற்கூறிய நூல், ப. 198, 199
27. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 168
28. ஸந்மதகாரிகாவளி, ப. 373
29. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 101
30. மேற்கோள் ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 103
31. ஸந்மதகாரிகாவளி, ப. 375
32. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 104
33. மேலது, ப. 103

## சரணாகதியில் இறைவன்

4.0 விசிஷ்டாத்துவைதத்தின் கோட்பாட்டின்படி தத்துவப் பொருள் மூன்றனுள் உயர்ச்சியுடைய தத்துவம் இறையாகும். சீவான்மாவினை உடலாகக் கொண்டு திகழும் இறைவன் அதற்குரிய முத்திப்பேறு மற்றும் நெறிகளை அருளுபவனாயும் விளங்குகிறான். அவனே வழியாகவும் பயனாகவும் திகழ்கிறான். அவன் திருவடிகளைப் பற்றுவார்க்குக் குறையென்ற ஒன்று நேராது. இத்தகைய பெருமைகளுடன் ஆதிமூலமாய், பரம்பொருளாய்த் திகழ்பவன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி ஆவான்.

ஆழ்வார்களும், வழிக்குரவர்களும் திருமாலின் ஐவகை வடிவங்களைத் தம்பாடலில் குறிக்கின்றனர். எனினும் அடியவர் விரும்பிய வடிவில் திகழும் அர்ச்சாவதார வடிவே பலவாறாகப் போற்றப்படுகிறது. இவ்வடிவத்தை இந்திரா பார்த்தசாரதி,

> *மனித குலத்தின் மீதான இறைவனின் கருணை என்பதை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய பாகவதமரபும் பாஞ்சராத்திர இலக்கியங்களும் அர்ச்சாவதாரக் கொள்கையை வலியுறுத்துகிறது [கின்றன]. அர்ச்சை என்பது மிக எளிதில் அடையக்கூடிய அணுக்கத்தன்மை என்பதாகும்.* [1]

என்று விளக்குகிறார். இவ்வணுக்கத்தன்மையே மனிதனை இறைவனோடு சேர்க்கும் நம்பிக்கையை அருள்கிறது. இந்நம்பிக்கை உலகியல் துன்பங்களிலிருந்து விடுபட்டு இறைவனை வழியாகவும் அவனோடு கலத்தலைப் பயனாகவும் கொண்டு வழிபடத் துணை செய்கின்றது. இறைவனை வழியாகக் கொண்டு கலத்தலில் சரணாகதி நெறி பெறுமிடம் குறித்தற்பாலது. இந்நெறி, வைணவ மரபின் உயர் கொள்கைகளுள் ஒன்றாய்த் திகழ்கிறது. இவ்வகையில் சரணாகதியை நெறியாய் அருளிய இறைவன் கருணை, திருமகள் நிலை, சரண்புகுவார்க்கு இறைவன் செய்யும் அருள் ஆகிய செய்திகள் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

## 4.1. இறைவன்

விசிஷ்டாத்துவைதத்தை விளக்குவனவாய் அதன் செழுமையைக் கூறும் பிரபந்தங்களாய் வேதாந்த தேசிகன் தமிழ்ப் பிரபந்தங்கள் திகழ்கின்றன. இவை இறைவனின் திருக்கல்யாண குணங்களை வியந்து போற்றுகின்றன. இறைவனின் இயல்புகளைக் குற்றமற்றவன், அளவிட அரியான், சுத்தசத்துவத்தினன், அணி ஆயுதம் நிறைந்தவன் எனப் பலவாறு சுட்டுகின்றன. பிரம்ம சொரூபமாய் இறைவன் திகழ்தலை,

*அமலன்அவி யாதசுடர் அளவில்லா ஆரமுதம்*
*அமலஉருக் குணங்கள்அணி ஆயுதங்கள் அடியவர்கள்*
*அமலவழி யாத நகரழிந்து எழுங்கா வுடனெல்லாம்*
*கமலையுடன் அரசாளும் . . . . . . . . . . . . . . .* (தேசி. பிர. 248)

*உள்ளபொருள் அனைத்துக்கும் உருவநிலை கருமங்கள்*
*தெள்ளிசைவின் வசமாக்கித் திகழ்ந்துயிராய் உறைகின்றான்*
*அள்ளிருடர்த்து அடியவர்க்கு நலங்கொடுக்கும் திருவுடனே*
*வள்ளல்அரு ளாளர்எனும்* (தேசி. பிர. 249)

என வேதாந்த தேசிகன் குறிப்பிடக் காணலாம். மேலும் வேதாந்த உட்பொருளைத் தெளிந்தவரே பிரபஞ்சகாரணனை உணர்ந்துகொள்ள முடியும். அங்ஙனம் அறிந்த சான்றோர்கள் நாராயணன் ஒருவனே பரன் என்று தெளிந்து வணங்கினர் என வேதாந்த தேசிகன் குறிப்பிடுகின்றார்.

*வாதியர் மன்னுந் தருக்கச் செருக்கின் மறைக்குலையச்*
*சாது சனங்கள் அடங்க நடுங்கத் தனித்தனியே*
*ஆதி எனாவகை ஆரண தேசிகர் சாற்றினர்நம்*
*போதுஅம ருந்திரு மாதுடன் நின்ற புராணனையே*
(தேசி. பிர. 52)

ஸ்ரீமந் நாராயணன் அல்லாமல் ஒரு தெய்வம் பர சொரூபமாகாது என்பதைத் தேசிகன் முன்னாசாரியார் கூற்றாக நிறுவுகின்றார். முன்னாசாரியரான நம்மாழ்வார் *'ஒன்றும் தேவும்'* (நாலா. 3330) என்றும் *'உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்'* (நாலா. 3295) என்றும் கூறுதல் இணைத்து எண்ணத்தக்கது.

அனைத்துப் பொருளிலும் பரவி நிற்கும் பரம்பொருளை எண்ணி எஞ்ஞான்றும் சிந்தித்து இருக்கும் உணர்வு, ஆன்மாவை அவன் திருவடிகளிலே சேர்க்கும்.

எனவேதான் வேதாந்த தேசிகன்,

*நிலைதந்த தாரக னாய்நிய மிக்கும் இறைவனுமாய்*
*இலதொன்று எனாவகை எல்லாம் தனதெனும் எந்தையுமாய்த்*
*துலையொன்று இலையென நின்ற துழாய்முடி யான்உடம்பை*
*விலையின்றி நாமடி யோம்எனும் வேதியர் மெய்ப்பொருளே*

(தேசி. பிர. 49)

என்ற பாடலில் பரமாக நிற்கும் இறைவனை அணுகுதலன்றி வேறு செயல் ஏதும் ஆன்மாவிற்கு முதன்மையாகாது என்கின்றார். எனவே எந்தக் காரணமும் பொருட்டுச் சாராமல் இறைவனுக்கு அடிமைபுக வற்புறுத்துகின்றார்.

இத்தகைய தொடர்பே இறைவன் கருணையைப் பெறவும் சரணடைந்து முத்திப்பேறு பெறவும் துணை செய்யவல்லது. அவனை நினைந்தும் உணர்ந்தும் உருகிடும் பேறு யாவர்க்கும் வாய்ப்பது அன்று.

### 4.1.1. இறைக்கருணை

உலகியலில் இடருறும் சீவர் மேன்மையுயர் உலகம் சேர்ந்திட இறைக்கருணை இன்றியமையாதது. பி.ஆர். நரசிம்மன் சரணாகதியின் அடிப்படைப் பற்றி கூறுகையில்,

*இறைவனை அடைய அவனது அருளே வழி, தன் முயற்சி அன்று; அவனது உடைமையாகிய உயிரைப் பெற அவனே முயல்கின்றான். அதற்கு இசைவாக இருப்பதை வேண்டுவது என்னும் கருத்தே பிரபத்தியின் அடிப்படை உணர்வாகும்.*[2]

என்று குறிக்கிறார். டி.என்.எஸ்.இராகவன் குறிப்பிடுகையில்,

*ஆசார்ய ப்ராப்தி ஏற்பட அவரிடமிருந்து க்ஞானம் பெற்று . . . . . . . . சரணாகதி செய்ய, எம்பெருமான் மோக்ஷமளிக்க விழைகிறான். சரணாகதி செய்யாதவர்கட்கு அவன் மோக்ஷமளித்தால் பக்ஷபாதம் ஏற்படும் நிர்க்குணத்வம் முதலிய தோஷங்கள் அவனுக்கு ஏற்படும். எனவே சிறிய உபாயமான சரணாகதியை எதிர்பார்க்கிறான்.* [3]

என்று குறிப்பிடுகின்றார். வீடுபேறு அடையவேண்டுமென்ற தன்முனைப்பைச் சிறிதளவாயினும் வெளிப்பட்டுச் சரணடையும் போதே இறைவனுடைய அருட்பார்வை சீவர்களின் மேல்படுகிறது. தேசிகன் பல இடங்களில் சீவர்கள் ஆசாரியர் காட்டிய நெறிப்படி சரண்புக வேண்டும் என்றுரைத்தல் சீவனுக்குரிய தன் முயற்சியை வலியுறுத்தியே எனலாம். எனவேதான் ஶ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில், வேதாந்த தேசிகன்,

*தான் ரக்ஷிக்க மாட்டாததொரு வஸ்துவை ரக்ஷிக்க வல்லவனொருவன் பக்கலிலே சமர்ப்பிக்கும் போதுதான் அவன் திறத்தில் அனுகூலாபி சந்தியையுடையனாய் ப்ரதி கூலாதிபி சந்தியை தவிர்ந்து 'இவன் ரக்ஷிக்க வல்லன். அபேக்ஷித்தால் ரக்ஷிப்பதும் செய்யும்' என்று தேறித் தான் ரக்ஷித்துக்கொள்ள மாட்டாமையை அறிவித்து நீ ரக்ஷிக்க வேண்டுமென்று அபேக்ஷித்து ரக்ஷ்ய வஸ்துவை அவன் பக்கலிலே சமர்ப்பித்து.* [4]

என்றுரைக்கிறார். தம்மை இறைவனிடத்து அடைக்கலப்படுத்திய ஆழ்வார்களின் இறையுணர்வு நிலையைத் தேசிகன் தாமும் உணர்ந்து உரைக்கிறார்.

இவ்வகையில் ஆசாரியர் வாயிலாக இறைப்பொருண்மையை உணர வைக்கிறார். இறைவனை உணர்கின்ற பேறு இறைக்கருணையாலேயே கிட்டும். உணர்வின்பம் தூண்டப் பிரபத்திக்குத் தன்னை இசைவுபடுத்தி நிற்றல் சீவர்களின் கடப்பாடாகும். இச்சீவர்களைக் காக்கும் பொறுப்பு இறைவனது ஆகிறது.

*கழியாத கருவினையில் படிந்த நம்மைக்*
*காலமிது என்றொருகால் காவல் செய்து*
*பழியாத நல்வினையில் படிந்தார் தாளில்*
*பணிவித்துப் பாசங்கள் அடைய நீக்கிக்*
*கழியாத செவ்வழியில் துணைவ ரோடே*

*தொலையாத பேரின்பம் தரமேல் ஏற்றி*
*அழியாத அருளாழிப் பெருமான் செய்யும்*
*அந்தமிலா வுதவியெலாம் அளப்பார் ஆரே* (தேசி.பிர. 125)

என்ற பாடலில் இறை எண்ணத்தை ஆசிரியன் வாயிலாக உணர்த்தி உபாயம் காட்டி வீட்டின்பம் நல்கும் இறையருளை விளக்குகிறார்.

*அறிவும் அனைத்தும் இலாஅடி யோமை அடைக்கலங்கொண்டு*
*இறைவன் இன்னருளால் எங்கள் சோகம் தவிர்த்தனனே*
(தேசி.பிர. 325)

என்ற பாடலிலும் அடியார் மனத்தை இருப்பிடமாகக் கொண்டு அகலாத இறைவன் அறிவும் பிறநெறிகளும் அறியாத எளியோர்க்கு அடைக்கலம் தர உறவாய் நிற்கின்ற செய்தியை வேதாந்த தேசிகன் குறிப்பிடக்காணலாம்.

மேலும் தன்னை அடையாதார்க்கு அரியனாய் நிற்கும் இறைவன் அடைக்கலம் புகவேண்டி இரப்பவர்கட்கு மிக எளியனாய் நிற்கின்றான். நம்மாழ்வார்,

*யாரும் ஓர் நிலைமையன் என அறிவு அரிய எம் பெருமான்*
*யாரும் ஓர் நிலைமையன் என அறிவு எளிய எம் பெருமான்*

என்ற அடிகளில் அடியவர்க்கு எளியனாகும் இறைத்தன்மையைக் குறிப்பிடுகிறார். திருமழிசையாழ்வாரும் *'கலைக்கணங்கள் சொற்பொருள் கருத்தினால் நினைக்கொணா'* (நாலா. 767) என்பதால் இறைவனின் அருமையும் எளியவர்க்காய்க் கொள்ளும் எளிமையும் புலனாகும்.

வேதமும் பிற அறிவுத் துறைகளும் அறிய ஒண்ணா இறைவன் தானே அடியாரை நெருங்குகிறான் எனும் கருத்தில் வேதாந்த தேசிகனின் கீழ்க்காணும் பாடல் அமைகின்றது.

*பூவலரும் திருவுந்திப் புனிதன் வையம்*
*பொன்னடியால் அளந்து இருவர் போற்ற நின்ற*
*நாவலரும் கலைகளெலாம் தன்னை நாட*
*நாடாது நன்னிதியா நணுகு நாதன்*
*கோவலனாய் நிரையளித்த நிறைபோல் வேதங்*

*கோவாகக் கோமானா யதன்பால் சேர்த்துக்*
*நாவலிது நல்லுயிருக்கு என்று காட்டும்*
*கார்த்தயுகக் கதிகண்டோம் கரைகண் டோமே*
(தேசி.பிர. 197)

வாமன அவதாரத்தில் உலகளந்து இறைவன் நின்றபோது உலகளந்த பாதத்தைப் பிரமன் வணங்கினான். அப்பாதத்திற்குப் பிரமன் செய்த திருமஞ்சனத் தீர்த்தத்தைச் சிவன் தலையில் தரித்தான்.

இச்சிறப்புடைய இறைவன் வேதம் முதலான சாத்திரங்கள் அறிய அயலாத அரியனாக விளங்குகிறான். அவனே தன் அடியார்கட்குத் தன்னைத் தேடாத வண்ணம் சேமநிதியாய் அவர்களை நெருங்குகின்றான் என்ற கருத்தினில் இப்பாடல் இலங்குகிறது.

இங்ஙனம் பரசொரூபமாய் நிற்கும் இறைவன், இறையருளால் சரணாகதியை நாடல், நாடுவார்க்கு உதவியாக இறைவன் எளிமை, கருணை முதலிய அருங்குணங்களால் திகழ்தல் ஆகியன விளக்கப்பெற்றுள்ளன.

### 4.2. சரணாகதி வழி அருளல்

சரணாகதி நெறி சீவரின் கடைத்தேற்றத்திற்கு இறைவனால் அருளப் பெற்றுள்ளது. பக்தி முதலியநெறி அறியாதார், அறிந்தும் அவற்றின் நெறியின் கடுமையினால் கடைப்பிடியாதார் மேற்கொண்டு உய்ய, உகந்ததொரு நெறியாகச் சரணாகதி இறைவனால் அருளப்பட்டுள்ளது. இதனை வேதாந்த தேசிகன்,

*தண்துளவ மலர்மார்பன் தானே சொன்ன*
*தனித்தருமந் தானெமக்காய் தன்னை என்றும்*
*கண்டுகளித்து அடிசூட விலக்காய் நின்ற*
*கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே* (தேசி.பிர. 85)

என்ற பாடலினால் தான் சொன்ன கீதை வழியே எம்பெருமான் அடைக்கலம் தந்தருள்கின்றான் என்கிறார். மேலும் அடியவர் சரணடைந்தால் அவர் வீட்டுநிலை உயரும் பொறுப்பைத் தானே மேற்கொள்ளுவதாய்ச் சொன்ன நல்லுரையை ஆசிரியர்,

*நீண்டாகு நிறைமதியோர் நெறியில் கூடா*
*நின்றனிமை துணையாக என்றன் பாதம்*
*பூண்டாலுன் பிழைகளெலாம் பொறுப்பன் என்ற*
*புண்ணியனார் புகழனைத்தும் புகழு வோமே*
(தேசி.பிர. 86)

எனக் குறிப்பிடுகின்றார். சரணடைதலுக்கு வழிகாட்டிய நிலையைத் துவயமாகவும் இங்ஙனம் சரணடைந்தாரைக் காக்கும் பொறுப்பு தனதென்ற நல்லுரையைச் சரமசுலோகமாகவும் இறைவன் அருளினான். இக்கருணையை வேதாந்த தேசிகன் பல இடங்களில் வியந்து வணங்குகிறார்.

### 4.3. சரணாகதியில் திருமகள்

விசிஷ்டாத்துவைதத்தின்படி திருமகள் இறைவனிடமிருந்து நீங்காதிருக்கும் பெற்றியள். இவர்களைத் திவ்ய தம்பதியர் என்று வைஷ்ணவ உலகம் கொண்டாடும். சரணாகதி நெறியில் திருமகளும் பெரும்பங்குடையாள். வேதாந்த தேசிகன்,

*என்றுமோர் ஏத மின்றி இரவியும் ஒளியும் போல*
*ஒன்றிநின் றுலகு அளிக்கும் உகமிகந்து அடிமை வைத்தீ*
*ஒன்றுமூன்று எழுத்தாய் ஒன்றும் ஒன்றிலொன்று உடையமுன்னே*
*ஒன்றிய இரண்டை உள்ளி உளரென உய்ம்மி னீரே* (தேசி.பிர. 296)

என்ற பாடலில் திருமகள் திருமாலை விட்டகலாது அருள் புரிவதைக் குறிக்கின்றார். இப்பாடலுக்கு கீழ்க் கண்டவாறு இராமதேசிகாசாரியார் உரை எழுதுகின்றார்.

*சூரியனும் அவனது பிரகாசமும் பிரியாதிருப்பது இயல்பு. அங்ஙனமே எம்பெருமானும் பிராட்டியும் கணநேரமும் பிரியாது நின்று உலகத்தைக் காத்து வருகின்றனர். இவ்விருவருக்குமே அடியாராக அனுசரித்தல் உங்களது கடமையாகும். . . . . . . . ப்ரணவம் மூன்று எழுத்துக்கள் சேர்ந்த ஒரு சொல்லாய் இருக்கின்றது. . . . . . . உகாரத்திற்கு பிராட்டி என்று ஒரு பொருள் உண்டு. அகாரம் எம்பெருமானைக் கூறும். ஆக இந்த இரண்டு அக்ஷரங்களின்*

*அர்த்தமாகிய திவ்விய தம்பதிகளுக்கு அடியாராக அநுசந்தித்து நீங்கள் பிறந்த பயனைப் பெற்று உய்வீர்களாக.*[5]

சரணாகதி நெறியைக் குறிப்பிடும் துவயம் திருமகளின் கருணையினால் விளைகின்றது. உலகியலில் வருந்தும் தன் குழந்தைகளாகிய சேதனர்தம் உய்வுக்கு அன்பு பூண்ட பிராட்டி இறைவனை வேண்டத் துவயத்தை அவன் அருளினான். துவயம் வருமாறு,

**ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே**
**ஸ்ரீமதே நாராயணாய நம:**

உபநிஷத்தில் தனித்துக்கிடந்த இரு தொடர்களை இணைத்து ஒரு மந்திரமாக்கித் துவயத்தை இறைவன் அருளினான். இதன் முற்பகுதி வழியையும் பிற்குதி பயனையும் கூறுகின்றன. இத்தகைய கதி வழியை இறைவன் மூலமாகத் திருமகள் பெற்றுத் தந்தமையை *'இன்னமுதில் பிறந்தாள் இதங்கேட்க உரைத்த பிரான்'* (தேசி.பிர. 303) என்ற தொடரால் உணரலாம். இதமாவது வழியாகும் என்பது முன்னுரைக்கப்பட்டது (1.6). மேலும் திருமகள் சீவர் பாற்கொண்ட கருணையை,

*அருவுரு ஆனவை தன்னை அடைந்திடத் தானடைந்து*
*வெருவுரை கேட்டு அவை கேட்பித்து அகற்றும் வினைவிலக்கி*
*இருதலை யன்பத னால்எமை இன்னடி சேர்த்தருளும்*
*திருவுடனே . . . . . . .* (தேசி.பிர. 304)

என்றும் குறிக்கிறார். இப்பாடல் திருமகளின் அருங்கருணையை ஆறு நிலைகளில் விளக்குகின்றது. 'ஸ்ரீ' என்ற வடமொழிப் பதம் ஆறுவகைச் சொல்லடியாய்ப் பிறந்தது.

இவ்வடிநிலைகள்,

ஸ்ரீயதே (sriyate) - அடையப்படுகின்றாள்
ஸ்ரீயதே (sriyate) - அடைகின்றாள்
ச்ருணோதி (srinōti) - கேட்கிறாள்
ச்ராவயதி (srāvayati) - கேட்கச்செய்கிறாள்
ச்ருணாதி (srnāti) - நீக்குகின்றாள்
ஸ்ரீணாதி (srinati) - பக்குவநிலை செய்கின்றாள்

என்ற பொருளைத் தருகின்றன. அடையப்படுதலாவது ஆன்மகதி வேண்டுவாரால் 'அடையப்படுகிறாள்' என்பதாகும். அடைதல் என்பது தன்னை அடைந்தவர் பொருட்டு இறைவனைத் தானும் 'அடைதல்' ஆகும். கேட்டலாவது 'இறைக்கழல்களில் சேர்ந்திடுக' என்ற அடியாரின் அபயக் குரலைக் 'கேட்கிறாள்' என்பதாகும். சேதனர்களின் அபயக் குரலை இறைவனுக்குக் கேட்குமாறு விண்ணப்பம் செய்கிறாள் என்பதே, 'கேட்கச்செய்கிறாள்' என்பதாகும். 'நீக்குகிறாள்' என்பது அடியவரின் வினைத்தளைகளை நீக்கியருளும் தன்மையள் என்பதைக் குறிக்கின்றது. 'பக்குவநிலை செய்தல்' என்பது தன்னை அடைந்தவர்கள் இறைத்தொண்டு செய்யும்படி அவர்களுடைய குணங்களைப் பக்குவமாக்குகின்ற குணத்தைக் குறிக்கின்றது.

பிள்ளை உலகாசிரியார், *'உபதேசத்தால் மீளாதபோது சேதனனை அருளாலே திருத்தும், ஈசுவரனை அழகாலே திருத்தும்'* [6] என்பார். சேதனனுக்கு அருள் புரியக் கருதிய திருமகள் அவன்பால் இறைவன் கருணை கொண்டிடச் செய்வாள். இத்தகைய செயல்கள் புருஷகாரம் எனப்படும். அதாவது பலன் தரவல்ல ஒருவனை நெருங்கிப் பலன் வேண்டி இரப்போனால் வழியாகக் கொள்ளப்படுபவன் ஆவான். இங்ஙனம் பிரபத்தியை நாடுகையில் திருமகளை நோக்கி வேண்டி இரத்தல் புருஷகாரப்பிரபத்தி ஆகும்.

ஈசுவரன் மட்டிலும் வீடுபேறு அளிப்பதற்கு உரியவன் என்பதும் திருமகள் ஈசுவரனுடைய ஆக்கல், அழித்தல் முதலான தொழில்களில் பங்குபெறாதமைவது போலவே வீடுபேறு அளிப்பதிலும் பங்குபெறாள் என்பதும் தென்னாசாரிய மரபாம். புருஷகாரபிரபத்தியில் சீவருய்யத் திருமகள் வழிகாட்டுவாள் என்று தேசிக மரபு கொள்கிறது. [7]

திருமகள் வழியறியார்க்கு வழிகாட்டி அருள்கூட்டி வீட்டின்பம் பெறத் துணை நிற்கிறாள். அவள் உய்யவேண்டிய நிலையிலிருந்து, பின் உய்ந்து அருள் நல்குபவள் அல்லள். சேதனர்களின் மேலான ஈசுவரத் தத்துவத்தின் ஓரங்கமாய்த் திகழும் பெற்றியள்.

திருமகளின் புருஷகாரத்தை ந.சுப்புரெட்டியார்,

*இந்தப் புருஷகாரத்துவம் எம்பெருமானோடு பிராட்டி கூடியிருக்கும் நிலையிலும் பிரிந்திருக்கும் நிலையிலும் காணப்பெறும். கருணையே*

*வடிவம் கொண்டதைப் போன்ற ஈசுவரத்தன்மை கீழடங்கி அவனுடைய அருட்டன்மை மேல் கிளம்பிச் செய்பவருமான பிராட்டியார் உடன் இருந்ததனால் காகாசுரன் பிழைத்தான். இவர் பிரிந்திருந்தமையால் இராவணன் இராமபிரான் அம்பிற்கு இலக்காகி உயிரிழந்தான்.* [8]

என்று இரு நிகழ்ச்சிகளின் வாயிலாக ஒப்பிட்டு விளக்குகிறார். மும்மணிக்கோவையிலும் திருமகளின் புருஷகாரப் பிரபத்தியினை வேதாந்த தேசிகன் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

*நின்படிக்கு எல்லாம் தன்படி ஏற்க*
*அன்புடன் நின்னொடு அவதரித்து அருளி*
*வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து*
*ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று*
*தன்னடி சேர்ந்த தமருனை அணுக*
*நின்னுடன் சேர்ந்து நிற்கும் நிந்திருவே . . . . . .* (தேசி.பிர. 347)

என்று பலவாறு குறிப்பிடுகின்றார்.

சரணாகதியில் திருமகள் நிலை என்பது அஞ்ஞானம் சூழ்ந்த ஒருவனை மெய்ஞ்ஞானம் பெறவைக்கும் ஆசாரியன் கருணையை ஒத்துள்ளது. திருமகளே ஈசுவரனிடத்துப் பிறக்கும் கருணையைச் சேதனர்கள் உணர வைத்தாள். சரணாகதியில் தானும் ஒரு பங்காய் நின்று சேதனர்கட்குண்டான வினைகளை நீக்கி அருள்கின்றாள். தேசிகன் ஶ்ரீமத் ரகஸ்யத்ரய சாரத்தில் குறிப்பிடும் போதும்,

*தைத்திரியத்தில் ஶ்ரீய: பதித்வசின்னத்தாலே மகா புருஷனுக்கு வ்யாவ்ருத்தி ஓதினபடியை நினைத்து திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்று உபக்ரமித்துச் சார்வு நமக்கு என்கிற பாட்டிலே ப்ரதிபுத்தரான நமக்குப் பெரிய பிராட்டியாருடனே இருந்து என்றும் ஒக்கப் பரிமாறுகிற இவனையொழிய ப்ராப்யாந்தரமும் சரண்யாந்தரமும் இல்லை; இத்தம்பதிகளே ப்ராப்யரும் சரண்யரும் என்று நியமிக்கப்பட்டுள்ளது.* [9]

என்று திருமகளுடன் இணைந்த நிலையிலேயே சரணடைய வேண்டும் என்கிறார். திருமால் அந்தாதியின்,

*பொருந்திய மெய்அன் பிலாத்தமியேன்மனம் புண்படுமுன்*
*வருந்திரு மால்சொன்ன வார்த்தைமெய்யேல்எம்மை வஞ்சித்திடாள்...*
*திருந்திழை யார்எவர்க் கும்தெய்வமான திருமகளே* (திருமால். 100)

என்ற பாடலும் புருஷகாரபிரபத்தியாகத் திருமகள் நிற்றலையே குறிக்கிறது. இது திருமகள் சேதனனாகிய சீவனின் உய்விற்கு வழிகாட்டி இறைவனிடம் அணைவிப்பாள் என்னும் தேசிக தரிசனத்தின் தொடர்ச்சியாக அமைகின்றது.

## 4.4. உபாயமும் பயனும்

சேதனர்கள் தாம் உய்யும் பொருட்டுப் பெருமானின் திருவடிகளைச் சரணடைந்து முத்தி வழியைக் காண்கின்றார்கள். அவர்கட்கு அத்திருவடிகளின் திவ்யச் சிறப்பில் அழுந்தி இறைவனையே எப்போது வணங்கி இருத்தலாகிற முத்திபேறு உரிய பயனாகின்றது. இத்தகைய இறைவன் திருவடிகளை உபாயமாயும் பயனுமாயும் வேதாந்த தேசிகன் பல பாடல்களில் குறிக்கக் காணலாம். இதனைக் கீழ்க் காணும் பாடல் வழியும் அறியலாம்.

*வினைத்திரள் மாற்றிய வேதியர் தந்தநல் வாசகத்தால்*
*அனைத்தும் அறிந்தபின் ஆறும்பயனும் எனவடைந்தோம்*
*மனத்தில் இருந்து மருத்துஅமு தாகிய மாதவனார்*
*நினைத்தன் மறத்தல், அரிதாய நன்னிழல் நீள்கழலே* (தேசி.பிர. 30)

மேலும் சாத்யோபாமாகிய அடியாரால் செய்யப்படும் உபாயம் அன்றிச் சித்தோபாயம் எனப்படும் முன்பே நன்கு விளங்கி நிற்கும் உபாயமாகவும் இறைவன் திகழ்தலை 'மன்னிய வன்சரண்' என்று குறிக்கிறார் (தேசி.பிர. 69). இங்ஙனம் இறைவன் குறிக்கப்படுதலைக் கோபால தேசிகாசார்யாரும் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

*நாம் செய்யும் ப்ரபத்தியே நமக்கு நேராக மோக்ஷத்தைக் கொடுப்பதில்லை. அந்த ப்ரபத்தியினால் ப்ரீதி அடைந்த பகவான்தான் நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறான். ஆக நமக்கு மோக்ஷம் கிடைக்கக் காரணம் நாம் செய்யும் ப்ரபத்தியினால் ப்ரீதி அடையும் பகவான்தான். அதனால் எம்பெருமான் ஸித்தோபாயம் (ஸித்த உபாயம்) என்று சொல்லப்படுகிறான். ப்ரபத்தி ஸாத்யோபாயம் (ஸாத்ய உபாயம்) என்று சொல்லப்படுகின்றது.* [10]

இறைவனின் கழலடியிலிருந்து நீங்காது எப்போதும் வணங்கி, அவன் திருக்கூட்டத்தாரோடு இறைத்துதிகள் பலபாடி வைகுந்தம் வதிதலே சேதனர்க்குரிய முத்திப் பேறாகும். எந்தத் திருவடிகள் சேதனர்களுக்குப் பயனாக நேர்கின்றனவோ, அவையே இந்நிலவுலகில் சேதனர்கட்கு வழியாயும் திகழ்கின்றன. இத்திருவடிகளின் அருட்சிறப்பை நவமணிமாலையின்,

*ஒருமதி அன்பரு ளங்க வர்ந்தன*
*உலகம் அடங்க வளர்ந்து அளந்தன*
*ஒருசடை ஒன்றிய கங்கை தந்தன*
*உரகப டங்கள் அரங்கு கொண்டன*
*தருமம் உயர்ந்தது இதுஎன்ன நின்றன*
*தருமன் இரந்தது இசைந்து சென்றன*
*சகடம் உடைந்துக லங்க வென்றன*
*தமர்கள் அருந்தும் மருந்துஇது என்பன*
*திருமகள் செய்யக ரங்கள் ஒன்றின*
*திகழ்துளவு உந்தும் மணம்க மழ்ந்தன*
*செழுமணி தொண்டசி லம்புஇ லங்கின*
*சிலைதனில் அன்றோர் அணங்கு உமிழ்ந்தன*

(தேசி.பிர. 357)

என்ற பாடலில் பல அவதார நிகழ்வுகளுடன் குறிப்பிட்டு வேதாந்த தேசிகன் வணங்குகிறார். இவை உபாயமும் பலனுமாய்த் திகழும் திருவடிகளைக் கதியாகக் காட்டும் ஆசாரியன் அருள் மொழிகளாய் அமைவன.

உபாயமும் பலனுமாய் விளங்கும் திருவடிகளைச் சிந்தித்துச் சரண் புகுவோர்க்கு அருள் கூட்ட இறைவன் ஆர்வமுடையனாய் விளங்குகின்றான். வேறோர் பற்றுத் தேடாமல் தன்னை அடைந்த அடியார்க்கெல்லாம் அவர்தம் பிழை கருதாது அவரையும் பொருளாகக் கருதி, வினைகெடுத்து விண்ணவராம் நித்ய சூரிகளோடு அவரைக் கூட்டிட விரைகின்றான் என்று நெஞ்சோடு கிளத்தலாய்க் கூறி மனத்தைக் கவலையற வேதாந்த தேசிகன் அறிவுறுத்துகின்றார்.

இதனை,

*மற்றொரு பற்றின்றி வந்தடைந் தார்க்கெல்லாம்*
*குற்றம் அறியாத கோவலனார் - முற்றும்*
*வினைவிடுத்து விண்ணவரோடு ஒன்றவிரைகின்றார்*
*நினைவுடைத்தாய் நீ மனமே நில்லு* (தேசி.பிர. 36)

என்ற பாடல் வழி உணரலாம். தேசிகனின் இக்கருத்திற்கு அடிமூலமாய் நம்மாழ்வாரின்,

*நண்ணினம்நா ராயணனை நாமங்கள் பலசொல்லி*
*மண்ணுலகில் வளமிக்க வாட்டாற்றான் வந்துஇன்று*
*விண்ணுலகம் தருவனாய் விரைகின்றான் விதிவகையே*
*எண்ணினவா றுஆகாஇக் கருமங்கள் என்நெஞ்சே* (நாலா. 3948)

என்ற பாடல் அமைகின்றது. ஸ்ரீமந் நாராயணனை நண்ணி நம்மாழ்வார் தம் நெஞ்சோடு கிளந்த செய்தியையே தேசிகனும் கொண்டு தமது நெஞ்சை ஆற்றுப்படுத்துகிறார்.

### 4.5. அருள் செய்த நிகழ்வுகள்

சரணடைந்தார்க்கெல்லாம் வாழ்வளிக்கும் பிரான் அங்ஙனம் சரண்புகுந்தாரைக் காத்த சில நிகழ்வுகளைத் தம் பாடலில் வேதாந்த தேசிகன் குறிக்கின்றார். அவை வருமாறு ;

1. காகன் கண் குத்தியது
2. வீடணனுக்கு அஞ்சல் நல்கியது

### 4.5.1. காகன் கண் குத்தியது

திருமகள் சீதையாகவும் இறைவன் இராமனாகவும் பூமியில் அவதரித்து வனவாசம் மேற்கொண்டபோது இந்திரன் மகன் காக வடிவில் வந்து சீதையைத் துன்புறுத்தினான். அப்பெரும் பிழை செய்தவன் மீது இராமன் பிரம்மாஸ்திரம் ஏவிட அது கண்டு அச்சமுற்ற அவன் இந்திராதி தேவர்களையும் முனிவர்களையும் தன்னைக் காக்க வேண்டினான். எல்லோரும் மறுத்துரைக்க வேறு புகலிடமற்று அம்பு ஏவிய அண்ணலையே

சரணடைந்தான். சரணடைந்தவனின் கோரிக்கையை ஏற்ற இறைவன், பிரம்மாஸ்திரம் வீணாகாது போக, அவனது ஒற்றைக் கண்ணைக் குருடாக்கி அருள் செய்தார். இதனால் சரண்யனாய் அடைக்கலம் நல்கி அபராதிகளையும் காக்கும் அருள் உள்ளம் புலப்படும்.

வேதாந்த தேசிகன் இந்நிகழ்வைக் குறிப்பிட்டு இறைவனின் இத்தகைய அருளே சீவர்க்கு வேண்டியது. இவ்வருள்பெற இறைவனின் நீள்கழல்கள் பற்ற வேண்டும் என்கிறார். இதனை,

*ஆகண் டலன்மகன் ஆகிய வாவயிப்பு ஏறியவோர்*
*காகம் பிழைத்திடக் கண்ணழி வேசெய்த காகுத்தனே*(தேசி.பிர. 110)

*மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்ற*
*முனிவர்களும் தேவர்களும் முனிந்த அந்நாள்*
*தாவரிதாய் எங்கும்போய்த் தளர்ந்து வீழ்ந்த*
*தனிக்காகம் தானிரந்த உயிர்வ ழங்கிக்*
*காவலினி எமக்குஎங்கும் கடனென்று எண்ணிக்*
*காணநிலை யிலைச்சினைஅன்று இட்ட வள்ளல்*
*ஏவல்பயன் இரக்கமிதற்கு ஆறென்று ஓதும்*
*எழிலுடையார் இணையடிக்கீழ் இருப்போம் நாமே*
(தேசி.பிர. 114)

என்ற பாடல்களின் வழியாகவும் விளங்க உரைக்கின்றார்.

### 4.5.2. வீடணனுக்கு அஞ்சல் நல்கியது

இராவணனின் கொடுஞ்செயல்களால் அவனைவிட்டு நீங்கிய அவன் தம்பி வீடணன், இராமபிரானைச் சரணடைகின்றான். பகைவனுக்குத் தம்பி, அசுரன் என்று பலர் எடுத்துரைத்து மறுப்பை வெளிப்படுத்திய போது *'தன்னை நம்பி வந்தாரைக் காக்கும் பொறுப்பும் தனதே'* என்றுரைத்து வீடணனைத் தம்பியாக ஏற்கின்றான். இங்ஙனம் ஏற்று அருள் செய்தபோது உரைத்த உயர் கொள்கையை இராமன் கூற்றாக கம்பர்,

*உடைந்தவர்க்கு உதவான் ஆயின்*
*உள்ளதுஒன்று ஈயான் ஆயின்*
*அடைந்தவர்க்கு அருளான் ஆயின்*
*அறம் என்ஆம் ஆண்மை என்ஆம்* (கம்ப. யுத்த. 416)

*மன்னுயிர் எல்லாம் தானே*
*வருவித்து வளர்க்கும் மாயன்*
*தன்னை வுலகம் எல்லாம்*
*தருமமும் எவையும் தானே*
*என்னினும் அடைந்தோர் தம்மை*
*ஏமுறு இனிதின் ஓம்பிப்*
*பின்னும் வீடு அளிக்கும் என்றால்*
*பிறிதொரு சான்றும் உண்டோ* (கம்ப. யுத்த. 419)

*. . . . . . . . அபயம் என்ற*
*போதத்தே அபய தானம்*
*ஈதலே கடப்பாடு என்பது* (கம்ப. யுத்த. 425)

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய சரணாகதியை உவந்து அண்டியவர்க்கு அருள் செய்யக் கருதிய கருணையை இராமபிரான் கூற்றாகவே படைத்து வேதாந்த தேசிகனும் சுட்டுகின்றார்.

*ஒருக்காலே சரணாக அடைகின் றாற்கும்*
*உனக்கடிமை யாகின்றேன் என்கின் றாற்கும்*
*அருக்காதே அனைவர்க்கும் அனைவ ராலும்*
*அஞ்சேல்என்று அருள்கொடுப்பன் இதுதான் ஓது*
*இருக்காலும் எழில்முனிவர் நினைவி னாலும்*
*இவையறியார் செயலுடன்என் இசைவி னாலும்*
*நெருக்கடி நீள்விரதம் எனக்கொன்று என்னும்*
*நெறியுரைத்தார் . . . . . . . . . . . . . . . . .* (தேசி.பிர. 111)

என்னும் இப்பாடலில் மறைகள், ஸ்ம்ருதி, ஆசாரம், இறைவன் உள்ளம் ஆகிய அனைத்தும் சுட்டும் உயரிய நோன்பு சரணடைந்தாரைக் காத்தலே என்று இறைவன் கொண்ட கொள்கை விளக்கப்படுகின்றது. மேலும் உயர் பலனாய் எம்பெருமானை அண்டி உய்ந்தவர் பலர் பற்றியும் வேதாந்த தேசிகன் தம் பாடலில் குறிக்கின்றார்.

*காகம்இராக் கதன்மன்னர் காதலிகத் திரபந்து*
*நாகம்அரன் அயன்முதலா நாகநக ரார்தமக்கும்*
*போகமுயர் வீடுபெறப் பொன்னருள்செய் தமைக்கண்டு*
*நாகமலை நாயகனார் நல்லடிப்போது அடைந்தேனே* (தேசி.பிர. 240)

என்ற பாடலில் காகன், வீடணனேயன்றித் திரௌபதி, கத்திரபந்து, கசேந்திரன், அயன், அரன், ஆகியோர்க்கும் இறைவன் செய்த அருள் பேசப்படுகின்றது. சரணாகதிக்கு முதன்மை உயரிய அன்புகெழுமிய அடிமைநிலை. அது அரிதாகலின் சரண்புகுந்து மேன்மையுற்றாரைச் சான்றாகக் காட்டிப் பிரபத்தியின் பெருமையை இப்பாடல் குறிக்கலாயிற்று.

### 4.6 சரணடைந்தார் பெறும் கதி

சரணடைந்தார்க்கு இறைவன் செய்யும் அருள்வெள்ளத்தைப் பொதுப்படப் பல பாடல்களில் தேசிகன் விளக்கியுள்ளார்.

எம்பெருமானின் அடியவர் யாவர்க்கும் முத்திபெற உரிமையுண்டு. இறைவன் அவர்பொருட்டுத் தரும பூத ஞானம் தந்து காக்கிறான். வினைத் தொகுதியில் பட்டுழா வண்ணம் ஆசிரியன் அடிகளில் சேர்க்கின்றான். ஆசிரியன் நெறிப்படி சீவர்கள் சரணாகதியை மேற்கொள்ளச் செய்கிறான். உபாயம் அநுஷ்டித்தவர்களின் நல்வினை, தீவினை என்ற தளைகளை அறுக்கின்றான். விலங்காய சரீரத்திலிருந்து ஆன்மாவைப் பிரித்து அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதம் சேர்க்கிறான். பரமபதத்தில் சீவர்க்கும் பரிபூரணானுபவம் நேர்கிறது. இச்செய்திகளை,

*அந்தமிலாப்பேரின்பம் அருந்த வேற்கு*
*அடியோமை அறிவுடனே என்றும் காத்துஎம்மை*
*முந்தைவினை நிரைவிழியில் ஒழுகாது*
*முந்நிலையாம் தேசிகர்தம் முன்னே சேர்த்து*
*மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி*
*வழிப்படுத்தி வானேற்றி அடிமை கொள்ள*
*. . . . . . . . . . . . . . . . . . . . . .. . . . . . .*
*இருவிலங்கு கழித்துஇடராம் உடலம் தன்னில்*
*இலங்குநடு நாடியினால் எம்மை வாங்கி*
*ஒருவிலங்கு நெறியல்லா வழியான்மன்னும்*
*உயர்வானில் ஏற்றிஉயிர் நிலையும் தந்து*
*பெருவிலங்காம் அருள்தன்னால் தன்ன டிக்கீழ்ப்*
*பிரியாத அமரருடன் பிணைத்துத் தன்னார்*
*உருவில் அங்கும் இசைவிக்கும்....* (தேசி.பிர. 105,106)

என்ற பாடல்களில் விளங்க உரைக்கக் காணலாம்.

இத்தகு கருணை மழையை விரும்பி இழிவான பலனைப் பற்றாது வாழ்தலே நலம். அதுவே இறைவனின் அபய பிரதாநத்தை அளிக்க வல்லது என்ற கருத்தில் கீழ்க்காணும் பாடலை வேதாந்த தேசிகன் அளிக்கின்றார்.

*பொன்னை இகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தால்*
*மன்னர் எடுப்பதுஅப் பொன்னல தேமன் னுலகனைத்தும்*
*தன்னை அடைந்திடத் தானருள் செய்யும் தனிச்சிலையோன்*
*பொன்னடி நாமடைந் தோம்புற மாரென்கொல் செய்திடினே*
(தேசி.பிர. 112)

இத்தகைய கதி விசேடத்தைப் பெற விரும்பும் அடியவர்க்கு இறைவன் செய்யும் அருங்கருணையை,

1. அடைக்கலம் நல்கல்
2. அவம் அறுத்தல்
3. பற்றறுத்தல்
4. வீடுநல்கல்

என்ற நான்கு நிலைகளில் காணலாம். பொதுப்படச் சுட்டப்பெற்ற அருளாற்றலின் ஒவ்வொரு நிலையும் தேசிகப் பிரபந்தத்தில் எங்ஙனம் விளக்கம் பெற்றுள்ளது என உணரலாம்.

### 4.6.1. அடைக்கலம் நல்குதல்

இறைவன் தன் கீழ் அடைக்கலமாகப் புகுவோர்க்கு அரணாய்த் திகழ்பவன். உலகியல் நெறிகளில் தம்மைப் பிணைத்துக் கொண்டு அல்லலுறும் அன்பர்களின் வினைவழிகட்கு மாற்றாக இருப்பவன். இங்ஙனம் சர்வ இரட்சகனாய்த் திகழும் தன்மையை நம்மாழ்வார்,

*வார்த்தையறிபவர் மாயவற்கு ஆளன்றி ஆவாரோ*
*போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பவை*
*பேர்த்துப் பெருந்துன்பம் வேரற நீக்கித்தன் தாளின்கீழ்ச்*
*சேர்த்துஅவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே*
(நாலா. 3614)

என்றுரைக்கிறார்.

இம்மரபிலேயே வேதாந்த தேசிகனும்

*நினைவழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும்*
*நிகரில்லா நெடுங்குணங்கள் நிலைபெ றத்தன்*
*கனைகழற்கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து*
*காரணனாம் தன்காவல் கவர்கின் றானே* (தேசி.பிர. 103)

எனக் குறிக்கிறார். மேலும் குழந்தையைப் பரிவுடன் போற்றி, அஞ்சும் தன்மையைப் போக்கி ஆதரவு நல்கும் தாய் என்று அரங்கநாதப் பெருமானைப் போற்றிக் கூறுதலை,

*தன்னகலம் அகலாத தகவால் ஓங்குந்*
*தகவுடனே தன்கருமந் தானே எண்ணி*
*அன்னையென அடைக்கலம் கொண்டு அஞ்சல் தந்தென்*
*அழலாற நிழலார அளிக்கின் றானே* (தேசி.பிர. 104)

என்ற பாடலில் உணரலாம். இறைவன் அநாத இரட்சகனாய் திகழ்தலைக் கேசவய்யங்கார்,

*உய்வண்ணமுகந்த திருவுள்ளக் கருணைப் பெருங்கடற் கண்ணனாய் சரண்ய தீக்ஷை கொண்ட ஸித்தோபாயனாய் 'ஆரோ வருவார்' என்று சரணாகதன் வரவு பார்த்த வண்ணனாய் அர்ச்சா ஸமாதியில் நிலைகொண்டு விளங்கா நின்றான். ஒருக்காலே சரணம் அடைகின்றவர்க்கு அபயம் அளிக்கும் விரதம் பூண்டு விளங்கும் வண்ணமே சரண்ய வண்ணம்.*[11]

என்று குறிப்பிடுகிறார். சரணடைந்தவரைக் காத்தல் கடன் எனக்கொண்டு அவர்க்கு ஆறும் பயனுமாய் இறைவன் நிற்கிறான்.

இங்ஙனம் அடைக்கலம் நல்கிடும் நிலையை,

*ஆறுபயன் வேறில்லா அடியவர்கள் அனைவர்க்கும்*
*ஆறும்அதன் பயனும் இவை ஒருகாலும் பலகாலும்*
*ஆறுபயன் எனவேகண்ட அருளாளர் அடியிணை. . . .*(தேசி.பிர. 247)

என்ற பாடலில் வேதாந்த தேசிகன் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் அடைக்கலம் புகுதல் வேண்டும் என்று ஆசாரியர் நெறிப்படுத்தியமைக்குக்

காரணம் கூறுகையில் வேதாந்த தேசிகன், *'சீவர்க்கும் இறைவற்கும் நித்திய சம்பந்தம் உண்டு. சீவரைக்காத்தலே கடமையாக கொண்டவன் இறைவன். சீவரை உய்விக்கவே அநாதி காலமாய்க் கருணையைப் பொழிகிறான்'* என்று குறிப்பிடுகிறார். இதனால் அடைக்கலம் அருளும் அண்ணல் தன்னை அடைந்தார்க்குச் செய்யும் பெருந்தகைமை புலனாகும். இதனை ஆசிரியரின்,

*அறவேபரமென்று அடைக்கலம் வைத்தனர் அன்றுநம்மைப்*
*பெறவேகருதிப் பெருந்தகவுற்ற பிரான்அடி* (தேசி.பிர. 58)

என்ற பாடல் வழி உணரலாம்.

### 4.6.2. பற்றறுத்தல்

இறைவனை அடையச் சேதனர்க்குத் தடையாக அகங்கார மமகாரங்கள் அமைகின்றன. அகங்காரம் என்பது நான் என்ற தன்மையையும் மமகாரம் என்பது என்னுடையது என்ற தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. திருக்குறள் கூறும்,

*யானெனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் தரும்* (திருக். 346)

என்ற பாடலின்கண் 'யானெ'ன்றும் தன்னொடு இயைபற்ற பொருளை 'எனது' என்றும் கூறி மயங்கும் அவித்தைநிலை பெறப்படுகிறது. இவை உடலைச் சேடத்துவம் எனக் கருதாது சீவனாகக் கொண்டு மயங்கச் செய்கின்றன. உலகியலில் ஈடுபட்டு அதன் பொய்த்தன்மையை மெய்யாய்க் கருதவைக்கும். திருக்குறளின் கருத்தமைதி ஏற்ப வேதாந்த தேசிகன்,

*யான்எனது என்பதொன்று இல்லைஎன் செய்வது அவனையல்லால்*
*ஆனது அறிந்திடும் தன்னடி யார்க்குஎனை ஆட்படுத்தித்*
*தானெனை நல்கி நடத்து கின்றான் தன்அருள்வழியே*
*நானுனை வீடுசெய் வேனென்ற நந்திரு நாரணனே* (தேசி.பிர. 98)

எனல் குறிக்கத்தக்கது. மேற்குறிப்பிட்ட திருக்குறளுக்குப் பரிமேலழகர் தம் உரையில்,

*கெடுத்தலாவது தேசிகர் பாற் பெற்ற உறுதிமொழிகளாலும் யோகப் பயிற்சியாலும் அவை 'யான் எனது - அன்மை' தெளிந்து அவற்றின் கண் பற்றை விடுதல்,. . . . . இதனால் இவ்விருவகைப் பற்றினையும் விட்டார்க்கே வீடுளதென்பது கூறப்பட்டது.*[12]

என்று குறிக்கிறார். இங்கு தேசிகர் என்பது ஆசிரியனைக் குறிக்கின்றது.

விசிஷ்டாத்துவைதமும் அஞ்ஞானம் சூழ்ந்த நிலையில் சீவன் *'ஆசிரியன்'* உரையால் இறைவனைத் தெளிகிறான் என்று கூறும் (தேசி.பிர.156).இறைத்தொடர்பால் சீவன் செய்யும் சரணாகதி உலகியலின் சிற்றின்பங்களிலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை நாட வைக்கும். மேலும் சம்சார பந்தம், அற்பவாழ்வு முதலியவற்றில் சீவர் கொண்ட பற்று அற்றுப்போய் வினையில் நீங்கி நித்யமான ஒன்றில் மனம் பற்றச் செய்யும். எனவேதான் வேதாந்த தேசிகன் இவற்றை வலியுறுத்தி,

*உய்யும்உறவு இசையாதே ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப்*
*பொய்யுருவைத் தமக்கேற்றிப் புலன்கொண்ட பயனேகொண்டு*
*ஐயுறவும் ஆரிருளும் அல்வழியும் அடைந்தவர்க்கும்* (தேசி.பிர. 252)

என்றும்

*விதைமுளையின் நியாயத்தால் அடியில்லா வினையடையவே*
*சதையுடலம் நால்வகைக்கும் சரணளிப்பான் எனத்திகழ்ந்து*
*பதவியறி யாதுபழம் பாழில்உழல் கின்றார்க்கும்*
*சிதைவில்அருள் தரும்திருமால் திருவத்தி நகரானே* (தேசி.பிர. 253)

என்றும் கூறுகிறார். இதனால் அஞ்ஞானத்தால் பற்றுக்கொண்டு உழல்வார்க்கும் இறைக்கருணை பற்றுநீக்கிப் பிறப்பறுக்கும் என்பது பெறப்படுகிறது.

மேலும் உலக வாழ்வில் ஏற்படும் சிறுமைப்பட்ட இன்பத்தை மெய்யெனக் கொண்ட மயக்கத்தால் சீவனுக்கு நரகமே நேரும். அவன் இறைவனுக்கு அடிமைபூண்டால் மயக்கமும் மயக்கத்தால் நேரும் நரகமும் நீங்கி வீட்டின்பம் பெறத்தகுந்த உயர் நிலையை அடைகின்றான்.

திருக்குறள்,

*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்* (திருக். 349) என்றும்

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு*

என்றும் குறிப்பிடல் விசிஷ்டாத்துவைத மரபில் தேசிகப் பிரபந்தத்துடன் ஒப்பிடத்தக்கது.

### 4.6.3. அவம் அறுத்தல்

சேதனர்கள் உலகியலில் துன்புற்று இடர்ப்பட்டு வருந்துகின்றனர். முன்பு துய்த்த வினைப்பயன், இனிவரும் வினைப்பயன், செய்த வினைகளால் உண்டான பயன் ஆகியன மீண்டும் மீண்டும் பிறப்பையே தந்து நிற்கும்.

அதுவேயன்றிப் பிறவாமைக்கு வழிகோலா. மீண்டும் பிறவாது இறையருளில் கலந்து, நித்ய சூரிகளுடன் வாழச் சேதனர்கள் விரும்புகின்றனர். ஆனால் அதற்குத் தடையாய் அமையும் பாவங்களை எண்ணி வருந்துகின்றனர். ஆகவே பிறந்து இறந்து தொடரும் வாழ்வில் சஞ்சித, பிராரப்த என்னும் இருவினைகளையும் முத்திக்குத் தடையாக வேதாந்த தேசிகன் கருதுகின்றார்.

முன்னது வினைத்தொகுதியாக அமைந்து மனிதனைப் பற்றித் தொடர்கின்றது. பின்னது அவ்வப்பிறவியில் துய்க்க வேண்டி அமைகின்றது. சரணடைந்தவர் வாழ்வில் ஈடேற்றம் பெற விரும்பும்போது இவ்விரண்டினின்றும் விடுதலையை எதிர்பார்க்கின்றனர். [13] இங்ஙனம் அவம் கண்டஞ்சி அடைக்கலம் புகுதலைத் தேசிகனின்,

*வந்தனபோல் வருவனவும் அனந்த மாகி*
*மாளாத துயர்தருவல் வினைநெ ருப்புக்கு*
*இந்தனமாய் எண்ணிருந்த காலம் எல்லாம்*
*இன்னமுமிப் பவக்குழிக்கே இழியா வண்ணம்*
*வெந்ததொரு குழவியைநற் குமர னாக்கும்*
*வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்*
*பந்தனமாம் அவையனைத்தும் பாறு கைக்குப்*
*பழமறையின் பரமநெறி பயிலு வாரே* (தேசி.பிர.141)

என்ற பாடல் உணர்த்தும். இங்ஙனம், சரணடைந்தபின் இவ்வினைகள் பற்றிய அச்சம், வினைகளைக் களையச் செய்ய வேண்டிய பொறுப்பு ஏதும் சரணடைந்தாருக்கு இல்லை.

பிரபன்னராய்ச் சரண்புகுந்தார் செய்யும் கர்மங்கள் இறைவனைத் தொழுதலே. அங்ஙனம் தொழும் அடியார், சரண் புகுமுன் செய்த தீய செயல்களால் விளைந்த வினைகளைச் சீவர் துய்க்காத வண்ணம் இறைவன் அருள் புரிகின்றான். மேலும் சரண் புகும் முன்னும் பின்னும் அடியார் அறிந்தோ அறியாதோ செய்த பிழைகளையும் பொறுத்தருளுகின்றான். இச்செய்தியை வேதாந்த தேசிகனின்,

*முன்செய்த வினைத்திரளின் முளைத்த தன்றி*
*முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்*
*தன்செய்ய திருவருளால் இசைவு பார்த்துத்*
*தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்*
*பின்செய்த வினையினை ஒன்றாது ஒன்றும்*
*வினைப்பொறுத்து வேறுளது விரகான் மாற்றும்*
(தேசி.பிர.143)

என்ற பாடல் வழி உணரலாம். ஆண்டாளும் அடியாரின் வினைப்பயன் தீயினில் பட்ட பஞ்செ்ன அழியும் என்கிறார். இதனை,

*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில்தூ சாகும் . . . . . . . . . . . . . .* (நாலா. 478)

என்ற பாடல் வழி உணரலாம்.

சரணாகதி ஒருமுறையே செய்யப்படினும் அது இறைவனை அடைவதற்குத் தடையாக அனாதி காலமாய்ச் சீவனைப் பற்றி இருக்கும் தீவினைகளைப் பஞ்சுப்பொதியில் இட்ட தீ போன்று போக்கிவிடும். *'ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி'* (பக.கீதை 18.66) என்று பகவத் கீதையின் சரமசுலோகத்தில் கண்ணபெருமான் குறித்தது ஈண்டு உளங்கொளத் தக்கது.

சுவாமி ராம் சுகதாஸ்,

> *எம்பெருமானை அநந்ய பாவத்துடன் போற்றும் தன்மை வாய்ந்த மெய்யன்பன் ஒருகால் பாவம் செய்துவிட நேரிட்டால் அவனது ஹ்ருதயத்தில் வீற்றிருக்கும் எம்பெருமானே அப்பாவத்தை முழுவதும் நீக்கிவிடுகிறார்.* [14]

என்கிறார். சரண்புகுந்தாரைக் காப்பது இறைவனின் அருளே. அதுவன்றிச் சீவர் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும்படி நேராது. உலகியலில் ஈடேற்றம் நேரிடுமோ? என்ற கவலை சீவர்கட்கு இல்லை. மீண்டும் பிறவாமை நேரக் காரணமாய் நின்று சீவர்களின் கவலையைத் தீர்ப்பவன் இறைவன் என்ற பொருளில்,

*அறிவும் அனைத்தும் இலாஅடி யோமை அடைக்கலங் கொண்டு*
*உறவென நின்ற எலாமுற வேநின்ற தானெமக்காய்*
*மறுபிற வித்துயர் வாரா வகைமனங் கொண்டது*
*இறையவன் இன்னருளால் எங்கள் சோகம் தவிர்த்தனனே*
(தேசி.பிர. 325)

என்ற பாடல் அமைகிறது. இது *'சர்வதர்மான்'* எனத் தொடங்கும் சரமசுலோகத்தில் இடம்பெற்ற *'மாசுச'* என்ற தொடரின் விளக்கமாய் அமைகின்றது. இச்சுலோகத்தின்கண் இடம் பெறும் *'பரித்யஜ்ய'* என்ற சொல் *'கைவிடுதல்'* என்பதைக் குறித்தது. சீவனுடைய செயல், தருமம் என்று எவற்றைக் கருதுகின்றானோ அவற்றை விட்டுவிட்டு இறைவனைச் சரண்புகவேண்டும். அப்போது சீவர்கட்கு *'சுயமாய் காத்துக் கொள்ளும் பொறுப்பு, அதைப் பற்றிய கவலை இல்லை'*. இக்கருத்தைத் தான் *'மாசுச'* என்ற தொடரில் *'நீ புலம்பல்'* என்று கண்ணபெருமான் அருளினார். இவ்வருளை வேதாந்த தேசிகன்,

*பரமெனது நீபுலம்பல் என்றார் வந்தார்*
*பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார்தாமே* (தேசி.பிர. 276)

என்ற அடிகளிலும் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் கவலை நேராது இருக்கும்படி கூறிய வாக்கினால் தன்னைச் சரணடைந்தாரின் பாவங்களை இறைவன் நீக்கியருள்கிறான்.

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்.* (திருக். 10)

என்ற திருக்குறளும் இறைவனடி புகுதலால் பிறவித்துன்பம் அறும் என்று குறிப்பது நோக்கத்தக்கது.

**4.6.4. வீடு நல்கல்**

வீடாவது பிறவித் தளைகளை அறுத்து, இனிப்பிறவாப் பேரின்ப நாட்டத்தில் ஈடுபட்டு இறைவனுடன் கலத்தல் அல்லது அணுக்கராய் நிற்றல் ஆகும். பரிபாடல்,

*நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை*
*ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்* (பரி. 15.15-16)

என்ற அடிகளில் நாரணன் கருணையே வீடுப் பேற்றை அளிக்கவல்லது என்று குறிக்கும். மேலும்,

*பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த*
*இருவேறு மண்டிலத்து இயக்கம் போல*
*நேமியும் வளையும் ஏந்திய கையால்*
*கருவி மின்னவிர் இலங்கும் பொலம்பூண்*
*அருவி உருவின் ஆரமொடு அணிந்தநின்*
*திருவரை அகலந் தொழுவார்க்கு*
*உரிதமர் துறக்கமும் உரிமைநன்கு உடைத்து* (பரி. 13.7-13)

என்ற அடிகளில், *'கார்ப்பருவத்துக் கரிய பெரிய மேகம் போல் நிறத்துடனும் இருகதிர்கள் விளங்குதல் போன்ற சங்கு, சக்கரங்கள் ஏந்திய கரங்களுடனும் திருவரை அகலத்துடனும் விளங்கும் திருமாலைத் தொழுவார்க்கும் அத்திருமாலினுக்குரிய வைகுந்தம் நன்கு உரிமையாகும்'* என்று குறிக்கின்றது.

*சண்ட மண்டலத்தின் ஊடு சென்றுவீடு பெற்று மேல்*
*கண்டு வீடிலாத காதல் இன்பம் நாளும் எய்துவீர்*
*புண்டரிக பாத புண்ய கீர்த்தி நுஞ்செவி மடுத்து*
*உண்டுநும் உறுவினைத் துயருள் நீங்கி உய்ம்மினோ* (நாலா. 818)

*இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு*
*ஏற்றி வைத்து ஏணி வாங்கி*
*அருள்கொடுத் திட்டுஅடியவரை ஆட்கொள்வான்*
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (நாலா. 414)

என்ற பாடல்களில் முறையே திருமழிசையாழ்வாரும் பெரியாழ்வாரும் இறைவன் கருணையுடன் வீடுபேறு நல்குதலைக் குறிக்கின்றனர். இத்தகைய மரபின் தொடர்ச்சியாகத் தேசிகப் பிரபந்தமும் வீடுபேறு பெறும் நிலையை விளக்குகிறது.

சீவர்களின் சரண்புகுதலில் மோட்சமாகிய வீடுபேறு பேரின்ப நிலையாகிறது. வீடுபேறு வேண்டும் சீவான்மாவின் நிலையை ஆகமங்கள் பலவாறு கூறுகின்றன. அலைகின்ற உயிரின் உயர்ந்த முடிவு விஷ்ணு உலகத்தை அடைவதாகும் என கடோபநிடதம் குறிப்பிடுகின்றது. பொதுவாக வைணவ உபநிடதங்கள் உயிர்கள் அழியாத் தன்மையினை உணர்கின்ற வீடுபேற்றுக்கு அன்பு அல்லது பத்திநெறியே சிறந்ததென வலியுறுத்துகின்றன. [15]

இங்ஙனம் அன்புநிறைந்த பிரபத்தி நெறியில் ஈடுபட்ட சீவனுக்கு வீட்டின்பம் நல்கும் பொறுப்பு இறைவனைச் சார்ந்ததாகிறது. அப்பேற்றில் பற்று கொண்டார்க்குத் *'திருப்த பிரபத்தி'* என்ற வகையில் வினைப்பயன் கெட்டு முத்தி தருதல் அல்லது ஆர்த்த பிரபத்தியாகச் சரணாகதி புகுந்தவுடன் முத்தி தருதல் என அடியார் விரும்பும் வகையில் இறைவன் வீடு நல்குகிறான். இதனை வேதாந்த தேசிகன்,

*புகல்உலகில் இல்லாது பொன்னருள்கண் டுற்றவர்க்கும்*
*அகலகிலா அன்பர்க்கும் அன்றேகொடுத்துப்*
*பகலதனால் பழங்கங்குல் விடுவிக்கும் பங்கயத்தாள்*
*அகலகிலேன் என்றுரைக்கும் அத்திகிரி அருள்முகிலே*
(தேசி.பிர. 255)

என்ற பாடல்களில் விளக்குகிறார். *'புகல் உலகில் இல்லாது . . . உற்றவர்'* என்பது திருப்த பிரபத்தி வேண்டுவோரையும் *'அகலகிலா அன்பர்'* என்பது ஆர்த்த பிரபத்தி வேண்டுவோரையும் குறித்தது என்பது முன்னுரைக்கப்பட்டது. (3.4.3)

இங்ஙனம் சீவர்க்கு வீடுபேற்றை நல்குதலை வேதாந்த தேசிகன் பலப்படக் குறிக்கின்றார். பரமபத சோபானத்தில் வீடுபேறு அடைதலை ஒன்பது படிநிலைகளாக வேதாந்த தேசிகன் குறிப்பிடுகின்றார். விவேகம் கொள்ளுதல், வீண்காலத்திற்கு வருந்துதல், ஆசையறுத்தல், வினைகட்கு அஞ்சுதல், முத்திக்குரிய வழிகளில் ஈடுபடுதல் சரண்புகுதல் ஆகிய ஐந்து படிகள் முற்கூறப்பட்டன. (3.4.1) ஆறுமுதல் ஒன்பது வரை அமைந்தபடி நிலைகள் ஆன்மா நீங்கும் நிலை, அருச்சிராதி மார்க்கம், பரமபதம் சேர்தல், பரிபூரண பிரம்மானுபவம் பெறல் என்னும் நான்கு நிலைகள் விளக்கப்படுகின்றன. முதலைந்து நிலைகளும் சீவர்க்குரியன. பிற்குறிப்பிட்ட படிநிலைகள் நான்கும் இறைவன் செயல்களாய் அமைவன.

### 4.6.4.1. ஆன்மா உடல்விட்டு நீங்குதல்

உறையின்கண் பொதிந்த வாள் செயல் ஏதுமின்றி வலி குன்றியிருக்கும். சீவான்மாவும் சரீரத்தில் இருக்கும்வரை முழு அறிவு பெறாதும் இறைத்தொண்டில் முழுமையாய் ஈடுபட இயலாதும் சிறைப்பட்டிருக்கும். இறைவனை நினைத்த பின்றை அவனருளால் உடல் விட்டு ஆன்மா நீங்கும் காலத்தை எதிர் நோக்கியிருக்கும்.

சாத்யோபாயங்களில் பக்திநெறி சார்ந்தால் சீவன் முத்தி பெறப் பல நியமங்கள் உள. பிரபத்தி நெறி சார்ந்தால் சீவனின் மரணம் இடம், காலம், காரணங்களில் உயர்வுடையதாய் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இல்லை. இதனை வேதாந்த தேசிகன்,

*நன்னில மாமது நற்பக லாமது நன்னிமித்தம்*
*என்னலு மாமது யாதானு மாம்அங்கு அடியவர்க்கும்*
*இன்னிலை மேனி விடும்பய ணத்து விலக்கிலதோர்*
*நன்னிலை யாம்நடு நாடி வழிக்கு நடைபெறவே* (தேசி.பிர. 66)

என்று குறிப்பிடுகின்றார். மரண காலத்தில் எம்பெருமான் சீவருடைய கர்மேந்திரியம், ஞானேந்திரியங்களை மனத்துடன் கூட்டி அம்மனத்தைப் பிராணவாயுவில் சேர்க்கிறான். பின் பிராணனை ஆன்மாவிடம் சேர்க்கிறான். அவ்வான்மா ஐம்பூதங்களுடன் இணைக்கப்படுகிறது.

சீவரின் சரீரம் ஐம்பூதங்களானியன்றது. முதுகின் மேற்புறம் மூவெலும்புகள் கூடுகின்றன. அவற்றை கடைந்தே இறைவன் ஐம்பூதங்களின் சூக்குமத்தைப் பெற்றுக்கொள்கிறான். இங்ஙனம் கடைகையில் சீவனுக்கு வேதனை நேரும். இந்நிலையில் சீவர்மேல் கருணைகொண்டு தன்னோடு அணைத்தருள்கின்றான். பின் உடலாகிய சிறையினின்று விடுபடச் செய்து உச்சித்துவாரமாகிய பிரமரந்திரம் வழியாக ஆன்மாவை வெளியேற்றி அருச்சிராதி மார்க்கத்திற்கு இட்டுச் செல்கின்றான். இக்கருத்துக்களை விளக்கமுற வேதாந்த தேசிகன்,

*உறையிட்ட வாளென ஊனுள் உறையும் உயோகியரை*
*நறைமட் டொழிவற்ற நற்றுளவு ஏந்திய நாயகன்தான்*
*நிறைமட் டிலாத நெடும்பயன் காட்ட நினைந்துடலச்*
*சிறைவெட்டி விட்டு வழிப்படுத் தும்வகை செய்திடுமே* (தேசி.பிர. 144)

*முன்கருவி ஈரைந்து மனத்தில் கூட்டி*
*முக்கியமாய் மருத்திலனை சேர்த்த தெல்லாம்*
*நன்குணரும் உயிரினில் சேர்த்து ஐம்பூ தத்தை*
*நண்ணுவித்துத் தாந்தன்பால் வைக்கும் நாதன்*
*ஒன்பதுடன் வாசலிரண் டுடைத்தாய் உள்ளே*
*ஒருகோடி துயர்விளைக்கும் உடம்பாய் ஒன்றும்*
*வன்சிறையின் தலைவாசல் திறந்து நம்மை*
*வானேற வழிப்படுத்த மனமுற் றானே* (தேசி.பிர. 144)

என்ற பாடல்களில் குறிப்பிடக்காணலாம்.

### 4.6.4.2. அர்ச்சிராதி மார்க்கம்

சீவன் சூக்கும வடிவாய் உடல்விட்டுப் பிரிந்ததும் தீ, கதிரவன், மதியம் முதலிய கடவுளர்கள் எதிர்சென்று வரவேற்றுத் தத்தம் எல்லை வரையில் கொண்டுபோய் விடுவார்கள். இங்ஙனம் உலகைக் கடந்தவர்கள் மீண்டும் பிறவிக் கடலில் வீழார். இல்லற சுகமும் சுவர்க்க போகமும் பெரிதெனக் கிடந்த சீவர்க்கு இறையருளால் குருவின் அருள்மொழி கிடைத்தது. இதனால் பொய் மயக்கங்கள் நீங்கி அருச்சிராதி மார்க்கம் எய்தும் சிறப்புற்றனர்.

இதனை,

*நடைபெற அங்கி பகல்ஒளி நாள்உத்த ராயணம் ஆண்டு*
*இடைவரு காற்று இரவிஇர வின்பதி மின்வருணன்*
*குடையுடை வானவர் கோன்பிர சாபதி என்றுஇவரால்*
*இடையிடை போகங்கள் எய்தி எழிற்பதம் ஏறுவரே* (தேசி.பிர. 67)

*தெருளார் பிரம புரத்திறை சேர்ந்திடர் தீர்ந்தவர்தம்*
*மருளார் பிரம புரச்சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்டு*
*அருளால் அமரர் நடத்தவிம் மாயை கடந்ததற்பின்*
*சுருளார் பவநர கச்சுழல் ஆற்றின் சுழற்சியிலே* (தேசி.பிர. 146)

என்ற பாடல்களில் குறிப்பிடக்காணலாம். நம்மாழ்வார்,

*எதிர்எதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்*
*கதிரவர் அவரவர் கைந்நிறை காட்டினர்*
*அதிர்குரல் முரசங்கள் அலைகடல் முழக்கொத்த*
*மதுவிரி துழாய்முடி மாதவன் தமர்க்கே* (நாலா. 3982)

என்று முத்திபேறு உறுபவனுக்கு நேரும் உபசாரங்களைக் கூறுதலும் ஈண்டு இணைத்து எண்ணத்தக்கது.

### 4.6.4.3 பரமபதம் அணுகுதல்

பலகாலமாய் நல்வினை, தீவினைகளில் இடருற்று வினைகளால் நேரும் பிறவித் துன்பத்தில் அழுந்தியபடி சீவர் இருந்தனர். அச்சீவர்கள் சரண்புக்க காலையில், அவ்வினைகள் நீங்கிப் பிறவித் துன்பம் தொடராத வகையில் உய்ந்தனர். அதனால் வினைகளின் தொகுதி தொடரா வண்ணம் விரசையாற்றைக் கடக்கும் பேறு கிட்டியது. இதனை வேதாந்த தேசிகன்,

*பண்டையிரு வினையாற்றில் படிந்து பாரம்*
*காணாதே ஒழுகியநாம் பாக்கி யத்தால்*
. . . . . . . . . . . . . . . . . . . . . .
*குளிர்ந்துதெளிந் துஅமுதாகிய விரசை யாற்றைக்*
*கண்டணுகிக் கருத்தாலே கடந்த மீளாக்*
*கரைகண்டோர் கதியெல்லாம் கதித்திட் டோமே* (தேசி.பிர. 149)

> என்றுரைக்கக் காணலாம். வீடுபெறுமுன் பரமபதம் செல்கையில் குறுக்கிடும் ஓர் ஆறு விரசையாகும். இவ்வாற்றைக் கடக்கும் சீவர் தம் வினையாவும் கெட்டுத் தூயோராய் வைகுந்தம் சேர்வர் என்பது மரபு.

எனவேதான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும்,

> *பைந்துழாய் போலப் பத்துப் பாவலர்*
> *செப்பிய தமிழ்நூல் தேறிப் பற்பலர்*
> *விரசைக்கு அப்பால் மேவினர் அன்றே* (அறுவகை. 723)

என்று ஆழ்வார்களைச் சிறப்பித்துக் கூறுகையில் குறிப்பிடுகின்றார்.

### 4.6.4.4. பிரம்மானுபவம்

விரசையாற்றைக் கடக்கும் சீவர் திருமகளுடன் இறைவன் எழுந்தருளும் பரமபத வாயிலைக் கடந்து செல்கின்றனர். ஸ்ரீவைகுந்தம் திவ்யமான உலகம். இப்பொன்மயமான உலகிலே அமைந்திருக்கும் மண்டபம் திருமாமணிமண்டபம். அத்தெய்வீக மண்டபத்தில் தெய்வீகக் கட்டிலில் ஆதிசேஷன் மீது மூன்று பிராட்டிமார்களுடனும் இறைவன் எழுந்தருளி இருப்பான். இக்காட்சியைக் கண்டு மகிழவே, நம்மாழ்வாரும், '*பொன்னுலகாளீரோ, புவனி முழுதும் ஆளீரோ*' (நாலா. 3528) என்றார். அங்கு நித்ய சூரிகளும் முக்தரும் வேத முழக்கங்களையும் திவ்விய பிரபந்தங்களையும் பாடிப் பரிபூரணமான பிரம்மத்தைக் காணலாகிற வீட்டின் பயனைத் துய்க்கின்றனர். பிரகிருதியின் அவித்தையால் தம் உண்மையான உரு உணராத சீவர் தற்போது அவித்தையிலிருந்து வெளிப்பட்டுச் சீவரின் உண்மையுரு உணர்ந்து பரிபூரண கைங்கரியம் செய்யும் பேறு பெற்றனர். இதனால் நித்யசூரிகள் போன்றே இறைவனுக்கு அணுக்கராணார்.

> *சூழ்ந்து அகன்று ஆழ்ந்துஉயர்ந்த முடிவில் பெரும்பாழேயோ*
> *சூழ்ந்து அதனில் பெரிய பரநல் மலர்ச்சோதீயோ*
> *சூழ்ந்து அதனில் பெரியசுடர் ஞான இன்பமேயோ*
> *சூழ்ந்த அதனில் பெரியஎன் அவாஅறச் சூழ்ந்தாயே* (நாலா. 3999)

என்ற பாடலில் நம்மாழ்வார் பரிபூரண பிரம்மானுபவத்தை உணர்ந்து பேசுகின்றார். இத்தகைய பரிபூரண அனுபவம் அடைந்த சீவனைக்

குறிப்பிடுகையில், வேதாந்த தேசிகன், அரிய உவமைகளின் வழித் தெளிவாக்குகிறார். இப்பாடல் வருமாறு,

*அடலுரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல*
*அழுக்கடைந்து கழுவியநல் தரளம் போலக்*
*கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக்*
*காட்டுத்தீக் கலந்தொழிந்த களிறே போல*
*மடல்கவரும் மயல்கழிந்த மாதர் போல*
*வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார் போல*
*உடன்முதலா உயிர்மறைக்கும் மாயை நீங்கி*
*உயர்ந்தபதம் ஏறியுணர்ந்து ஒன்றி னோமே*
(தேசி.பிர. 151)

முத்தியடைந்த சீவர்க்கு உவமை கூறுகையில் ஒன்றினால் பற்றுகோட்பட்டுப் போராடிப் பின் அவ்வல்லலில் இருந்து நீங்கும் நிலைகளைக் குறிப்பிடக் காணலாம். இவை, பிரகிருதியின் அவித்தை இருளிலிருந்து விடுபட்ட சீவர்க்குப் பொருத்தமுற அமைகின்றன.

பிரம்மானுபவம் பெற்ற நிலையில் பரமபதத்தில் முன்னமே குழுமியிருக்கும் நித்யசூரிகள், பக்தர், பாவலர், சரணாகதியை வழியாய் அருளிய ஆசாரியர்கள் முதலானோர் குழாத்தோடு இணைந்த சீவன் என்றும் விலகாது. இறைத்தொண்டே கருதியிருக்கும். இதனைத் தேசிகன் தற்கூற்றாக,

*ஏறி எழிற்பதம் எல்லா வுயிர்க்கும் இதமுகக்கும்*
*நாறு துழாய்முடி நாதனை நண்ணி யடிமையினம்*
*கூறு கவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ்*
*மாறு தலின்றி மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே* (தேசி.பிர. 68)

என்று குறிப்பிடுகின்றார். இவ்வகையில் வேதாந்த தேசிகன் எளிய சீவனும் அடைக்கலம் புகுந்து பிரம்மானுபவம் பெற்றதைத் திண்மையுடன் விளக்குகின்றார்.

## 4.7 இயல் முடிபுரை

4.7.1. *'சரணாகதியில் இறைவன்'* என்னும் இவ்வியலில் அருச்சை நிலையில் திகழும் இறைவன் தன்னை அடையும் சீவர்பால் அருளும் செயல்கள் விளக்கப்படுகின்றன. இறைவனின் பரத்துவமும் கருணையும் சரணாகதி நெறியருளலும் உபாயமும் பலனுமாய் நிற்றலும் விளக்கப்பட்டன. புருஷாகாரப் பிரபத்தியாகத் திருமகள் நின்று சீவரை உய்வித்தலும் சரண்யனாகத் திகழும் இறைவனின் அருளாற்றலின் ஓர் அங்கமாகும்.

4.7.2. சரணடைந்தார்க்கு இறைவன் தாயென நின்று தன்னடிக்கீழ்ப் புகல் அளிக்கின்றான். சீவனின் பற்று, வினைகளை நீக்கியருள்கின்றான். ஆன்மாவினைப் பிரித்து, அருச்சிராதி மார்க்கமாய் அழைத்துச் சென்று, பரிபூரண பிரம்மானுபவத்தை அனுபவிக்கச் செய்கிறான்.

இங்ஙனம் இறைச்செயல்கள், தேசிகப் பிரபந்தத்தில் விளக்கப்பட்டுச் சரணாகதியை வலியுறுத்துவனவாக அமைகின்றன.

### சான்றெண் விளக்கம்

1. இந்திரா பார்த்தசாரதி, தமிழ் இலக்கியங்களில் வைணவம், ப. 49
2. பி.ஆர். நரசிம்மன், வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், ப.124
3. டி.என்.எஸ். ராகவன், சரணாகதித் தத்துவம் ஓராய்வு, ப. 16
4. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 128
5. இராமதேசிகாசாரியார், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் உரை, பா. 298
6. ஸ்ரீ வசன பூஷணம் - 10
7. ந. சுப்புரெட்டியார், வைணவச்செல்வம், ப. 365
8. மேலது, பக். 201,202
9. ஸ்ரீமத் ரகஸ்ய த்ரயஸாரம் (முதல் பகுதி), ப. 9
10. வி.என்.கோபால தேசிகாசார்யஸ்வாமி, ஸ்ரீவைஷ்ணவன், ப. 12
11. ஆர். கேசவய்யங்கார், (முன்னுரை) - தேசிகப் ப்ரபந்தம், ப. 59
12. பரிமேலழகர், திருக்குறள் உரை, ப. 346
13. Raghavadasan, Visishtadvaitam and Vedanta Desika's Sri Nyasa Dasakam, P. 44
14. சுவாமி ராம்சுகதாஸ், சரணாகதி, ப. 31
15. ந. சுப்புரெட்டியார், வைணவச்செல்வம், ப. 8

# தத்துவப் புலப்பாட்டு நெறிகள்

5.0 இலக்கியங்கள் காதல், போர், அறம், பக்தி எனப் பல்வகைப் பொருண்மைகளை உடையன. இப்பொருண்மைகள் சிறப்பிக்கப்பெற இலக்கிய ஆசிரியருடைய புலமை இன்றியமையாதது. பாடுபொருளுக்கு ஏற்பப் பொருள் புலப்பாட்டிற்கும் இலக்கிய நயத்திற்கும் பல்வேறு முறைகளை இலக்கியப் படைப்பாளர் கையாள்கின்றனர். இம்முறைகள் உள்ளடக்கம், உருவம், உத்தி என்னும் மூன்றைச் சார்ந்து அமைவன. உள்ளடக்கத்தை வெளிப்படுத்த உருவமும் அப்பொருள் எளிதில் வாசகரைச் சென்றடைய உத்திகளும் துணைநிற்கின்றன.

## 5.1. புலப்பாட்டு நெறிகள்

கலை என்பது ஒரு கருவியாகும். அதன் வழி கொடுப்பதும் கொள்வதும் அறிவிப்பதும் அறிவதுமாகிய பயன்கள் நிகழ்கின்றன.[1] இக்கூற்று இலக்கியக் கலைக்கும் பொருந்தும். இலக்கியக் கலைகளுள் அழகியல் உணர்வும் புலப்பாட்டு முறைகளும் மிக்கிருப்பது கவிதைக் கலையாகும்.

கவிதைப் படைப்பு என்பது கவிஞரின் உணர்வு வெளிப்பாடு. தம் படைப்பில் உணர்வுவயப்பட்ட தன்மையைப் பிரதிபலிக்கும் போது அப்படைப்பு இலக்கியச் செறிவுடையதாகிறது. வாழ்வியல் கூறுகளைச் சாதாரண மனிதர்கள் கூறுவதற்கும் சிறந்த கவிஞன் கூறுவதற்கும் வேறுபாடுண்டு. கவிஞர் தம்முணர்வை நினைத்த அளவில் வெளிப்படுத்தி விடுவதில்லை. கூறும் பொருளின் திண்மை, கூறும் முறையின் நுட்பம் போன்றவற்றோடு அணிமிக, அழகிய கலையாக, கவிதையாகச் செய்தியைத் தருகின்றார்.

கவிஞர் கலைவடிவாய் வெளிப்படுத்தும் பாடுபொருள் படிப்பவரைச் சென்று சேரவேண்டும். கவிஞர் கருத்தைப் புலப்படுத்துபவர்; படிப்பவர் புரிந்துகொள்பவர். தெரிந்து கொள்ளுதலும் புரிந்து கொள்ளுதலுமாகிய நிலையே 'புலப்பாடு' என்ற சொல்லின் பொருள் வரையறையாகும். எனவே, கவிதையில் பொருட்புலப்பாடு என்பது கவிஞர் கையாளும் கவிதை மரபுகளுக்குள் பொருளை எப்படி வெளிப்படுத்துகின்றனர் அல்லது கவிதையில் பொருள் எப்படி வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது.

கவிதைப் படைப்பின் வெற்றியும் நிலைபேறும் அதன் பொருளமைதியை மட்டும் சார்ந்து அமைவதன்று. பொருண்மைச் சிறப்புடன் கூடிய புலப்பாட்டு முறைகளே ஒரு படைப்பை முழுமைபெறச் செய்யும். கருத்துக்களை எந்த முறையில் எத்தகைய மொழியில் வெளியிடவேண்டும் என்று கருதிடும் நிலையில் பொருள் புலப்படுத்தும் முயற்சி தோற்றம் பெறுகிறது. எனவே பாடுபொருளுக்கு ஏற்பக் கவிஞன் மேற்கொள்ளும் கலையாக்க முறைகளே புலப்பாட்டு நெறிகள் எனலாம். எந்த அளவிற்குக் கவிஞர் புலப்பாட்டு நெறிகளில் சிறக்கின்றாரோ அந்தளவிற்குப் பாடுபொருள் நிலைபேறு அடைகின்றது.

கலைஞர் ஒருவர் தம் கலையின் செவ்வியல் தன்மைக்கு முயலும்போது அவர் செய்கின்ற ஆக்கமுறைகள் யாவும் புலப்பாட்டு நெறிகளாகும். இலக்கியத்தின் சிற்சிறு கூறுகளிலும் கவிஞரின் கலையுள்ளம் பொருண்மையைச் சிறப்பிக்கும் வகையில் பலவகை நுட்பங்களைக் கையாளும். இப்புலப்பாட்டு நெறிகளின் பின்னணியில் மொழியின்கண் கவிஞர் செலுத்தும் ஆளுமை அடங்கியிருக்கிறது. இவ்வகையிலேயே இலக்கிய நெறிகளான யாப்பு என்ற புறவடிவமும் உவமை, உருவகம், படிமம், குறியீடு ஆகிய அகநிலை உத்திகளும் அமைகின்றன. தமிழில் பொருள் வெளிப்பாடு உள்ளுறை, இறைச்சி, குறிப்புப்பொருள், பிற உத்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் சுட்டப்பெறும். இம்மரபு தமிழுக்கேயுரிய புலப்பாட்டு நெறிகளின் தொன்மையை உணர்த்தும். மேலும் அணிகளின் பலகூறுகள் இலக்கிய நயம் சார்வதோடு புலப்பாட்டு நெறிகளாயும் அமைகின்றன.

### 5.1.1. தத்துவப் புலப்பாட்டு நெறிகள்

தத்துவம் உண்மைப் பொருள்; பரந்துள்ளது; உலகில் காணலாகும் தன்மையுடன் காணலாகாத் தன்மையையும் உள்ளடக்கி விவாதிப்பதும் ஆகும். உலகையும் உலக இயல்பிற்கான காரணங்களையும் அதன் இயக்கச் சக்திக்கான தேடல்களையும் பொருண்மைக் கூறுகளாக கொண்டிலங்குவது. மனிதச் சக்திக்கு அப்பாலான இயக்கத்தை அறியும் முயற்சியில் பெரும்பாலான தத்துவக் கூறுகள் அமைகின்றன.

உலக இயல்பிற்கு ஆதாரச் சக்தி எது? உலக உற்பத்தி யாங்ஙனம் நிகழ்ந்தது? மரணத்திற்குப் பின் மனிதன் நிலை யாது? முதலான கேள்விகளின் விளைவாய்ப் பல கருத்தியல்கள் எழுந்தன என்பதும் அவை

பலவகைத் தத்துவப் கூறுகளாகப் பரிணமித்தன என்பதும் முன்னுரைக்கப்பட்டன. (1.1) இத்தகைய தத்துவ நிலைப்பாடுகள் யாவும் புலன்கடந்த மெய்யியலாக (Meta Physics) உருவாயின. உணர்கின்றார் வழித்திறத்தே அவற்றை உணர்தல் இயலுமேயன்றிப் பிற வகையில் புலப்படுத்தும் முறைகள் இயலா.

இக்கூறுகள் யாவும் நுண்பொருள் தன்மையின. புலன் கடந்த இறைமைநிலையை, உலக இயக்கத்தைப் புலனுக்குள் கட்டுப்பட்டு வாழும் மாந்தர் யாவராலும் அறிய இயலாது. அறிந்துணர்ந்த ஞானிகள் பலரும் தாமுணர்ந்தவாறு அவற்றை வெளியிட்டிருக்கின்றனர். இச்சிந்தனைகளை அறிதல் எவ்வளவு கடினமானதாய் அமைகின்றதோ, அத்தகைய கடினம் இச்சிந்தனைகளை உணர்த்துவதிலும் உண்டு.

தத்துவ விளக்கத்திற்கு அடிப்படை ஆதாரங்களாக அமைவன அவ்வச் சமயஞ்சார் பிரமாணங்களாகும். பிரமாணங்களும் முடிந்த முடிபினவாகா; முன்னோர் பிரமாணங்களைத் தத்தம் சிந்தனைத் தேடலால் நுணுகியாய்ந்து தத்துவங்களைச் செழிக்கச் செய்தனர். கி.லக்ஷ்மணன்,

> *இந்திய தத்துவ ஞானிகள் தத்துவ ஆராய்ச்சியில் மட்டுமன்றி அவ்வாராய்ச்சிக்குத் துணையான சாதனங்களை ஆராய்வதிலும் பெரிதும் ஈடுபட்டனர். இங்கே சாதனங்கள் எனக் குறிப்பிடப்படுவன அறிவைப் பெறும் வழிகள், இவைகளை இந்திய தத்துவ ஞானிகள் பிரமாணங்கள் என்பர். . . . . . . . . .[ஐம்] பொறிகள், நூல்கள் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரமாணம் எனப்படும்.* [2]

என்றுரைக்கிறார். மேலும் அவர்,

> *இந்து தரிசனங்கள் பெரும்பான்மையும் பிரத்தியட்சம், அநுமானம், ஆப்தவாக்கியம் ஆகிய மூன்றையுமே தமக்கு பிரமாணமாகக் கொள்வன.* [3]

என்றுரைப்பதும் எண்ணத்தக்கது. இம்மூன்றுனுள் பிரத்தியட்சம் என்பது காண்டல் அல்லது காட்சி அளவை என்றும் அநுமானம் என்பது கருதுதல் அல்லது கருத்தளவை என்றும் அழைக்கப்பெறும். ஆப்தவாக்கியம் வேதம் முதலான நூல்களாகும். இவற்றின் அடிப்படையில் தத்துவங்களை

முன்மொழிந்த ஞானிகள் பலரும் இயற்கைப் பொருட்களைச் சான்றுகளாகக் காட்டி அவற்றினியல்புகளைத் தத்துவப் புலப்பாட்டுக்குரிய வழிகளாகக் கொண்டனார். இவ்வியல்பே உபமானம் ஆகும். முன்னர்க் குறிப்பிட்ட மூன்று பிரமாணங்களுடன் உபமானமும் பிரமாணமாகக் குறிப்பிடப்பெறும்.[4]

இதனால் நுண்பொருளான தத்துவக் கூறுகளை விளக்குகையில் உவமை முதலான உத்தி நெறிகளின் இன்றியமையாமை புலனாகும். இலக்கியத் தெளிவிற்குக் கையாளப்பெறும் உத்திகள் தத்துவப் புலப்பாட்டிற்கும் இன்றியமையாதன. நன்கு நோக்கின் உவமை முதலான உத்திகள் யாவும் இலக்கியத்தில் கருத்து வெளிப்பாட்டிற்குப் பயன்படுவனவாய் அமைவதோடு, சுவை மிளிரவும் துணை செய்வன. தத்துவப் பொருண்மையில் கருத்து வெளிப்பாடே முதன்மையுறுகின்றது.

இவ்வகையில் வைணவச் சாஸ்திரநூலாக அமையும் தேசிகப் பிரபந்தத்தில் வேதாந்த தேசிகன் பொருள் புலப்பாட்டிற்குக் கையாளும் நெறிமுறைகள் இவ்வியல் பொருண்மைகளாக அமைகின்றன. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் பக்திப்பனுவலாக வெளிப்படுத்தும் இலக்கிய நெறிகளின் பின்னணியில் அமைந்த தத்துவக் கூறுகளையும் இராமானுஜர் உணர்த்திய அருங்கருத்துகளையும் உள்வாங்கி அரிய தத்துவப் பேழையாகத் தேசிகப் பிரபந்தம் விளங்குகிறது.

இந்நூலுள் கருத்து வெளிப்பாட்டிற்குரிய வகையில் வேதாந்த தேசிகன் கையாண்டுள்ள நெறிமுறைகளை

1. உத்திகள்
2. நாயக நாயகி பாவம்
3. யாப்பியல் நெறிகள்

என்று வரிசைப்படுத்தலாம்.

## 5.2. உத்திகள்

கவிஞர் தம் படைப்பாளுமையினால் கையாளும் புலப்பாட்டு நெறிகளில் மொழியின் அகநிலையில் அமைக்கும் நெறிமுறைகளே உத்திகள் எனலாம். புலப்பாட்டு முறைகளில் உத்திகளின் செல்வாக்கே மிகுதியாக இருக்கின்றது.

உத்தி எனும் வரையறை தொல்காப்பியம் முதலாகக் காணப்படுகிறது. இவ்வகையில் இலக்கண நூல்கள் குறிப்பிடும் உத்திகள் இலக்கண நுவல் பொருளைப் பற்றியமைகின்றன. எனினும் அவை இலக்கிய மரபுகட்கும் பொருந்தும். ஆனால் பொருண்மை எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது என்பதை மட்டுமே இலக்கிய உத்திகள் கொள்வதில்லை. இவற்றுக்குப் பொருண்மை புலப்பாட்டிற்குரிய கூடுதலான பண்புகளும் உண்டு. உவமை முதலான அணிகள் உத்திகளாக அமையத்தக்கன. இவ்வணிகள் வெறும் அலங்காரமாக மட்டும் அமையாமல் சில நோக்க நிறைவேற்றத்திற்காகவும் விளைவு கருதியும் பயன் கருதியும் கையாளப்படும்போது அவை உத்திநிலை பெறுவதாகக் கொள்ளலாம். [5]

மார்டின்கிரே என்பார், *'இலக்கிய படைப்பில் படைப்பாளி வழங்க விரும்பும் செய்தி (Message) அல்லது அடிக்கருத்தைத் (Theme) தவிர ஏனையவை அனைத்தும் உத்திமுறையினவே''*[6] என்கிறார். இதனால் கருத்துப் புலப்பாட்டில் உத்திகளின் செல்வாக்கினை உணரலாம்.

### 5.2.1. சமய நூல்களும் உத்திகளும்

தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையில் பக்திப்பண்பு மிளிரும் வகையில் எழுந்த சமயநூல்கள் மிகுதி. தெய்வத்தை மானிடரோடு உறவாக்கும் தன்மையை நோக்கமாகக் கொண்டு இவை எழுகின்றன. இவற்றின் முதன்மை நோக்கம் கற்போரைப் பக்திவழியில் பிணைக்கச் செய்தலும் இறைப்பெருமையை உணர்த்துதலும் சமயச் சாத்திரங்களைப் புலனாக்குதலும் ஆகும்.

இவ்வாறு கருத்துக்கள் நிலைக்கவும் பயன்பெறும் வண்ணம் அமையவும் பக்திப்பாவலர் பல்வகை உத்திகளைக் கற்பனையுடன் கையாள்கின்றார். இலக்கிய இன்பத்திலும் பக்தி அனுபவத்திலும் இவை

ஒருசேரக் கற்போரை ஆழ்த்துவன. இவ்வகையில் வேதாந்த தேசிகன் கையாளும் உத்திகளை,

1. உவமை
2. உருவகத்தொடர்கள்
3. படிமம்
4. குறியீடு
5. எண்ணுப்பெயரிடல்

என்று வரிசைப்படுத்தலாம்.

இவற்றுள் உவமை, உருவகம், படிமம், குறியீடு ஆகியவை தொடர் மொழிநிலை உத்திகளாக அமைந்துள்ளன. எண்ணுப்பெயரிடல் சொல்நிலை உத்திகளாக அமைகின்றன. இவ்வகை உத்திகளே அன்றி, வினாவிடை அமைப்பு, அந்தாதி அமைப்பு ஆகிய இலக்கிய நெறிகளும் தேசிகப்பிரபந்தத்தினுள் காணப்படுகின்றன. அவற்றை விடுத்துத் தத்துவப் புலப்பாட்டிற்குரிய உத்திகள் மட்டும் ஈண்டு ஆய்வுக்குப் கொள்ளப்பெற்றன.

நாயக நாயகி பாவமும் குறியீட்டுத் தன்மையில் அமையும் உத்திதான்; எனினும் அதன்கண் காணப்படும் அகப்பொருள் மரபு கருதித் தனியே சுட்டியுரைக்கப்படுகிறது.

### 5.2.1.1. உவமை

இலக்கிய வெளிப்பாட்டு முறைகளில் பெரிதும் கையாளப்படுவதும் அணிகள் பலவற்றிற்கு அடிப்படையானதுமாக உவமை என்ற உத்தி அமைகிறது. உவமையின் தன்மையைத் தண்டியலங்காரம்,

*ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து*
*ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை* (தண்டி. 31)

என்கிறது. இத்தகைய ஒப்புமைப் பண்பு உலகில் புதியதன்று. மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்று முதலே உவமையின் தோற்றமும் அமைகின்றது. இத்தன்மையை அ.ச. ஞானசம்பந்தன்,

> *காணப்பட்ட பொருட்களை ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு மனிதனிடம் இயற்கையாக அமைந்துள்ள ஓரியல்பாகும். மனிதனிடம் என்று எண்ணம் தோன்றிற்றோ அன்றே மொழியும் தோன்றி இருத்தல் வேண்டும். மொழி தோன்றிய அன்றே உவமை தோன்றி இருக்கும்.* [7]

என்று குறிப்பிடுகின்றார். ஒப்புமையால் உணரச் செய்கின்ற இவ்வுத்தியின் பயனை இளம்பூரணர்,

> *இதனால் பயன் என்னை மதிப்பதோ எனில் புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்* [8]

என்று குறிப்பார்.

கவிஞரின் அனுபவமாக வெளியாகிவிடும் உவமை, படிப்போரை இன்புறுத்துவதோடு கருத்துச் செறிவுடன் பொருள் தெளிவை உண்டாக்கவல்லது. எளிதில் உணரலாகாத் தத்துவக் கூறுகளை உவமையின் வழி விளக்குதல் பொருள் புலப்பாட்டிற்குச் சிறந்ததொன்றாகும். இவ்வகையிலே வேதாந்த தேசிகனும் உவமைகளைக் கையாள்கின்றார்.

இறைவன் தாய்மைக்குணம் நிரம்பியவன் என்று பத்தியிலக்கியங்கள் பலபடப் பேசும். குலசேகராழ்வார்,

> *அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றுஅவள்தன்*
> *அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன்று இருந்தேனே*
> (நாலா. 688)

என்று இறைவனோடு தாயை உவமிக்கின்றார். இம்மரபில் வேதாந்த தேசிகனும்,

> *தள்ளத் துணியினும் தாய்போல் இரங்கும் தனித்தகவால்*
> *உள்ளத்து உறைகின்ற உத்தமன்* (தேசி. பிர. 21)

என்று தாய்மையை இறைவன்பால் உவமையாக்கி விளக்குகின்றார். குலசேகராழ்வார் தன்னிலையை முதன்மைபடுத்தத் *'தாய்'* என்ற உவமையைக் கையாள, வேதாந்த தேசிகன் இறைவனை முதன்மைப்படுத்திடும் வகையில்

இவ்வுவமையைக் கையாள்கிறார். இங்ஙனம் கருணையுடைய தாயாக உவமிக்கக் காரணம் சீவரின் உய்விற்குத் துவயத்தைஅருளியதும் *'சரணடைந்தோரைக் காப்பேன்'* என்று சரமசுலோகத்தில் கூறியதும் ஆகிய அருளை நினைந்தாகும்.

இறைவன் அருளிய தத்துவங்கள் எளிதில் உணர இயலாதன. அவற்றை உணர்ந்திடும் வகையில் ஆசாரியர்கள் எளிமைப்படுத்தி அறிவுறுத்தினர். இத்தன்மையை *'அகத்தியர் கையில் அடங்கிய கடல்'* என வேதாந்த தேசிகன் உணர்த்துகிறார். இதனை,

*. . . . . . . . . வரைவே லையோதம் அடையச்*
*செந்தமிழ் நூல்வ குத்த சிறுமா மனிச்சர்*
*சிறுகைச் சிறாங்கை அதுபோல்*
*சந்தமெ லாம்உ ரைப்ப இவையென்று தங்கள்*
*இதயத்து அடக்கி அடியோம்*
*பந்தமெ லாம்அ றுக்க அருள்தந் துஉகந்து* (தேசி. பிர. 23)

என்ற பாடலடிகளால் உணரலாம். மிகப்பெரும் கடலினை அகத்தியர் தம் உள்ளங்கையில் அடக்கியது போல ஆசாரியர் பலரும் அறிய ஒண்ணாத் தத்துவங்களைத் தம் இதயத்துள் அடக்கி எளிமையான வகையில் அவற்றின் சாரமான பொருளை அருளினார் என்று இவ்வுவமை மூலம் வேதாந்த தேசிகன் உணர்த்துகின்றார்.

முன்னாசாரியார் கூறிய தத்துவக் கூறுகளை மறுத்து வாதிட வருபவர் தோல்வியுறுதல் திண்ணம் என்று உறுதியாக எண்ணும் தேசிகன் அவரை நரிகளாக உவமிக்கின்றார். இதனை,

*முள்ளொத்த வாதியர் முன்னே வரின்எங்கள் முக்கியர்பால்*
*வெள்ளத்து இடையில் நரிபோல் விழிக்கின்ற வீணர்களே*
(தேசி. பிர. 21)

என்னும் அடிகளால் உணரலாம். வைணவ மரபினுக்கு முள்ளைபோல் ஊறு செயக் கருதும் வீணர்கள், ஆசாரியர்களிடத்து வாது புரிந்தால் வெள்ளத்திடையில் அகப்பட்ட நரி தத்தளிப்பது போல் இடருற்றுத் தோற்றோடுவர் என்பது தேசிகன் இவ்வடிகளால் உணர்த்த விரும்பும் பொருளாகும்.

வைணவ மரபில் சீவர்களுக்குள் சீவனாய் இறைவன் இருக்கின்றான் என்றுரைக்கும் மரபு முன்னுரைக்கப்பெற்றது (1.5.3). இங்ஙனம் இறைவன் திகழ்தலை வேதாந்த தேசிகன்,

*உடல்மிசைத் தோன்றும் உயிரும் உயிர்க்குயிராய் இறையும்*
*கடல்மிசைக் கண்ட தரளத் திரளவைகோத்த பொன்னூல்*
(தேசி. பிர. 28)

என்றுரைக்கிறார். பிரகிருதியாகிய கடலில் திகழும் முத்துக்கள் சீவர்கள். முத்துக்களினூடே செல்லும் பொற்சரடு இறைவன் என்று உவமிப்பதால் சரீர சரீரி பாவம் உணர்த்தப்பெறுகிறது.

சீவர் சரணாகதியில் இறைவனைத் திண்ணமாய்ச் சரணடைதலைக் குறி தவறாது விடும் அம்புடன் தேசிகன் உவமிக்கின்றார். இதனை, *'அருள்வரதர் நிலையிலக்கில் அம்பென நான் அமிழ்ந்தேனே'* (தேசி. பிர. 246) என்பதால் உணரலாம். அம்பு குறியிலக்கில் ஒன்றுபடுதல் போல ஆன்ம சமர்ப்பணத்தால் இறைவனுடன் ஒன்றுபடும் நிலையைச் சீவர் அடைதல் இவ்வுவமையால் விளக்கப்பெறும்.

சரணாகதியை மேற்கொள்வார் உயர்ந்த இன்பமாகிய முத்திப்பேற்றினையே பயனாகக் கொள்ள வேண்டும். மாறாக உலகியல் இன்பங்களை வேண்டுதல் என்பது இழிவானது. இதனை,

*பொன்னை இகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தால்*
*மன்னர் எடுப்பதுஅப் பொன்னல தேமன் னுலகனைத்தும்*
*தன்னை அடைந்திடத் தானருள் செய்யும் தனிச்சிலையோன்*
*பொன்னடி நாமடைந் தோம்புறம் ஆர்என்கொல் செய்திடினே*
(தேசி.பிர. 112)

என்ற பாடலால் உணரலாம். மிருகங்கள் புல்லோடு பொன் கிடந்தாலும் விரும்பாது புல்லையே விரும்பும். ஆனால் மன்னர்கள் பொன்னைப் பெரிதும் விரும்புவர் என்ற இவ்வுவமை பொன்போல நிற்கும் இறைவனை அடைதலே தக்கது; அன்றிச் சிற்றின்பம் வேண்டிச் சரணடைதல் தகாதது என்பதை உணர்த்தும்.

முத்திப்பேறு தரும் சரணாகதியும் ஒருநிலையில் பயன்தராமல் போய்விடக்கூடியது. சரணாகதியை மேற்கொண்டவர் அதேபலன் கருதி மற்றொரு உபாயத்தை மேற்கொண்டால் அப்போது சரணாகதி எவ்விதப் பயனையும் நல்காது. சரணாகதியின் இத்தன்மையைப் பிரம்மாஸ்திரத்துடன் வேதாந்த தேசிகன் உவமிக்கின்றார்.

அஸ்திரப் பிரயோகங்களில் உயர்ந்தது பிரம்மாஸ்திரமே. பிரம்மாஸ்திரத்தை விடுத்துப் பின்னும் ஓர் அம்பு பூட்டுதல் இழிவானது. அதுபோன்று சரணாகதியை மேற்கொண்டு பின்னும் ஓர் உபாயத்தில் ஈடுபடுதல் இழிவானது. தனக்கிணையாய் வேறோர் அஸ்திரப் பிரயோகத்தைப் பிரம்மாஸ்திரம் ஏற்காதது போலச் சரணாகதியும் வேற்றுபாயம் நாடில் பலந்தராது அமையும். இக்கருத்தினையே தேசிகன்,

*வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு*
*வேண்டில் அயனத்திரம் போல்வெள்கி நிற்கும்* (தேசி.பிர. 86)

என்ற உவமையால் சுட்டுகின்றார்.

சீவான்மா உடலினுள் இருக்கும்வரை, இயற்கையாய் அமைந்த ஞானம் குன்றி இருக்கும். இதனால் பரிபூரணபகவத் கைங்கரியம் செய்ய இயலாது மயங்கும். இச்சீவான்மா சரணாகதியை மேற்கொண்டால் முத்திப்பேறு அளிக்க இறைவன் விரும்புகின்றான். சரீரமான சிறையிலிருந்து சீவான்மாவை விடுவிக்கின்றான். சீவான்மா ஞானமாகிய ஒளிபெற்றுத் திகழும். சீவான்மாவின் இவ்வியல்பை உறையிலிட்ட வாளுடன் வேதாந்த தேசிகன் உவமிக்கின்றார். வாள் உறையிலிருக்கும் போது அதன் வலிமையும் ஆற்றலும் குன்றி இருப்பது போலச் சீவான்மா உடலில் இருக்கும்வரை பகவத்கைங்கரியம் செய்தல் அரிது என்றுணர்த்துகின்றார். இதனை *'உறையிலிட்ட வாளென ஊனுள் உறையும் உயோகியர்'* (தேசி.பிர. 144) என்னுமடியால் உணரலாம்.

இங்ஙனம் பொருண்மை ஒன்றனுக்கு ஓர் உவமை குறிப்பதே அல்லாமல் பல உவமைகள் இடம்பெற்றும் அமைகின்றன. இவ்வமைப்பை, இலக்கணிகள் பலவியல் உவமை, பலபொருள் உவமை என்றும் சுட்டுவர். இங்ஙனம் உவமை அடுக்கிவருதல் கூற விரும்பும் கருத்தினுக்கு வலிவு சேர்ப்பதாக அமைகிறது.

திருமாலின் அழகிய தோற்றத்தினைப் 'பெடை இரண்டையோர்' (தேசி.பிர. 228) என்ற பாடலில் தேசிகன் உவமைகள் பலவற்றால் அடுக்கிக் கூறுகிறார். இப்பாடலில்,

> *உறஸ்திகிரியில் பேரருளான் பெரிய பிராட்டியுடனும் பூமி தேவியுடனும் சாசுவதமாக ப்ரகாசிக்கும் நிலைக்கு ஓர் ஆண் அன்னம் இரண்டு பெடைகளுடன் கூடியிருப்பதையும் ஒரு பெரிய ரத்னமலை இருபக்கத்தும் நீரருவிகள் பெருகியோட நிற்பதையும் ஆண்யானையொன்று இரண்டு பெண் யானைகளுடன் கூடிக் குலாவுவதையும் ஸூர்யன் சாயையோடும் ஒளியோடும் திகழ்வதையும் ஒரு மரம் இரண்டு கொடிகளுடனும் ப்ரகாசிப்பதையும் தர்மஸூக்ஷ்மம் வேதங்களோடும் ஸ்ம்ருதிகளோடும் பொருந்தி நிற்பதையும் உவமானமாகக் கூறலாம்.* [9]

என்றுரைக்கிறார். இப்பாடலின் (தேசி.பிர. 228) அரையடி ஒவ்வொன்றிலும் பேசலாம், பயிலலாம், ஓதலாம், பரவலாம், குலாவலாம், எண்ணலாம் என்று அடுக்கிய நிலை இவ்வுவமைகளாலும் உணர்த்த முடியாத அழகிய திருவுரு என்பதைச் சுட்டுகின்றது. இதே போன்று மற்றொரு பாடலான *'இரு பரிதியைந்த'* (தேசி.பிர. 225) என்பதும் திருமாலின் திருவுருவை உவமை அடுக்குகளால் வருணிக்கிறது.

ஆசாரியர் இறைப்பெருமைகளையும் சரணாகதித் தத்துவங்களையும் தம் சீடருக்கு உணர்த்துகின்றார். அவற்றை உணர்ந்து நடத்தலே நன்மை பயக்கும். அவையே ஆன்ம ஈடேற்றத்திற்குச் சாரமான பொருளாக அமைவன. இக்கருத்தினை அடுக்கிய உவமைகளால் வேதாந்த தேசிகன் வலியுறுத்துகின்றார். இத்தன்மையை,

> *பொங்குபுனல் ஆறுகளில் புவனம் எல்லாம்*
> *பொற்கழலால் அளந்தவன்றன் தாளால் வந்த*
> *கங்கையெனும் நதிபோலக் கடல்கள் ஏழில்*
> *கமலைபிறந் தவனுகந்த கடலே போலச்*
> *சங்குகளில் அவனேந்தும் சங்கே போலத்*
> *தாரிலவன் தண்டுளவத் தாரே போல*
> *எங்கள்குல பதிகளிவை மேலாம் என்றே*
> *எண்ணியநல் வார்த்தைகள்நாம் இசைகின் றோமே*
>
> (தேசி.பிர. 120)

என்பதால் உணரலாம். ஆசாரியர் அருள்மொழிகளை இறைவனுக்கொப்பான பொருள்களுடன் ஒப்பிட்டுக் கூறுவதால் இம்மொழிகள் யாவும் இறைவன் மொழிகளே என்பது குறிப்பில் உணர்த்தப்பெறும்.

இம்மொழிகளை கேட்டு அவற்றின் வழி நடந்து சரணடைவோர் முக்திப்பேறு பெறுவர். இங்ஙனம் முக்தியடைவார்க்கும் தேசிகன் உவமைகள் பல அடுக்கி சுட்டுகிறார். இதனை,

அடல்உரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல
அழுக்கடைந்து கழுவிய நல்தரளம் போல
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போல
காட்டுத்தீக் கலந்தொழிந்த களிறே போல
மடல் கவரும் மயல்கழிந்த மாதர் போல
வன்சிரை போய் மன்னர் பதம் பெற்றார் போல
உடல் முதலா உயிர் மறைக்கும் மாயை நீங்கி
உயர்ந்த பதம் ஏறியுணர்ந்து ஒன்றினோமே

(தேசி.பிர. 151)

என்ற பாடலால் உணரலாம். இப்பாடலில் சீவரும் முக்திப்பேறு அடையும்வரை அவரை வருத்திய மாயையும் உவமிக்கும்பொருளாய் அமைந்து பல உவமைகளால் உணர்த்தப்பெறும்.

ஏதேனும் ஓர் இடரில் அமிழ்ந்து விடுபட்ட பொருட்களை உவமைகளாகக் காட்டுவதன் மூலம் மாயையை விட்டு நீங்கும் தன்மையிலேயே முத்திப்பேறு அடைய இயலும் என்பதை உணர்த்துகிறார்.

வேதாந்த தேசிகன் கையாளும் உவமைத் தொடர்களுள் சில புராணத்தொன்மம் சார்ந்தனவாக அமைதல் ஈண்டு எண்ணத்தக்கது. இவை வைஷ்ணவ மரபில் அவர் கொண்ட ஈடுபாட்டை உணர்த்தி நிற்கின்றன. பொதுப்படச் சுட்டும் உவமைகள் யாவும் வைஷ்ணவச் சாஸ்திரத் திட்பத்தை எளிமையுடன் உணர்த்தும் வகையில் அமைகின்றன. இலக்கிய நெறிகளில் பொருள் புலப்பாட்டிற்கு உதவும் உவமையெனும் உத்தி சாத்திர திட்பத்தை உணர்த்தும் இலக்கியப் பகுதிகளுக்கும் அருந்துணையாய் அமைகின்றது.

### 5.2.1.2. உருவகத் தொடர்கள்

உவமையின் செறிவே உருவகமாகும். தண்டியலங்காரம்,

*உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து*
*ஒன்றென மாட்டின் அஃதுஉரு வகமாகும்* (தண்டி. 36)

என்று குறிக்கும். உவமையைப் போன்று உருவகமும் கருத்துப் புலப்பாட்டிற்குரிய கருவியாகும். இவ்வகையில் தேசிகப் பிரபந்தம் கொண்டுள்ள உருவகத் தொடர்களுள் சில சான்றுகளைக் காணலாம்.

*காரணமாய் உயிராகி அனைத்தும் காக்கும்*
*கருணை முகில்* (தேசி.பிர. 11)

என்ற தொடரில் முகில் மழைபொழிந்து உலகின் அனைத்துப் புற இயக்கங்கட்கும் காரணமாவது போல இறைவன் கருணை, ஆன்ம செயல்பாட்டிற்கு முற்றிலும் காரணமாகிறது என்று வேதாந்த தேசிகன் குறிக்கிறார். முகில் போலும் கருணை என்பது *'கருணைமுகில்'* என்று உவம உருபின்றி உவமை, பொருள் என்று வேறுபடாது ஒருசொல் நீர்மைத்தாய் அமைந்தது. முத்திவழிக்குத் தடையாய் அமைந்து நிற்பது வினைகள். இவ்வினைகளால் பிறவித்துயர் மாறிமாறி வரும். இத்தகைய தன்மையால் மீள முடியாத கடல் என்று வினைகளை வேதாந்த தேசிகன் உருவகிக்கிறார். இதனை *'ஊனில் இணைந்து உழல்விக்கும் வினைக்கடல்'* (தேசி.பிர. 319) என்னும் அடியாலுணரலாம். இவ்வுருவகம் மீள முடியாத கடலாயினும் சரணாகதி மீண்டுவரச் செய்யும் என்னும் கருத்தமைதிக்குத் துணை நிற்கிறது.

*. . . . . . . . . . . . . . அருள்கொடுத்துப்*
*பகலதனால் பழங்கங்குல் விடிவிக்கும்*

(தேசி.பிர. 255)

என்ற பாடலடிகளில் சரணடைந்தவர்க்குப் பழவினைகளாகிய இரவு அருளாகிய பகலால் நீங்கிவிடும் என்று வினைகளை இருளாகவும் அருளைப் பகலாகவும் உருவகப்படுத்துகின்றார்.

*கருமமென ஞானமென அதனால் கண்ட*
*உயிர்க்கவரும் காதலெனக் கானில்* (தேசி.பிர. 102)

என்ற அடிகளில் பக்திநெறியின் அருமையைச் சுட்டுவதன் மூலம் சரணாகதியின் எளிமை வற்புறுத்தப்படுகிறது. இதன்பொருட்டுக் கர்மம், ஞானம், பக்தி அடங்கிய பத்திநெறியை அணுக அரிதான காடு என்று உருவகப்படுத்துகின்றார்.

வைஷ்ணவ மரபில் சரணாகதியை அறிவுறுத்திய ஆசாரியர் கூற்றுக்கு மாறானவற்றைக் கழுதைக்கத்து என்று வேதாந்த தேசிகன் குறிக்கிறார். இதனை

*பலத்திலொரு துவக்கற்ற பதவி காட்டிப்*
*பல்லுயிரும் தடுமாறப் பண்ணு கின்ற*
*கலித்திரளின் கடுங்கழுதைக் கத்து மாற்றிக்*
*கண்ணுடையார் கண்டுரைத்த கதி* (தேசி.பிர. 199)

என்னும் அடிகளால் உணரலாம். மேற்குறித்த உருவகங்கள் வைணவ மரபு, இறைவன் பெருமை, சரணாகதியின் சிறப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தியுரைக்க அருங்கருவிகளாக அமைகின்றன.

### 5.2.1.3. படிமம்

படிமம் என்பது உருவகத்தின் செறிவாக அமைவதாகும். இமேஜ் (Image) என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் காட்சித் தொடர்பையும் மனத் தொடர்பையும் ஒருங்கே காட்டும் படிமம் என்ற சொல்லே ஏற்றது. [10] இப்படிமங்கள் நுண்பொருள் தன்மையில் அமைவனவற்றைப் பருப்பொருளாக உருவகித்துக் காட்சியாக்கிக் கற்போர் எளிதில் உணரும் வகையில் அமைவன. கருத்துக்களின் நுண்மைப்பொருள் படிமத்தன்மையில் அமையும் போது தத்துவ நுட்பம் எளிதில் விளங்கும்.

பொதுவாகச் சொன்னால் சொற்களால் அமையும்படமே படிமம் எனலாம். ஓர் அடைமொழியோ உருவகமோ, உவமையோ படிமத்தை உருவாக்கலாம். தன் கற்பனையைத் தூண்டி வெளிப்படையான கருத்தைப் புலப்படுத்தும் வருணனைப் பகுதியும் படிமம் ஆகலாம். மனித உணர்ச்சியையும் சிறப்பான கவிதை உணர்ச்சியையும் படிப்போர் பெறும் வண்ணம் படிமம் திகழும்.[11] து. சீனிச்சாமி, *'புலனனுபவ உருக்களை மொழியில் காட்டும் முறைமையே படிமவியல் அமைப்பாகும்'* [12] என்பதும் இவண் நோக்கத்தக்கது. இவ்வகையில் தேசிகன் கையாளும் படிமக்கூறுகளை இனிக் காணலாம்.

பிரகிருதியான அசித்திணை மெய்யாகக் கருதி நிற்கும் தன்மையை வேதாந்த தேசிகன் *'கண்புதையல்'* என்று வருணிக்கிறார். இக்கண்புதையலாகிய விளையாட்டை மேற்கொள்பவனாக இறைவனே இருக்கின்றான். தன்னைச் சரணடைவோர்க்குத் தத்துவத்திரயத்தை உணர்ந்து கொள்ளும் அறிவைத் தருவதன் மூலம் முத்திக்குத் தடையாய் நிற்கும் மாயை நீங்குகிறது. இம்மாயைத்தன்மையைக் *'கண்புதையல் விளையாட்டு'* என்ற படிமத்தால் உணர்த்துவதை,

*கண்டுகளித்து அடிசூட விலக்காய் நின்ற*
*கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே* (தேசி.பிர. 85)

என்ற அடிகளால் உணரலாம். தத்துவச் செறிவை எளிமையாக விளக்கும் வகையில் சில செய்திகள் படிமங்களாய் உவமிக்கப் பெறும். இம்மரபுகள் *'நியாயம்'* என்றும் குறிக்கப்பெறும். இத்தன்மையில் அமைந்த தத்துவக் கூறினை வேதாந்த தேசிகன் தம் பாடலொன்றில் விளக்கியுள்ளார்.

பிறவியால் வினைகளும் வினைகளால் பிறவிகளும் தொடர்ந்து வருதல் கூடும். இப்பிறவிகளையும் பிறவிகளை ஏற்படுத்தும் வினைகளையும் சரணடைபவர்க்கு இறைவன் நீக்கியருள்கின்றான். சரணடையாதவர்க்குப் பிறவித்துன்பம் தொடர்ந்துவரும்.

விதையால் முளையும் முளைக்கின்ற செடியால் விதையும் மாறி மாறித் தோன்றுவனபோல் வினைகளால் பிறவியும் பிறவியால் வினைகளும் தொடர்கின்றன என்பதை *'விதைமுளையின் நியாயத்தால்'* (தேசி.பிர. 253) என்னும் அடியில் குறிக்கின்றார்.

இப்படிமங்கள் யாவும் உவமையின் அடிப்படையில் அமைந்து தத்துவக் கருத்துகளை உய்த்துணர்த்திடச் செய்வனவாய் அமைகின்றன.

### 5.2.1.4. குறியீடு

குறியீடு என்பது கற்பனையின் அடிப்படையில் வளர்ந்த ஓர் இலக்கிய உத்தியாகும். சொல்லக் கருதிய ஒரு பொருளின் உண்மைத் தன்மை ஏறத்தாழ அதனையொத்த இன்னொரு பொருள் கொண்டு விளக்கும் உத்தியே குறியீடு ஆகும். இக்குறியீடு தொல்காப்பியம் சுட்டும் உள்ளுறை, இறைச்சி என்னும் இலக்கிய உத்திகளை ஒத்தது. ஆனால்

இயற்கைப் பொருட்களின் பின்னணியிலே அமைதல் வேண்டும் என்ற நியதி குறியீட்டிற்கு இல்லை. உவமை, உருவகம் போன்று ஒப்புமையாலேயே குறியீடும் அமைகிறது. குறியீட்டுப் பொருளால் குறிக்கப்படும் பொருள் உய்த்துணரப் பெற வேண்டும். வெளிப்படையாக உணர்த்தப்படமாட்டாது. குறியீட்டின் இத்தன்மையை அப்துல் ரகுமான்,

*ஒப்புறவாலும் ஒட்டுறவாலும் மற்றொன்றைக் குறிப்பாக*
*உணர்த்தும் பொருள் (object) குறியீடு எனப்படுகிறது.*[13]

என்றுணர்த்துகின்றார். இவ்வகையில், வேதாந்த தேசிகன் பயன்படுத்தும் அருஞ்சொல்லாட்சிகள் குறியீட்டுப் பொருண்மையில் அமைகின்றன.

*. . . . . . . . . . . . . . . . . . எதிவரனார்*
*மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே*
(தேசி.பிர. 133)

என்னும் அடிகளில் *'மடைப்பள்ளி வந்த மணம்'* என்பது மேலெழுந்த வாரியாக நோக்கின் இராமானுசரின் வழியில் வேதாந்த தேசிகனும் தத்துவச் சாத்திரங்களை உரைக்கின்றார் என்பதை உணர்த்தும். இராமானுசரிடத்து அன்புகொண்டு மடைப்பள்ளியில் (சமையலறை) தொண்டு புரிந்து, எம்பெருமானிடம் பல தத்துவச் சாத்திரங்களை உணர்ந்துகொண்ட கிடாம்பியாச்சான் தம் தொண்டின் சிறப்பால் மடைப்பள்ளியாச்சான் எனப்படுவார். இச்சிறப்பை *'மடைப்பள்ளி வந்த மணம்'* எனும் தொடர் குறிப்பில் உணர்த்துகிறது.

### 5.2.1.5. எண்ணுப் பெயரிடல்

அளவை எண்ணிக்கையைச் சுட்டவும் அளவிறந்த தன்மையைச் சுட்டவும் எண்ணுப் பெயர்கள் கையாளப்படுகின்றன. இவை எண்ணிக்கை என்ற அளவிலே அல்லாமல் ஆகுபெயராய்ப் பிறிதொன்றை உணர்த்தும் தன்மையிலும் அமைவன. பொருண்மையைப் புலப்படுத்தும் நெறிகளில் இவை குறிப்பில் உணர்த்தும் பாங்கில் அமைகின்றன.

பக்தியிலக்கியங்களில் இறைவனின் பண்புகளைச் சுட்டவும் ஒலியமைதி கருதியும் இவ்வெண்ணுச் சொற்கள் கையாளப்படுகின்றன. அனுமன் துதியாக அமைந்த,

*அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி*
*அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க் காக ஏகி*
*அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலார் ஊரில்*
*அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்நம்மை அளித்துக் காப்பான்*
(கம்ப. காப்பு. 31)

என்னும் பாடல் எண்ணுச் சொற்களில் புராணக் கூறுகளை உள்ளடக்கியதாக அமைகிறது. இப்பாடலில் *'அஞ்சு'* (ஐந்து) என்னும் சொற்கள் பஞ்சபூதங்களாகிய ஐம்பேராற்றலைக் குறிப்பன. ஒன்று என வரும் ஐந்தும் முறையே காற்று, நீர், ஆகாயம், பூமி, தீ என்பனவற்றைச் சுட்டுவன. இதனை இப்பாடலினுட்பொதிந்த புராண மரபுகளின் பின்னணியிலேயே உணர இயலும்.

இவ்வகையிலேயே வேதாந்த தேசிகனின் பாடல்களிலும் எண்ணுச் சொற்கள் சுட்டப் பெறுகின்றன. தத்துவ வெளிப்பாட்டிற்குரியவாக இவை பயன்படுமாற்றை இனிக் காணலாம்.

*'முத்திக்கருள் சூட மூன்று'* (தேசி.பிர. 3) என்னுமடியில் மூன்று என்ற சொல் தத்துவமாய் நிற்கும் சித்து, அசித்து, இறைவன் என்னும் முப்பொருள்களை உணர்த்திற்று. மேலும் இரகசியப் பொருள்கள் எனப்படும் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய முப்பொருளும் மூன்று என்று தொகுத்துச் சுட்டப்பெறும். இதனை,

*மூன்றில் ஒருமூன்றும் மூவிரண்டும் முந்நான்கும்*
*தோன்றத் தொலையும் துயர்* (தேசி.பிர. 4)

என்னும் பாடலில் உணரலாம். இப்பாடலில் இம்மூன்று பொருட்களின் சொல்லெண்ணிக்கை வைத்துப் பகுத்துச் சுட்டப்படும். திருமந்திரம் மூன்று சொற்களை உடையதாகையால் ஒரு மூன்று எனவும் துவயம் ஆறு சொற்களை உடையதாகையால் மூவிரண்டு எனவும் சரமசுலோகம் பன்னிரு சொற்களை உடையதாகையால் முந்நான்கு எனவும் சொல்லெண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிடப் பெறுகின்றன.

*எட்டுமா மூர்த்தி எண்கணன் எண்டிக்கு*
*எட்டிறை எண்பிர கிருதி*
*எட்டுமா வரைகள் ஈன்றஎண் குணத்தோன்*
*எட்டெணும் எண்குண மதியோர்க்கு*
*எட்டுமா மலர்எண் சித்திஎண் பத்தி*
*எட்டியோ காங்கம்எண் செல்வம்*
*எட்டுமா குணம்எட்டு எட்டெணும் கலைஎட்டு*
*இரதமே லதுவும் எட்டினமே* (தேசி.பிர. 84)

என்ற பாடலில் எட்டு என்ற எண்ணுப்பெயர் எண் வகையாகக் குறிக்கப்பெறும் பொருள்கள் யாவினையும் புலப்படுத்தும். எட்டு வடிவமாகிய சிவவடிவம், எட்டுக் கண்ணுடைய பிரமன், எட்டுத்திசைகள், அவற்றிற்குரிய எட்டுக்கடவுளர், எட்டுப் பிரகிருதிகள், எட்டுமலைகள், பகவானின் எட்டுப் பண்புகள், புத்தியின் எட்டுப் பண்புகள், நற்பண்புகளாகிய எட்டு மலர்கள், எட்டுவகை சித்தி, எட்டுவகைப் பத்தி, எட்டு வகை யோகம், எட்டுவகைச் செல்வம், சீவரின் எட்டுப்பண்புகள், (எட்டோடு எட்டு உறழவரும்) அறுபத்து நான்கு கலைகள், எண்வகைச் சுவைகள் எனப்பெறும் இவையாவுமே திருமந்திரத்தால் அடையத்தக்கது. இங்ஙனம் இறைவனின் சர்வ வல்லமையைச் சுட்ட எட்டு என்ற எண்ணுப் பெயரின் அடுக்கு உதவுகின்றது.

திருமந்திரம் எட்டெழுத்துக்களை உடையது. துவயம் இருதொடரான் அமைந்தது. ஒன்று எழுத்தெண்ணிக்கையாலும் மற்றொன்று தொடரெண்ணிக்கையாலும் பெயரிடப்பட்டுள்ளன. *'எட்டும் இரண்டும் அறியாத எம்மை'* (தேசி.பிர. 93) என்ற அடியில் *'எட்டு'* திருமந்திரத்தையும், இரண்டு துவயத்தையும் சுட்டுவன. இவை வடமொழியிலும் *'அஷ்டாக்ஷரம்'*, *'துவயம்'* எனப்படுதல் எண்ணத்தக்கது.

இங்ஙனம் எண்ணுப்பெயர்களை, இறைத் தத்துவங்களையும் இறைக் கருணையையும் விளக்கத் தேசிகன் கையாண்டுள்ளார். மேலும் எண்ணிக்கையாலேயே திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகியன குறிப்பிடவும் பெறுகின்றன. சொல்லெண்ணிக்கையாலும், எழுத்தெண்ணிக்கையாலும் ஆகுபெயராய் இவ்வகை இரகசியங்கள் சுட்டப் பெறுகின்றன.

### 5.3. நாயக - நாயகி பாவம்

உலகியலில் காணப்படும் உறவு நிலைகளில் சிறப்பித்துச் சொல்லப்படுவது ஆடவர் பெண்டிர்க்கு இடையிலான காதலுணர்வேயாகும் இவ்வுணர்விற்கு முதன்மை தந்து சங்கப் பாக்கள் எழுந்தன. பக்தி இயக்கம் செழித்தபோது இக்காதலுணர்வு நாயக - நாயகி பாவமாய்ப் பரிணாமம் அடைந்தது.

சங்ககால அகத்திணைப் பாடல்கள், தலைவன் - தலைவி ஆகியோரிடையே தலைவியின் நிலையைப் பெரிதும் விதந்து கூறுகின்றன. தலைவனை நாடும் மனம் தலைவனின் வரவுக்குக் காத்திருத்தல் போன்ற அகத்திணை மரபுகள் இறைக்கொள்கைக்கும் ஏற்புடையவாயின. இந்நெறியில் ஈடுபடும் ஒருவன் தன்னைக் காதலியாகக் கொண்டு, இறைவனைக் காதலனாகக் கருதுவது நாயக - நாயகி பாவத்தின் அடிப்படையான கோட்பாடாகும்.

ஆழ்வார்களும் தம்மை நாயகியராகவும் இறைவனைத் தமக்குரிய நாயகராகவும் கருதிக் காதலமையப் பாடிய பல பாடல்களும் அவர்தம் பக்திப் புலப்பாட்டுக்குக் கருவிகளாயின. மேலும் வைணவ மரபில் இறைவனை நாயகனாய் முன்வைத்தல் ஆழங்காற்பட்ட ஒன்று. ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்பதை வற்புறுத்தும் வைணவ மரபில் *'அவனொருவனே பரமான்மா; அவனை அடைதலே சீவர்கட்கு அரும்பணி'* என்பதை வெளிப்படுத்த நாயக - நாயகி பாவம் துணை நிற்கின்றது.

இம்மரபில் தேசிகனும் தம் பாடல்களில் தம்மை பெண்டன்மையராகக் கொண்டு, பாடல் பல புனைந்து *'நாயக - நாயகி பாவம்'* எனும் கருத்தியலுக்கு வலிமை சேர்த்துள்ளார். இவ்வகையில் இவர் பாடிய பாடல்கள் மூன்று ஆகும். இம்மூன்றுனுள் இருபாடல்கள் தோழிகூற்றாகவும் ஒரு பாடல் செவிலித்தாய் கூற்றாகவும் அமைகின்றன. இம்மூன்று பாடல்களும் திருவயீந்திரபுரம் தெய்வநாயகனைப் பற்றிப் பாடப்பட்டன.

*மொழிவார் மொழிவன மும்முறை யாரும் அயிந்தையில் வந்து*
*இழிவார் இழிகவென்று இன்னமு தக்கடல் ஆகிநின்ற*
*விழிவார் அருண்மெய்யர் மெல்லடி வேண்டிய மெல்லியன்மேல்*
*பொழிவார் அனங்கர்தம் பூங்கரும்பு உந்திய பூமழையே*

(தேசி.பிர. 349)

என்ற தோழிகூற்றுப் பாடலில் *'தலைவனான திருமாலின் அடிதொழ விரும்பும் தலைவி அவ்வின்பம் கிடைக்காமையால் துன்புறுகிறாள். அத்துன்பினை மன்மதன் பொழியும் கணைகள் மிகுவிக்கின்றன'* என்ற அகப்பொருட் செய்தி சுட்டப்படுகிறது. இவ்வகப் பொருண்மை திருவயிந்திரத் தலப்பெருமை, சரணடைய வேண்டும் என்ற சீவர் விருப்பம் ஆகிய செய்திகளை விளக்கத் துணை நிற்கின்றன.

*ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த*
*கார்க்கொண் டலைக்கண்ட காதற் புனமயில் கண்பனியா*
*வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க் கும்வெள்கி வெவ்வுயிர்க்கும்*
*பார்க்கின் றவர்க்கிது நாமென்கொல் என்று பயிலுவமே*

(தேசி.பிர. 352)

என்னும் தோழிகூற்றுப் பாடலும் திருமாலின் கருணைச் சிறப்பை எடுத்துரைக்கும். இது சரணடைபவர் யாவர்க்கும் கருணை பொழியும் தெய்வநாயகனைக் கண்ட தலைவியின் அகவுணர்வு பெருக்கெடுத்த நிலையில் நேர்ந்த அவளது மெய்ப்பாடுகளை விளக்கும் தன்மையில் அமைகிறது. இப்பாடலில் 'காதற்புனமயில்' என்பது பக்தி நிலையில் தன்வசமிழந்து இறைநிலையின் அருச்சாவதார நிலையில் ஈடுபட்ட அடியாரைக் குறிக்கிறது.

வேதாந்த தேசிகன் செவிலித்தாய் கூற்றாக அமைந்த,

*வெற்புடன் ஒன்றி அயிந்தையில் வெவ்வினை தீர்மருந்தொன்று*
*அற்புத மாக அமர்ந்தமை கேட்டருள் வேண்டிநிற்கப்*
*பற்பில மர்ந்தசெய் யாள்படி காட்டிய பண்புடையெம்*
*விற்புரு வக்கொடிக் கோர்விலங் காமயல் பெற்றனமே*

(தேசி.பிர. 355)

என்ற பாடலில் திருமகள் போலத் தானும் திருவயீந்திரபுரம் தெய்வநாயகனை விரும்புகின்றாள் என்று கூறுகிறார். 'திருமாலால் தலைவிக்கு நேர்ந்த காதல் நோய்க்குத் திருமாலே மருந்து. தலைவி அம்மருந்தை விரும்பி நிற்கின்றாள்' என்று செவிலி குறிக்கின்றாள். இப்பாடலில் நித்யசூரி வாழ்வை விரும்பும் சீவர் தலைவியாகவும் சீவர்தம் நிலையை கண்டு வியப்போர் செவிலியாகவும் சுட்டப்பட்டுள்ளனர்.

இங்ஙனம் நாயக - நாயகி பாவமாகச் சுட்டும் மரபை ஸ்ரீராமதேசிகாசாரியார்,

> *ஸ்ரீதேசிகனுக்குத் தெய்வநாயகன் மீதுள்ள அளவிலாக் காதல் இங்ஙனே பெண் தன்மையைத் தந்தது. இத்தன்மை தாமாக ஏறிட்டுக் கொள்வதன்றித் தானே பரவசமாய் வருவதாகும். புருஷோத்தமன் முன்பு சுதந்திரலேசமுமின்றிப் பரதந்த்ரமாய்க் கிடக்கும் உலகமுழுவதும் பெண்தன்மையதாகுமன்றோ! இங்ஙனம் ஸ்ரீதேசிகன் தலைமகளின் தன்மையை அடைந்தார்.* [14]

என்று குறிப்பது எண்ணத்தக்கது. இந்நாயக - நாயகி பாவத்தினால் இறைவனின் பிரதான பிரதிதந்திரமும் சீவர்கள் இறைவனைச் சரணடைதலே தக்கது என்பதும் அங்ஙனம் சரணடைபவர்தம் அன்பின் பெருக்கும் காதலுணர்வாய்ச் சுட்டப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் தலைவியின் உணர்வை, தலைவி கூற்றாக வெளிப்படுத்துவதினும் தோழி, செவிலி, தலைவன் கூற்றாக வெளிப்படுத்தும் பாடல்களே மிகுதியாகும். பக்தி சார்ந்த அகப்பொருளான நாயக - நாயகி பாவத்தில் பிறர் கூற்றினும் தலைவி கூற்றாய் அமையும் பாடல்களே பெரும்பான்மையாகும். தலைவியாய்த் தன்னை கருதிடும் அடியார்தம் அன்பின் செழுமையைத் தலைவி கூற்றுப் பாடல்கள் விளக்கும். ஆனால் தேசிகப் பிரபந்தத்தில் தோழி, செவிலி ஆகியோர்தம் கூற்றாக அமைந்த பாடல்களே காணப்படுகின்றன.

இக்கூற்றுகள் அடியாரின் பண்பைப் பெறவிரும்பும் பிறனொருவன், அப்பக்தியை உணரும் பான்மையிலேயே சுட்டப்பெறுகின்றன எனலாம். மேலும் நம்மாழ்வார் குலசேகராழ்வார் போன்றோர் நாயக - நாயகி பாவத்தில் தம்மை நாயகியாய்க் கருதிப் பாடினர். அவர் தம்மை உளங்கொண்டே வேதாந்த தேசிகன், தம்மை தோழியாயும் செவிலியாயும் பாடினார் என்றும் கருதலாம்.

மடல் பற்றிய செய்தி முற்குறிப்பிட்ட உவமைநிலையில் (5.2.1.1) விளக்கப்பெற்றது. இம்மடற்பொருண்மை, திருமங்கையாழ்வார் திருமடலில் *'மகளிரும் மடலேறுவர்'* என்றுரைத்த அகமரபில் அமைந்துள்ளது. மடலேறித் தலைவனைப் பெற்ற மாதர் என்பது சரணடைந்து நித்ய சூரிவாழ்வினைப் பெற்ற சீவர்க்கு ஒப்புமையாக்கப்பட்டது.

## 5.4. யாப்பியல் நெறிகள்

பாடுபொருளுக்குகந்த வகையில் கையாளப்படும் மொழியின் அமைப்பு வடிவம் ஆகும். இது உரைநடையாகவோ, செய்யுளாகவோ அமையலாம். உரைநடைக்கூறு சிலப்பதிகார காலத்திலேயே தொடங்கப் பெறினும் ஐரோப்பியர் வருகையிலேயே செழிப்புற்றது. அதற்குமுன் பாடுபொருளுக்குத் தகுந்த பா, பாவினங்களை மிகுதியாகக் கையாண்டனர்.

பாடலில் கையாளப்படும் பொருண்மைக்கேற்ற வகையில் ஒலிநயம் சிறந்தமைய வேண்டும் எனக் கருதிய புலவர் பலர் பல்வேறு உணர்வுபோக்கிற்கு ஏற்பப் பா, பாவினங்களை அமைத்துக் கொண்டனர்.

இவ்வகையில் வேதாந்த தேசிகன் வஞ்சிப்பா, வஞ்சிப்பாவினம் நீங்கலாக ஏனைய பாக்களின் மரபுகளைக் கையாண்டு உள்ளார்.

**பாவகை**

| | | |
|---|---|---|
| வெண்பா | : | குறள் வெண்பா - 2; நேரிசை வெண்பா - 15 |
| ஆசிரியப்பா | : | நிலைமண்டிலம் - 4; நேரிசை - 1 |
| கலிப்பா | : | கொச்சகக் கலிப்பா - 23. |

**பாவினவகை**

| | | |
|---|---|---|
| வெண்பா | வெண்டுறை (செந்தொடை)-1 | |
| ஆசிரியப்பா | அறுசீர் ஆசிரியவிருத்தம்-12 | அறுசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-2 |
| | எழுசீர் ஆசிரியவிருத்தம்-2 | எழுசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-2 |
| | எண்சீராசிரிய விருத்தம்-133 | எண்சீர் ஆசிரியச்சந்த விருத்தம்-1<br>பன்னிருசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-1<br>பதிமூன்றுசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-1<br>பதினான்குசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-3 |
| | பதினாறுசீர் ஆசிரிய விருத்தம்-1 | பதினாறுசீர் ஆசிரியச்சந்த விருத்தம்-3 |
| | இருபத்தெண்சீர் ஆசிரிய விருத்தம்-2 | |
| கலிப்பா | கட்டளைக்கலித்துறை-185 | கலிவிருத்தம்-11 |

தேசிகப் பிரபந்தத்துள் ஒரே பா அல்லது பாவினங்கள் அடங்கிய பிரபந்தங்களும் பலவகைப் பா, பாவினம் விரவிய பிரபந்தங்களும் காணப்படுகின்றன. இவ்வகையில் ஒரே பா அல்லது பாவினம் அடங்கிய பிரபந்தங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| ஆசிரியப்பாவினம் | அறுசீர் ஆசிரியவிருத்தம் | திருமந்திரச் சுருக்கு |
| | எண்சீர் ஆசிரியவிருத்தம் | திருச்சின்னமாலை<br>பிரபந்தசாரம்<br>ஆகாரநியமம் |
| கலிப்பாவினம் | கொச்சகக் கலிப்பா | அடைக்கலப்பத்து<br>அருத்தபஞ்சகம் |
| | கலிவிருத்தம் | ஶ்ரீவைணவ தினசரி |
| | கட்டளைக் கலித்துறை | பன்னிருநாமம்<br>துவயச் சுருக்கு<br>சரமசுலோகச் சுருக்கு<br>கீதார்த்த சங்கிரகம் |

இப்பிரபந்தங்கள் யாவும் பிற தத்துவக் கூறுகள் விரவாது ஏதேனும் ஒரு பொருண்மையை மட்டும் நுவல்வதாக அமைகின்றன. சான்றாகத் திருமந்திரச்சுருக்கு திருமந்திரமாகிய '*ஓம் நமோ நாராயணாய*' என்பதன் தத்துவப்பொருளை; ஆன்ம, பர, பல ஆன்ம நிக்ஷேபத்தை உரைப்பதை மட்டுமே பொருளாக உடையது.

இவையன்றி ஏனைய பிரபந்தங்கள் யாவும் பல பாக்களை, பாவினங்களைக் கொண்டமைகின்றன. இத்தகைய பிரபந்தங்கள் யாவும் தத்துவம், இதம், புருஷார்த்தம் என்னும் மூன்று பொருளையும் விளக்குவனவாகவும் பல மதங்களின் தத்துவச் செறிவினை ஆராய்வதாகவும் அமைகின்றன. அவ்வப்பொருண்மைக் கூறினுக்கு ஏற்பப் பாவகைகள் கொள்ளப்பட்டுள்ளன. மும்மணிக்கோவையில் நிலைமண்டில ஆசிரியம், நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியனவும் நவமணிமாலையில் பலவகையான விருத்தங்களும் கட்டளைக் கலித்துறையும் கையாளப்பட்டுள்ளன. இவையிரண்டும் தனி இலக்கிய வகையின.

இங்ஙனம் பலவகை யாப்பினைக் கையாண்டுள்ள வேதாந்த தேசிகன் 'கலித்துறை', 'விருத்தம்' என்னும் சொல்லாட்சிகளைச் சிலேடையாகவும் கொண்டுரைக்கிறார். நவமணிமாலையில் முற்கூறியபடி விருத்தங்களும் கட்டளைக் கலித்துறையும் மட்டுமே அமைகின்றன.

இந்நூலின் பாடலொன்றில் *'விருத்தம் கலித்துறைமேவும்'* (தேசி.பிர. 365) என்ற அடியினை *'விபரீத ஞானம் கிளர்ந்து தங்குதல் பொருந்திய'* என்ற பொருள்பட அமைக்கின்றார்.

## 5.5. இயல் முடிபுரை

5.5.1 படைப்பின் அடிப்படைப் பொருளை விளக்கிடக் கவிஞன் கொள்ளும் முயற்சியிலேயே பொருள் புலப்பாடு இலங்குகிறது. பொருள் புலப்பாட்டிற்குக் கையாளும் உத்திகளை அணிநயத்திற்கும் முருகியலுணர்வுக்கும் கையாளும் மரபு இலக்கியங்களில் காணப்படுகிறது. தத்துவ மரபில் நுண்பொருளைப் பருப்பொருள் கொண்டு விளக்கிடும் பணியே உத்திகளுக்கு உரிய பண்பாக அமைகிறது. சிறந்த உத்திகளுடன் நுண்பொருளை விளக்கும் படைப்பு இலக்கியத் தன்மையினையும் ஒருசேரப் பெற்றுவிடுகிறது. தமிழின் பக்தி இலக்கியங்கள் இத்தகையினவே. இம்மரபிலேயே வேதாந்த தேசிகன் வைஷ்ணவத் தத்துவங்களை விளக்குவதற்குக் கையாளும் உத்திமுறைகள் அணுகப்பெற்றுள்ளன.

5.5.2 உவமை, உருவகத்தொடர்கள், படிமம், குறியீடு, எண்ணுப் பெயரிடல் முதலான உத்திகள் தேசிகப் பிரபந்தத்துள் கையாளப்பட்டுள்ளன. எண்ணுப்பெயரிடல் சொல்நிலை உத்தியாகவும் பிற தொடர்மொழிநிலை உத்திகளாகவும் அமைகின்றன. இறைவனின் பரத்துவம், கருணைக் குணம், தோற்றம், சரணாகதியின் பெருமை, நித்ய சூரி வாழ்வு ஆகியன உவமைகளாலும் உருவகங்களாலும் படிமங்களாலும் உணர்த்தப்படுகின்றன. அடுக்கிய உவமைகள் கருத்தினை வலியுறுத்திக் கூறும் முறையில் அமைகின்றன. குறியீடு வைணவ ஆசாரிய மரபைக் குறிக்கத் துணையாயிற்று. எண்ணுப் பெயரிடும் மரபு தத்துவப் பொருண்மையைக் குறிக்கும் ஆகுபெயராய் அமைகின்றன. தத்துவத்தைக் குறிக்கவும் இறைவன் பெருமையைச் சுட்டவும் இவை தேசிகப் பிரபந்தத்துள் கையாளப்பட்டுள்ளன.

5.5.3 நாயக - நாயகி பாவம் என்ற அகப்பொருண்மை சார்ந்த உத்திமுறை இறைவனைச் சரண் அடைதலை அகப்பொருள் மரபில் உணர்த்தும். தேசிகன் செவிலி, தோழி கூற்றாக அமைந்த பாடல்களில் காதலுணர்வுடன் இறையருளை வேண்டுகின்றார்.

5.5.4 யாப்பியல் நெறிகள் என்ற பகுதி தேசிகப் பிரபந்தத்தின் பா, பாவின வடிவங்களை அறிமுகம் செய்துள்ளது. தேசிகப் பிரபந்தத்தில் கலித்துறையும், விருத்தமும் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. கலித்துறை, விருத்தம் என்ற சொல்லாட்சிகளை இருபொருள் பயப்பனவாய்க் கையாண்டுள்ளார். பொதுப்பட நோக்கின் பாடற்பொருண்மையாக அமைந்த தத்துவ கூறு ஒன்றனை மட்டும் விளக்குகையில் ஒரேவகையிலான பா வடிவங்களைத் தேசிகன் கையாண்டுள்ளார். அங்ஙனம் அமையாது விரவிய பொருண்மைக் கூறுகளுக்குப் பாடல்களும் பலவாய் விரவி அமைக்கப்பட்டுள்ளன.

இம்மரபுகள் யாவும் தேசிகன் வெளிப்படுத்தும் தத்துவக் கூறுகளை, அவற்றின் நுட்பங்களை எளிதில் உணரும் வண்ணம் செய்கின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. அன்னதா சங்கர் ராய், கலை (மொ.பெ.), ப. 10
2. கி.லக்ஷ்மணன், இந்திய தத்துவஞானம், ப. 3
3. மேலது, ப. 135
4. மேலது, ப. 260
5. ச.வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப. 211
6. மேற்கோள், சி.இ.மறைமலை, புதுக்கவிதை முப்பெரும் உத்திகள், ப. 35
7. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப. 147
8. இளம்பூரணர், தொல். பொருள். உவம இயல் விளக்கம்
9. ஸ்ரீþராமதேசிகாசாரியார், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் உரை, ப. 228
10. சுப. வீரபாண்டியன், இந்தக்கால கவிதை உத்திகள், ப. 12
11. Lewis. C. Day, The Poetic Image, p. 18, p.23
12. து. சீனிச்சாமி, இருபதின் கவிதைகளில் சமூகநீதிக்கோட்பாடு, ப. 77
13. அப்துல்ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, ப. 19
14. ஸ்ரீ இராமதேசிகாசாரியார், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் உரை, ப. 349

## முடிவுரை

0. 'தேசிகப் பிரபந்தத்தில் சரணாகதி' என்றமைந்த இவ்வாய்வேடு ஐந்தியல்களாக அமைந்து சரணாகதி எனும் பொருண்மை தேசிகப் பிரபந்தத்தில் எங்ஙனம் அமைந்துள்ளது என்பதை அடிப்படைப் பொருண்மையாகக் கொண்டுள்ளது. இவ்வைந்து இயல்களிலும் கண்டறியப்பெற்ற ஆய்வு முடிபுகள் இங்குத் தொகுத்து தரப்பட்டுள்ளன.

0.1 தத்துவமரபில் விசிஷ்டாத்துவைதம் வேத ஏற்புக் கொள்கையை உடையது. அத்துவைதம் கூறும் மரபுகளில் வேறுப்பட்டுப் பரம்பொருள் ஒருவனே; அவன்னே ஸ்ரீமந் நாராயணன் என்று விதந்துரைக்கிறது. தத்துவத் திரயம், இதம், புருஷார்த்தம் என்று விசிஷ்டாத்துவைத மெய்யியல் அமைகிறது. இவற்றில் இதமாகிய இறைவனை அடையும் வழிகளாகப் பக்தி, சரணாகதி என்பன அமைகின்றன.

பக்தியிலும் சரணாகதியே மிகச் சிறந்ததும் எளிமையானதும் ஆகும். இந்நெறி வைஷ்ணவத்தின் ஊடிழையாக அமைகிறது. இச் சரணாகதியை வளர்த்த மரபில் வேதாந்த தேசிகனுக்குப் பெரும் பங்குண்டு.

0.2 வேதாந்த தேசிகன் வைஷ்ணவ மரபில் மிகப் பற்றுள்ளவராய்த் திகழ்தலை அவர்தம் வாழ்வியல் நிகழ்ச்சிகள் யாவும் வைஷ்ணவ மரபில் அவர் கொண்ட ஈடுபாட்டை உணர்த்தி நிற்கும். தமிழ்ப் பிரபந்தங்களின் தொகுப்பாகிய தேசிகப் பிரபந்தம் பத்தொன்பது நூல்களை உடையது. இத்தொகுப்பு இறைவனை அடைவதில் சரணாகதிக்கு உள்ள பெருமையையும் எளிமையையும் விதந்துரைக்கிறது.

0.3 வேதாந்த தேசிகன் குறிப்பிடும் தத்துவக் கூறுகளுள் சரணாகதியே மிகுந்து காணப்படுகிறது. அடைக்கலப்பத்து, திருமந்திரச் சுருக்கு, துவயச் சுருக்கு, சரமசுலோகச் சுருக்கு ஆகியவற்றின் அடிப்படைப் பொருளாகச் சரணாகதி அமைகிறது. வைணவ நெறியின் சிறப்புக்குக் காரணமாகச் சரணாகதியே அமைவதாக வேதாந்த தேசிகன் கருதுகின்றார். பல பிரபந்தங்கள் சரணாகதிப் பொருண்மையைக் கொண்டனவாகவும் சரணடைந்தவன் கொள்ளவேண்டிய ஒழுகலாற்றைக் கூறுவனவாகவும் அமைகின்றன.

பக்தி நெறியில் உள்ள இடர்களைப் பலப்பட எடுத்துரைத்துச் சரணாகதியின் எளிமை வேதாந்த தேசிகனால் உணர்த்தப் பெறுகின்றது. இச் சரணாகதியும் ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். இழிவான பயன்களுக்காக மேற்கொள்ளப்படலாகாது என்பதனை வேதாந்த தேசிகன் வலியுறுத்துகிறார்.

ஆசாரியர் வழியில் சரணடைதலே தக்கது என்றுரைக்கும் வேதாந்த தேசிகன் ஶ்ரீமந் நாராயணனே ஆசாரியனாகத் திகழ்கின்றான் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் இறைக் கருணையை ஆதாரமாகக் கொண்டே சரணாகதி அமைகிறது என்ற நம்பிக்கை அவர்தம் பிரபந்தங்களில் காணமுடிகிறது.

சரணாகதி அங்கங்கள் ஆறாகவும் ஐந்தாகவும் சுட்டப்பெறும். அங்கியாகிய ஆன்ம நிக்ஷேபமும் ஓரங்கமாகக் கருதத் தக்கது. இவ்வங்கங்களை வேதாந்த தேசிகன் அனுகூலிய சங்கல்பம், பிரதிகூலிய வர்சனம், கார்ப்பணியம், கோப்த்ருத்வவரணம் என முறைப்படுத்துகிறார்.

ஆன்ம நிக்ஷேபம், ஆன்ம சமர்ப்பணம், பர சமர்ப்பணம், பல சமர்ப்பணம் என்ற மூன்றாகக் குறிக்கப்பெறுகிறது. திருமந்திரப் பொருண்மையாக இம்மூன்று பொருட்கள் சுட்டப்படும். குரக்குப்பிடி போல் (மர்கட நியாயமாய்) தேசிக மரபில் சீவர் முயற்சி சரணாகதியில் தேவை என்கிறது.

பிரபன்னர் எவ்வளவு தாழ்ந்தவராயினும் சரணாகதி வீடுபேற்றை அளிப்பது. ஆனால் பக்திநெறி அவ்வாறன்று எனப் பலப்படக் குறிப்பிடும் வேதாந்த தேசிகன் ஆகிஞ்சன்யமும் அனன்யகதித்துவமும் பிரபன்னர்க்கு இன்றியமையாதன என்கிறார். இவை சரணாகதியின் அடிப்படைப் பண்பை உணர்த்துவனவாக அமைகின்றன. மேலும் வைணவ மரபைப் பேணவும் இவை காரணமாக அமைகின்றன. இப் பிரபன்னர் திருப்தர், ஆர்த்தர் என்றும் குறிக்கப்பெறுதலைத் தேசிகப் பிரபந்தத்திலும் காணலாம். பிரபன்னர் வைஷ்ணவ மரபின் உயர்ச்சியைக் கருதி அதிலிருந்து விலகாது நிற்கவேண்டும் என்பதையும் நித்யக் கர்மங்களைச் செய்துவரவேண்டும் என்பதையும் வேதாந்த தேசிகன் வலியுறுத்துகின்றார்.

சரணாகதியின் வகைகள் நான்கனுள் ஆசாரிய நிஷ்டையே சிறந்ததாகச் சுட்டப்பெறுகிறது. எனினும் வேதாந்த தேசிகன் தாம் சரணடைந்ததாய்ச் சுட்டும் பாடல்களை ஆய்ந்தால் சுவநிஷ்டையில் அவர் சரணடைதலை உணரலாம்.

0.4 சரணாகதி எனும் நெறி இறைவனால் அருளப்பெற்றது. இறைவன் சரணடைந்தாரைக் காப்பதாகச் சுட்டிய அருளுரைகளை எடுத்தாள்வதன் மூலம் சீவர்க்குச் சரணாகதியில் நம்பிக்கையை வேதாந்த தேசிகன் ஏற்படுத்துகிறார். மேலும் வழியாகவும், பயனாகவும் இறைவன் நிற்கின்ற பண்பும் அவரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. துவயம் அருளிச் சரணாகதியின் பயனைச் சீவர் துய்க்கச் செய்த இறைக் கருணையைப் பலப்பட வேதாந்த தேசிகன் போறியுள்ளார்.

சரணாகதியில் புருஷகாரப் பிரபத்தியாய்த் திருமகள் நிற்பதாகத் தேசிக மரபு கொள்கிறது. சரணாகதிக்குச் சீவரை உய்த்துச் செலுத்தும் இறைக் கருணையாகத் திருமகள் விளங்குதல் உணர்த்தப்பட்டுள்ளது.

சரணாகதியில் இறைவன் செய்த அடைக்கல நிகழ்வுகளை எடுத்துரைப்பதன் மூலம் வேதாந்த தேசிகன் சரணாகதியில் ஆன்ம ஈடேற்றம் நிகழ்தலை உறுதி செய்கிறார். இவர் சீவர் சரணடைந்து பிரபன்னராய் நிற்கும் காலத்து அடைக்கலம் தந்து பற்றறுத்து, வினைகளைப் பிரபன்னரின் நிலைக்கேற்றவாறு ஒழிவித்து வீட்டுப்பேறு அடைய வழி செய்கிறார். அர்ச்சிராதி மார்க்கமாய் வீடுபேறு பெறுதலைச் சுட்டுமிடங்களில் ஆழ்வார் பாடல்களின் தாக்கத்தை உணர முடிகிறது.

0.5 மேற்காணும் தத்துவப்பொருண்மையை உபமானப் பிரமாணம் எனும் உவமை மரபிலும் பிற உத்திகளிலும் வேதாந்த தேசிகன் தெளிவுபடுத்துகிறார். உவமைகள் முதலான உத்திகள் அரிய தத்துவ உண்மைகளை எளிதில் உணர்த்துகின்றன. இவை இறைமை நிலை, சரீர - சரீரி பாவம், சரணாகதியின் தன்மை ஆகியவற்றை உணர்த்துகின்றன. நாயக-நாயகி பாவம் என்னும் இலக்கிய மரபிலும் இறைவனை அடைய விரும்பும் சீவர் பண்பை உணர்த்தியுள்ளார்.

யாப்பியல் நெறிகளில் வேதாந்த தேசிகனின் இயற்புலமை வெளிப்படுகிறது. பலவகையான பாவினங்களைக் கையாண்டுள்ள அவர் தாம் விளக்க விரும்பும் தத்துவக்கூறின் இயல்பிற்கேற்ப விரவியோ ஒரே பாவடிவிலோ பாக்களை அமைக்கின்றார். மேலும் கலித்துறை, விருத்தம் என்னும் சொல்லாட்சிகளைச் சிலேடைப் பொருளிலும் கையாண்டுள்ளார். இவ்வகை உத்திகள் யாவும் வைணவ மரபு, அதன் தத்துவச் செழுமை, சரணாகதியின் மேன்மை, அதன் எளிமை ஆகியவற்றைக் கற்போர் எளிதில் உணரும் வண்ணம் செய்கின்றன.

0.6 மேற்சுட்டிய முடிபுகளின் பின்னணியில் இவ்வாய்வேட்டில் கொண்டுரைக்கப்பட்ட கருதுகோள் பொருந்துவதேயாகும். வைணவ மரபின் உயர்வு, சரணாகதியின் மேன்மை ஆகியவற்றில் வேதாந்த தேசிகன் கொண்ட நம்பிக்கையும் உறுதிப்பாடுமே தேசிகப் பிரபந்தமாகவும் பிற பிரபந்தமாகவும் தோற்றம் பெற்றன என்று கருதுமளவிற்கு அவர்தம் சமயப்பற்று திகழ்கிறது.

0.7 வைணவஞ்சார் மரபுகளைத் தெள்ளிதின் உணர்த்தும் வகையில், சமயச் சாத்திரங்களைப் புதிய நோக்கில் ஆய்வதற்கும் பிற தத்துவக் கூறுகளை ஆய்வதற்கும் இவ்வாய்வேடு அடித்தளமாக அமையலாம்.

# துணைநூற்பட்டியல்


**முதன்மை நூல்**

1. இராமதேசிகாசாரியார் (உரை.ஆ.), ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1995

**துணைமை நூல்கள் - தமிழ்**

1. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, பூர்வாசார்ய வைபவம் கணேச அச்சுகூடம், சென்னை, 1950
2. அநந்தாசார்யார் (பதி.ஆ.) குருபரம்பரா ப்ரபாவம், ஸ்ரீவாணீ பூஷணம் அச்சுகூடம், திருவல்லிக்கேணி, சென்னை, 1913
3. அப்துல்ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, செல்மா வெளியீடு, சிவகங்கை, 1990
4. அருணாசலம். மு., தமிழ் இலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், 1969
5. அழகிய சிங்கர் சுவாமிகள் (க.ஆ.), அறிவுள்ளவன் அறிய வேண்டிய முப்பத்திரண்டு, சரணாகதிசாரம் (தொகுப்புநூல்), ஸ்ரீ திருக்கள்ளம் ஸ்வாமி கைங்கர்ய ஸமிதி, சென்னை, 1995
6. அன்னதா சங்கர் ராய், கலை (மொ.பெ), சென்னை புக்ஸ், சென்னை. 1988
7. இந்திரா பார்த்தசாரதி, தமிழ் இலக்கியங்களில் வைணவம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1992
8. இராமசாமி.மு., பிரபந்த சாரம், திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம், சேலம். 1989
9. -------------------, ஆர்வ விளக்கு அம்மணியம்மாள், திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம், சேலம். 1989
10. -----------------, வைணவ வாழ்வு, திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம், சேலம். 1990
11. இராமசாமி.டி.டி., ஆழ்வார் ஆசாரியார் அபிதான விளக்கம், (பதிப்பாளர், ஆண்டு இல்லை)
12. இளம்பூரணர் (உரை.ஆ.), தொல்காப்பியப் பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1961
13. உத்தமராயன். க. சு. தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை, தமிழக அரசு வெளியீடு, சென்னை. 1978

14. கந்தசாமி முதலியார். ச., உணவு மருத்துவம், பாரி நிலையம், சென்னை. 1958
15. கம்பர், கம்பராமாயணம் - பாலகாண்டம் (முதற்பாகம்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1957
16. ------, கம்பராமாயணம் - யுத்தகாண்டம் (முதற்பாகம்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1957
17. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி, சரணாகதி, ஸுகபோதினி டிரஸ்ட், சென்னை. 1997
18. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார். எஸ்., (பதி.ஆ.) பொன்விழா மலர், பாரதீய பூர்வசிக ஶ்ரீவைஷ்ணவ சபா, திருச்சி. 1978
19. -------------------, (உரை.ஆ.) யதீந்திரமததீபிகை - காரிகாவளி, ஸுதர்சனம் வெளியீடு, திருச்சி. 1980
20. -------------------, ஶ்ரீவசன பூஷண வ்யாக்யாநங்கள்,(இரண்டு பாகங்கள்) புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.(ஆண்டு இல்லை)
21. கேசவய்யங்கார்.ஆர்.,(பதி.ஆ.) தேசிகப் ப்ரபந்தம், டி.பார்த்தசாரதி அய்யங்கார் வெளியீடு, ராஜாஜி பிரஸ், தேவக்கோட்டை. 1952
22. கோபால தேசிகசார்யஸ்வாமி. வி.என்., ஶ்ரீவைஷ்ணவன், திருப்பாவைக் கமிட்டியார், திருக்குடந்தை. 1996
23. கோவிந்தராச முதலியார். கா.ர., ஆழ்வார்கள் வழிக்குரவர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை. 1975
24. கோவிந்தராஜுலு. இ., ஶ்ரீராமானுஜர், ஶ்ரீ பதிப்பகம், சென்னை. 1992
25. சடகோபதாசர், அரிசமய தீபம், செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், சென்னை. 1904
26. சாமிநாதையர், உ.வே. (பதி.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1986
27. சாமிநாதையர், உ.வே. (பதி.ஆ), பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை. 1994
28. சித்பவானந்தர், ஞானயோக விளக்கம், ஶ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி. 1984
29. -----------------, பக்தியோக விளக்கம், ஶ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி. 1982
30. -----------------, பகவத் கீதை, ஶ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி. 1989
31. சீனிச்சாமி.து. , இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவணம், சென்னை. 1994
32. சுப்பிரமணியன். ச.வே., கம்பன் இலக்கிய உத்திகள், மெய்யம்மைப்

பதிப்பகம், காரைக்குடி. 1989
33. சுப்பு ரெட்டியார்.ந., முக்திநெறி, பாரிநிலையம், சென்னை. 1982
34. ------------------, அர்த்த பஞ்சகம், பாரிநிலையம், சென்னை. 1994
35. ------------------, வைணவச்செல்வம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1995
36. ஞானசம்பந்தன்.அ.ச., இலக்கியக்கலை, கழக வெளியீடு, சென்னை. 1975
37. தண்டியாசிரியர், தண்டியலங்காரம், கழக வெளியீடு, சென்னை. 1963
38. நச்சினார்க்கினியர், (உரை.ஆ.), கலித்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1984
39. ------------------, தொல்காப்பியம் - பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1986
40. நரசிம்மன்.பி.ஆர். , வைணவ மரபும் மெய்ப்பொருளியலும், விஷ்ணு பதிப்பகம், மதுரை. 1987
41. நஜன், த்வைத ஆசாரியர்கள் வைபவம், பிரதிபா பிரசுரம், சென்னை. 1982
42. நாகராசன். ப.வெ. (உரை.ஆ.), அறுவகை இலக்கணம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991
43. பரிமேலழகர் (உரை.ஆ.), திருக்குறள், கழகம், சென்னை. 1956
44. பரிமேலழகர், பரிபாடல், கபீர் அச்சுக்கூடம், சென்னை. 1956
45. மறைமலை. சி.இ. , புதுக்கவிதை - முப்பெரும் உத்திகள், திருமகள் நிலையம், சென்னை. 1986
46. மன்னப்பங்கார் கந்தாடை, தேசிகர் நூற்றந்தாதி, திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம், சேலம். 1990
47. மாதவன். வே.இரா. (பதி.ஆ), திவ்விய தம்பதியர் புகழ்மாலை, பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர். 1993
48. ராகவன்.டி.என்.எஸ்., சரணாகதித் தத்துவம் - ஓராய்வு, ஸ்ரீஹயக்ரீவ வித்யாபீடம், சென்னை. 1993
49. ராம் சுகதாஸ், சுவாமி, சரணாகதி, கீதா பிரஸ், கோரக்பூர். 1993
50. ராஜாஜி, கைவிளக்கு, வானதி பதிப்பகம், சென்னை. 1978
51. லக்ஷ்மணன்.கி, இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 1960
52. வில்லிபுத்தூராழ்வார், வில்லிபாரதம் - சபாபருவம், கே.ராஜகோபாலசாரியார் பதிப்பு, ஸ்டார் பிரசுரம், சென்னை. 1985
53. சுவாமி விவேகானந்தர், கருமயோகம் (மொ.பெ.), ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. 1981
54. வீரபாண்டியன்.சுப., இந்தக்காலக் கவிதை உத்திகள், கனிமுத்துப் பதிப்பகம், சென்னை. 1985

55. வேங்கடசாமிரெட்டியார். கி., ஸ்ரீ வேதாந்த தேசிகர் சதகம், திருமால் திருநெறி மன்றம், புதுவை. 1966
56. வேதாந்த தேசிகன், ஸ்ரீமத் ரகஸ்யத்ரய ஸாரம் (இரு பகுதிகள்) ப்ரகாசகர்: வி.ஆர்.ராமஸ்வாமி அய்யங்கார், தஞ்சாவூர். 1959
57. வைத்தியலிங்கன்.செ., தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, இரண்டாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 1989
58. ஜெகத்ரட்சகன் (உரை.ஆ.)., நாலாயிர திவ்யப் பிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை. 1993
59. ஸ்ரீராமானுஜாச்சாரியார், பகவத்கீதா பாஷ்யம், ஸ்ரீராமானுஜ கிரந்த மாலா, காஞ்சிபுரம். 1966
60. ஸ்ரீஜயதயால்ஜீ கோயந்தகா, கீதை கற்பதன் பயன்கள்; ஸத்யத்தைச் சரணடைவதால் முக்தி(மொ.பெ.), கீதா பிரஸ், கோரக்பூர். 1955
61. ஸ்ரீஜயதயால்ஜீ கோயந்தகா (பதி.ஆ), ஸ்ரீமத் பகவத் கீதா, கீதா பிரஸ், கோரக்பூர். 1999

**துணைமை நூல்கள் - ஆங்கிலம்**

1. Aravamudhan.T.N., Varadaraja Panchasat - A Study, Sri Hayagreeva Vidhya Peetam, Chennai. 1990

2. Lewis. C. Day, The Poetic Image, Jonathan Cape, London. 1961

3. Raghavadasan, Visishtadvaitam and Vedanta Desika's Sri Nyasa Dasakam, Sri Vedanta DesikaResearch Centre, Chennai. 1998

4. Satyavrata Singh.A., Vedanta Desika - A Study, The Chowkamba Sanskrit Series, Varanasi. 1958.

**களஞ்சியங்கள்**

1. கலைக் களஞ்சியம், தொகுதி - 5, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை. 1958
2. கலைக் களஞ்சியம், தொகுதி - 9, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை. 1963
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991 (மறுபதிப்பு)
4. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 9, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1988

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமந்த மஹாதேசிகாய நம

# ஸ்ரீ வேதாந்த தேசிகன் படைத்த நூல்கள்

## ஸ்ரீ தேசிகன் அருளிய திவ்யஸூக்திகள்

**ஸ்தோத்ர க்ரந்தங்கள்**

1. ஹயக்ரீவஸ்தோத்ரம்
2. தசாவதாரஸ்தோத்ரம்
3. பகவத்தியாநஸோபாநம்
4. கோபாலவிம்சதி
5. ஸ்ரீஸ்துதி
6. பூஸ்துதி
7. கோதாஸ்துதி
8. ந்யாஸதசகம்
9. தயாசதகம்
10. அபீதிஸ்தவம்
11. தேவநாயகபஞ்சாசத்
12. வரதராஜபஞ்சாசத்
13. யதோக்தகாரிஸ்தோத்ரம்
14. அஷ்டபுஜாஷ்டகம்
15. காமாஸிகாஷ்டகம்
16. பரமார்த்தஸ்துதி
17. சரணாகதிதீபிகை
18. அச்யுதசதகம்
19. தேஹளீசஸ்துதி
20. ந்யாஸதிலகம்
21.ரகுவீரகத்யம்
22. ஷோடசாயுதஸ்துதி
23. ஸுதர்சநாஷ்டகம்
24. கருடதண்டகம்
25. கருடபஞ்சாசத்
26. யதிராஜஸப்ததி
27. வைராக்யபஞ்சகம்
28. ந்யாசவிம்சதி

**நாடக க்ரந்தம்**

1. ஸங்கல்ப ஸூர்யோதயம்

**காவ்ய க்ரந்தங்கள்**

1. பாஷிதநீவி
2. யாதவாப்யுதயம்
3. ஹம்ஸஸந்தேசம்

**ரஹஸ்யக்ரந்தங்கள்**

1. ஸம்ப்ரதாயபரிசுத்தி
2. தத்வபதவி
3. ரஹஸ்யபதவி
4. தத்வமாத்ருகை
5. ரஹஸ்யமாத்ருகை
6. தத்வஸந்தேசம்
7. ரஹஸ்யஸந்தேசம்
8. ரஹஸ்யஸந்தேசவிவரணம்
9. தத்வரத்நாவளி
10. தத்வரத்நாவளி ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்
11. ரஹஸ்யரத்நாவளி ஹ்ருதயம்
12. தத்வத்ரயசுளகம்
13. அபயப்ரதாநஸாரம்
14. ரஹஸ்யசிகாமணி
15. அஞ்ஜலிவைபவம்
16. ப்ரதாநசதகம்
17. உபகாரஸங்க்ரஹம்
18. ஸாரஸங்க்ரஹம்
19. முநிவாஹநபோகம்
20. மதுரகவிஹ்ருதயம் *
21. பரமபதஸோபாநம்
22. பரமதபங்கம்
23. ஹஸ்திகிரிமஹாத்மியம்
24. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்
25. ஸாரஸாரம்
30. விரோதபரிஹாரம்
31. நிகமபரிமளம் *
32. திருமுடியடைவு *

**<u>வேதாந்த க்ரந்தங்கள்</u>**

1. மீமாம்ஸபாதுகை
2. ஸேசுவரமீமாம்ஸை
3. சததூஷணி
4. அதிகரணஸாரவளி
5. தத்துவடீகை
6. ந்யாயபரிசுத்தி
7. ந்யாயஸித்தாஞ்ஜநம்
8. தத்துவமுக்தாகலாபம்
9. நிக்ஷேபரக்ஷை
10. ஸச்சரித்ரரக்ஷை
11. ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை
12. வாதித்ரயகண்டநம்
13. த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி
14. த்ரமிடடோபநிஷத்ஸாரம்

**<u>வ்யாக்யந க்ரந்தங்கள்</u>**

1. சதுச்சுலோகீபாஷ்யம்
2. ஸ்தோத்ரபாஷ்யம்
3. கத்யத்ரயபாஷ்யம்
4. கீதார்த்தஸங்கரஹரக்ஷை
5. தாத்பர்யசந்த்ரிகை
6. ஈசாவாஸ்யோபநிஷத்பாஷ்யம்
7. அதிகரண தர்ப்பணம் *
8. ஸர்வார்த்தஸித்தி

**<u>அநுஷ்டான க்ரந்தங்கள்</u>**


1. பகவதாராதநவிதி
2. யஜ்ஞோபவிதப்ரதிஷ்டாவிதி


**<u>தமிழ்ப் பிரபந்தங்கள்</u>**

1. அமிருதரஞ்சனி
2. அதிகாரசங்கிரகம்
3. அமிருதாசுவாதினி
4. பரமபதசோபானம்
5. பரமதபங்கம்
6. மெய்விரதமான்மியம்
7. அடைக்கலப்பத்து
8. அருத்தபஞ்சகம்
9. ஸ்ரீவைணவதினசரி
10. திருச்சின்னமாலை
11. பன்னிருநாமம்
12. திருமந்திரச்சுருக்கு
13. துவயச்சுருக்கு
14. சரமசுலோகச்சுருக்கு
15. கீதார்த்தசங்கிரகம்
16. மும்மணிக்கோவை
17. நவமணிமாலை
18. பந்து *
19. கழல் *
20. அம்மானை *
21. ஊசல் *
22. ஏசல் *
23. பிரபந்தசாரம்
24. ஆகாரநியமம்

* - தற்போது கிடைக்கப்பெறவில்லை

# ஆசாரியப் பரம்பரை


பெருமாள்
பெரியபிராட்டி
விஷ்வக்ஸேநர் (ஸேனை முதலியர்)
சடகோபன் (நம்மாழ்வார்)
நாதமுனிகள்
உய்யக்கொண்டார் (புண்டரீகாக்ஷர்)
மணல்கால் நம்பி (ராமமிச்ரர்)
ஆளவந்தார் (யாமுநமுநிகள்)
யமுனைத்துறைவன்
திருவரங்கப் பெருமாளையர்
(ஆளவந்தராழ்வார்) திருவாய்மொழி ஸந்தை; ஸ்தோத்திரங்கள்
திருக்கோஷ்டியூர் நம்பி
(கோஷ்டிபூர்ணர்) ரஹஸ்யார்த்தம்
பெரிய தம்பி
(பராங்குசதாஸர்) (மஹாபூர்ணர்) பஞ்ச ஸம்ஸ்காரம்
திருமாலையாண்டான்
திருவாய்மொழி வ்யாக்யானம்
திருமலை நம்பிகள்
ஶ்ரீசைலபூர்ணர் ஶ்ரீமத் ராமாயணம் தாபநீய உபநிஷத் உபதேசம்
ஈசாண்டாண்
(திருமாலிருஞ்சோலை தாஸர்) ஸுந்தர்ராஜாசார்யர், அழகப்பிரான்
இராமானுஜர்
ஶ்ரீபாஷ்யகாரர், உடையவர், எம்பெருமான்


இராமானுஜர்
ஸ்ரீபாஷ்யம்
ரகஸ்ய நூல்கள்
பகவத்விஷயம்
பெரும்பாலும்
இதுவே
ஸமாச்ரயண
குருபரம்பரையாகவும்
இருக்கும்
திருக்குருக்கைப்பிரான்
பிள்ளான்
கிடாம்பிச்சான்
திருக்குருக்கைப்பிரான்
பிள்ளான்
ப்ரணதார்த்திஹரர்
மடைப்பள்ளியாச்சான்
திருஆறாயிரப்படி
உரைக்காரர்
எங்களாழ்வான்
ஆத்ரேயராமாநுஜர்
எங்களாழ்வான்
நடாதூரம்மாள்
ஆத்ரேயராமாநுஜர்
நடாதூரம்மாள்
கிடாம்பி
அப்புள்ளர்
கிடாம்பி
அப்புள்ளர்
கிடாம்பி
அப்புள்ளர்
ஸ்ரீ வேதாந்த
தேசிகன்
ஸ்ரீ வேதாந்த தேசிகன்
ஸ்ரீ பாஷ்யம் மட்டும்
நயினாராசார்யர்
ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர
ஸ்வாமி
உபயவேதாந்தம்
பகவத் விஷயம் மட்டும்
ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணன்
ப்ரஹ்மதந்த்ர
ஸ்வதந்த்ர ஸ்வாமி
கடிகாசதம்
அம்மாள்
கிடாம்பிநயினார்
ஸ்ரீ ஆதிவண்
சடகோப ஸ்வாமி
மணவாள
மாமுநிகள்
மாமுநிகள்
சிஷ்யரால்
ஸ்ரீ அகோபில
மடக்ரமும் முநித்ரயமும்
ஸ்ரீ வானமாமலை
மடக்ரமம்
ஸ்ரீ பரகால
மடக்ரமம்

## ஸ்ரீ தேசிகன் கையாளும் வேதாந்தம் தொடர்பான கலைச்சொற்களும் அருஞ்சொற்களும்

அகவாய் - உட்பொருள்
அகிலம் - பிரபஞ்சம், உலகம்
அங்கி - அக்னி
அசத்து - தீயது, பாவம்
அசித்து - அபயம்
அடி - காரணம், ஆரம்பம், பாதுகை, திருவடி
அடிமை - கைங்கர்யம்
அடியுரை - மூலமொழி, வடமொழி
அடைக்கலம் - காக்கவேண்டிய பொருள்
அடைத்தல் - சமர்ப்பித்தல், விதித்தல், படைத்தல், அடிமையாக்குதல், கொடுத்தல்
அத்தன் - தந்தை, சுவாமி, உயர்ந்தவன்
அத்து - ஆகுக
அதிபதி - சுவாமி
அந்தம் - எல்லை, அழிவு, அளவு
அந்தரம் - வித்தியாசம்
அந்தி - முடிவு, மாலைநேரம்
அந்நியர் - சண்டாளர்
அநந்தம் - எல்லையற்ற
அயமேதம் - அசுவமேதம்
அயன் - பிரமன்
அயனத்திரம் - பிரம்மாத்திரம்
அயனம் - உபாயம், பிரவேசிக்கப்படும் பொருள்
அரண் - பாதுகாப்பு, உபாயம்
அரவு - சர்ப்பம், ஆதிசேடன்
அரு - சூக்குமம், சீவன்
அருக்கன் - சூரியன்
அருநிலை - சூக்கும நிலை
அல்வழக்கு - தகாத ஒழுக்கம், தகாத வழக்கு
அலகு - அளவு
அலங்கல் - பூ மாலை
அவம் - கேடு, குற்றம்
அழல் - அக்னி, தாபம்
அளித்தல் - ரட்சித்தல்
அன்னவர் - பரமஹம்சர்
அனங்கன் - மன்மதன்
அநந்தன் - ஆதிசேடன்
அனவரதம் - எப்போதும்
அனுதினம் - தினந்தோறும்
அனுமித்தல் - ஊகித்தல்
ஆகண்டலன் - இந்திரன்
ஆகம் - சரீரம்
ஆகமம் - சப்த பிரமாணம்
ஆசனம் - பக்தியோகத்தின் ஓர் அங்கம்
ஆசு - குற்றம்
ஆசை - திசை
ஆதரம் - அன்பு, ஆவல்
ஆதி - காரணம்
ஆயன் - கோபாலன்
ஆரணநூல் - வேதாந்த சாத்திரம்
ஆவலிப்பு - கர்வம், அஞ்ஞானம்
ஆவி - பிராண வாயு
ஆழி - கடல், சக்கரம்
ஆறு - உபாயம், நதி
ஆறுதல் - பண்படுத்தல், தீர்தல், தணிதல்
இயைதல் - ஒத்தல்
இருடிகம் - இந்திரியம்
இருதலை - இருபக்கம்
இருநிலம் - அகன்ற பூமி
இருவினை - புண்யமும், பாவமும்
இல் - வீடு
இலக்கணம் - அடையாளம்
இலக்கம் - எண்
இலக்கு - இலட்சியம்
இலகு - சுலபு, எளிமை
இழிதல் - விழுதல், இரங்குதல், ஈடுபடுதல்
இளைதாம்நிலை - தாழ்ந்த நிலை
இறை - ஆள்பவன், நாயகன், ஈசுவரன்
இறைஞ்சுதல் - சரணமடைதல்
இறைவன் - சுவாமி, என்பெருமான்
இன்பத்தொகை - ஆனந்தக் கூட்டம்
ஈனுதல் - படைத்தல்
உகம் - இரண்டு
உகிர் - நகம்
உட்கண் - ஞானக்கண்
உடலம் - சரீரம்
உணர்த்தி - நினைவு
உத்தரவேதி - யாகவேதி
உத்தரித்தல் - எடுத்துக்கொள்ளல்
உதரம் - வயிறு
உந்துதல் - வீசியெறிதல், எழுப்புதல்
உபாதி - காரணம்
உம்பர் - தேவர், நித்திய சூரிகள்
உயோகம் - தியானம்
உகரம் - பாம்பு
உரம் - மார்பு
உரு - அசேதனம், பெரிது
உரை - உபதேசம், எச்சில்

உன்னதி - உயர்வு
ஊழி - பிரளயம், யுகம், கற்பம்
ஊன் - சரீரம், மாமிசம்
எட்டுஇளை - எட்டு திக்குப் பாலகர்
எட்டுமாமூர்த்தி - எட்டு உருவமுடைய சிவன்
எண்கண் - எட்டு கண்ணுடைய பிரமன்
எதிராசர் - (ஸ்ரீ பாஷ்யகாரர்) இராமானுஜர்
எமம் - பக்தி யோகத்தின் ஓர் அங்கம்
எமுனைத்துறைவர் - ஆளவந்தார்
ஏகாந்தி - ஒன்றிலே உறுதியுடையவன் ஒரே நிலைமை
ஐதுகர் - காரணம் கேட்பவர்
ஒளிநாள் - சுக்ல பட்சம்
கடுவினை - கொடிய கருமம்
கண் - கதி
கண் புதையல் - கண்ணாம்பூச்சி
கண சரணர் - கணாதர்
கதகர் - வாதிகள்
கதி - உபாயம், பலன், வழி, பிரகாரம்
கதுவுதல் - பற்றிக்கொள்ளல்
கம் - இந்திரியம்
கரடிகிரி - அத்திகிரி
கரணம் - இந்திரியம், கூத்து
சூரிகிரி - அத்திகிரி
கருமம் - கடமை, கருமயோகம்
கருமாலை - கருப்ப வரிசை
கருவி - இந்திரியம்
கருவினை - பாபம்
கலித்திரள் - கலிபுருடர்களின் கூட்டம்
காதல் - பத்தி, ஆசை
கிரிசை - கருமம்
குடல் - சரீரம்
குத்திரம் - அற்பம்
குதர்க்கம் - குயுக்தி
குறி - அடையாளம், கவனம், உபாயம், இலக்கு
கைதவம் - வஞ்சனை, கபடம்
கைமாறு - பிரதியுபகாரம்
கைவளர்த்தல் - மேம்பாடடைதல்
சகம் - உலகம்
சங்கம் - பற்று
சங்தேகம் - கட்டுப்பாடு
சச்சை - சுசாரம்
சடங்கு - விரதம்
சத்து - புண்ணியம்
சத்துவிடு - ஸாத்துவிகத்தியாகம்
சந்தநெறி - வேதமார்க்கம்
சமம் - பத்தியின் ஓர் அங்கம்
சமாதி - பத்தி யோகம்
சரண் - உபாயம், பாதம்
சாதகன் - அனுட்டிப்பவன்
சாதனம் - உபாயம்
சிகி - அக்கினி
சித்து - சேதனம்
சிந்தரவெற்பு - அத்திகிரி
சிற்றின்பம் - அற்பசுகம்
சின நெறி - சமண மதம்
சுகலேசம் - அற்பசுகம்
சுரர் - தேவர்
சுரவி - காமதேனு
சுழிதல் - திரும்புதல்
சூரியர் - நித்திய சூரிகள்
சூழ்தல் - வளைத்தல்
செவித்தல் - ஜபம் செய்தல்
சேதனை - ஞானம்
சேது - அணை, உபாயம்
சோதகர் - பௌத்தர்
தத்துவித்தல் - தாண்டுவித்தல்
தந்திரம் - சேனை, உபாயம்
தமனிநெறி - பிரம்மநாடி வழி
தமிழ்மறை - திவ்வியப்பிரபந்தம்
தலைவைத்தல் - தலை வணங்குதல்
தளம் - இதழ்
தாரணை - பக்தி யோகத்தின் ஓர் அங்கம்
தாரம் - ப்ரணவம்
தாவளம் - வசிக்குமிடம்
தியக்கு - சோர்வு
திரு - சோர்வு
திவம் - பரமபதம்
துஞ்சல் - அஞ்ஞானம்
துணுக்கு - பயம்
துலை - சமம்
துலையுறுதல் - உபமானமாதல்
துவக்கு - சம்பந்தம்
துறவி - வறுமை
துறை - உபாயம், வழி
துனி - துர்த்தசை
தெருள் - விவேகம்
தொத்து - சம்பந்தம், தொடர்ச்சி
தொல் - அநாதி
நடலம் - குற்றம்
நண்ணுவித்தல் - சேர்த்தல்
நாகணை - சேடசயனம்
நாகம் - பரமபதம், தேவலோகம், யானை
நிகமாந்தம் - வேதாந்தம்
நியமம் - பக்தி யோகத்தின் ஓர் அங்கம்
நிலை - நிஷ்டை, சுயரூபம், சுயபாவம், அநுட்டானம், உபாயம், கைங்கரியம், உறுதி, தானம், மார்க்கம், நிலைத் இருத்தல், குணம், பிரகாரம், நிலைமை

நிறைமதியோர் - பூரண ஞானமுடையவர்
நெறி - உபாயம், வழி
நேர்மதி - சூக்கும புத்தி
பக்கணம் - வேடச்சேரி
பகவர் - பாகவதர்கள்
படிவித்தல் - ஈடுபடச் செய்தல்
படிதல் - சரணமடைதல்
பணிதி - வாதம்
பணிலம் - சங்கு
பதம் - தானம்
பதவி - உபாயம்
பதி - ஆதாரம், தலம், இடம்
பந்தம் - கரும பாசம்
பந்தனம் - பிணித்தல்
பயத்தல் - சிருட்டித்தல்
பயிலுதல் - பரிச்சயம் செய்தல்,
கூறுதல், ஈடுபடுதல், அநுஸந்தித்தல்,
அனுபவித்தல்
பரத்துவம் - மேம்பட்ட தன்மை
பரம் - பொறுப்பு, கடமை
பரவாதியர் - பிரதிவாதியர்
பரன் - உயர்ந்தவன்
பரிதி - சூரியன், பிரகாசம்
பரிமுகர் - அயக்ரீவர்
பவம் - சம்சாரம்
பற்று - ஆசை, உரிமை, உபாயம்,
கைக்கொள்ளல், கதி
பாரம் - கரை
பிச்சு - பிரமம்
பிரமபுரம் - சரீரம்
புகல் - உபாயம்
புராணம் - அநாதி
புராணன் - அநாதி புருஷன்
புருடன் - சீவன்
புலன் - இந்திரியம், விடயங்கள்
புள் - பறவை
புறம் - வேறு, அயல், வெளி, பிறமதம்
பூவன் - பிரமன்
பேரின்பம் - மோக்ஷம்
பேறு - பலன், புருஷார்த்தம்
பொம்மதி - அஞ்ஞானம்
பொன்வெற்பு - மேருமலை
மகம் - யாகம்
மதி - சந்திரன், ஞானம், புத்தி
மயக்கம் - அஞ்ஞானம்
மயல் - அஞ்ஞானம், பத்தி, மயக்கம்
மருள் - அஞ்ஞானம்
மற நெறி - பாப மார்க்கம்
மறை - வேதம், இரகசியம்
மறைமுடி - மறையந்தி, வேதாந்தம்
மறையவர் - வேதாந்திகள்
மன்னுதல் - திடமாதல், நிலை பெறுதல்
மனு - மந்திரம்
மாதவம் - பெரிய தவம், சரணாகதி
மாயாமதம் - அத்துவைதமதம்
மாயை - மூல பிரகிருதி
மான் - மஉறான் என்னும் தத்துவம்
மானம் - பிரமானம், அளவு
முடிவாச்சிரமம் - சன்னியாசம்
முத்தி - வீடுபேறு பரமதப்பேறு
முதல் - காரணம்
முதலாச்சிரமம் - பிரம்மச்சரியம்
மூலவெழுத்து - பிரணவம்
மெய் - உருவம், சத்யம், சரீரம்
மேயம் - அறியப்படும் பொருள்
மேவுதல் - சேர்தல், ஊற்றமடைதல்
மை - குற்றம், கருமை
மையல் - அஞ்ஞானம்
மொழி - மந்த்ரம்
வகுப்பு - அமைப்பு
வயனம் - வேதம்
வரித்தல் - சரணம் அடைதல்,
சங்கற்பித்தல், ஏற்றல், பற்றுதல்
வழி - உபாயம், மார்க்கம்
வண்டி - பாபம்
வாசகம் - சூக்தி, உபதேசம்
வாசி - தாரதமியம், சிறப்பு
வாதநெறி - வாதமார்க்கம்
வானவர் - தேவர், நித்திய சூரிகள்
விடவி - மரம்
வியப்பு,வியன் - ஆச்சரியம், விலட்சணம்
விலங்கு - குறுக்கு வழி
விலை - தனிக்காரணம்
விழி - கடாட்சம்
விளக்கம் - பூஜாநம்
வினதைச்சிறுவன் - கருடன்
வினைவழி - பாபமார்க்கம்
வீடு - மோட்சம்
வெள்குதல் - கூசுதல், வெட்கமடைதல்
வெற்பு - மலை
வெறி - வாசனை
வெறிநிலை - அஞ்ஞாநதசை
வேதகம் - துவயம்
வேதி - யாகவேதி
வைதிகம் - வேதவிசாரம்